புலத்தில்
தாயக தாகத்தின் குரல்

PULATHIL Tamil Weekly | 01 - 07 February 2012 | இதழ்: 53

Suren Nathan
Mortgage Broker
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
7 Eastvale Dr, Unit 203, Markham ON L3S-4N8
Office: 416-548-7475, Fax: 416-548-7496
E-mail:Suren@bmsic.com
Dir: 416.723.2204

போர்க் குற்றவாளிக்கு ஐ.நாவில் உயர் பதவி
மேற்குலக நாடுகள் கடும் அதிருப்தி



சீனாவுக்கு இலங்கையை விற்கும் சிறீலங்கா!?

புலிகளுடன் அமெரிக்காவின் இரகசிய உரையாடல்

ரஷ்ய அணு ஆயுத நீர்மூழ்கி இந்தியாவிடம்!

மேற்கு ஆபிரிக்காவில் 200ற்கும் மேற்பட்ட தமிழர்கள் இலங்கைக்கு கொண்டு செல்வதில் சிறிலங்கா தீவிரம்

Sugan Sivarajah
Sales Representative
Cell: 416-890-9999 Res: 416.282.3333
Web: www.futurerealtor.ca
HomeLife Higher Standards
HomeLife/ Future Realty Inc. Brokerage
205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
*Independently Owned and Operated, REALTOR®

சகல சட்டத் தேவைகளுக்கும் கனேடிய தமிழ் வழக்கறிஞர்
Raphael Maharaja
Barrister, Solicitor & Notary Public
Real Estate
Immigration Matters
Refugee, Sponsor, Work Permit
Personal Injury Claims
Tel: 416 847 7077
416 - 847 - 7093 Injury Claims
Fax: 416 - 847 - 7088 GTA SQUARE,
5215 Finch Ave. East, Unit 219, Scarborough, ON
www.maharajalaw.com

தாயகத்தை நினைவூட்டும் அறுசுவை உணவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம்!
காசா உணவகம்
இது நம்ம ஊர் சாப்பாடு

GASA RESTAURANT
Take out & Catrering
905-471-6300
50 New Delhi Dr, Unit 51
Markham, Ont, L3S 0B5

Thana Suseendra
Sales Representative
Bus: 416.321.6969
Cell: 416.893.4376
HomeLife Higher Standards
HOMELIFE/GTA REALTY INC.
BROKERAGE,** INDEPENDENTLY OWNED AND OPERATED
Top 5% sales representative within homelife | Canada 2007, 2008, 2009, 2010, 2011

Cash Point
The Buck Starts Here!
Cheques Cashed
Currency Exchange
Worldwide Money Transfer
துரித பணமாற்று சேவையில் ஈடுஇணையற்றவர்கள்
Tel: 416.284-7000
Cell: 416.732.9020
3852 Finch Avenue E., Unit G03, Scarborough, ON, M1T 3T9

DAILY NEWS

2012

FAMILY SKI TRIP | SUMMER GETAWAY | SUNDAY DRIVE

YEAH, IT DOES THAT

ALL-NEW 2012 CR-V

New standard features on all models include: One of the most fuel-efficient vehicles in its class† • Heated power side mirrors • Heated front seats • Multi-angle rearview camera‡ • Intelligent Multi-Information Display (i-MID) with SMS feature∆ • Bluetooth® wireless phone and audio interface • Easy-fold-down 60/40 split rear seatback

TOP SAFETY PICK 2012

LOWER STARTING PRICE FOR 2012

2012 CR-V LX

LEASE A 2012 CR-V LX FOR

$298 @ 3.99% APR

PER MONTH FOR 48 MONTHS*

$0 SECURITY DEPOSIT | $3,400 DOWN PAYMENT/OAC

TOTALLY REDESIGNED FOR 2012

HondaOntario.com
Ontario Honda Dealers

Atheesan (Shan) Sarvananthan

Cell: 416-720-1184

FORMULA HONDA
2240 Markham Road,
Scarborough, ON., M1B 2W4.

MADE IN CANADA

HONDA

*Limited time lease offers on a new 2012 Honda CR-V LX 2WD (Model RM3H3CE[S]) available through Honda Financial Services Inc., on approved credit. Representative lease example: based on a 2012 Honda CR-V LX 2WD (Model RM3H3CE[S]) on a 48 month term at 3.99% lease APR, the monthly payment is $297.76 [includes $1,590 freight and PDI, EHF tires ($29), EHF filters ($1), A/C tax ($100), and OMVIC fee ($5)] with $3,400 down payment or equivalent trade-in, $0 security deposit and first monthly payment due at lease inception. Total lease obligation is $14,292.48. 96,000-kilometre allowance; charge of $0.12/km for excess kilometres. For all offers: license, insurance, PPSA, and other taxes (including HST and tax for fuel conservation, if applicable) are extra. Taxes payable on full amount of purchase price. Offers only valid for Ontario residents at Ontario Honda Dealers. Dealer may sell/lease for less. Dealer order/trade may be necessary. Vehicles and accessories are for illustration purposes only. Offers subject to change without notice. See your Ontario Honda Dealer or visit HondaOntario.com for full details. †9.2 city/6.6 hwy/8.1 combined L/100 KM. Fuel consumption for comparison purposes only and may vary with usage and accessories. See Dealer for latest EnerGuide results published by Natural Resources Canada (when available). ‡Multi-Angle Rearview Camera with Guidelines intended to provide assistance to the driver. Always exercise appropriate care while reversing. ∆Compatible with select smartphones. Your wireless carrier's rate plans apply. Only use texting feature when conditions allow you to do so safely.

SCAN HERE FOR MORE INFORMATION

புலத்தில்

தாயக தாகத்தின் குரல்

MEDIA HOUSE

முரசு 02   01 – 07 பெப்ரவரி 2012   முழக்கம் 53

"தனது தியாகத்தால் இந்த மண்ணுக்கு
விடுதலை கிடைக்குமாக இருந்தால்,
அந்தச் சாவு இந்த விடுதலைப்
போராட்டத்தை உந்தி முன் தள்ளுமாக
இருந்தால், அந்தச் சாவை
அணைத்துக்கொள்ள எமது
போராளிகள் போட்டியிடுவார்கள்."

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

போர்க் குற்றவாளிக்கு ஐ.நாவில் உயர் பதவி
மேற்குலக நாடுகள் கடும் அதிருப்தி

(31.01.2012, செவ்வாய்க்கிழமை)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐநா. நிபுணர் குழுவால் அறிக்கை சமர்ப் பிக்கப்பட்டு பல மாதங்கள் கடந் துள்ள நிலையிலும், அவ் அறிக்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை யின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இதுவரை விசாரணைகளை மேற்கொள்ளவில்லையென 'இன் னர் சிற்றி பிரஸ்' கடந்த வாரம் கடும் விசனம் வெளியிட்டிருந்த நிலையில், வன்னிப் போரின் இறு திக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்களுடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சிறீலங்காவின் இராணுவத் தள பதிகளில் ஒருவரான மேஜர் ஜென ரல் சவேந்திர டி சில்வா ஐ.நா பொதுச்செயலருக்கு ஆலோசனை வழங்கும் சிறப்புக் குழுவுக்கு நிய மிக்கப்பட்டுள்ளது குறித்து அனைத் துலக ரீதியாகக் கடும் விமர்சனங் கள் எழுந்துள்ளன.

குறிப்பாக மேற்குலக நாடுகள் இந்த நியமனத்தைக் கடுமையாக எதிர்த்துள்ளன. போர்க் குற்றங்க ளுடன் தொடர்புடைய ஒருவருக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டுள் ளதை ஏற்க முடியாது எனவும் அவை கருத்து வெளியிட்டுள்ளன.

ஐ.நா அமைதி நடவடிக்கைக ளுக்கான சிறப்பு ஆலோசனைக் குழுவுக்கு மேஜர் ஜெனரல் சவேந் திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளது கடும் சர்ச்சைகளை ஏற்படுத்தி யுள்ள நிலையில், இந்த நியம னத்தை ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூன் வழங்கவில்லை என்று அவரது பேச்சாளர் அறிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் செய்தியாளர்க ளிடம் பேசிய ஐ.நா பொதுச்செய லரின் பேச்சாளர் மார்ட்டின் நெர் ஸ்க்கி, மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவை ஐ.நாவின் அமைதி நடவடிக்கைகளுக்கான ஆலோச னைக் குழுவுக்கு நியமித்தது ஐநா பொதுச்செயலர் அல்ல. அவரை ஆசிய பசுபிக் குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகள் தான் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்தன என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தை அதிகார பூர்வமாக ஐ.நா. வெளியிடாது இரகசியமாக வைத்திருந்தபோதி லும், தனக்கு கிடைத்துள்ள இந்த நியமனம் தொடர்பாக மேஜர் ஜென ரல் சவீந்திர டி சில்வாவே கொழும் பிலுள்ள ஊடகங்களுக்கு தொலை பேசியில் தொடர்பு கொண்டு அறி வித்துள்ளார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மேஜர் ஜெனரல்

06ம் பக்கம் பார்க்க

சென்னையில் முத்துக்குமாருக்கு வீரவணக்கம் → 13

தமிழ்க்கதிர்
www.tamilkathir.com

நிலவரம்
www.nilavaram.com

சங்கதி
www.sangathie.com

Fax: (416) 321-3434

- Vertical Blinds
- Horizontal Blinds
- Shutters
- Rollers
- Draperies

Shai
Blinds and Shutters

Free Estimates!

(Markham & McNicoll)

Tel: (416) 871-3385 | 72-74 Dynamic Drive, Unit #14, Scarborough, M1V 1X6

இவ்வாரத்தின் சிறப்பு விலை வீடுகள்

எம் ஊடாக வாங்கும் வீடுகளுக்கு (புதிய/பழைய) WARRANTY ஒழுங்கு செய்து தரப்படும்

அண்ணளவான மோட்கேஜ் கணிப்புகள் 5% Down, Calculation 2.49 Call for more details

GTA யின் எப்பாகத்திலும் உங்கள் வருமானத்திற்கும், சகல தேவைகளுக்கும் ஏற்ற வீடு (School , Bus, வீடு இலக்கம், வீட்டு வாசல் போன்ற தேவைகள்) **வேண்டுமாயின் என்னுடன் தொடர்பு கொண்டபின் உங்கள் முடிவை எடுங்கள்!**

Meadowvale/Sheppard

3Bed மோட்கேஜ் Pmt

Lovely End Unit Townhome. Mattamy Built-4 Years Old. Ttc At The Door. Minutes To 401 (Meadowvale), Shops At Morningside. Two Minute Drive To The Toronto Zoo...

Lawrence/Bellamy

3+1Bed மோட்கேஜ் Pmt

A Rare Find. Spacious Bungalow In Very Quiet Family Neighbourhood.Seperate Entrance Basement Apartment For Potential Rental Income...

Morningside/Finch

3Bed மோட்கேஜ் Pmt

Location, Location, Location, Well Maintained Free Hold Town House In A Demand Area. Excellent Condition, Ideal For First Time Buyers...

Brimley/Lawrence

3+1Bed மோட்கேஜ் Pmt

Public Open House On Sunday January 29th From 2-4.Excellent Bungalow Situated On A Quiet Street. This Home Boasts Generous Sized Principle Rooms...

Finch/Mccowan

4+2Bed மோட்கேஜ் Pmt

Location Location Location!!! Detached 3-Level Backsplit, Best For The First Time Buyers, Live In And Rental At The Same Time...

Mccowan/Mcnicoll

3Bed மோட்கேஜ் Pmt

Prime Location,Walk To Mcnicoll/Mccowan,Rare Find Detached Fully Renovated House Features Newly Hardwood Floor From Top To Bottom,New Installed 2 Washrooms In The Ground And Second Floor,New Installed Kitchen With Granite Counter Top,New Paiting

Mccowan/Ellesmere

3+3Bed மோட்கேஜ் Pmt

Stunning Well Maintained Home, Gorgeous, Totally Renovated - New Roof, New Kitchen, New Furnace, New Windows Thru Out, Refinished Hardwd Floor, Single Attached Garage, Seperate Entrance To Large Finished Bsmt W/ Three Bedrms, Fireplace, 2 Kitchens, 2 Baths, 2 Fridges

Kennedy/Lawrence

3+1Bed மோட்கேஜ் Pmt

Not Your Regular HouseThis One Is Loaded***2 New Kit With Wood Doors,One With Granite Counter,One With Quartz Counter Top***Quality Hard Wood Fl Thru-Out M/F***2 F/Place***2 New W/Rms ***Crown Moulding***Porcelaine Tiles In Kit/Wash Rm...

MccowanRd./Steeles

3+1Bed மோட்கேஜ் Pmt

Professionally Renovated To Perfection! Open Concept Living/Dining. Everything Newly Renovated In 2011: Kitchen W/Granite Counter, Hardwood Floors Throughout House, Solid Oak Stairs, Potlights, Washrooms, Deck, Finished Basement, Thermal Windows, High-Efficiency Furnace, Cac.

ellamy/Lawrence/Ellesmer

3+1Bed மோட்கேஜ் Pmt

Once In A Lifetime Spectacular Home Comes Along That Shows To Perfection. Beautifully Renovated Home With A Functional Layout...

Kennedy/Lawrence

3+1Bed மோட்கேஜ் Pmt

Not Your Regular HouseThis One Is Loaded***2 New Kit With Wood Doors,One With Granite Counter,One With Quartz Counter Top***Quality Hard Wood Fl Thru-Out M/F***2 F/Place***2 New W/Rms ***Crown Moulding***Porcelaine Tiles In Kit/Wash Rm...

Neilson/Morningside

3+1Bed மோட்கேஜ் Pmt

A Beautiful, Bright & Spacious Acorn-Built 1477 Sq.Ft. Home In High Demand Location! Rare End Lot Beside Park Area For Extra Privacy...

Ellesmere/Pharmacy

3+2Bed மோட்கேஜ் Pmt

Brand New Everything Excellent Location,Upgraded New Roof,Brand New Windows,Brand New Furnace,A/Condition,New Entrance Doors,New 100 Amp Wiring,New Electric Fixtures,New Maplewood Kitchen With Soft Touch Close,Granite Counter Top With Undermount Sink

Morningside/401

4Bed மோட்கேஜ் Pmt

Spacious Detached 4 Bedroom With A Double Car Garage, Close To 401, Shopping Centre, Walking Distance To University Of Toronto, Ttc, Schools And Colleges, In A Very Desirable Neighbourhood, Cozy Family Room With Fireplace, Spacious Laundry Room On Main Floor...

Finch/Morningside

3+1Bed மோட்கேஜ் Pmt

Stunning Detached House Located Close To School And Ttc. 3 Large Bedrooms And Den. Living/Dining Rooms, Family Room, Kitchen With Breakfast Area Walk-Out To Back-Yard...

Steeles/Brimley

3+2Bed மோட்கேஜ் Pmt

Location, Locaton And Location Perfect For Medium Size Family**Hardwood Flr(Main), Parquet Staircase And Thru-Out 2nd Flr**Newer Windows, Newer Roof, Furnace(2006),New Toilets(2011)**New Insulation(2011)**Possible To Add Stand Alone Shower In Master Bathroom

New Houses 0 -5yrs, Bank Power Of Sale Houses,

Free Hold Houses, Finish - Basment house Avai.

மேலும் பல வீடுகள் விற்பனைக்கு உண்டு

மறைமுக கட்டணமில்லை

Dimond Awad Winner
சங்கர் மாணிக்கம்
Realtor, Mortage Advisor Certifed Home Inspector
Call: 416-453-6666
Email: ravi.viphome@gmail

Home life / Future
Realty Inc . Brokeage
Bus: 905 -201-9977
independently Owned and Operated
8am - 9pm
7days a Week

Gold Awad Winner
ஹேலன் அந்தோனிப்பிள்ளை
Realtor, Mortage Advisor
Call: 416-830-5724
Email: helen.exatina@gmail

புலத்தில்
தாயக தாகத்தின் குரல்

ஜெனீவா அதிராமல் தமிழர்களுக்கு நீதியில்லை

இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, மொழிப் பிரச்சினைதான் உள்ளதென்று புதிய வரைவிலக்கணம் எழுத முற்படுகின்றது சிங்களப் பேரினவாதம். தங்களின் புதிய திட்டமிடலுக்கு அணுகுண்டுத் தமிழன் அப்துல் கலாமை சாட்சிக்கு இழுத்து தலைமை தாங்கவும் வைத்திருந்தது மகிந்த சிந்தனை. 'அக்கினிச்சுடர் முத்துக்குமாரனுக்கு' இருந்த தமிழர் மீதான இன உணர்வின் சிறுபகுதிகூட, 'அக்கினிச் சிறகுகள் அப்துல் கலாமுக்கு' இல்லையே என்பதுதான் தமிழர்களின் வேதனை.

அனைத்துக் கட்சிக்குழு, நல்லிணக்க ஆணைக்குழு, செனட்சபை என காலத்தை இழுத்தடித்த மகிந்த, இப்போது 13வது திருத்தத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வு வழங்கப்போவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு வழங்கிய வாக்குறுதியை தூக்கியெறிந்துவிட்டு, சிறீலங்கா நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே தீர்மானிக்கும் என்று நாடகமாடுகின்றார்.

சிங்கள தேசத்திடம் இருந்து தமிழ் மக்கள் தங்களுக்கான நீதியைப் பெற்றுவிட முடியாது என்பது தமிழர்கள் கடந்த 64 வருடங்களாக பெற்றுவரும் அனுபவப்பாடம். ஆனால், இந்தியா பெற்றுத் தந்துவிடும் என இன்றும் அடித்துக்கூறுகின்றார்கள் படித்த மேதைகள். வல்லரசான இந்தியாவை பகைத்துக்கொண்டு ஈழத் தமிழர்கள் வாழமுடியாது என்று அச்சுறுத்துகின்றார்கள் அடிபணிவு அரசியலாளர்கள்.

சிங்களவர்களின் தாக்குதல்களில் இருந்து தமிழக மீனவர்களின் உயிரிழப்புக்களை தடுத்து நிறுத்திவிட முடியாது திணறும் இந்தியா, ஈழத் தமிழர்களின் உயிரை சிங்களத்திடம் இருந்து காப்பாற்றிவிடும் என்று கதையளந்தவர்கள், இப்போதும் அதனையே திரும்பத் திரும்ப அழுத்திச் சொல்கின்றார்கள்.

40 ஆயிரம் சிங்கள இராணுவம் யாழ்குடா முற்றுகைக்குள் சிக்கி அழிந்து நாசமாகப்போகின்றது என அச்சம்கொண்டு, 'பேசாத புலிகளுடன்' பேச முனைந்த இந்தியா, மூன்று இலட்சம் தமிழர்கள் முள்ளிவாய்க்கால் முற்றுகைக்குள் அழிந்துவிடுவார்களே என்று இறுதிவரை அச்சம் கொள்ளவில்லை.

உலக வல்லரசு என ஃபிடல் கஸ்ரோ அச்சப்பட்டிருந்தால், அமெரிக்காவின் 51வது மாநிலமாக கியூபா மாற்றமடைந்திருக்கக்கூடும் என்பதை, 'அடிபணிவு அரசியல்தான் தமிழர்களுக்கு நல்லதென்று' சொல்பவர்கள் புரிந்துகொண்டிருப்பார்களா என்ன?

ஜெனீவா இப்போது புதிய போர்க் களமாக விரிந்துள்ளது. போர்க் குற்றம், மனித உரிமை மீறல்கள் என அசிங்கப்பட்டுப்போயிருக்கும் சிங்கத்தின் முகத்திற்கு சாயம்பூசிக் காப்பாற்றும் முயற்சியில் இந்தியா, சீனாவுடன் சில நாடுகள் களமிறங்கியும் விட்டன. பான் கீ மூனின் மந்திராலோசனை சபையில் புதியவர்கள் அவசர அவசரமாக மாற்றப்படுகின்றார்கள். தமிழினப் படுகொலையை முன்னின்று நடத்தியவர்களும், அதற்கு உடந்தையாக இருந்தவர்களும்தான் இப்போது ஐ.நாவின் ஆலோசனை மையத்தின் பெரும் புள்ளிகள் என மனித உரிமை அமைப்புக்களும் அதிர்ச்சியடைகின்றன.

ஜெனீவாவை வெற்றிகொள்ள சிங்களம் தன்னை முழுமையாக தயார்படுத்திவிட்டது. அதற்காக அது எதனையும் செய்யத் தயாராகிவிட்டது. சிங்கள இராணுவச் சிப்பாய் ஒருவருக்கும் முன்னாள் பெண் போராளி ஒருவரை ஜனாதிபதி செயலகத்தின் ஏற்பாட்டில் திருமணம் செய்து வைத்து, தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்துவிட்டார்கள், இலங்கையில் இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டது என்பதுபோல் காண்பிக்க முயல்கின்றது. ஜெனீவா முடிவுகள் வரும்வரைக்கும் இவ்வாறான பல அதிர்ச்சிகளை தமிழர்கள் எதிர்கொண்டுதான் ஆகவேண்டும்.

கடந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு சில தினங்களுக்கு முன்பாக பான் கீ மூனை மிகவும் இரகசியமாக சந்தித்து சிறீலங்கா நகர்த்திய காய்கள், அவர்களுக்கு வெற்றியைத் தேடிக்கொடுத்தன. இப்போது பான் கீ மூனுக்கு மிகவும் அருகிலேயே தமது இராணுவத் தளபதி இருப்பதனால் மகிந்தவிற்கு அச்சம் அதிகம் இல்லாமல் போயிருக்கும்.

அதனால்தான், இளைஞர்களையும் யுவதிகளையும் கொன்றொழித்த சிறீலங்கா, 2014ல் நடைபெறவுள்ள ஐ.நா சபையின் உலக இளையோர் மாநாட்டை இலங்கையில் நடாத்துவதற்கான தீர்மானத்தை ஐ.நா பொதுச் சபையில் எட்டுவதற்கு, சீனா மற்றும் குழு 77 ஆகியவற்றின் ஆதரவைத் தேடுவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது. இதனை ஊடக அமைச்சர் கெகலிய றம்புக்வெல உறுதிப்படுத்துகின்றார்.

இலங்கையில் அமைதியான பேரணிகளையும், ஆர்ப்பாட்டங்களையும் கூட குழப்புவதற்கு அரசாங்கம் பல்வேறு தந்திரங்களையும் ஒடுக்குவதற்கு காடையர்கயும் பயன்படுத்துவதாக சிறீலங்காவின் ஜனநயாகத்துக்கான சட்டத்தரணிகள் அமைப்பே அதிர்ச்சி வெளியிடுகின்றது.

சிங்கள மக்களின் நிலைமையே இவ்வாறு இருக்கின்றதென்றால் தமிழர்களின் நிலையை சொல்லவேண்டியதில்லை. வாய் மூடியநிலையில் அங்குள்ள தமிழர்கள் வாழும் நிலையில், புலம்பெயர்ந்த தமிழர்கள் என்ன செய்யப்போகின்றார்கள்..? ஜெனீவா அதிராமல் தமிழர்களுக்கு நீதியில்லை.

சீனாவுக்கு இலங்கையை விற்கும் சிறீலங்கா!

ஒரு நாட்டை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர அமெரிக்கா முதலில் அந்நாட்டுக்கு தமது பொருளாதார அடியாட்களை அனுப்புவதாக முன்னாள் அமெரிக்க புலனாய்வு முகவர் நிறுவனத்தில் பணியாற்றிய ஜோன் பெர்க்கின்ஸ் தனது உயிரையும் பொருட்படுத்தாமல் எழுதிய ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம் என்ற நூலில் குறிப்பிட்டிருந்தார். பொருளாதார அடிமையாக்கி அந்நாட்டை ஆள முற்படுவதும், அது முடியாமல் போனால் அடுத்த அடுத்த கட்டங்களை தனது நடவடிக்கையை மேற்கொண்டு இறுதியில் படை நடவடிக்கை வரை எவ்வாறு அமெரிக்கா போகும் என்பதை தனது அனுபவங்களின் ஊடாகப் பெற்ற ஆதாரங்களுடன் அவர் எழுதியிருந்தார்.

இன்று சிறீலங்காவை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர இதே பொருளாதார நடவடிக்கையை சீனா கையாண்டுள்ளது. எந்தக் காலத்திலும் சிறீலங்காவினால் மீளச் செலுத்த முடியாத அளவிற்கு கடன்களை வழங்கி அந்நாட்டை பொருளாதார அடிமையாக்கும் செயற்பாட்டை நீண்டகாலத் திட்டத்துடன் மிகவும் நேர்த்தியாக சீனா மேற்கொண்டுவருவதாக குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே சுமத்தப்பட்டுள்ளன.

சீனா ஹாபர் என்ஜினியரிங் நிறுவனத்துடனான ஒப்பந்தம்

இந்நிலையில், சிறீலங்காவின் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தற்போது இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தத் தொடங்கியுள்ளது. மகிந்த ராஜபக்ச அரசாங்கம் இலங்கையை சீனாவுக்கு விற்பனை செய்து வருவதாக சுட்டிக் காட்டியுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கையின் பூகோள அரசியல் பின்னணி பற்றிய சிந்தனை இல்லாமல் மகிந்த அரசாங்கம் செயற்படுவதால் இந்தியாவின் எதிர்ப்பையும் சம்பாதிக்க வேண்டி ஏற்பட்டிருப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளது.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த 27ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரா கலாநிதி ஹர்ச டி சில்வா இது பற்றிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவர் இங்கு மேலும் பேசுகையில் 'மேற்குலக அதிகாரமும் இலங்கையின் தலைவிதியும்' என்று அமைச்சர் விமல் வீரவன்ச எழுதிய நூல் 'சீன அதிகாரமும் இலங்கையின் தலைவிதியும்' என்று திருத்தியமைக்கப்பட வேண்டும் என்பதே ஐ.தே.க.வின் நிலைப்பாடு. மகிந்த ராஜபக்ச அரசாங்கம் தற்போது மிகத் தெளிவாக இலங்கையை சீனாவுக்கு விற்றுக் கொண்டிருக்கிறது. யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் அபிவிருத்திகள் துரிதமாக இடம்பெற்று வருவதாகவும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இடைவிடாமல் நாட்டுக்கு வருவதாகவும் அராங்கம் கூறினாலும் உண்மை நிலையில் அப்படியானதொரு நிலைமை இல்லை.

சீனாவின் ஷங்கரிலா விடுதி நிறுவனம் இலங்கையில் முதலீடு செய்யப் போவதாக அரசாங்கம் பெரிதாக கூறிக் கொண்டாலும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தம் கைச்சாத்திட்டு ஒருவருடம் ஆகிவிட்ட போதிலும் அந்த நிறுவனம் தமது முதலீட்டு திட்டத்துக்காக எமது நாட்டில் ஒரு துண்டு காணியைக் கூட இன்னும் துப்புரவு செய்வில்லை.

அதேபோல், கொழும்பு தெற்கு துறைமுகத்தின் புதிய இறங்குதுறை தொகுதியின் 85 சதவீத உரிமையும் 35 வருடங்களுக்கு சீனாவின் 'சைனா மர்சன்ட் ஹோல்டிங்ஸ்' நிறுவனத்துக்கு அரசாங்கம் வழங்கியுள்ளது.

அது மட்டுமல்லாது அம்பாந்தேட்டை துறைமுக திட்டப் பணிகளையும் அரசாங்கம் எந்தவொரு கேள்விமனு கோரல் நடைமுறையின்றி 'சைனா ஹாபர் என்ஜினியரிங்' (China Harbour Engineering Company) நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுக திட்டத்துக்கு 360 மில்லியன் அமெரிக்க டொலர் செலவினத்தை அரசாங்கம் தாங்கிக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இந்த துறைமுக பணிகளுக்கென ஆரம்ப 360 மில்லியன் டொலருக்கு மேலதிகமாக 140 மில்லியன் டொலர் செலவும் எமக்கு ஏற்பட்டது.

அதாவது 'சைனா ஹாபர் என்ஜினியரிங்' எனும் இந்த நிறுவனம் அம்பாந்தோட்டை துறைமுக திட்டத்துக்காக எந்தவொரு கேள்விமனு கோரல் நடைமுறையும் இன்றி 500 மில்லியன் அமெரிக்க டொலரை எமது நாட்டிடமிருந்து பெற்றுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் இரண்டாம் கட்ட பணிகளுக்கென இதே 'சைனா ஹாபர் என்ஜினியரிங் நிறுவனம்' தான் எந்தவொரு கேள்விமனு கோரலுமி இன்றி சீனாவிடமிருந்து 810 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக பெற்றுள்ளது. அம்பாந்தோட்டை, மத்தல சர்வதேச விமான நிலைய நிர்மாணப் பணிகளையும் 'சைனா ஹாபர் என்ஜினியரிங்' நிறுவனமே மேற்கொண்டு வருவதுடன், அந்த வேலைத் திட்டத்துக்கென இவர்கள் 200 மில்லியன் அமெரிக்க டொலரை செலவிடுகின்றனர்.

அத்துடன், கொழும்பு துறைமுகத்தின் புதிய இறங்குதுறை பகுதியில் கடலை நிரப்பி இன்னுமொரு சீன நிறுவனத்துடன் இணைந்து 750 மில்லியன் அமெரிக்க டொலரை செலவிட்டு அபிவிருத்தி செய்ய திட்டமிடப் பட்டிருப்பதாகவும் துறைமுக அதிகார சபை அறிவித்துள்ளது. அதேபோல், 105 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகுமென கூறப்படும் கொழும்பு தாமரை கோபுரம் திட்டத்தையும் எந்தக் கேள்வி மனுக் கோரலும் இன்றி அரசாங்கம் சீன நிறுவனமொன்றுக்கே வழங்கியுள்ளது. அந்த வகையில், அரசாங்கம் நாட்டின் சகல திட்டங்களையும் எந்தவொரு கேள்வி மனு கோரல் நடைமுறையுமின்றி சீனாவின் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

சீன மஃபியா ஒன்று சிறீலங்கா அரசியல்வாதிகளுடன் ஒன்றிணைந்து வெளிப்படைத் தன்மையின்றி எமது நாட்டு மக்களின் பணத்தை நாட்டிற்கு அவசியமில்லாத பாரிய நிர்மாணங்களுக்கு பயன்படுத்துவது இதிலிருந்து புலனாகிறது. நாட்டின் சகல அபிவிருத்தி திட்டங்களுக்கும் சீனா பாரியளவில் உதவிகளை வழங்குவதாக அரசாங்கம் கூறினாலும் 2011ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து நவம்பர் மாதம் வரை சீனா எமது நாட்டுக்கு ஒரு சதமேனும் அன்பளிப்பாக வழங்கவில்லை. இது தொடர்பான சகல புள்ளி விபரங்களையும் நாம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளோம்.

(15ம் பக்கம் பார்க்க)

புலத்தில்

Pulathil Tamil Weekly

சர்வதேச ஈழமுரசின் கனடாப் பதிப்பு

Redacteur: K. Jeisanthar
Editor in chief: K. Jeisanthar
ஆசிரியர் கி.ஜெய்சந்தர்

பதிப்பாசிரியர்:
ஈசன் குலசேகரம்

ஆலோசனை மற்றும் உதவி:
பிரபு, சுரேஸ், வரதராஜன், அன்ரன் மரியநாயகம், சாரங்கன், ஈசன்-மொன்றியல்

தொடர்புகளுக்கு:
தொலைபேசி: 416 640 1125
தொலை நகல்: 416 640 1126
மின்னஞ்சல்: pulathil@gmail.com
இணையம் :www.pulathil.com

அஞ்சல் முகவரி :
P.O.Box 4068,
1235 Mc Cowan Rd,
Scarborough-ON,
M1H OA4

குறிப்பு
பொது அமைப்புக்களின் விளம்பரங்கள் மற்றும் அறிவித்தல்களை பிரசுரிப்பதற்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

பிரித்தானியா:
Eelamurasu Weekly
E.Mail-eelamurazu.uk@gmail.com
078 3087 4808
MOHAN

அனைத்து தொடர்புகளுக்கும்:
MAISON DES MEDIAS
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE Gratuit
22, Rue Perdonnet,
75010 Paris, France
Tel: 00 33 1 40 05 95 15
Fax: 00 33 1 40 05 95 16

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-eelamurazu@gmail.com
விளம்பர விநியோக தொடர்புகட்கு:
E.Mail-eelamurazuadm@gmail.com

குறிப்பு:
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. புலத்தில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதிபெறவேண்டும்.

போர்க் குற்றவாளிக்கு ஐ.நாவில்.....

சவேந்திர டி சில்வா, ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் அமைதி காக்கும் நடவடிக்கைகள் தொடர்பான விசேட ஆலோசனைக் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை போர்க் குற்றஞ்சாட்டப்பட்டு தெரிவிக்கப்பட்ட ஒருவரை ஐ.நா. மினுக்கித் துலக்குவதற்கான உதாரணம் என்று நியூயோர்க்கை தளமாகக் கொண்ட இன்னர் சிற்றி பிரஸ் கடுமையாக விமர்சித்திருக்கிறது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான விசேட ஆலோசனைக் குழுவின் முன்னாள் பிரதி செயலாளர் நாயகம் லூயிஸ் பிரசெற்றி, ஐ.நா. அமைதி காக்கும் பிரிவின் முன்னாள் தலைவர் ஜேன்மாரி குகென்னோ ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். 2009ல் சவேந்திர டி சில்வாவின் படையணியானது ஐ.நா.வின் விசேட நிபுணர் குழுவினது இலங்கை தொடர்பான அறிக்கையில் போர்க் குற்றங்களுக்காக சில்வாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக விபரிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் அமைதி காக்கும் நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனை குழுவில் எவ்வாறு அவர் இடம்பெற முடியும்? என்று இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பாக கடந்த 27ம் திகதி வெள்ளிக்கிழமை இன்னர் சிற்றி பிரஸின் மத்தியூ ரஸல் லீ தெரிவித்திருப்பதாவது, பான் கீ மூனின் பிரதி செயலாளர் நாயகம் ஆஷா ரோஸ் மைக்ரோவின் இடத்திற்கு நியமிக்கப்படுவதற்கு கள ஆதரவு விவகாரத்துக்கான உதவி செயலாளர் நாயகம் சுசானா மல்கோரா தயாராக இருப்பதாக இன்னர் சிற்றி பிரஸ் அக்டோபர் 24ல் தெரிவித்திருந்தது. அமைதி காக்கும் விவகாரத்தை ஐ.நா. பொதுச் சபைக் குழு கையாள்வதாக பான் கீ மூனின் உதவி செயலாளர் நாயகம் சுசானா மல்கோரா கூறியுள்ளார். பொருத்தமான அனுபவம் வாய்ந்த 5 மாண்புமிக்கவர்களை கொண்டதாக சிரேஷ்ட ஆலோசனைக் குழு உருவாக்கப்படுகிறது. இதில் 5 பேர் பாரிய படைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகளைச் சேர்ந்தவர்களாகும். மேலும் ஐவர் பாரிய அளவில் நிதிப்பங்களிப்பு செய்வோரின் பிரதிநிதிகளாகும். அத்துடன் ஒவ்வொரு பிராந்தியக் குழுவிலிருந்தும் ஒருவர் இக் குழுவில் இடம்பெறுவார் என்று சுசானா கூறியிருந்தார்.

ஆசியா பசுபிக் குழுவின் பிரதிநிதியாக சில்வாவை மினுக்கி துலக்கும் பொருட்டு சத்தமின்றி சிறீலங்கா நகர்த்தியிருப்பதாக தோன்றுகிறது என்று இன்னர் சிற்றி பிரஸ் கூறியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தொடர்பான பிராந்தியக் குழுவில் தனது பிரதிநிதியாக ஒருவரை சிரியா நியமிக்க மேற்கொண்ட முயற்சி போன்ற ஏனைய சூழ் நிலைகளில், அந்த மாதிரியான தொரு நியமனங்களை தவிர்த்துக் கொள்ள அல்லது பின்வாங்குவதற்கான முயற்சிகள் செயலகம் உட்பட ஐ.நா.வில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஐ.நா.வின் விதிமுறைகளை இந்த விடயம் சங்கடப்படுத்தும் அல்லது கேலிக் கூத்தாக்கிவிடும் என்பதற்காக தவிர்த்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் இங்கு பான் கீ மூன் அது தொடர்பாக என்ன செய்வார்? என்று இன்னர் சிற்றி பிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது.

தற்போது ஐநாவுக்கான துணைத் தூதுவராக பணியாற்றும் சவேந்திர டி சில்வா, சிறீலங்காவின் 58வது படை பிரிவின் கட்டளையிடும் தளபதியாக செயற்பட்டவர். முள்ளிவாய்க்கால் இன அழிப்பு போரில் இவர் பங்கேற்றத்தையும் நடந்த படுகொலைகளையும் நேரடிச் சாட்சிகள் போர்க்குற்ற ஆதாரங்களுடன் சனல் 4 தொலைக்காட்சி தனது 'இலங்கைக் கொலைக்களம்' என்ற ஆவணப் படத்தில் அம்பலப்படுத்தியிருந்தது தெரிந்ததே.

சிறீலங்காவைக் காப்பாற்ற 15 பேர் கொண்ட குழு ஜெனீவா விரைவு

ஜெனீவாவில் பெப்ரவரி மாத இறுதியில் ஆரம்பமாக உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படாமல் தடுப்பதில் சிறீலங்கா அரசு தீவிரமாக உள்ளது. இந்தப் பணிகளுக்காக அமைச்சர்கள் பலரை உள்ளடக்கிய 15 பேர் கொண்ட குழு பல்வேறு நாடுகளுக்கும் விரையவுள்ளது. எதிர்வரும் 31ம் திகதி செவ்வாய்க்கிழமை இந்தக் குழு கொழும்பில் இருந்து புறப்படவுள்ளது. இலங்கையின் இறுதிப் போரில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்காகச் சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்று மேற்கு நாடுகள் வலியுறுத்துகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மார்ச் மாதக் கூட்டத் தொடரில் இம்மனித உரிமைகள் நிலைமை குறித்துப் பகிரங்க விசாரணை கோரும் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது என்ற தகவல் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த விவாதத்தை நடத்த அரசு ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. ஆனால், அத்தகைய விவாதம் ஒன்று தேவையற்றது, அதனைத் தான் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை என்று ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு எழுத்து மூலம் சிறீலங்கா அறிவித்துள்ளது.

இருப்பினும் ஜெனீவாவில் ஏற்படக்கூடிய நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்கென அமைச்சர்கள் உயர் அதிகாரிகளை உள்ளடக்கிய 15 பேர் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இந்தக் குழுவில் அமைச்சர்கள் பீரிஸ், மகிந்த சமரசிங்க, கெஹலிய ரம்புக்வெல, ஜோன் செனவிரட்ன, டிலான் பெரேரா ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை விவகாரம் குறித்த பகிரங்க விசாரணை கோரும் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டால் அதனை முறியடிப்பதற்கான ஆதரவைத் திரட்டுவதே இந்தக் குழுவின் நோக்கம். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உறுப்புரிமை பெற்றுள்ள லத்தீன் அமெரிக்க நாடுகள், அரபுலக நாடுகள் மற்றும் ஆசிய நாடுகளுக்குச் சென்று இவர்கள் சிறீலங்காவின் நிலையைத் தெளிவுபடுத்த உள்ளது.

இதேவேளை, இந்தக் கூட்டத் தொடரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழர் தரப்பு நியாயத்தை எடுத்து விளக்கும் வகையில் அவர் கூட்டத்தொடரில் கலந்து கொள்வார் என்று ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழருக்கு நீதிவழங்க சிறிலங்கா தவறியுள்ளது

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

வன்னியில் நடந்த இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதி வழங்க சிறீலங்கா அரசு தவறிவிட்டது என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் விமர்சனம் செய்துள்ளது. போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்கவோ பொறுப்புக்கூறவோ சிறீலங்கா அரசு தவறியுள்ளது. மாறாகப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற இரத்தம் தோய்ந்த நடத்தைகள் பற்றிய குற்றச்சாட்டுகளில் இருந்து இராணுவத்தை சிறீலங்கா அரசு விடுவித்துள்ளது. இவ்வாறு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

2012ம் ஆண்டுக்கான உலக மனித உரிமைகள் நிலைமைகள் குறித்த அறிக்கையை மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த வாரம் வெளியிட்டுள்ளது. 90 நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் குறித்து 676 பக்கங்களில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் இலங்கை குறித்துக் கூறப்பட்டுள்ளதாவது: ஊடக அச்சுறுத்தல் தொடர்கிறது. மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு இராணுவத்தினரால் நிகழ்த்தப்பட்ட மீறல்களுக்குப் பொறுப்புக்கூறுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அவர்களைப் பாதுகாத்து வருகிறது. மேலும், ஊடகங்கள் மற்றும் குடியியல் சமூகக்குழுக்கள் மீதான அச்றுத்தல்கள் தொடர்கின்றன. வடக்கு, கிழக்கில் காணிகள் அபகரிப்பு மற்றும் பாதுகாப்பின்மை பற்றி எழுப்பப்பட்ட பெருமளவு முறைப்பாடுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை டிசம்பரில் வெளியிடப்பட்டபோதும், போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற இரத்தம் தோய்ந்த நடத்தைகள் பற்றிய குற்றச்சாட்டுகளில் இருந்து சிறீலங்கா இராணுவத்தை அது விடுவித்துள்ளது. 2011இல் பொறுப்புக்கூறுதல் மிகமுக்கிய பிரச்சினையாக இருந்ததுடன், ஊடகங்கள் மீதான தணிக்கை அதிகரித்தது, நீண்டகாலமாக இருந்து வந்த குறைகள் எவற்றுக்கும் தீவிரமாகப் பதிலளிக்கப்படவில்லை.

நீதியற்ற, பலவீனமாக சட்ட ஆட்சியை, நில அபகரிப்பை, ஊடகத் தணிக்கையை இலங்கையர்கள், ஆட்சியாளர்களிடம் இருந்து எதிர்கொண்டனர். சிறீலங்கா அரசினால் வெளியிடப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை போர் மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகளில் இருந்து அரச படைகளை விடுவித்துள்ளதுடன், மேலதிக பொறுப்புக் கூறுதல் பற்றிய எந்த உறுதியான அடியையும் எடுத்து வைக்கவில்லை. ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையில் சிறீலங்கா அரச படைகளின் மீறல்கள் பற்றிக் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து இந்த அறிக்கையில் எதையும் காணவில்லை. சுதந்திரமாக கருத்துகளை வெளியிடுவோர் மீதான தாக்குதல்கள் 2011 இலும் தொடர்ந்தன.

உதயன் செய்தி ஆசிரியர் தாக்கப்பட்டது, நெதர்லாந்து வானொலி ஊடகவியலாளர்கள் இலங்கைப் காவல்துறையினரால் துன்புறுத்தப்பட்ட பின்னர் வெள்ளை வானில் வந்தோரால் தாக்கப்பட்டது, அவர்களின் பொருள்கள் கொள்ளையிடப்பட்டது, மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இருவர் யாழ்ப்பாணத்தில் காணாமற்போனது என்பனவற்றை தீவிரவாத செயல்களாகவே மனித உரிமைகள் கண்காணிப்பகம் பட்டியலிடப்படுகிறது.

இணையத்தளங்களை பதிவு செய்ய சிறீலங்கா அரசு விடுத்த உத்தரவை கருத்து சுதந்திரத்தின் மீதான அடக்குமுறையாக இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. நல்லிணக்கத்துக்கான அர்த்தமுள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சிறீலங்கா அரசு கூறினாலும், அதற்கான ஆதாரங்கள் சிறியளவிலேயே உள்ளன எனவும் நல்லிணக்க முயற்சிகள் முடிவடைந்த வரையில் தாமதப்படுத்தப்படுகின்றன எனவும் அது கூறியுள்ளது.

பூசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தீவிர உறுப்பினர்களான 1000 முன்னாள் போராளிகளின் நிலைமை என்னவென்று தெரியாத நிலை உள்ளது எனவும், தடுப்பிலுள்ளோர் சித்திரவதை செய்யப்படுவது, மற்றும் தவறாக நடத்தப்படுவது பற்றிய குற்றச்சாட்டுகள் குறித்து எந்த விசாரணைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் குற்றம்சாட்டியுள்ளது.

வாழ்க்கைத்துணை உலகத்தமிழர்களுக்கான திருமண சேவை!
www.vaalkaithunai.com

முத்துக்குமரா... உன் ஈகம் வீண் போகாது!



முத்துக்குமரா...
நீ மூட்டிய தீ பற்றிப் படர்கின்றது!
உன் கனவுகள்
கல்லறைத் தமிழர்களையும்
தட்டி எழுப்புகின்றது!
சிங்களத்தின் மீது போர் தொடுக்க
தாய்த் தமிழகம் தயாராகிவிட்டது!
உன்னை எரித்த தீச்சுடரை
இதயத்தில் ஏந்திவிட்டார்கள்
உலகத் தமிழர்கள்!
உன் வார்த்தைகள் தமிழகத்தின்
ஆட்சியையே மாற்றிவிட்டது!
நீ கண்டது
ஊமைக் கனவல்ல...
உண்மையின் நிதர்சனம்!
ஈழத் தமிழர்களின் விடிவே
உலகத் தமிழர்களது அடையாளம் என்பதால்...
உன் ஈகம் இமயம்வரை
அறைந்து சொல்கின்றது
தமிழன் வீழமாட்டான் என்று!

முத்துக்குமரா...
ஈகப் பெருஞ்சுடரே!
உன்னைத் தொடர்ந்து எத்தனை
நெருப்பு மனிதர்கள்... செங்கொடி வரை?
உலகத் தமிழினம்
இனியும் உறக்கம் கொள்ளுமா?

முத்துக்குமரா...
தமிழீழம் மலரும்வரை
உன் நினைவுகளையும் ஏந்தியபடியே
போர்க் களம் செல்கின்றோம்!
முருகதாசன் திடலில்
உன்னையும் வணங்கியே
முரசறைவோம்!
மார்ச் ஐந்தில்...
புலம்பெயர் தமிழர்களது கண்களில்
அக்கினியாய் நீ இருப்பாய்!

முத்துக்குமரா...
உன்னால் முடியும்
எங்கள் தமிழர்களை
ஒன்றாக... ஒரே களத்தில் சேர்க்க
உன்னால் முடியும்!
எங்கள் போர்க்களத்தைச் சிதைக்கும்
கயவர்களை கருவறுக்க
உன்னால் முடியும்!
எழுந்து வா... மார்ச் ஐந்தில்
ஜெனிவா போர்க் களத்திற்கு!

- தமிழீழ மக்கள் பேரவை - பிரான்ஸ்

யாழ்குடாவில் காணாமல் போனவர்கள் எலும்பு எச்சங்களாக மீட்கப்படும் அவலம்!

யாழ்குடாவில் செம்மணிப் புதைகுழிக்குப் பின்னர் பாரிய புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படாதபோதும் ஆங்காங்கே தினந்தோறும் மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்படுவது அதிகரித்துள்ளது. யாழ். பண்டத்தரிப்பில் கடந்த 25ம் திகதி இரு மனிதர்களின் எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டன. படையினரின் முன்னாள் மண் அணைக்கு அருகாக இருந்த கிணறு ஒன்றினுள் இருந்தே இவை மீட்கப்பட்டன. இளவாலை பண்டத்தரிப்பு பிரதான வீதியில் ரேஞ்ச் அடி என்ற இடத்தில் இருந்து இந்த இரு எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டுள்ளன. சில மாதங்களுக்குள் இறந்தவர்களுடைய எலும்பு எச்சங்களாக இவை இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றபோதும், முழுமையான உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்பே அதனை உறுதிப்படுத்த முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

கிணற்றில் நீர் வற்றி விட்டதால் அப்பகுதி விவசாயிகள் அதனைத் துப்புரவு செய்தனர். கிணற்றினுள் இறங்கியவர்கள் அதற்குள் மனித மண்டையோடுகளைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். இரண்டு மண்டையோடுகளும் எலும்பு எச்சங்களும் மீட்கப்பட்டன. ஆண்களின் உள்ளாடைகளும் மேலாடையும் கூடக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினர் பயன்படுத்துவது போன்ற தோற்றமுடைய பச்சை நிறத்திலான துணியும் கிணற்றிலிருந்து கிடைத்துள்ளது. ஒரு மண்டையோட்டினுள் சிதைவடையாத நிலையில் மூளை காணப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறினர். எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் அனைத்தும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

நிலைமை இவ்வாறிருக்க, அதேதினம் யாழ். தனங்கிளப்பில் இருந்து காணாமல்போன இளம்பெண் ஒருவரின் எலும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அதே இடத்தினை சேர்ந்த சுப்பிரமணியம் அற்புதமலர் என்ற 24 வயதுப் பெண்ணது எலும்புக்கூடே அதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட யுவதியைக் கடத்தி, கூட்டுப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின்னரே கொலை செய்யப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக யாழ். சட்டவைத்திய அதிகாரி குறிப்பிட்டுள்ளார். தனங்கிளப்பில் சிறீலங்கா இராணுவத்தின் நிலைகொண்டிருக்கும் பகுதிக்கு மிக அருகில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட மண் அணை ஒன்றின் அருகாமையில் இருந்தே அப்பெண்ணின் எச்சங்கள் மீட்கப்பட்டது. எச்சம் மீட்கப்பட்ட பகுதியில் இருந்து சுமார் 120 மீற்றர் தூரத்தில் யுவதியினுடைய கால் பாதணி கண்டுபிடிக்கப்பட்டது. சடலம் இருந்த இடத்திற்கும் பெண் அணிந்திருந்த பொருட்கள் இருந்த இடத்திற்கும் இடையில் இடைவெளி காணப்பட்டுள்ளது. அத்துடன், பெண்ணுடைய சடலத்தை பன்றி போன்ற மிருகங்கள் தின்றிருப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை கொலைசெய்யப்பட்ட பெண் தனங்கிளப்பிலுள்ள தனது வீட்டிற்கு மீசாலையிலுள்ள உறவினருடைய வீட்டிலிருந்து வந்து தங்கியுள்ளார். இங்கு வீட்டுத்திட்ட வேலைகள் நடைபெற்றுவருவதால் கடந்த மாதம் நவம்பர் மாதம் 29ம் திகதி காலை வீட்டுத்திட்டத்திற்கான பணத்தை வங்கியிலிருந்து எடுப்பதற்கு செல்வதாக கூறிச் சென்றார்.

காலை 8 மணியளவில் வீட்டிலிருந்து வெளியே சென்றவர், வங்கியிலிருந்து தனது சகோதரியின் வீட்டிற்கு செல்வதாகவே கூறிச்சென்றிருந்தார். ஆனால் மாலை வரையில் அவர் அங்கு போகவில்லை. என்று தெரிந்ததும் அவரைத் தேடத்தொடங்கினோம். அவர் ஓடிப் போய் விட்டதாக பல கதைகள் கூறப்பட்டபோதும் இறுதியில் இது உண்மையில்லை என்று தெரியவந்தது என்றார்.

இந்த பெண்ணின் சகோதரி கருத்து தெரிவிக்கையில், என்னுடைய சகோதரி எனது வீட்டிற்கு வருவதாக தெரிவித்தபோதும் அவர் வரவில்லை. இதனால் அவரை

இங்குள்ள பற்றைகள், காடுகள் பாழடைந்த கிணறுகள் என எங்கும் தேடினோம். கண்டுபிடிக்கமுடியவில்லை. இப்போது எலும்பாக கிடைத்துள்ளார். இன்றுவரை (சம்பவம் தெரியும்வரை) நிம்மதி இல்லாமல் அலைந்தோம் என்றார்.

இதேவேளை இப் பெண் காணமல்போன பின்னர் சுமார் 10 நாட்களின் பின்னர் அப்பெண் வைத்திருந்த செல்பேசி எண்ணிலிருந்து அவரது வீட்டின் அருகிலுள்ள தோழியின் இலக்கத்திற்கு அழைப்பொன்று வருகை தந்ததாகவும் தெரியவருகின்றது. அழைப்பினை மேற்கொண்ட ஆண் ஒருவர் நாங்கள் சுகமாக இருக்கின்றோம். நான்தான் மலரை திருமணம் செய்துள்ளேன். நாங்கள் மன்னாரில் இப்போது உள்ளோம் ஜனவரி மாதம் தனங்கிளப்பிற்கு அழைத்து வருவேன் என்று கூறினார் என்று தெரிவித்த மேற்படி தோழி, மலர் எங்கே என்று கேட்டபோது அவர் குளித்துக்கொண்டிருப்பதாக தெரிவித்து அழைப்பை துண்டித்தார் என்று குறிப்பிட்டதோடு அதன்பின்னர் தாம் அழைப்பை மேற்கொள்ள முயற்சித்த போதும்

(10ம் பக்கம் பார்க்க)

FOR DIGITAL GENERATIONS
KVM JVM
PROFESSIONAL PHOTOGRAPHY & VIDEOGRAPHY
WE ARE PROFESSIONAL FOR ALL OCCASIONS
SATISFACTION GUARANTEE
kvmjvm.com

15-30 நாட்களுக்குள் வீடியோ, அல்பம் தரப்படும்.
தாமதித்தால் இலவசமாகத்தரப்படும்!
Call : RAMESH or MATHAN
Montreal : 514-862 0404
Toronto : 674-5473 351
Vancouver : 604-283 6590
Ottawa : 613-366 7372
Cornwall : 613-36160 038
www.kvmjvm.com info@kvmjvm.com
1888 KVM O JVM (586 0 586)
FOR DIGITAL GENERATIONS
KVM JVM
PROFESSIONAL PHOTOGRAPHY & VIDEOGRAPHY

இளைஞனின் காமப்பசிக்கு இரையான மூதாட்டி

இளைஞனின் காமப்பசிக்கு 68 வயது மூதாட்டி இரையான சம்பவமொன்று நீர்கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இக்குற்றச் செயலுடன் தொடர்புடைய 30 வயது இளைஞரை நீர்கொழும்பு கொச்சிக்கடை காவல்துறையினர் கைது செய்துள்ளனர். குறித்த மூதாட்டி கடந்த 15ம் திகதி சந்தேக நபரான இளைஞனால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாகக் கொச்சிக்கடை காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே இச் சந்தேக நபர் கடந்த 28ம் திகதி சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

சீனாவில் 3வது துணைத்தூதரகத்தை அமைக்கும் சிறீலங்கா

சீனாவில் சிறீலங்கா தனது மூன்றாவது துணைத் தூதரகத்தை நிறுவவுள்ளது. அதற்கான அனுமதியை சீன அரசாங்கம் வழங்கியுள்ளது. தெற்கு சீனாவின் குவாங்டொங் மாகாணத்தில் உள்ள குவாங்சூ நகரில் இத் துணைத் தூதரகம் நிறுவப்படவுள்ளது. சீனாவில் சிறீலங்காவின் துணைத் தூதரகங்கள் ஏற்கனவே ஷாங்காய் மற்றும் செங் டு போன்ற நகரங்களில் அமைந்துள்ளது.

சிறீலங்காவில் தனியார் உலங்குவானூர்தி சேவை

சிறீலங்காவில் உல்லாசப் பிரயாணத்துறையினை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் தனியார் உலங்குவானூர்தி சேவை தொடங்கிவைக்கப்பட்டுள்ளது. செனொக் என்ற நிறுவனம் ஆரம்பித்துள்ள இந்த விமான சேவைக்கு எயா செனொக் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தச் சேவையில் இரு உலங்குவானூர்திகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. சிறீலங்காவின் பி.ஆர்.சி. விளையாட்டரங்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உலங்குவானூர்திகளை மகிந்த பார்வையிட்டு, வானூர்தி சேவையினை தொடக்கிவைத்துள்ளார்.

நரேந்திர மோடியுடன் ரணில் விக்கிரமசிங்க சந்திப்பு

ஐந்து நாட்கள் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இலங்கைக்கு பயணம் செய்யுமாறு குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு ரணில் விக்ரமசிங்க இதன்போது அழைப்பு விடுத்துள்ளார். ரணில் விக்ரமசிங்கவின் இந்த அழைப்பை நரேந்திர மோடி ஏற்றுக் கொண்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அத்துடன், இலங்கையில் அதிகாரப் பகிர்வு மற்றும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் ரணில் பேசியதாகவும் (!) தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலியல் தொழில் விடுதி நடத்திய தாய்லாந்து பெண்ணுக்கு அபராதம்

கொள்ளுபிட்டி ஆர்.ஏ.டி. மெல் மாவத்தையில் பாலியல் தொழில் விடுதியொன்றை நடத்த உதவிய குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட தாய்லாந்து பெண்ணொருவருக்கு கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரட்ன 50,000 ரூபா அபராதம் விதித்தார். பனிடா லிப்ட் எனும் இப்பெண் 2011ம் ஆண்டு ஒகஷ்ட் மாதம் 6ம் திகதி கொள்ளுப்பிட்டி காவல் துறையினரிடம் கைதானார். காவல் உத்தியோகஸ்தர் ஒருவர் மாறுவேடத்தில் சென்று இப்பெண்ணுக்காக 3000 ரூபாவை செலுத்தினார். அதன்பின் அப்பெண்ணும் மற்றும் பலரும் கைது செய்யப்பட்டனர். இப்பெண்ணுக்கு கடந்த வாரம் 50,000 ரூபா அபராதம் விதித்த நீதவான், ஏனைய சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு காவல் துறையினருக்கு உத்தரவிட்டார்.

சரத் என்.சில்வாவை விசாரிக்க நீதியரசர் விக்னேஸ்வரன் மறுப்பு

சிறீலங்காவின் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராக முன்னாள் நீதிபதிகள் சிலரால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்து விசாரிப்பதற்கு அமைக்கப்படவிருக்கும் குழுவின் தலைவராகப் பணியாற்றுமாறு ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பை உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசரான சி.வி.விக்னேஸ்வரன் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் எனத் தெரியவருகிறது. இது தொடர்பில் தனக்கு கடிதம் அனுப்பிய ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்குப் பதிலை எழுதிய நீதியரசர், அந்த விவகாரத்தில் தனது நிலைப்பாட்டை விளக்கியதுடன் அத்தகைய விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் நீதிச்சேவை ஆணைக்குழுவின் பணிகளிலும் நீதித்துறையின் சுதந்திரத்திலும் தலையீடு செய்வதாக அமையும் என சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் தெரியவருகிறது.

ஈரோ கடத்திய இலங்கையர் இத்தாலியில் கைது

சட்டவிரோதமான முறையில் ஒரு தொகை ஈரோ நாணத்தைக் கடத்திச் சென்ற இலங்கையர் இத்தாலி விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த இலங்கையர் இத்தாலியின் மிலானோ விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது அவரிடமிருந்து 4 இலட்சத்து 20 ஆயிரம் ஈரோக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக குறித்த இலங்கையர் மிலானோ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இத்தாலியில் குறிப்பாக மிலானோ பகுதியில் அதிகளவில் சிங்களவர்கள் வாழ்வது குறிப்பிடத்தக்கது.

யாழில் சுவரொட்டி ஒட்டியவர்கள் மீது படையினர் தாக்குதல்

சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும் என்னும் தலைப்பிலான பிரச்சாரக் கூட்டத்திற்கான சுவரொட்டிகளை யாழில் ஒட்டிக் கொண்டிருந்த சோசலிச சமத்துவக் கட்சியினர் மீது இராணுவத்தினர்

10ம் பக்கம் பார்க்க

திருப்பி அனுப்பப்படுபவர்களிடம் பணப்பறிப்பு

மேற்கு ஆபிரிக்காவில் 200ற்கும் மேற்பட்ட தமிழர்கள் - இலங்கைக்கு கொண்டு செல்வதில் சிறீலங்கா தீவிரம்

அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்படும் தமிழர்களிடம் இருந்து பெரும் பணப்பறிப்பில் சிறீலங்கா ஈடுபட்டுள்ளதாக தெரியவருகின்றது. அண்மையில் பிரான்சில் இருந்தும் நோர்வேயில் இருந்தும் திருப்பி அனுப்பப்பட்ட இருவர் விமான நிலையத்தில் சில இலட்சம் ரூபாக்களைச் செலுத்தியே வெளியில் வந்துள்ளனர் என அறியவருகின்றது.

அண்மையில் நோர்வேயில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட சிவராசா சுகிர்தன் (பெயர்மாற்றப்பட்டுள்ளது) என்பவருடன் ஈழமுரசு தொடர்பு கொண்டபோது, விமான நிலையத்தில் கொண்டு சென்று இறக்கிவிடப்பட்டபோது விசாரணை என்ற பெயரில் சில இடங்களுக்கு அழைத்துச் சென்று அலைக்கழித்தவர்கள் தங்களுக்கு சில இலட்சம் ரூபாக்களை தருமாறும் அவ்வாறு வழங்கினாலே வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார் எனவும் அச்சுறுத்தியதுடன், பணம் செலுத்தாதுபோனால் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி நிரந்தரமாக சிறைக்

குள் தள்ளிவிடுவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர். அத்துடன், புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள உறவினர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பணத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு வலியுறுத்திய அவர்கள், சுமார் ஒரு இலட்சம் ரூபா வரை பணத்தை பெற்றுக் கொடுத்ததன் பின்னரேயே தன்னை விமான நிலையத்தில் இருந்து வெளியே செல்ல அனுமதித்ததாகத் தெரிவித்தார். இதேவேளை, அண்மையில் பிரான்சில் இருந்து நாடுகடத்தப்பட்ட இளைஞர் ஒருவர் சுமார் இரண்டு இலட்சம் ரூபாக்களை விமான நிலையத்தில் உள்ள அதிகாரிகளுக்குச் செலுத்தியே வெளியே வந்துள்ளார்.

நிலைமை இவ்வாறிருக்க, மேற்கு ஆபிரிக்க நாடான டோகோவில் (நைஜீரியாவிற்கு சற்று அருகில் கானா, பெனின் நாடுகளுக்கு அருகிலுள்ள சிறிய நாடு இது) சட்ட விரோதமான முறையில் தங்கியிருந்தார்கள் என்ற குற்றத்தின் பேரில் பெண்கள், குழந்தைகள் உட்பட 200ற்கும் மேற்பட்டவர்கள் அந்நாட்டு காவல் துறையினரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை இலங்கைக்கு கொண்டு செல்லும் முயற்சியில் சிறீலங்கா தீவிரமாக இறங்கியுள்ளது. இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவருடன் ஈழமுரசு தொடர்புகொண்டபோது திறந்தவெளி விளையாட்டு மைாதனம் ஒன்றில் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக தாங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், தங்களை நாடு கடத்துவதற்கு டொகோ அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில் தங்களை வலுகட்டாயமாக அழைத்துச் செல்வதற்கு சிறீலங்கா தனது ஆட்களை அங்கு அனுப்பிவைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



ஏற்கனவே இவர்களுடன் தங்கியிருந்த சில முஸ்லீம்கள் தாங்கள் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள கனடா செல்ல வந்திருந்ததாகவும், முகவர்கள் தங்களை ஏமாற்றிவிட்டதால் நாடு திரும்ப விரும்பியதாகவும் ஊடகங்களுக்கு செவ்விகளை வழங்கியிருந்த நிலையில், சிறீலங்கா அரசினால் பாதிக்கப்பட்டு தங்கள் மனைவி, பிள்ளைகளுடன் புலம்பெயர்ந்த தமிழர்களும் பொருளாதார நலன்களுக்காக வெளிநாடுகளுக்கு செல்பவர்கள்போன்று காண்பிக்கப்படுவதாகவும், டோகோவில் அகதித் தஞ்சக் கோரிக்கை இருக்கின்றபோதும் தங்களது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாமலேயே சிறீலங்காவின் கைகளில் தங்களை ஒப்படைக்க அந்நாட்டு காவல்துறையினர் முயன்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிறீலங்காவினால் டோகோவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள முஸ்லீம் இனத்தைச் சேர்ந்த தூதரக அதிகாரி ஒருவர், தடுத்துவைக்கப்பட்டுள்ள பலரை அச்சுறுத்தி நாடு திரும்புவதற்கான ஆவணங்களில் கையொப்பங்களைப் பெற்றிருப்பதாகவும், நாட்டுக்கு திரும்பினால் தங்களது உயிருக்கு ஆபத்து, திரும்ப மாட்டோம் என மறுத்தவர்கள் மூவர் அந்நாட்டு காவல் துறையினரால் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு சிறையில் உள்ளாடைகளுடன் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர், ஏனையவர்கள் அவர்களின் நிலையைப் பார்த்து அச்சமடைந்து நாடு திரும்ப முடிவெடுக்கும் வகையில் அவர்கள் இருக்கும் அவல நிலையை தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு காண்பித்ததாகவும் தெரிவித்தார்.

திறந்தவெளி மைதானத்தில் குழந்தைகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவர்கள், கடும் நுளம்புகளுக்கு மத்தியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால்



வழங்கப்பட்ட நுளம்புவலையைப் பயன்படுத்தி தங்களை பாதுகாத்து வரமுயல்கின்றபோதிலும், மழை பெய்தால் எழுந்து அருகிலுள்ள மைதானத்தில் பார்வையாளர் பகுதியில் சென்று தங்கி இருப்பதாகவும் தெரிவித்தார்.

நிலைமை இவ்வாறிருக்க, இந்தோனேசியாவின், பாலி தீவின் ஊடாக மேற்கொள்ளப்படும் தமிழர்களின் புலம்பெயர்தல்களைத் தடுப்பது குறித்து கடந்த வாரம் சிறீலங்காவும் இந்தோனேசியாவும் பேச்சுக்களை நடத்தியுள்ளன. சிறீலங்கா அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இதுதொடர்பாக கலந்துரையாடியதாக இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி மார்டி நட்டலெகா தெரிவித்தார். குறித்த ஆட்கடத்தல் செயற்பாடுகளை குறைப்பது தொடர்பில், நாடுகள் ஒன்றையொன்று குற்றஞ்சாட்டாமல் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். கடந்த வாரம் இரண்டு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு சிறீலங்கா சென்றிருந்த இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி மார்டி நட்டலெகா மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது. இச்சந்திப்பினை அடுத்து வெளிவிவகார அமைச்சில் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் மேற்கண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதாக குறிப்பிட்டார்.

வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

சர்வதேச அளவில் தகவல் தொழில்நுட்ப செலவினம் குறையும்

சர்வதேச அளவில், 2012ம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப வசதிகளுக்காக நிறுவனங்களும், தனிநபர்களும் மேற்கொள்ளும் செலவினம் முந்தைய மதிப்பீட்டைக் காட்டிலும் குறைய வாய்ப்புள்ளது என கோர்ட்னர் நிறுவனம் தெரிவித்துள்ளது. 2011ம் ஆண்டில் உலக அளவில் தகவல் தொழில்நுட்ப வசதிகளுக்காக 3.70 இலட்சம் கோடி டொலர் செலவிடப்பட்டுள்ளது. இது, 2010ம் ஆண்டை விட 6.9 சதவீதம் அதிகமாகும். 2012ம் ஆண்டில் இச்செலவினம் 4.6 சதவீதம் அதிகரிக்கும் என முன்பு கோர்ட்னர் நிறுவனம் மதிப்பீடு செய்திருந்தது. ஆனால் தற்போது இது 3.7 சதவீதம் மட்டுமே உயரும் என தெரிவித்துள்ளது. அமெரிக்க பொருளாதார வளர்ச்சியில் பின்னடைவு, ஐரோப்பிய நாடுகளின் நிதி நெருக்கடி போன்றவற்றால் உலக பொருளாதார நிலவரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் அண்மையில் தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்கள் காரணமாக அந்நாட்டில் கணினி வன்பொருட்கள் (ஹார்ட் டிஸ்க்) உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இது போன்ற காரணங்களால் நடப்பாண்டில் தகவல் தொழில்நுட்ப வசதிகளுக்காக உலகில் மேற்கொள்ளப்படும் செலவினம் முந்தைய மதிப்பீட்டைக் காட்டிலும் குறையும் என கோர்ட்னர் தனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

2012 ஆசிய நாடுகளுக்கு சவாலான ஆண்டு

சர்வதேச நெருக்கடியை தொடர்ந்து, பல்வேறு பிரச்சனைகளை சந்திக்க வேண்டியதால் ஆசிய நாடுகளுக்கு 2012ம் ஆண்டு கடுமையானதுடன், சவாலான ஆண்டாக அமையும் என்று சர்வதேச நிதி அமைப்பு (ஐஎம்எப்) தெரிவித்துள்ளது. உலக அளவில் ஆசியா முக்கிய வர்த்தக மையமாக விளங்குகிறது. சர்வதேச அளவில் நிதி நெருக்கடி ஏற்பட்ட போது அதை இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகள் இதுவரை திறம்பட கையாண்டன. மேலும், வலிமையான உள்நாட்டு தேவை, வேலைவாய்ப்பு பெருக்கம், நிறுவனங்களின் செயல்பாடும் சிறப்பாக இருந்தது.



இருப்பினும், ஆசியாவில் குறிப்பாக இந்தியா, சீனாவில் சர்வதேச நெருக்கடியின் தாக்கம் கடந்த ஆண்டில் எதிரொலிக்க தொடங்கியது. ஐரோப்பாவின் தொடர் நிதி நெருக்கடியால் கடன் அளிப்பு குறைந்து ஆசிய தொழில் வளர்ச்சி குறையும். இதுபோன்ற காரணங்களால் ஆசிய நாடுகள் இந்த ஆண்டில் பெரும் சவால்களை சந்திக்க நேரிடும் என்கிறது சர்வதேச நிதி அமைப்பு.

சீனாவின் வர்த்தக உபரி 16,000 கோடி டொலர்

2011 ஆம் ஆண்டில், சீனாவின் வர்த்தக உபரி 16,000 கோடி டொலராக குறைந்துள்ளது இது, 2010 இல் 18,300 கோடி டொலராக இருந்தது. (வர்த்தக உபரி என்பது இறக்குமதியை விட ஏற்றமதி அதிகரிக்கும் போது கிடைக்கும் வருவாய்) 2011–ல் அந்நாட்டின் வெளிநாட்டு வர்த்தகம் 20 சதவீதம் உயர்ந்து 3.60 இலட்சம் கோடி டொலராக அதிகரித்தது. எனினும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிலவிய பொருளாதார சீர்குலைவினால்

அந்நாடுகளுக்கான சீனாவின் ஏற்றுமதி வளர்ச்சி வெகுவாக குறைந்தது. இந்நிலையில், இந்த ஆண்டிலும் இது தொடரும் என்பதால் ஏற்றுமதியில் ஏற்பட்ட இடர்பாடுகளை ஈடுகட்ட உள்நாட்டு பயன்பாடுகளை அதிகரிக்க சீனா உத்தேசித்துள்ளதாக தெரிகிறது.

திருப்பதி வருவாய் 1,700 கோடி ரூபா

இந்தியாவின் பிரபல கோவிலான திருப்பதி வெங்கடாசலபதி ஆலயத்தின் 2011ம் ஆண்டு வருவாய் 1,700 கோடி ரூபா என தெரியவந்துள்ளது. 2011ம் ஆண்டில், இக்கோவில் தரிசனத்திற்காக வந்து சென்ற பக்தர்களின் எண்ணிக்கை 2 கோடியே 20 இலட்சம் ஆகும். இந்த வருவாயில், 1,100 கோடி ரூபா உண்டியல் மூலமாகவும், வங்கி வைப்பில் இருந்து கிடைத்த வட்டி வருவாய், அனுமதி சீட்டு விற்பனை ஆகியவற்றின் வாயிலாக 200 கோடி ரூபாவும் பெறப்பட்டுள்ளது. இது தவிர வைர, தங்க மற்றும் வெள்ளி நகைகளையும் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியுள்ளனர். உலகின் மிக அதிக வருவாய் உள்ள ஆலயங்களில் திருப்பதி முன்னிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

NetTek Training & Solutions Inc

WORRIED about...

No Jobs? Laid Off? EI Ran Out? Part-time?

"You May Qualify for **Second Career** Free Funding up to $28,000"

Change Your Career! **By Second Career!!**



SECOND CAREER FREE FUNDING

For Eligible Clients*

UNEMPLOYED?

* Laid off after 2005 or Working less than 20 Hours

MATERNITY BENEFIT?

(Received clients within 5 years)

* Tuition/Books/Living/Daycare/Transportation Expenses

ALL FREE

CONTINUE SERVING THE COMMUNITY FOR 14 YEARS

CAREER DIPLOMAS

* BUSINESS ADMINISTRATION
* COMPUTERIZED ACCOUNTING
* NETWORK MANAGEMENT

JOBS READY

- Bank Teller
- Accounts Clerk
- Documentation Clerk
- Administrative Clerk
- Bookkeeper
- Help Desk Support
- Technical Support Analyst
- Inventory Clerk
- Hardware Installation
- and More...

416-431-4545

TORONTO CAMPUS
(Markham Rd./Lawrence Ave.)
868 Markham Road #104,
Scarborough, ON, M1H 2Y2

MARKHAM CAMPUS
(Markham Rd./Denison Rd.)
20 New Delhi Road #97
Markham, ON, L3S 0B5

OPENING SOON

nettek-training@rogers.com www.nettek-training.com

PRIVATE CAREER COLLEGE

(Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005)

New Career Will Change Your Future!

தாக்குதல் நடத்தியுள்ளனர். ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மேற்படி பகிரங்கக் கலந்துரையாடல் நடத்துவதற்கான பிரச்சாரம் சம்மந்தமான சுவரொட்டியை ஒட்டிக் கொண்டிருந்த சோசலிச சமத்துவக் கட்சி ஆதரவாளர்களே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளானர். யாழ் சின்னக்கடை பகுதியில் ஒட்டிக் கொண்டிருந்த சமயமே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. பின்தொடர்ந்து சென்று ஆள் நடமாட்டம் அற்ற யாழ் மடத்தடிப் பகுதியில் வைத்து மூர்க்கத்தனமாக தாக்குதல் நடாத்தியதுடன் அவர்களது உந்துருளிகளையும் பறித்துச் சென்றனர்.

தமிழர்களுக்கு இந்தியா கட்டிக்கொடுத்த வீட்டில் சிறீலங்கா இராணுவம்!

இந்திய மத்திய அரசால் பல கோடி ரூபாய் நிதி இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை இலங்கையில் உள்ள தமிழர்களுக்காக கட்டி கொடுத்த வீடுகளில் தமிழர்கள் குடியேறவில்லை. ஆனால் இராணுவத்தினர்தான் அதிகம் பேர் குடியேறியுள்ளனர் என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் குற்றம்சாட்டியுள்ளார். இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசிய வழக்குத் தொடர்பாக இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் இயக்குனர்கள் சீமான், அமீர் ஆகியோர் ஆஜராகினர். நீதிமன்ற விசாரணைகளின் பின்னதாக ஊடகவியலாளர்களிடம் பேசிய போதே சீமான் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு மேலும் பேசிய சீமான், இலங்கையில் போர் நடந்தபோது விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் தமிழர்கள் சொந்த வீடுகளில் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர். போர் முடிந்து 3 ஆண்டுகள் ஆகியும் தமிழ் மக்கள் இன்னமும் முள்வேலி முகாமில் தான் அடைக்கப்பட்டுள்ளனர். முதலில் முள்வேலி முகாமில் உள்ள தமிழ் மக்களை வெளியே கொண்டுவர வேண்டும் என கூறினார்.

கொழும்பில் இருந்து வயிற்றுக்குள் வைத்து தங்கம் கடத்தல்

கொழும்பில் இருந்து தங்க கட்டிகளை வயிற்றுக்குள் வைத்து கடத்தி வந்தவரை தமிழக சுங்க இலாகா அதிகாரிகள் கைது செய்தனர். சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு சனிக்கிழமை காலை கொழும்பில் இருந்து விமானத்தில் வந்த பயணிகளை சுங்க இலாகா அதிகாரிகள் கண்காணித்தனர். அப்போது ராமநாதபுரம் கீழக்கரையை சேர்ந்த காதர்மொய்தீன் (35) என்பவரின் நடை சற்று வித்தியாசமாக இருந்ததால் சுங்க இலாகா அதிகாரிகள் அவரை தனி அறைக்கு அழைத்து சென்று சோதனை செய்தனர். அப்போது காதர் மொய்தீன் மலவாசலில் கறுப்பு நிறத்தில் பொட்டலங்கள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே விமான நிலைய மருத்துவர்கள் சென்று 6 பொட்டலங்களையும் வெளியே எடுத்தனர். அதில் 600 கிராம் நிறையுள்ள 6 தங்க கட்டிகள் இருந்தன. இவற்றின் மதிப்பு 17 இலட்சம் ரூபாவாகும். கொழும்புக்கு சுற்றுலா விசாவில் சென்று தங்க கட்டிகளை கடத்தி வந்த காதர் மொய்தீனை கைது செய்தனர்.

சிறீலங்கா உற்பத்திகளுக்கு தமிழ்நாட்டில் தடை!

சிறீலங்காவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள கடைகளின் முன்பாக உள்ள அலுமாரிகளில் காட்சிக்கு வைக்க வேண்டாம் எனவும் அவ்வாறு வைக்கப்பட்டுள்ளவற்றை உடன் அகற்றுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரச நகர கூட்டுறவுச் சங்கங்களின் மூத்த அலுவலர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். ‘இலங்கைப் பொருள்களைப் புறக்கணிப்போம்’ என்ற அமைப்பு மேற்கொண்ட தீவிர பிரசாரங்களை அடுத்து சக்தி சரவணன் என்ற மூத்த அதிகாரி இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். தமிழக அரசு ஏற்கனவே சிறீலங்காவிற்கு எதிராக தமிழக சட்ட சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இப்போது சிறீலங்கா உற்பத்திப் பொருள்களுக்கு தடைவிதிக்க வேண்டும் என அரச கூட்டுறவுச் சங்கங்களே கோரிக்கை விடுத்துள்ளதை அடுத்து தமிழகத்தில் உள்ள அரச நகர கூட்டுறவுச் சங்கங்களின் கடைகளின் முன்னால் உள்ள அலுமாரிகளிலிருந்து அந்தப் பொருள்கள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இலங்கையில் உற்பத்தியாகும் பிஸ்கட், சொக்கலேட், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றுக்கே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

செந்தில் தொண்டமானுக்கு எதிராக தமிழகத்தில் கறுப்புக்கொடி

தமிழ்நாடு கும்பகோணத்திலுள்ள திருநள்ளாறு கோயிலுக்கு சென்ற இலங்கைத் தொழிலாளர் கொங்கிரசின் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமானுக்கு, விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் கறுப்புக்கொடி காட்டி தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். தமிழகத்தில் புகழ்பெற்ற சனீஸ்வரபகவான் தலமான திருநள்ளாறு கோயிலில் சனிக்கிழமை பல இலட்சம் பக்தர்கள் வந்து வணங்கிக்கொண்டிருந்தனர். இந்நிலையில் இரவு 9 மணியளவில் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் இறைவனை வணங்குவதற்காகச் சென்றுள்ளார். கோயிலுக்குள் சென்று வணங்கி முடித்துவிட்டு திரும்பும்போது, விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் சுமார் 20 பேர் செந்தில் தொண்டமானின் வருகையை கண்டித்து கறுப்புக் கொடி காட்டி போராட்டத்தை மேற்கொண்டனர். அதன்போது செந்தில் தொண்டமானுக்கும் சிறீலங்கா அதிபர் மகிந்தவுக்கும் எதிராக கோசம் எழுப்பினர். காவற்றுறையினர் போராட்டக்காரர்களை தடுக்க முயற்சி மேற்கொண்ட போதிலும் போராட்டக்காரர்கள் மீண்டும் மீண்டும் ஆவேசமாகக் கோசம் எழுப்பினர். தமிழர்களுக்கு எதிராக நடந்துகொள்ளும் போக்கை செந்தில் தொண்டமான் கைவிடும்படி போராட்டக்காரர்கள் ஆர்ப்பரித்தனர். ஒருவாறு போராட்டக்காரர்களைச் சமாளித்த காவற்றுறையினர் செந்தில் தொண்டமானை பாதுகாப்புடன் வாகனத்தில் ஏற்றி அனுப்பிவைத்தனர். அண்மையில் மகிந்தவின் சகோதரியின் கணவருக்கு எதிராக ராமேஸ்வரத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஊடகச் சுதந்திரம் : சிறீலங்கா 163வது இடத்திற்கு தள்ளப்பட்டது

பிரான்சை தலைமையகமாக கொண்ட எல்லைகளற்ற ஊடகவிலாளர் அமைப்பினால் (Reporters Without Borders -RSF) ஆண்டுதோறும் வெளியிடப்படும் ஊடக சுதந்திரம் குறித்த பட்டியலில் இந்த ஆண்டில் சிறீலங்கா பின்தள்ளப்பட்டுள்ளது. 2011 - 12ம் ஆண்டுக்கான இந்தப் பட்டியலில் சிறீலங்காவிற்கு 163வது இடமே கிடைத்துள்ளது. கடந்த ஆண்டில் சிறீலங்கா 158வது இடத்தில் இருந்தது. போர் தீவிரமாக இடம்பெற்ற 2009ம் ஆண்டில் கூட 162வது இடத்திலேயே சிறீலங்கா வரிசைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஊடகங்கள் மீதான கெடுபிடிகள், தாக்குதல்கள், இணையத் தளங்கள் மீதான நேரடியான கட்டுப்பாடுகள், தணிக்கைகள் காரணமாகவே சிறீலங்கா இந்தப் பட்டியலில் பின்தள்ளப்பட்டதாக எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இந்தப் பட்டியலில் முதலாவது இடத்தை பின்லாந்தும் நோர்வேயும், மூன்றாவது இடத்தை எஸ்தோனியாவும், நெதர்லாந்தும் பிடித்துள்ளன. 179 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் கடைசி இடத்தை எரித்திரியா பெற்றுள்ளது.

இதேவேளை, சிறீலங்கா அரசின் ஊடக அடக்குமுறைக்கு எதிராக எதிரான கறுப்பு ஜனவரி ஊடக போராட்டம் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் கடந்த 25ம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம், சுதந்திர ஊடக அமைப்பு, முஸ்லிம் மீடியா போரம் உள்ளிட்ட ஊடக அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஊடகவியலாளர்கள் பலர் கலந்துகொண்டு ஊடக அடக்குமுறைக்கு எதிராக கோசம் எழுப்பினர்.



‘பிரகீத் காணாமல் ஆக்கப்பட்டு வருடங்கள் இரண்டு அரசு மௌனம்’, ‘லசந்த படுகொலை செய்யப்பட்டு வருடங்கள் 3 கொன்றவர்கள் நடமாட்டம்’, ‘லங்கா ஈ நியூஸ் கொளுத்தப்பட்டு வருடம் ஒன்று அரசு மௌனம்’ போன்ற சுலோகங்கள் எழுதப்பட்ட் பதாகைகளைத் தாங்கியவாறு ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வன்னியில் அதிகரிக்கும் படையினர் - பொது மக்கள் மோதல்

பேருந்து நடத்துனருக்கும் சிவில் உடையில் பயணித்த படையினருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் பயணிகளும் படையினரால் தாக்கப்பட்டனர். இதையடுத்து சாரதி, நடத்துனர், படையினர் நால்வர் என 6 பேரைக் கிளிநொச்சியில் நிலைகொண்டுள்ள சிறீலங்கா காவல்துறையினர் கைது செய்தனர். இச்சம்பவம் கடந்த 27ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் கிளிநொச்சி பரந்தன் சந்தியில் நடைபெற்றது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி தனியார் பேருந்து வந்துகொண்டிருந்த போது கிளிநொச்சி பரந்தன் பகுதியில் நகரப் போக்குவரத்துக் காவல்துறையினரால் பேருந்து மறிக்கப்பட்டது. மிதி பலகையில் பயணிகளை ஏற்றியமைக்காக நடத்துனரிடம் குற்றப்பணம் அறவிடப்பட்டது. பின்னர் பஸ் புறப்பட ஆயத்தமாகியதும் மிதி பலகையில் நின்ற பயணிகளை உள்ளே செல்லுமாறு பணித்தார் நடத்துனர். இதன்போது மிதி பலகையில் சிவில் உடையில் நின்ற சிங்களப் படையினருக்கும் நடத்துனருக்கும் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. அது முற்றி கைகலப்பாக மாறியது. சம்பவத்தை அறிந்து அருகில் நின்ற இராணுவத்தினர் சிலரும் வந்து சேர்ந்து, நடத்துனரையும் அவருக்கு ஆதரவாகப் பேசிய பயணிகள் சிலரையும் தாக்கினார்கள். சிறீலங்கா நாட்டின் படையினரும் தமிழ் மக்களும் மோதிக் கொள்ளும் இத்தகைய சம்பவங்கள் வன்னியில் அதிகம் நிகழ ஆரம்பித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்குடாவில் காணா....

அவ்விலக்கம் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இதன் பின்னர் இத்தகவல்களை தான் பெண்ணின் சகோதரனுக்கு தெரிவித்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆனால், உடலத்தை தேடாமல் இருப்பதற்காகவே இடையில் தொலைபேசியில் தொடர்பு ஏற்படுத்தி காதல்த் திருமணம் என்ற கதையையும் கொலை செய்தவர்கள் கட்டிவிட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதுஇவ்வாறிருக்க, பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியில் கடந்த 25ம் திகதி 17 வயதுடைய பாடசாலை மாணவி இருதயநாதர் மேரி டிலக்சனா கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். மாணவி டிலக்சனாவின் கொலை தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தப்பட்ட மாணவி டிலக்ஷனாவின் வாயையும் மூக்கையும் மூடிப் பிளாஸ்ரர் ஒட்டப்பட்டிருந்தது. இதனால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என முதற் கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. அத்துடன் அவரது கழுத்தில் கத்திரிக் கோலினால் குத்தப்பட்ட காயமும் உள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொல்லப்பட்ட மாணவியின் உறவினர் ஒருவர் கூறுகையில், ‘மாணவி டிலக்சனா அவரது வீட்டுக்கு மிக அருகில் வைத்தே கடத்தப்பட்டுள்ளார். சக்கோட்டைப் பழைய வேதக் கோயிலடிக்கு அருகில் அவரது வீடு உள்ளது. வீட்டில் இருந்த மாணவியின் தாயும் தகப்பனும் அலுவல் நிமித்தம் வெளியே சென்று விட்டனர். இந்த வேளையில் மாணவி அயலில் உள்ள ஆலயம் ஒன்றில் வழிபாட்டில் ஈடுபட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பினார். மாலை 6.30 முதல் மாலை 6.45 மணி வரையான இடைப்பட்ட நேரத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்க வேண்டும். வீட்டுக்கு மிக அருகில் வைத்து மாணவியை யாரோ கடத்திச் சென்றுள்ளனர். கடத்தப்பட்ட அவர் அருகில் உள்ள ஆள்களற்ற வீடொன்றில் வைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். மாணவியின் உடலெங்கும் நகக் கீறல் காயங்கள் காணப்பட்டன. அவரது ஆடைகளும் கலைந்திருந்தன. அவர் பாலியல் இம்சைக்கு உட்படுத்தப்பட்டாரா என்பது தெரியாது. அலுவ்ல் முடிந்து வீடு திரும்பிய தாயும் தகப்பனும் மாணவியை காணாது தேடியுள்ளனர். இந்த வேளையிலேயே அவரது சடலம் அருகிலுள்ள வீடொன்றில் இருந்தமை தெரியவந்தது என்றார்.

இதேவேளை, குடும்ப விவகாரம் காரணமாகவே இந்தக் கொலை நடந்ததாகவும் தகவல்கள் வெளிவருகின்றன. கொல்லப்பட்ட மாணவியின் சகோதரியை ஒருவர் விரும்பியதாகவும், அதற்கு மாணவியின் பெற்றோர் உடன்படாது அவரை வேறு இடத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் அதனால் ஆத்திரமடைந்த இளைஞன் தனது குழுவினருடன் வந்து இந்தக் கொடூரத்தைப் புரிந்திருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.



செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

செய்தி:- இலங்கைக்கு வருகை தந்த இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், கிழக்கு மாகாணத்துக்கு வருகை தராதது பெரும் ஏமாற்றமளிப்பதாக சிறீலங்காவின் முன்னாள் அமைச்சர் ஏ.ஆர். மன்சூர் தெரிவித்துள்ளார்.

எழும் கேள்வி:- வடக்கிலை மட்டும்தான் அவருக்கு வேலை இருந்த தாக்கும்?

★★★★

செய்தி:- அமைதியான பேரணிகளையும், ஆர்ப்பாட்டங்களைம் குழப்புவதற்கு அரசாங்கம் மறைகர செயற்பாட்டாளர்களை பயன்படுத்துவது உட்பட பல்வேறு தந்திரங்களை பயன்படுத்துவையிட்டும் தாம் கவலை கொண்டுள்ளதாகவும் இந்த குழுவினர்கள் தண்டனை பற்றிய பயமேதுமின்றி தொழிற்படும் விதம் பயமூட்டுகின்றது என்றும், அத்துடன், காடையர்கள் ஆர்ப்பாட்டத்தை ஒடுக்கவென குறித்த இடத்துக்கு வந்தபோது காவல்துறையினர் அவர்களை தடுக்க ஏதும் செய்யாது வாளாவிருந்தனர் எனவும் ஜனநயாகத்துக்கான சட்டத்தரணிகள் அமைப்பின் செயற்பாட்டாளர் லால் விஜேநாயக்க கூறினார்.

எழும் கேள்வி:- நீங்கள் எப்போது ஆயுதம் ஏந்தப்போகின்றீர்கள்? ஏனென்றால், கடந்த காலங்களில் தமிழர் விடயத்திலும் இதுதான் நடந்தது. ஜனநாயக வழியிலான தமிழர்களின் போராட்டங்களை ஆயுத வழியில் அடக்க வெளிக்கிட்டுத்தான் ஆயுதப் போராட்டம் வெடித்தது.

★★★★

செய்தி:- இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகத் தடைகள் நீங்கும்போது 'மிகவும் வேண்டப்பட்ட நாடு' என்ற அந்தஸ்தை இந்தியாவுக்கு பாகிஸ்தான் அளிக்கும் என்று அந்நாட்டு வர்த்தகத் துறை அமைச்சர் மக்தூம் அமின் ஃபஹ்ம் தெரிவித்தார்.

எழும் கேள்வி:- அதுவரை வேண்டப்படாத நாடு தானா?

★★★★

செய்தி:- தமிழகத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டு வீர விளையாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் ஜல்லிக்கட்டுக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபடப்போவதாக அயர்லாந்து நாட்டு விலங்குகள் உரிமை அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

எழும் கேள்வி:- பக்கத்தில், ஸ்பெயினில் மாட்டைக் குத்திக்கொன்று வீர விளையாட்டு விளையாடுகின்றார்களே, இதனை எப்போது நிறுத்தவைக்கப் போகின்றீர்கள்?

★★★★

செய்தி:- வவுனியாவில் இருந்து யாழ் நோக்கி சென்றுகொண்டிருந்த பயணிகள் பேருந்தில் மிதிபலகையில் நின்று பயணம் செய்ததாக கூறி கிளிநொச்சி பரந்தன் பகுதியில் வைத்து சிறீலங்காப் படையினர் பயணிகள் மற்றும் பேருந்து நடத்துனர் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

எழும் கேள்வி:- தவறி விழுந்து தமிழர்கள் செத்துப்போவார்கள் என்ற கவலை, காரணமாக இருக்குமோ?

★★★★

செய்தி:- சிங்கள மக்களுக்கு தமிழையும் தமிழ் மக்களுக்கு சிங்களத்தையும் புகட்டியிருந்தால் நாட்டில் தற்போதுள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்பட்டிருக்கும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஊவா மாகாணத்தில் காணியில்லாதவர்களுக்கு காணி உறுதிகளை வழங்குகின்ற நிகழ்வு மொனராகலை பிரதேச சபை வளாகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எழும் கேள்வி:- இன விரோதப்போக்கு குறையாமல், மொழியைத் தெரிந்து வைத்திருந்து என்ன பிரயோசனம்?

★★★★

செய்தி:- ஊடகத் துறையை மேம்படுத்த தனி அதிகார சபை அமைக்கப்பட உள்ளது என சிறீலங்கா அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

எழும் கேள்வி:- மேம்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ?

★★★★

செய்தி:- சிறீலங்காவில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை உடன் அகற்றுமாறும் காட்சிக்கு வைக்கவேண்டாம் என்றும் தமிழ்நாடு அரச நகர கூட்டுறவுச் சங்கங்களின் மூத்த அலுவலர் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

எழும் கேள்வி:- நெக்டோவும், லெமன்பப்பும், லயன்லேகரும் இல்லாமல் உயிர்வாழ முடியாது என்பதால் சிறீலங்காப் பொருட்களுக்கு இன்னமும் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் தடை விதிக்கவில்லைப் போலும்?

— கந்தரதன்

குரங்கின் கை பூமாலையாகும் அபிவிருத்தி!

தமிழர் தாயகப் பகுதிகள் மற்றும் சிறீலங்காவின் ஏனைய பகுதிகளுக்கான அபிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான வேலைத்திட்டங்களை சிறீலங்கா அரசு தற்போது இராணுவத்தினரின் கைகளில் ஒப்படைத்துள்ளது. இது குரங்கின் கையில் பூமாலையைக் கொடுத்த கதையாகவே இருப்பதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சிறீலங்காவில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகளுக்கு படையினரை ஈடுபடுத்தியதன் ஊடாக பெருந்தொகை பணத்தினை படையினர் சேமித்துள்ளதாக சிறீலங்கா படைத்தளபதி தெரிவித்துள்ளார்.

கட்டுமானப் பணிகள் ஊடாக 3.7 பில்லியன் ரூபாக்களை சிறிலங்காப் படையினர் சேமித்துக் கொடுத்துள்ளதாக அந்தப் படைத்தளபதி தெரிவித்துள்ளார். இந்நிலையில் படையினரைகொண்ட கட்டுமான நிறுவனமொன்றை சிறீலங்கா அரசாங்கம் உருவாக்கவுள்ளது என்ற அதிர்ச்சித் தகவலும் வெளியாகியுள்ளது.

போர் முடிவடைந்த பின்னர் படையினரின் கட்டமைப்பினை சீர்செய்வதிலும் படையினரை தக்கவைத்துக்கொள்வதிலும் சிறீலங்கா அரசு முன்னுரிமை அளித்து செயற்படுத்துகின்றது. வடக்கு கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்தி பணிகளுக்கும் முழுமையாக படையினரை ஈடுபடுத்தவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு படையினரை கொண்ட கட்டுமான நிறுவனம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் இனி தமிழர் தாயகப் பகுதி மற்றும் சிறீலங்காவில் நடைபெறும் அபிவிருத்திகள் படையினரின் இந்த நிறுவனம் ஊடாகவே மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

பாலுக்கு பூனையைக் காவலுக்கு விட்ட நிலையில், படையினர் தமது மனம் போன போக்கில் தமிழர் தாயகப் பகுதியில் நடந்துகொள்வதற்கு இந்த நடைமுறை ஏதுவாக அமைந்துள்ளது. இந்நிலையில் படையினர் தமது கட்டுமானப் பணிகளை விஸ்தரிப்பதற்கு தமிழர்களின் நிலங்களை கையகப்படுத்தும் நிலையில் தற்போது இறங்கியுள்ளனர்.

திருமலைப் பகுதியில் தமிழ் சந்தைக் கட்டடத்தை நீண்டகாலமாக ஆக்கிரமித்துவைத்துள்ள படையினர் அதனைத் தமக்கு நிரந்தரமாக்குவதற்கான வேலைத்திட்டங்களில் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில் தமிழ் சந்தையை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தை வெளியேற்றி மீண்டும் ஐக்கிய பொதுச்சந்தை கட்டத்தை திருகோணமலை நகர சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை திருஞானசம்பந்தர் வீதியில் திருகோணமலை நகரசபையால் சுமார் 65 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஐக்கிய பொதுச் சந்தை கட்டடத்தில் தற்போது சிறீலங்கா இராணுவத்தினர் தங்கியிருக்கின்றனர். திருகோணமலை நகர சபையின் தலைவராக பெரியதம்பி சூரியமூர்த்தி இருந்த காலத்தில் இப்பொதுச்சந்தை கட்டப்பட்டது. அப்போது அது தமிழ் மார்க்கட் என்று அழைக்கப்பட்டு வந்தது. யுத்தம் தீவிரமடைந்த காலத்தில் இப்பொதுச்சந்தை கட்டடத்தை சிறீலங்கா இராணுவம் தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டது.

திருகோணமலை நகரசபையின் உறுப்பினரான சி.நந்தகுமார் திருகோணமலை பிரதேச செயலாளருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் – இராணுவத்தை அகற்றி சந்தைக் கட்டடத்தை மீண்டும் நகரசபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார். இதற்கு இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர். இதேவேளை, மன்னார் மாவட்டத்தின் சன்னார் கிராமத்தில் அரச தரப்பினர் அத்துமீறிப் புகுந்து வீதிகள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதுடன் குடியிருப்பவர்களை வெளியேறுமாறும் மிரட்டல்விடுத்துள்ளார்கள்.

மாந்தை மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட சன்னார் கிராமத்தில் மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தினரும் பிரதேச சபையினரும் இணைந்து சட்டவிரோதமான முறையில் காணி அபகரிப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அந்தப் பகுதியில் வாழும் தமிழ்க் குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

சன்னார் கிராமத்தில் 150இக்கும் மேற்பட்ட தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த 900 பேர் வசித்து வருகின்றனர். இவர்களை இந்தப் பகுதியில் இருந்து வெளியேறுமாறு மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தால் தொடர்ச்சியாக வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது. எனினும் தாங்கள் கடந்த 1986ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பகுதியில் வசிப்பதாகவும் இதற்கான காணி வரைபடங்களும் பதிவுகளும் தம்மிடம் இருப்பதாகவும் கூறி அந்தப் பிரதேசத்தை விட்டு வெளியேறாது

> **கனரக வாகனங்கள் சகிதம் வந்த உதவி அரசாங்க செயலகத்தினரும் மாந்தை பிரதேச சபையின் அரச சார்பு உறுப்பினர்களும் அந்தப் பகுதியில் சட்டவிரோதமாக வீதிகளை அமைத்ததுடன் அந்த மக்களை உடனடியாக வெளியேறுமாறும் உத்தரவிட்டுள்ளனர்.**

தாம் வசித்து வருவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை கனரக வாகனங்கள் சகிதம் வந்த உதவி அரசாங்க செயலகத்தினரும் மாந்தை பிரதேச சபையின் அரச சார்பு உறுப்பினர்களும் அந்தப் பகுதியில் சட்டவிரோதமாக வீதிகளை அமைத்ததுடன் அந்த மக்களை உடனடியாக வெளியேறுமாறும் உத்தரவிட்டுள்ளனர்.

'இந்தப் பகுதி உங்களுக்கானதல்ல. ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரிலே முஸ்லிம் மக்களைக் குடியமர்த்துவதற்காக இந்தப் பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவே நீங்கள் இங்கிருந்து வெளியேற வேண்டும்' எனக் கடுந்தொனியில் மிரட்டி வீதி அமைப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்தனர் எனப் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவித்தனர்.

அத்துடன் சன்னார் கிராமத்தில் வெளிமருதமடு குளத்தின் கீழ் 4000 ஏக்கர் வயற்காணிகள் உள்ளன. இவற்றைக் கையகப்படுத்தும் நோக்கில் அரசின் ஆதரவுச் சக்திகள் முயற்சிப்பதாகவும் அதன் ஒரு கட்டமாகவே தமது வாழ்விடப்பரப்பை அபகரிக்கும் முயற்சியில் அவர்கள் இப்போது ஈடுபட்டிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகத்தினதும் பிரதேச சபையினதும் இந்த சட்டபூர்வமற்ற நடவடிக்கையை எதிர்த்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மன்னார் நீதிமன்றில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் இதேபோன்று கொழும்பு நீதிமன்றில் மனித உரிமைகள் ஆணைக்குழு வழக்கொன்றைப் பதிவு செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(15ம் பக்கம் பார்க்க)

அன்பார்ந்த சிங்கள மக்களுக்கு...

அண்மையில் சென்னையில் நடைபெற்ற புத்தக கண்காட்சியில் ஜெ.பிரபாகரன் எழுதி, பென்னி குயிக் பதிப்பகம் வெளியிட்ட 'அன்பார்ந்த சிங்கள மக்களுக்கு...' எனும் கடித வடிவிலான நூல் சிங்கள மக்களை மட்டுமல்ல தமிழர்களையும் உலக மக்களையும் சிந்திக்கத்தூண்டும் வகையில் எழுதப்பட்டுள்ளது. விரைவில் ஆங்கிலம், சிங்களம் உட்பட வேறு மொழிகளில் வெளிவரவுள்ள இந்நூலின் தமிழ்ப் பதிப்பை ஈழமுரசு வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.



2000 ஆண்டுகள் தாங்கள் ஆண்ட தமிழ் மண்ணின் அதிகாரத்தைக் கூட உங்களிடம் விட்டுக் கொடுத்து விட்டு தமிழர்கள் பதிலுக்கு உங்களிடமிருந்து என்ன கேட்டார்கள்? தங்களின் மொழி, கல்வி, பண்பாட்டு உரிமைகளை பறிக்க வேண்டாம் என்று கேட்டார்கள். உலகில் சிறுபான்மை இனங்களின் உரிமைகளைக் காப்பது பெரும்பான்மை இனத்தின் கடமையாகவே கருதவேண்டும்? 1981 மே–31–ல், 97,000 தமிழ் நூல்களை யாழ் நூலகத்தில் எரித்துச் சாம்பலாக்கினீர்கள். அதில் எரிந்து போன பழம் பெரும் ஓலைச்சுவடிகளும், பழம்பெரும் தமிழ் இலக்கியங்களும் தமிழர்களின் சொத்தல்ல, இந்த மானுடத்தின் சொத்து. இலண்டன் மீது விமானக்குண்டு வீச்சு நடத்திய இட்லர், ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்கள் மீது குண்டுவீச வேண்டாம் என கருதப்படுகிறது. ஆனால் உங்கள் ஆட்சியாளர்கள் அரசு அலுவல் மொழியாக இருந்த தமிழை ஒரே சட்டத்தில் அதிலிருந்து நீக்கினார்கள்.

உயர்கல்வி வாய்ப்பை பெற சிங்கள மாணவனை விட, தமிழ் மாணவன் அதிகம் படித்து அதிக மதிப்பெண் காட்ட வேண்டும் என பாகுபடுத்தினார்கள். இதுபோன்ற பல இனப்பாகுபாடு சட்டங்களுக்கு அகிம்சைமுறையில் தமிழர்கள் எதிர்ப்பு தெரிவித்ததைக் கூட பொறுக்க முடியாமல் அதிகாரத்தாலும், சிங்கள இனவெறியர்களாலும் தாக்குதல் நடத்தி பலரை கொன்றார்கள்.

தொடர்ந்து தமிழ் இனத்தை ஒரு அடிமை இனமாகவே சிங்கள அரசுகள் நடத்தி வர, இறுதியில் தமிழ் மக்களும், தமிழர் கட்சிகளும் இனி தமிழீழம் அமையாமல் தமிழர்களுக்கு எதிர்காலம் இல்லை என உணர்ந்தார்கள். 20 ஆண்டுகள் போராடி, போராடி சிங்கள அரசுகள் மீது மட்டுமல்ல, சிங்கள மக்களான உங்கள் மீதும் நம்பிக்கையிழந்து 1976–ல் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்று கூடி அகிம்சை போராளி செல்வா தலைமையில் தமிழீழக் கோரிக்கையை அறிவித்தார்கள். 1977 தேர்தலில் தமிழ் மக்கள் தமிழீழக் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்து அனைத்து தமிழ் வேட்பாளர்களையும் வெற்றி பெறச் செய்தார்கள். அந்த தேர்தலில் தமிழ் மக்கள் சனநாயகபூர்வமாக வெளிப்படுத்திய உணர்வுகளை சிறிதளவாவது மதித்தீர்களா? மாறாக நிறைய அடக்கு முறைச் சட்டங்களை இயற்றி, ஈழக்கோரிக்கையை நசுக்கி விடலாம் என உங்கள் ஆட்சியாளர்கள் களம் இறங்கினார்கள்.

இதனால் உங்கள் அடக்குமுறைகளை எதிர்கொள்ள முடியாமல் தமிழ் ஆயுதக்குழுக்கள் தோன்றினார்கள். அவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை. சனநாயகமாக போராடினால் வன்முறையாக்கி விடுகிறீர்கள். தேர்தல் மூலம் வெளிப்படுத்தினால் அலட்சியம் செய்து விடுகிறீர்கள். எனவே ஆயுதப் போராட்ட வழியை நோக்கி ஈழத் தமிழர்களை தள்ளிவிட்டதே நீங்கள் தான்.

அதன்பிறகு ஆயுதக் குழுக்களிடம் உங்கள் இராணுவம் தோற்கும் போதெல்லாம் தமிழ்ப் பொதுமக்களை பழிவாங்குவதை ஒரு முறையாக உங்கள் அரசுகள் கடைபிடித்தன. நீங்கள் தமிழ்ப்பொதுமக்களை தாக்க, பதிலுக்கு தமிழ் ஆயுதக் குழுக்கள் உங்கள் இராணுவத்தைத் தாக்க, தமிழ்மக்கள் மேலும் மேலும் ஆயுதக் குழுக்களுக்கு ஆதரவாக செல்ல.. இப்படித்தானே தமிழர்கள் ஒரு பெரும்படையாய் எழ நீங்கள் காரணமானீர்கள்.

இப்படித்தான் 1983–ல் விடுதலைப் புலிகளால் ஒரு தாக்குதலில் 13 சிங்கள வீரர்கள் கொல்லப்பட்டதற்கு பழிவாங்க, கொழும்பிலே 3000 தமிழ்ப் பொதுமக்களை படுகொலை செய்து ஈடு செய்தீர்கள். அவர்களின் 10,000 கோடி சொத்துக்களை அழித்தீர்கள். இந்நாட்டில் பாகாப்பு இல்லை என்று பல இலட்சம் தமிழர்களை அகதிகளாய் அயல் நாட்டிலே தஞ்சமடைய செய்தீர்கள்.

தமிழ் நூல்களைக் கூடவா உங்களின் எதிரியாகக் கட்டளையிட்டுள்ளார். 60 இலட்சம் யூத மக்களை கொன்றழித்த மனிதகுலப் பகைவன் கூட மனிதத்துவத்தில் எங்கோ ஒரு புள்ளியில் உங்களை விட உயர்ந்து நிற்கிறான்.

52 மாணவிகளை விமானத்திலிருந்து குண்டுபோட்டு கொன்ற செஞ்சோலைப் படுகொலை, 42 தமிழ் மக்களை நடுக்கடலில் வைத்தே கொன்ற குமுதினிப் படகுப் படுகொலை, 400ற்கும் மேற்பட்ட தமிழர்களை இரகசிமாக கொன்று புதைத்து வந்த செம்மணிப் புதைகுழிகள் என நூற்றுக் கணக்கில் ஒரு பட்டியலையே இந்த 60 ஆண்டுகளில் நீங்கள் படைத்துக் காட்டியிருக்கிறீர்கள். எல்லாவற்றையும் விஞ்சி கடந்த மே 2009ல் முள்ளிவாய்க்காலில் 48 மணி நேரத்தில் 40,000 நிராயுதமான தமிழ் மக்களை கொன்று குவித்திருக்கிறீர்கள்.

இலண்டன் மீது விமானக்குண்டு வீச்சு நடத்திய இட்லர், ஒக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்கள் மீது குண்டுவீச வேண்டாம் என கட்டளையிட்டுள்ளார். 60 இலட்சம் யூத மக்களை கொன்றழித்த மனிதகுலப் பகைவன் கூட மனிதத்துவத்தில் எங்கோ ஒரு புள்ளியில் உங்களை விட உயர்ந்து நிற்கிறான்.

இவ்வளவு குறுகிய காலத்தில், இதுபோன்ற படுகொலைகளை அரசுகள் வரலாற்றில் செய்தது உண்டா? அதை நாம் இட்லர் ஆட்சியில் மட்டுமே தேடிப்பார்க்க முடியும். ஈழத்தில் தமிழ் விதவைகளின் எண்ணிக்கை சுமார் 1 இலட்சம், ஆண்கள் அரிதான ஒரு இனமாகவே ஈழத் தமிழினத்தை ஆக்கிவிட்டீர்கள். அதிகாரம் கேட்டு போர் புரிந்த இனத்தை பிழைப்புக்காக பிச்சை எடுக்கும் இனமாக்கி வீட்டீர்கள். இதைத்தானே உங்கள் இனவெற்றியாக கொண்டாடி மகிழ்ந்தீர்கள்.

கடந்த 2006 முதல் 2011 வரையிலான 5 ஆண்டுகளும் உங்கள் இனவரலாற்றிலேயே உங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான ஆண்டுகள். நிறைய வெற்றிகள். நிறைய கொண்டாட்டங்கள். அதே நேரத்தில் இதே 5 ஆண்டுகள் ஈழத் தமிழினத்தின் 2000 ஆண்டு வரலாற்றிலேயே மிகவும் துக்ககரமான ஆண்டுகள். கல்வியிலும் பண்பாட்டிலும் வரலாறிலும் ஓங்கி வாழ்ந்த ஒரு நாகரீக இனம், இனியும் எதிர்காலத்தில் ஒரு இனமாக நீடிக்குமா? என அய்யம் கொள்ளுமளவிற்கு அழித்து விட்டீர்கள்.

ஏன் இந்தக் கொலை வெறி, அரை நூற்றாண்டு தாண்டியும் தணியாத இந்த இனவெறி, இலங்கையில் தமிழர்கள் ஒரு இன அடையாளத்தோடு வாழக்கூடாது. இலங்கையின் இன அடையாளம் சிங்களர்கள் மட்டுமே. மொழி அடையாளம் சிங்களம் மட்டுமே. மத அடையாளம் பௌத்தம் மட்டுமே. இதை ஏற்பவர்கள் இங்கு வாழலாம், எதிர்ப்பவர்கள் அழியலாம். நாங்கள் எங்கள் மொழியையும், மதத்தையும் அரசியல் சட்டத்திலேயே பாதுகாத்து இன அடையாளத்தோடு வாழ்வோம். ஆனால் எங்களைப் போலவே தமிழர்களும் இன அடையாளத்தோடு வாழ போராடக்கூடாது. வேண்டுமானால் இலங்கையர் என்ற அடையாளத்தோடு இங்கு உயிர் வாழ்ந்து கொள்ளலாம். ஏனென்றால் இலங்கை முழுவதுமே பௌத்த – சிங்கள பூமி. மற்ற இனத்தினரும், மதத்தினரும் இங்கு அந்நியர்களே! அந்நியர்கள் இத்தீவின் சொந்த மக்களாகிய சிங்களருக்கு இணையான உரிமைகள் கோரக்கூடாது.

இதுதானே அடிமட்டத்து சிங்களர் முதல் ஆட்சி செய்யும் சிங்களர் வரை கொண்டிருக்கும் சிந்தனை. சரி, இலங்கை முழுவதும் பௌத்த – சிங்கள பூமி என்று யார் சொன்னது? எந்த வரலாறு சொல்கிறது? இலங்கைத் தீவில் உங்களுக்கு என்ன உரிமைகள் இருக்கிறதோ, அதே உரிமைகள் ஈழத்தமிழருக்கும் உண்டு. நீங்கள் 2000 ஆண்டு இத்தீவில் வாழ்கிறீர்கள் என்றால், அவர்கள் 2000 ஆண்டுகளும் முன்னதாகவிருந்தே இத்தீவில் வாழ்கிறார்கள். தொல்லியல் ஆய்வுகளிலிருந்தும் இலக்கிய சான்றுகளிலிருந்தும், அறிவியல் பூர்வமாக இந்த உண்மைகளை அறிந்து ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உங்களுக்கு இருக்கிறதா? நவீன அறிவியல் ஆதாரங்களான புகைப்படங்களையும், சனல்–

4 காணொளிகளையுமே நம்ப மறுக்கும் உங்களிடம், ஆய்வுகளைக் கொண்டு, வரலாற்று உண்மைகளை விளக்குவது இமாலயக் கடினமே. எனவே பெரும்பான்மை சிங்களர்கள் நம்பக் கூடிய உங்கள் வேதநூலாகிய மகாவம்சத்தை பார்ப்போம்.

இலங்கைத்தீவிற்கும், தமிழருக்கும் இடையிலான உறவு 2000 ஆண்டுகளுக்கும் பழமையானது என்பதை மகாவம்சமே சொல்லிவிடுகிறது. கி.மு 145 முதல் 101 வரை 44 ஆண்டுகாலம் எல்லாளன் என்ற தமிழ் மன்னன் இலங்கையில் நல்லாட்சி புரிந்தான். போரில் வெல்ல முடியாத 77 வயதான எல்லாளனை, துட்டகாமினி என்ற சிங்கள இளைஞன் தனியாளாக சண்டைக்கு அழைத்து வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றினான். இது நீங்கள் அனைவரும் அறிந்த உங்கள் மகாவம்சத்தில் உள்ள செய்தி. ஆனால் எல்லாளனை அந்நூல் இந்தியாவிலிருந்து வந்த மன்னன் என்றே குறிப்பிடுகிறது. சரி அப்படியே இருக்கட்டும். எல்லாளன் எங்கிருந்து வந்த மன்னன் ஆனாலும் நிச்சயம் ஒரு பெரும் தமிழர் படையோடு வந்துதான் இலங்கையை கைப்பறறி இருப்பான். இதை நீங்கள் நம்பித்தான் ஆக வேணடும்.

மகாவம்சம் உங்கள் இனத்தோற்றத்தை பற்றி குறிப்பிடும் போது, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட விஜயன் என்ற இளவரசன் இலங்கையின் பூர்வகுடிகளோடு கலந்து சிங்கள இனம் உருவானதாக குறிப்பிடுகிறது. இப்போது கேள்வி என்னவென்றால், நாடு கடத்தப்பட்டு வந்த விஜயனால் ஒரு சிங்கள இனம் பரிணமித்திருக்கும்போது, பெரும்படையோடு வந்து 44 ஆண்டுகள் நாடாண்ட எல்லாளனால் ஒரு தமிழ் இனம் பரிணமிக்காமல் போய்விடுமா? இதை ஒரு வாதத்திற்கு தான் எழுதியிருக்கிறேனே தவிர, எல்லாளனால் தான் இலங்கையில் தமிழ்ச்சமூகம் உருவானது என்று கூற வரவில்லை.

இலங்கையில் தமிழர்களுடனான சிங்களரின் பகை 2000 ஆண்டு பழமையானது என உங்கள் மகாவம்சம் கூறுவது உண்மை என்றால், இலங்கையில் தமிழரின் பூர்வீகம் 2000 ஆண்டு பழமையானது என்பதும் உண்மையாகும்.

தொடரும்

பிரான்சில் கேணல் கிட்டு 19ம் ஆண்டு நினைவு நிகழ்வு!

கேணல் கிட்டு உட்பட பத்து வீர வேங்கைகளின் 19வது ஆண்டு வீர வணக்க நிகழ்வு பிரான்சின் தலைநகர் பரிசின் புறநகரான நந்தெயாரில் கடந்த 21ம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது. ஈகைச்சுடர் ஏற்றல், அகவணக்கம் என்பவற்றைத் தொடர்ந்து மலர்வணக்கம் இடம்பெற்றது. ஈகைச் சுடரினை மாவீரர் மேஜர் அற்புதனின் சகோதரர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தென்றல் இசைக்குழுவினர் பிரான்ஸ் தமிழர் கலை பண்பாட்டுக்கழக இசைக்குழுவினருடன் இணைந்து வழங்கிய விடுதலைக்கானங்கள் நிகழ்வு இடம்பெற்றது. கேணல் கிட்டு நினைவான பாடல்கள் இசைநிகழ்வை அலங்கரித்தன. செவ்ரோன் தமிழ்ச்சங்க மாணவியின் விடுதலை நடனத்தைத் தொடர்ந்து, ஆர்ஜெந்தை தமிழ்ச்சங்க மாணவியின் நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து தாயகக் கலைபண்பாட்டுக்கழக கலைஞர் சின்னையா தனபாலசிங்கம் அவர்களின் சிறப்புரை இடம்பெற்றது. அவர் தனது உரையில் கிட்டண்ணாவின் ஆரம்பகால மறக்கமுடியாத நிகழ்வுகளை அனைவருடனும் பகிர்ந்துகொண்டார். பிரான்ஸ் தமிழர்கலை பண்பாட்டுக்கழக இசைக் கலைஞர்களின் நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் பாடலுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

பரிசில் தமிழமுதம் வானொலியின் கலைக்கலசம்

தமிழமுதம் வானொலியின் கலைக்கலசம் கலைநிகழ்ச்சி கடந்த 15.01.2012 பொங்கல் திருநாளன்று பரிஸ் மாக்ஸ் டோர்முவா பகுதியில் அமைந்துள்ள தேவாலய கலையரங்கில் நடைபெற்றது. பிரான்சில் புகழ்பெற்ற கண்ணன் தவில் நாதஸ்வரக் குழுவினரின் மங்கள இசை முழங்க மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமானது.

தொடர்ந்து முல்லைச்சகோதரிகளின் நாட்டியவிருந்தும், அவதாரம் குழுவினரின் நடனமும் இடம்பெற்றது.

கவிஞர் எழுத்தாளர் ஆயுர்வேத வைத்தியர் விரிஇளங்கோவன் அவர்கள் தலைமையில் கவிப்பொங்கல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கவிஞர்களான லினோதினி சண்முகநாதன், வாணி, ரி.தயாநிதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதனையடுத்து பரிஸ் நண்பர்கள் வட்டம் வழங்கிய நாடகமில்லை என்ற நாடகம் இடம்பெற்றது. இந்த நாடகம் பார்வையாளர்கள் பலரையும் வெகுவாகக் கவர்ந்துகொண்டது. கலைக்கலசத்தில் நிறைவாம்சமாக இசைவிருந்து இடம்பெற்றது. மலேசியாவிலிருந்து வருகைதந்திருந்த பாடகர் ராஜராஜசோழன் அவர்கள் இலண்டன் றெயின்போ இசைக்குழுவினருடன் தனது இனிமைக்குரலில் அன்றைய பழைய பாடல்களைப்பாடி கலாரசிகர்களை மகிழ்வித்தார். பிரான்ஸ் நாட்டில் வாழ்ந்துவரும் பாடகி ஆஷா, இலண்டனில் இருந்து வருகைவந்திருந்த டில்ஷா, பாடகர் எஸ்.கஜன் ஆகியோரும் இனிய பாடல்களைப் பாடியிருந்தனர்.

கஜன் அவர்களின் குரலில் பதிவான மழைவாசம் இறுவட்டும் கலைக்கலசம் மேடையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. மண்ணின் மணம் கமழும் கலைஞர் அப்புக்குட்டி ரி.ராஜகோபால் அவர்களை எஸ்.கே.ராஜென் மேடைக்கு அழைத்து அவரோடு உரையாடி இரசிகர்களை மகிழ்வித்தார்.

சென்னையில் முத்துக்குமாருக்கு வீரவணக்கம்

வீரத் தமிழ்மகன் முத்துக்குமாருக்கு சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள முத்துக்குமார் சாலையில் (ஆடோசு சாலை சாஸ்திரிபவன்) கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழர் எழுச்சி இயக்கத்தினர் வீரவணக்கம் செலுத்தி கைதானது அறிந்ததே. அதன் தொடர்ச்சியாக கடந்த 29ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை வீரத் தமிழ்மகன் தீக்குளித்த முத்துக்குமார் சாலையில் (ஆடோசு சாலை) தமிழர் எழுச்சி இயக்கத்தினர் மூன்றாம் ஆண்டு வீரவணக்கம் செலுத்த ஊர்வலமாக வந்தனர். அப்போது தோழர்கள் முத்துக்குமார் படத்தை கையில் ஏந்தி மலர் தூவி வீரவணக்க முழக்கமிட்டனர். அனுமதியின்றி வீரவணக்கம் செய்தவர்களில் சுமார் 30 பேர் காவல்துறையினர் கைது செய்தனர். அப்போது நிகழ்வுக்கு தலைமை ஏற்ற தமிழர் எழுச்சி இயக்க ஒருங்கிணைப்பாளர் ப.வேலுமணி தமிழக அரசிற்கு சில கோரிக்கைகள் முன்வைப்பதாக செய்தியாளரிடம் கூறினார். அவை

1) ஆங்கிலேயர் பெயரில் இருக்கும் ஆடோசு சாலையின் பெயரை மாற்றி தமிழினத்திற்காக தன்னுயிரையே ஈகம் செய்த வீரத் தமிழ்மகன் முத்துக்குமார் சாலை என்று பெயர் சூட்ட வேண்டும்.

2) வீரத் தமிழ்மகன் முத்துக்குமார் நினைவாக சென்னையில் நினைவுத் தூண் எழுப்ப வேண்டும்.

3) மொழிப் போர் ஈகையர்களை போற்றுவது போன்று, வீரத் தமிழ்மகன் முத்துக்குமார் உள்ளிட்ட தமிழின ஈகையர்களையும் தமிழக அரசு சார்பில் போற்றப்பட வேண்டும்.

4) ஈழத் தமிழர்களுக்காகப் போராடிய அனைத்து இயக்கத் தோழர்கள் மீதான வழக்குகளை திரும்பப் பெற வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கையுடன் தமிழக முதல்வர் மற்றும் சென்னை மாநகர மேயர் ஆகியோரை சந்திக்க உள்ளதாகவும் எமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை தொடர்ந்து போராடுவோம் என்றும் கூறினார்.

பிறேமன் நகரில் கேணல் கிட்டு – முத்துக்குமார் நினைவு!

தமிழீழப் படங்களுடன் முத்திரையும் வெளியீடு

29.01.2012 அன்று ஜேர்மனி பிறேமன் நகரில் கேணல் கிட்டு மற்றும் அவருடன் வீரச்சாவடைந்த ஒன்பது வீரவேங்கைகள், வீரத்தமிழ்மகன் முத்துக்குமார் ஆகியோரது நினைவு வணக்கநிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

தேசியக் கொடியேற்றல், சுடர், மலர், அக வணக்கத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில், செந்தளிர் இசைக்குழுவினரது இசைவணக்கம், எழுச்சிநடனங்கள், கவிதைகள், நாட்டியநாடகம் அடங்கலான நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், தேசியத்தலைவரின் உருவப்படம் பொறித்த தபால்தலையும், தமிழீழத் தேசிய மலரான காந்தள் மலரின் படம் பொறித்த தபால் தலையும், ஜேர்மனியத் தமிழர் கலைப்பண்பாட்டுக்கழக இசையமைப்பாளர் சிவன்ஜீவ் அவர்களால், கூடியிருந்த உறவுகளின் மிகுந்த கரகோசத்திற்கு மத்தியில் வெளியிட்டு வைக்கப்பட்டது. ஜேர்மனியத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரது விளக்கவுரையோடு, நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

டில்லியில் மறைந்திருந்த அரூப கரம்



சேரமான்

தந்திரிகளின் மறுமுகம் - 37

சேரமானின் இந்தத் தொடர் கட்டுரைக்கு இதில் பெயர்குறிப்பிடப்பட்ட சம்பந்தப்பட்டவர்கள் மறுப்புத் தெரிவித்து தங்களது மறுப்பை எழுத்துமூலமாகத் தருவார்களானால் அதனைப் பிரசுரிப்பதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.

(ஆ-ர்)

தனிப்பட்ட பயணமாக டில்லிக்கு உருத்திரகுமாரன் செல்வதற்குத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அனுமதியளித்திருந்த நிலையில் அதனை தடுத்து நிறுத்தும் முயற்சியில் அவரது உதவியாளரான வழுதி ஈடுபட்டமை தொடர்பாக எமது கடந்த தொடரில் சுருக்கமாகப் பார்த்திருந்தோம்.

தாயகத்தில் தங்கியிருந்த காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' ஏட்டின் உதவி ஆசிரியராகப் பணியாற்றியதைத் தவிர இயக்கத்தில் எந்தவொரு நீண்டகாலக்கள அனுபவத்தையோ அல்லது அரசியல் பின்னணியையோ வழுதி கொண்டிருக்கவில்லை. 1997ஆம் ஆண்டு முதலும் இறுதியுமாக இவர் கண்ட ஒரேயொரு களம் 'ஜெயசிக்குறுய்' போர்க்களம். இதில் காயமுற்றதைத் தொடர்ந்து இயக்கத்திலிருந்து விலகிய இவர், களத்தில் தான் காயமடைந்தமைக்கு பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களே காரணம் என்றுகூறி தனது சகாக்களிடம் அவதூறுகளைப் பரப்பி வந்தார் (இதுவே மே 18இற்குப் பின்னர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் தொடர்பாக அவதூறுக் கட்டுரைகளை இவர் வெளியிட்டமைக்கான காரணியாகும்).

இதன் பின்னர் அமெரிக்காவிற்குப் புலம்பெயர்ந்து அங்குள்ள பரப்புரை செயற்பாட்டாளர்களுடன் இணைந்து இவர் இயங்கி வந்தாலும், அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்களுடனோ அன்றி இராசதந்திரிகளுடனோ இவருக்குத் தனிப்பட்ட தொடர்புகள் எவையும் இருந்தது கிடையாது. அமெரிக்கப் பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் ஜேம்ஸ் கிளாட் உட்பட குறிப்பிடத்தக்க சில பிரமுகர்களுடன் இவருக்கிருந்த தொடர்புகள் அனைத்தும் உருத்திரகுமாரன் ஊடாகவும், அவருடன் தொடர்பைப் பேணிய மூன்றாம் நபர்கள் வாயிலாகவுமே கிடைக்கப் பெற்றிருந்தன. இவ்வாறு உருத்திரகுமாரனின் ஆளுகைக்கு வெளியே நின்று தனித்து இயங்க முடியாத ஒருவராக விளங்கினாலும்கூட, உருத்திரகுமாரனைக் கையாள்பவர் போன்ற தோற்றப்பாட்டையே வன்னியில் இவர் ஏற்படுத்தியிருந்தார்.

2006ஆம் ஆண்டின் இறுதியில் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமெரிக்கப் பொறுப்பாளர் கருணாகரன் அவர்கள் கைது செய்யப்பட்ட பொழுது இவரது கடவுச்சீட்டு அமெரிக்க உள்ளகப் புலனாய்வு அமைப்பான எப்.பி.ஐ நிறுவனத்தால் பறிமுதல் செய்யப்பட்டு, வன்னியுடன் தொடர்புகளைப் பேணுவதற்கும், வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. எனினும் 2007ஆம் ஆண்டின் இறுதி மாதங்களில் – பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டதைத் தொடர்ந்து – உருத்திரகுமாரனின் உதவியாளராக இவர் இணைந்து கொண்ட பொழுது இவரது கடவுச்சீட்டு அமெரிக்க புலனாய்வாளர்களால் மீளளிக்கப்பட்டதோடு, வன்னியுடன் இவர் தொடர்புகளைப் பேணுவதற்கும், வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வதற்கும் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டன.

மறுக்கமுடியுமா? மறுக்கமுடியுமா?

பரந்தன் ராஜனுடனான தொடர்பை உருத்திரகுமாரனால்?



உருத்திரகுமாரன் தொடர்பாக வழுதி வன்னிக்கு எழுதிய கடிதத்தை?

எவ்விதமான நிபந்தனைகளின் அடிப்படையில் இவர் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன என்பதை எம்மால் அறுதியிட்டுக் கூறமுடியாது. இவ்வாறு கூறுவதற்கான ஆதாரங்களும் எம்மிடம் இல்லை. ஆனால் மே 18இற்குப் பின்னர் – அதிலும் குறிப்பாக கே.பி அவர்களின் `கைது` நாடகத்தைத் தொடர்ந்து – எவ்வித தங்குதடையுமின்றி பல தடவைகள் இவர் கொழும்பிற்கு பயணம் செய்தமையும், தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து அங்குள்ள அச்சு ஊடகமொன்றில் இவர் கடமையாற்றி வருவதும், வன்னிப் போரின் பொழுது வல்லரசுப் புலனாய்வு நிறுவனங்களின் முகவர்களுடன் இவருக்கு இருந்திருக்கக் கூடிய இரகசிய தொடர்புகளை ஐயம்திரிபற நாம் புரிந்து கொள்வதற்குப் போதுமானது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் என்ற கோதாவில் அமெரிக்காவில் இயக்கத்தின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வது போன்ற தோற்றப்பாட்டை அக்காலப்பகுதியில் வன்னியில் இவர் ஏற்படுத்தியிருந்தாலும் கூட, ஒரு இரட்டை முகவருக்குரிய பாங்குடன் தன்னை இயக்கிய வல்லரசுப் புலனாய்வாளர்களின் தாளத்திற்கு நர்த்தனமாடும் ஒருவராகவே இவர் விளங்கினார் எனக் கூறின் மிகையில்லை.

உருத்திரகுமாரனின் அமைச்சர்கள், அரசவை உறுப்பினர்கள் என்று கூறப்படும் கனிசமானோர் கடந்த இரண்டரை ஆண்டு காலப்பகுதியில் எவ்வித தங்குதடையுமின்றி அடிக்கடி இந்தியாவிற்கு பயணம் செய்வதும், அங்கு மூடுமந்திரமாக சந்திப்புக்களை நிகழ்த்திவிட்டுத் தாம் வசிக்கும் நாடுகளுக்குத் திரும்புவதும் தாராளமாகவே நிகழ்ந்தேறி வருகின்றன.

ஏற்கனவே கடந்த தொடரின் இறுதியில் நாம் சுட்டிக் காட்டியமை போன்று உருத்திரகுமாரனின் டில்லிப் பயணத்தைத் தடுத்தும் நிறுத்துவதற்கு வழுதி எடுத்த முயற்சி என்பது அவர் மீதான காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடாக அமையவில்லை. மாறாக இரண்டு வல்லரசுப் புலனாய்வு நிறுவனங்களிடையே நிலவிய `கயிறுழுப்புப் போட்டி`யின் பிரதிபலிப்பாகவே இம்முயற்சியில் வழுதி இறங்கியிருந்தார்.

இன்னும் தெளிவாகக் கூறுவதானால், இந்திய உளவு அமைப்பான 'றோ' நிறுவனத்திற்கும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர நலன்களைக் கொண்டுள்ள வல்லரசு நாடொன்றின் புலனாய்வு நிறுவனத்திற்கும் இடையில் ஈழப்பிரச்சினை தொடர்பாக அக்காலப்பகுதியில் நிலவிய 'மிதமான' முரண்பாடுகளின் பிரதிபலிப்பாகவே உருத்திரகுமாரனின் டில்லிப் பயணத்தை தடுத்து நிறுத்தும் முயற்சியில் வழுதி ஈடுபட்டார்.

உருத்திரகுமாரனையும், அவரது தலைமையில் இயங்கும் நாடுகடந்த அரசாங்கத்தையும் மேற்குலக வல்லரசுப் புலனாய்வு நிறுவனம் ஒன்று இயக்கி வருவது போன்ற தோற்றப்பாடு இன்று பொதுவாக நிலவினாலும்கூட, உண்மையில் உருத்திரகுமாரனினதும், அவரது நாடுகடந்த அரசாங்கத்தினதும் ஆணிவேர் என்பது டில்லியிலேயே ஆழமாகப் பதிந்துள்ளது.

உருத்திரகுமாரனின் தலைமையில் நாடுகடந்த அரசாங்கத்தை உருவாக்குவதற்கான அறிவிப்பை 2009ஆம் யூன் மாதம் கே.பி அவர்கள் விடுத்திருந்தாலும்கூட, இற்றைவரைக்கும் அதனை அங்கீகரிப்பதற்கு அமெரிக்கா உட்பட எந்தவொரு மேற்குலக நாடும் முன்வந்ததில்லை. அமெரிக்காவின் அங்கீகாரத்துடன் உதயமாகிய தென்சூடான் அரசின் ஆதரவு தமக்குக் கிடைத்திருப்பதாகவும், இதன் தொடர்ச்சியாக தென்சூடானிய தலைநகரில் தூதரகம் ஒன்றை திறக்கப் போவதாகவும், பூதாகரப்படுத்தப்பட்ட பரப்புரைகளைக் கடந்த ஆண்டு உருத்திரகுமாரன் குழுவினர் முன்னெடுத்திருந்தாலும்கூட, அவையெல்லாம் பிசுபிசுத்துப் போன விடயங்களாகவே தற்பொழுது பட்டவர்த்தனமாகி வருகின்றன. இவையெல்லாவற்றுக்கும் அப்பால் கடந்த இரண்டரை ஆண்டுகளாக நாடுகடந்த அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்களை மேற்குலக இராசதந்திரிகள் தவிர்த்து வருவதோடு, கீழ்மட்ட அதிகாரிகளுடனேயே உருத்திரகுமாரன் குழுவினரின் சந்திப்புக்கள் மட்டுப்படுத்தப்படுகின்றன.

(42ம் பக்கம் பார்க்க)

வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

90 இலட்சம் கார் விற்பனை ஜெனரல் மோட்டார் சாதனை

உலகின் முன்னணி கார் தயாரிப்பு நிறுவனமான ஜெனரல் மோட்டார்ஸ் 2011ல் 90 இலட்சம் கார்களை விற்பனை செய்துள்ளது. அதன் மூலம் 2007ம் ஆண்டுக்குப்பின் முதல் முறையாக மீண்டும் முதலிடத்தை பிடித்துள்ளது. கடன் நெருக்கடியால் 2008ல் விற்பனை 11 சதவீதம் சரிந்ததால் ஜெனரல் மோட்டார்ஸ் முதலிடத்தை டொயோட்டா மோட்டாரிடம் பறிகொடுத்தது. ஆனால், கடந்த ஆண்டு பூகம்பம், சுனாமி பாதிப்பால் ஜப்பானின் டொயோட்டா உற்பத்தி பெரிதும் பாதித்தது. இது அமெரிக்க நிறுவனத்திற்கு வாய்ப்பாகிவிட்டது. 2011ல் உலக அளவில் 90 இலட்சம் கார் விற்பனையுடன் ஜெனரல் மோட்டார் முதலிடமும், 81 இலட்சத்துடன் வோக்ஸ் வேகன் ஏஜி, 79 இலட்சத்துடன் டொயோட்டாவும் முறையே 2 மற்றும் 3ம் இடத்தை பிடித்துள்ளன.

'கொடக்' நிறுவனம் நட்டத்தில்!

அமெரிக்காவில் உள்ள புகழ்பெற்ற 'கொடக்' கமெரா நிறுவனம், தொடர்ந்து நட்டத்தைச் சந்தித்து வருவதால், திவால் (நட்டம்) கடிதம் அளித்துள்ளது. புகைப்படக் கருவி, படச் சுருள் ஆகியவற்றில் உலகப் புகழ் பெற்றது அமெரிக்காவின் 'கொடக்' நிறுவனம். சந்திரனில் நீல் ஆர்ம்ஸ்டாங் கால்பதித்த காட்சியை வெளியிட, இந்த நிறுவன படச்சுருள் உதவியதால் வரலாற்றில் இடம்பிடித்தது. 131 ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்த நிறுவனம், மோசமான நிர்வாகம், போட்டியாளர்களைச் சமாளிக்க முடியாமை ஆகிய காரணங்களால், 2003 முதல் சிறிது சிறிதாக நலிவடைந்தது 2003 முதல், இதுவரை, தனது 13 படச்சுருள் மற்றும் புகைப்படக் கருவி தயாரிப்பு நிலையங்களை மூடிய இந்நிறுவனம், 47 ஆயிரம் ஊழியர்களையும் வீட்டுக்கு அனுப்பியது.



இந்நிலையில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டு வருவதாக கூறி அமெரிக்க அரசிடம், கோடாக் நிறுவனம் திவால் கடிதம் அளித்துள்ளது. இதன் மூலம் நிறுவனங்கள், தனிநபர்களிடம் வாங்கிய கடனை, இந்நிறுவனம் சிறிது கால அவகாசம் எடுத்துக் கொண்டு மெல்ல மெல்ல செலுத்தும். இந்த திவால் கடிதம், அமெரிக்காவில் இயங்கும் வர்த்தகத்திற்கு மட்டுமே என கொடக் ஆசியா பிரிவின், சந்தைப்படுத்தல் துணைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

2012ல் உலக மக்கள் தொகையிலும் பார்க்க செல்பேசிகளின் தொகை அதிகம்!

இந்தியாவில் கழிப்பறை வசதிகளிலும் பார்க்க கைபேசி வசதிகள் அதிகம்

2012ம் ஆண்டு உலக மக்கள் தொகையிலும் பார்க்க செல்பேசிகளின் தொகை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவிலும் இந்தியாவிலும் ஒரு பில்லியன் செல்பேசிகள் பாவனையில் இருக்கும் என்றும் உலகெங்கும் 6.8 பில்லியன் செல்பேசிகள் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என்கிறார் இயந்திரவியல்–தொழில்நுட்ப நிலையத்தின் தலைவரான கலாநிதி மைக் ஷொர்ட். பிரித்தானியாவில் 62.5 மில்லியன் செல்பேசிகள் பாவனையில் உண்டு. இப்போது உலகெங்கும் பற்தூரிகைகளிலும் (toothbrush) பார்க்க அதிக அளவு செல்பேசிகள் பாவனையில் உள்ளனவாம்.



இந்தியாவில் மக்களுக்கு உள்ள கழிப்பறை வசதிகளிலும் பார்க்க கைபேசி வசதிகள் அதிகம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் துணை நிறுவனமான University's Institute for Water Environment and Health (IWEH) தெரிவித்துள்ளது. 2008ம் ஆண்டுக் கணக்கெடுப்பின் படி இந்திய மக்கள் தொகையில் அரைவாசிப் பேர் செல்பேசி வைத்திருக்கின்றனர். ஆனால் இந்திய மக்கள் தொகையின் மூன்றில் ஒரு பகுதியினரே நல்ல கழிப்பறை வசதிகள் பெறக்கூடியவர்களாக இருக்கின்றனராம்.

சீனாவுக்கு இலங்கை...

இந்த அபிவிருத்தி திட்டங்களுக்காக நாம் பெற்றுக் கொள்ளும் அனைத்தும் அதிகப்படி வணிகக்கடன் வட்டி வீதத்துக்கே பெறப்படுகிறது என்பதுடன் இதற்கு எந்தவொரு கேள்விமனு கோரல் விதிமுறைகளும் பின்பற்றப்படுவதில்லை. அரச நிதி முகாமைத்துவ சட்டத்துக்கு அமைவாக நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் பிரகாரம் 2011ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரை அரசாங்கம் சீனாவிடமிருந்து 784 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக பெற்றுள்ளது.

சீனாவுக்கு சிறீலங்கா பாரியளவில் கடன்பட்டுள்ளமையால் அந்த சகல கடன்களையும் பங்குகளாக மாற்றம் செய்ய வேண்டும் என்று அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். இந்தக் கருத்தை கிரமமாக நாடு முழுவதும் பரப்புவதன் மூலம் அம்பாந்தோட்டை துறைமுக திட்டம் உட்பட அந்தந்த திட்டங்களை அந்தந்த சீன நிறுவனங்களுக்கே வழங்கிவிடவே அரசாங்கம் முயற்சிக்கிறது. அரசாங்கம் இலங்கையின் அரசியல் பூகோள பின்னணி பற்றி சிந்திக்காமல் இவ்வாறு செயற்படுவது தொடர்பாக இந்தியா தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. கொழும்பு துறைமுக தெற்கு இறங்கு துறை தொகுதி திட்டத்தின் 85 சதவீதத்தை 35 வருடங்களுக்கு அரசாங்கம் சீனாவுக்கு வழங்கியமை தொடர்பில் இந்தியா கடும் எதிர்ப்பை வெளியிட்டமை இதற்கு சிறந்த உதாரணமாகும்.

சீனா இலங்கைக்கு வந்து கோடிக் கணக்கான ரூபாய்கள் கடனுக்கு நாட்டின் பல்வேறு இடங்களில் பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கின்றன. அதன் பின்னர் கடன் செலுத்த முடியாமையால் அந்த திட்டங்களின் உரிமையை மெதுவாக தமது நிறுவனங்களுக்கு வழங்குமாறு அரசாங்கத்துக்கு கூறுகின்றது. ஆகவே, இந்த நாட்டின் பொருளாதாரத்தை சூறையாடுபவர்கள் இலங்கைக்கு வெளியில் இல்லை. உண்மையான பொருளாதர கொள்ளையர்களான சீனர்கள் இந்த நாட்டுக்கு வந்து பொருளாதாரத்தை சூறையாடும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள் என்பது இதிலிருந்து புலனாகிறது. இவ்வாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரா கலாநிதி ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

குரங்கின் கை பூமாலையாகும்....

இந்நிலையில் தமிழ்மக்களின் மூன்று குடிசைகளின் முற்றத்தால் வீதி அமைக்கப்பட்டதாகவும் இதன்போது குறித்த அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் எனினும் காவல்துறையினர் தலையிட்டு அதனைக் கட்டுப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை பாதிக்கப்பட்ட சன்னார் பிரதேசவாசி ஒருவர், `நாங்கள் பதினைந்து ஏக்கர் காணியை பொது இடமாகத் தெரிவுசெய்து துப்புரவு செய்து வருகின்றோம். இதில் விளையாட்டு மைதானம் உட்பட பொதுமக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பை அமைப்பதற்கு முயற்சி எடுத்து வருகின்றோம். இந்த நிலையில் சில அரசியல்வாதிகளின் வழிப்படுத்தலின் கீழ் எங்கள் இருப்பிடங்களைக் கையகப்படுத்தும் முயற்சி காரணமாக நாங்கள் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்`` என்று கவலையுடன் தெரிவித்தார்.

இந்நிலையில், கொழும்பு ஆனந்த குமாரசுவாமி வீதியின் பெயர் சிங்களத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு மேல் மகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கோரியுள்ளார். இதுதொடர்பான பிரேரணை ஒன்றை ரஹ்மான், மேல் மாகாண சபையில் முன் வைத்துள்ளார்.

ஹோர்டன் பிளேஸ் சந்தியிலிருந்து பொது நூலகம் வரையிலான ஆனந்த குமாரசுவாமி வீதி 'நெலு பொக்குன என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்சவின் பெயரில் அங்குராப்பணம் செய்யப்பட்ட தாமரைத் தடாக அரங்கத்திற்குச் செல்லும் வழியில் இந்த வீதி அமைந்திருப்பதன் காரணமாகவே ஆனந்த குமாரசுவாமி வீதியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தமிழ் என்ற பதம் எந்த மூலையில் இருந்தாலும் அதனைத் தேடி அழிக்கும் நடவடிக்கையிலேயே சிங்களம் கங்கணம் கட்டி நிற்பதற்கு இது சான்றாக அமைகின்றது.

சற்று சிந்தியுங்கள். சிந்தித்து செயற்படுங்கள்.

(துறையாடல்கள் தொடரும்)

சர்வதேசத் தபால் ஒன்றியத்தின் சட்டங்களுக்கு ஒரு போதும் சிறீலங்காவில் அனுமதி இல்லை

தமிழீழ விடுதலைப் புலிகளின் முத்திரைகளை கொண்ட கடிதங்கள் மற்றும் பொதிகளை இலங்கைக்கு அனுப்ப வேண்டாம் என சிறீலங்கா தபால் மா அதிபர் எம்.கே.பி. திசாநாயக்க அறிவித்துள்ளார். இந்த விடயத்தில் நாம் சர்வதேச தபால் ஒன்றியத்தினுடைய சில விதிகளைப் புறக்கணித்தே செயற்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மற்றும் தமிழீழ தேசியக் கொடி மற்றும் சின்னங்கள் கொண்ட முத்திரைகள் பிரான்ஸ், கனடா, பிரித்தானியா ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புகளால் வெளியிடப்பட்டுள்ளன.

சுவிச்சர்லாந்து

சர்வதேச தபால் ஒன்றியத்தின் விதிகளின்படி எந்தவொரு முத்திரையும் அங்கத்துவ நாடொன்றினால் அங்கீகரிக்கப்பட்டால் அது சர்வதேச நாடுகளின் தபால் சேவைகளின்போது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

அது போல அங்கத்துவ நாடொன்றினால் தபால் முத்திரைகள் ஒட்டப்பட்டிருப்பின் அந்த தபால்கள் எந்த நாட்டிற்கும் அனுப்ப முடியும். ஆனாலும் விடுதலைப் புலிகளது முத்திரைகளை கொண்ட கடிதங்கள் மற்றும் பொதிகளில் சர்வதேச தபால் ஒன்றியத்தில் சில விதிகளை இலங்கையில் புறக்கணித்து நடக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் முத்திரை கொண்ட தபால்களையோ அல்லது பொதிகளையயோ சிறீலங்காவிற்கு அனுப்ப வேண்டாம் எனவும் பிரான்ஸ் தபால்துறையினருக்கு அறிவித்துள்ளதாகவும் சிறீலங்கா தபால் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். சிறீலங்காவிற்குரிய சட்ட திட்டங்களுக்கு அமையவே தாம் செயற்பட உள்ளதாகவும் சர்வதேச தபால் ஒன்றியத்தின் சட்டதிட்டங்களுக்கு ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். எனினும், இவ்வாறான படங்களை கொண்டமைந்த முத்திரைகள் ஒட்டப்பட்ட கடிதங்கள், பொதிகள் இலங்கைக்கு அனுப்பப்படும் பட்சத்தல் அந்த முத்திரைகளை அகற்றிவிட்டு தபால்கள் விநியோகிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தற்போது கனடா, அமெரிக்கா, சுவிச்சர்லாந்து, பிரித்தானியா உட்பட ஐந்துக்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழீழப் படங்கள் சார்ந்த முத்திரைகள் வெளியாகியுள்ளமையும் மேலும் பல நாடுகளில் இவ்வாறான முத்திரைகள் வெளிவரவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மரண அறிவித்தல்

திருமதி முருகேசு அன்னலெட்சுமி

புங்குடுதீவு 6ம் வட்டாரம்

பிறப்பு : 1 மே 1947 இறப்பு : 28 சனவரி 2012

புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கண்டி, பிரான்சை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அன்னலெட்சுமி அவர்கள் 28-01-2012 சனிக்கிழமை அன்று காலமானார்.
அன்னார், காலஞ்சென்றவர்களான மாணிக்கம், செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகேசு(கலைவாணி புத்தகநிலையம் - கண்டி) அவர்களின் அன்பு மனைவியும், சசிகலா(சுவிஸ்), சசிமாலா(பிரான்ஸ்), சசிதரன்(சுவிஸ்), சசிலீலா(பிரான்ஸ்), சசிவதனி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், துரைசிங்கம், காலஞ்சென்ற சேதுராமலிங்கம் மற்றும் பாலசிங்கம், திருநாவுக்கரசு, வரதலிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், சின்னத்தங்கம்(கனடா), காலஞ்சென்ற சிவக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு பெறாமகளும், சச்சிதானந்தன், ஸ்ரீகுமார், அகிலா, சுந்தரதாசன், காண்டீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,
காலஞ்சென்றவர்களான நாகம்மா, பாலசிங்கம், கந்தசாமி, தங்கம்மா, கனகேஸ்வரி, நடராஜா மற்றும் மங்கையக்கரசி, இரத்தினபூபதி, சாரதாம்பாள், மங்கலேஸ்வரி, சாரதாம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஆறுமுகம், வேலுப்பிள்ளை, மருதலிங்கம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், அன்னபூரணம், பத்மாவதி, தேவி ஆகியோரின் அன்புச் சகலியும், துஷாந், விபூஷன், மிதுஷா, காலஞ்சென்ற மகீபன் மற்றும் காவேப், செந்தூரிக்கா, கிதுர்ஷன், மதுஷன், சதுர்ஷா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் செவ்வாய்க்கிழமை 31-01-2012 முதல் 02-02-2012 வியாழக்கிழமை வரை **Funérarium de Ménilmontant-7 Bd de Ménilmontant, 75011 Paris (M°: 2 - Philippe Auguste)** பார்வைக்கான நேரம் 15.00 முதல் 17.00 வரை) எனும் முகவரியில் பார்வைக்காக வைக்கப்பட்டு 03-02-2012 வெள்ளிக்கிழமை அன்று அதே முகவரியில் 08.45 முதல் 10.00 மணிவரை இறுதிக்கிரியைகளை தொடர்ந்து காலை 11.00 மணியளவில் **crématorium du Père-Lachaise, 71 rue des Rondeaux, 75020 Paris (M°: 3 - Gambetta)** மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
சசிலீலா- பிரான்ஸ் +33669954681
சசிகலா- சுவிட்சர்லாந்து +41318394386
சசிமாலா- பிரான்ஸ் +33143777654
சசிதரன்- சுவிட்சர்லாந்து +41617811869/ +41765331453
சசிலீலா- பிரான்ஸ் +33139508379
சசிவதனி- ஜேர்மனி +4972314436259

சண்சோனிக் நிறுவனத்தின் நத்தார், புதுவருட சிறப்புச் சலுகைகள்

மறைமுகக் கட்டணங்கள் எதுவுமில்லை

Home Phone + Internet
$49.90 per month*
(Unlimited High Speed Internet) + (16 Calling Features Included)
No contract

Business Servicess
$34.95+ per month*
(Basic Business/Residential -Regular Line)

Home phone service
$9.95* per month*
(with 16 Calling Features)
No Activation Fee
No Device Fee

Home Internet
$34.95** per month*
(Unlimited High Speed Internet)

Business Servicess
$29.95 per month*
(Business Line - VOIP) (411 update, Multi-line roll over)

Business Servicess
$54.95** per month*
High speed Business Internet

sun sonic

Sun Sonic Inc.
416-907-7777
info@sunsonic.ca
www.sunsonic.ca

Terms & Conditions: Taxes apply for all the packages. *- Based on one year subscription of phone service.
**- Dry loop charges apply. + - Charges apply for calling features. Device charges applicable from second year.

பசிலனின் இன்னொரு போர்முகம் பால்ராஜ்



25

திருச்செல்வத்தின் உண்ணாவிரதத்தை தடுக்க வந்த படையினரை எதிர்த்து நின்ற மக்கள்

நல்லூர் வீதியில் திலீபன் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து ஏழாவது நாள். அன்றுதான் முள்ளியவளை கந்தசாமி கோவிலுக்கு அருகில் இருந்த போராளிகளின் முகாமில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்களின் பெயர் எழுதப்பட்ட சீட்டுக்களைக் கொண்டு குலுக்கல் இடம்பெற்றது. குலுக்கப்பட்ட சீட்டுக்களில் உண்ணாவிரதம் இருப்பதற்கு விரும்பியவர்களின் பெயர்கள் அனைத்தும் எழுதப்பட்டிருந்தன.

அதில் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் மேஜர் பசிலனின் பெயரும் அடங்கியிருந்தது. ஆனால், சீட்டுக் குலுக்குவதற்கு முன்பாக ஏனோ சீட்டுக்களில் இருந்து மேஜர் பசிலனின் பெயரை மட்டும் பால்ராஜ் அண்ணை யாருக்கும் தெரியாமல் எடுத்துவிட்டார். இது பின்னர் ஓருசில போராளிகளுக்கு தெரிந்தபோதும், இறுதிவரை பசிலனுக்கு தெரியாது என்றே நம்புகின்றேன்.

எதற்காக பால்ராஜ் அண்ணை அவரது பெயரை எடுத்தார் என்பது தெரியாதுபோனாலும், பசிலன் அண்ணையை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணமே அவரை அவ்வாறு செய்யத் தூண்டியிருக்கலாம் என்பதே எனது எண்ணம்.

சீட்டுக் குலுக்கப்பட்டபோது திருச்செல்வத்தின் பெயரே விழுந்தது. தனக்கு அந்த வாய்ப்பு கிடைத்ததில் திருச்செல்வத்திற்கு பெரும் மகிழ்ச்சி. உண்ணாவிரதம் இருப்பவர் யார் என்பது முடிவானதும், திருச்செல்வத்தை அங்கிருந்து முள்ளியவளையில் இருந்த சிவப்பிரகாசம் ஐயா வீட்டிற்கு அழைத்துச் சென்ற போராளிகள் அங்கு வேட்டி, சட்டையை அவருக்கு அணிவித்தனர். அப்போது சிவப்பிரகாசத்தின் துணைவியார் ராசம்மா, அருகிலுள்ள காட்டு விநாயகர் கோவிலுக்கு சென்று திருச்செல்வத்தின் பெயரில் அர்ச்சனை செய்து கொண்டு வந்திருந்தார். கணவனும், மனைவியும் ஆசீர்வதித்து அர்ச்சனை செய்துவந்த திருநீற்றை திருச்செல்வத்தின் நெற்றியில் பூசினர்.

அப்போது அருகில் நின்ற பால்ராஜ் அண்ணை "அம்மா இவன் வேதக்காரன். இவனுக்கு ஏன் திருநீற்றை பூசுகின்றீர்கள்?" என்று நகைச்சுவையாக கூறினார். திருச்செல்வம் சிரித்துக்கொண்டு நிற்க, அந்தத் தாய் திருநீற்றை அவர் நெற்றியில் பூசி ஆசீர்வாதம் வழங்கினார்.

அங்கிருந்து திருச்செல்வத்தை பசில் அண்ணையின் வெள்ளை பிக்கப்பில் ஏற்றிக்கொண்டு முல்லைத்தீவுக்குச் சென்றனர். முல்லைத்தீவு முற்றவெளிக்கு அருகிலிருந்த ஆலமரத்திற்கு அருகில் மேடை அமைக்கப்பட்டு அங்கே திருச்செல்வம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கியதில் இருந்து தினந்தோறும் மக்கள் வந்து குவிந்தபடி இருந்தனர். தினந்தோறும் தூர உள்ள கிராமங்களில் இருந்தும் மக்கள் மாட்டு வண்டில்கள், உழவு இயந்திரங்கள் என வந்து திருச்செல்வத்தின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தங்கள் ஆதரவை வழங்கிக்கொண்டிருந்தனர்.

ஒரு நாளாச்சு, இரண்டு நாளாச்சு... நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன. இந்திய அரசு கோரிக்கைகளை ஏற்பதாகத் தெரியவில்லை. இதேநேரம் திருச்செல்வத்தினமும், யாழ்ப்பாணத்தில் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருந்த திலீபனுக்கும் ஆதரவாக முல்லைத்தீவு பகுதியெங்கும் மக்கள் பல்வேறு எழுச்சி நிகழ்வுகளை நடத்திக்கொண்டிருந்தனர்.

ஐந்தாவது நாள் ஆகியது. இந்த ஐந்து நாட்களும் திருச்செல்வத்தின் தாயார் அந்த இடத்தைவிட்டு நகரவே இல்லை. தன்னை அகிம்சைவாதியாகக் காட்டிக்கொள்ளும் இந்தியா, தமிழ் மக்களின் அகிம்சைப் போராட்டத்தை மதிக்கப்போவதில்லை. தன் கண்முன்னாலேயே தனது மகன் மெல்ல மெல்ல சாவை நெருங்கிக்கொண்டிருக்கின்றார் என்பது அந்தத் தாய்க்கு புரிந்தது. ஐந்தாவது நாள் திருச்செல்வம் படுக்கையில் இருந்து எழுந்திருக்க முடியாத நிலையை அடைந்தார். இதன் அடுத்த கட்டம் அவர் சுயநினைவற்ற நிலைக்கு செல்லும் அபாய கட்டமாக இருக்கும் என்றே எல்லோரும் கருதினர். காரணம் ஏற்கனவே திலீபன் அவர்கள் சுயநினைவற்ற (கோமா) கட்டத்தை அடைந்துவிட்டிருந்தார். அதனால், திருச்செல்வமும் இன்னும் ஓரிரு தினங்களில் சுயநினைவை இழந்துவிடுவார் என்றே எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் திருச்செல்வம் உண்ணாவிரதம் இருந்த ஆறாவது நாளான 26.09.1987 அன்று தியாகி திலீபன் உண்ணா நோன்பை ஆரம்பித்த 12வது நாள் சாவடைந்துவிட்டார் என்ற பேரதிர்ச்சி தரும் செய்தி வந்து சேர்ந்தது. செய்தியறிந்த முல்லைத்தீவு மாவட்ட மக்கள் திருச்செல்வம் உண்ணாவிரதம் இருந்த முற்றவெளியை நோக்கி படையெடுத்துவரத் தொடங்கிவிட்டனர். இதனால் வீதியின் நீண்ட தூரங்களுக்கு வாகனங்களாலும், மாட்டுவண்டிகளாலும் வீதி நிரம்பியிருந்தது.

இதேநேரம் திலீபன் சாவடைந்த செய்தியை மேடையில் அறிவித்தபோது, கூடியிருந்த மக்கள் பெரும் குரல் எடுத்து கதறியழத் தொடங்கிவிட்டார்கள். அப்போது மிகவும் தளவர்வடைந்த நிலையில் எம்.ஜீ. ஆரின் மடியில் தலைவைத்து படுத்திருந்த திருச்செல்வம், மக்கள் கதறியழும் ஓசையைக் கேட்டு என்ன நடந்தது என எம்.ஜி. ஆரிடம் வினவுகின்றார். திலீபனின் செய்தியை அவரிடம் கூறியபோது, ஒரு கணம் அமைதியாக இருந்தவர், தான் மக்கள் முன் பேசவேண்டும் என்று கோரிக்கை விடுகின்றார். அவர் உரையாற்றக் கூடிய நிலையில் இல்லை என்பது தெரிந்தது. ஆனாலும், அவரது கோரிக்கையை ஏற்று அவரிடம் 'மைக்' ஒன்றை கொடுக்கின்றனர்.

மேடையில் அமர்ந்திருந்தபடியே மக்கள் முன் தான் சொல்ல வந்ததை சொல்லத் தொடங்குகின்றார்.

"என் அன்பார்ந்த மக்களே

திலீபன் அண்ணாவின் வீரமரணம் எனக்கு ஒன்றை உணர்த்தியது. எனது சாவும் உறுதியானது. இந்திய வல்லாதிக்கம் என்னையும் சாகடிக்கலாம். ஆனால் உங்களுக்கு என் இதயத்தின் வேண்டுகோள் ஒன்று. நீங்கள் தலைவர் பிரபாகரனை நம்புங்கள். எமது இயக்கத்தை நம்புங்கள். அவர்கள் மட்டும்தான் உங்களுக்காக தங்கள் உயிரையும் தரத் தயாராக இருக்கின்றார்கள்."

மக்களின் அழுகுரல்களுக்கு மத்தியிலே மிகவும் கஷ்டப்பட்டு தன் நெஞ்சிலிருந்த வார்த்தைகளை மெது மொதுவாக உதிர்த்து முடிக்கின்றார். அவர் பேசி முடித்த பின்னும் மக்களின் அழுகுரல் ஓயவேயில்லை. இன்னும் அது அதிகரித்துக்கொண்டே இருந்தது.

இதற்கிடையே திலீபன் சாவடைந்த அன்று மாலை இந்திய இராணுவத்தினர் முற்றவெளி அரங்கின் அருகிலுள்ள பகுதியில் குவியத் தொடங்கிவிட்டனர். திடீரென இராணுவத்தினர் இவ்வாறு குவிக்கப்பட்டுள்ளதால் திருச்செல்வத்தின் உண்ணாவிரதத்தை இந்தியப் படையினர் குழப்பலாம் அல்லது தடுத்து நிறுத்த முயலலாம் என போராளிகளும், மக்களும் கருதினர். ஏற்கனவே திலீபனின் சாவினால் இந்தியா பெரும் அவமானத்தை சந்தித்துள்ளது. இந்நிலையில், அவ்வாறான இன்னொரு சம்பவம் நிகழ்வதை இந்தியா அனுமதிக்காது. அதனைத் தடுத்து நிறுத்தவே முயலும் என்பதை புரிந்துகொண்ட மக்கள் மேடைக்கு அருகில் பெருந்திரளாக குவியத் தொடங்கிவிட்டனர். படையினர் வந்தால் அவர்களுடன் முரண்படுவது என்றளவிற்கு மக்கள் எழுச்சியோடு நின்றதை அப்போது காணக் கூடியதாக இருந்தது.

இதேநேரம் மேடையில் இராணுவத்தினரின் செயற்பாட்டை கண்டித்து உரைகளும் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. சற்று நேரத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பொறுப்பான இந்தியா அதிகாரி மேஜர் டாடா அங்கு வந்து சேர்ந்தார். அதே நேரம் மேடைக்கு அருகில் வந்த படையினர் அப்பகுதியில் தேடுதல் நடத்தியதுடன், மேடையின் கீழேயும் சோதனையிட்டனர். படையினரின் நடவடிக்கை மக்களுக்கும் போராளிகளுக்கும் கோபத்தை ஏற்படுத்தியது. 'உங்களின் பாதுகாப்பிற்காகவே வந்திருப்பதாக' படையினர் கூறியபோது, அதனை ஏற்க மறுத்த மக்கள், 'இத்தனை நாளும் இல்லாத பாதுகாப்பு இப்போது எங்களுக்கு எதற்கு? எங்களுக்கு பாதுகாப்பு வேண்டாம். அங்கிருந்து படையினரை விலகிச் செல்லுங்கள்' என்று வலியுறுத்தினர்.

இவ்வாறு படையினருடன் மக்கள் முரண்பட்டுக்கொண்டிருந்தபோது, அருகில் இருந்த முகாமில் ஒரு உலங்குவானூர்தி வந்து அவசரமாகத் தரையிறங்கியது. உலங்குவானூர்தி தரை இறங்கிய சிறிது நேரத்தில் முகாமில் இருந்து சில வாகனங்களும் ஒரு இராணுவ 'அம்புலன்ஸ்' வாகனமும் வெளியேறி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்ற மேடையை நோக்கி வந்து கொண்டிருந்தன. அம்புலன்ஸ் வாகனத்தை கண்ட மக்களுக்கு இந்தியப் படையினர் திருச்செல்வத்தை வலுக்கட்டாயமாக அங்கிருந்து கொண்டு செல்லப் போகின்றனர் என்பது தெளிவாகப் புரிந்துவிட்டது. அதனால் பெரும் சத்தம் எழுப்பியபடி மக்கள் திருச்செல்வத்தை படையினர் நெருங்கமுடியாதவாறு மேடையை சுற்றி வளைத்து நின்றுகொண்டனர். மேடைக்கு அருகில் வந்து வாகனங்கள் நின்றுகொண்டன. அம்புலன்சின் கதவு திறக்கப்பட்டது. அதில் இருந்து இறங்கினார், விடுதலைப் புலிகளின் அப்போதைய அரசியல் பேச்சாளர் யோகரட்ணம் யோகி அவர்கள்.

(வரலாறு விரியும்)

என் அன்பார்ந்த மக்களே...!

திலீபன் அண்ணாவின் வீரமரணம் எனக்கு ஒன்றை உணர்த்தியது. எனது சாவும் உறுதியானது. இந்திய வல்லாதிக்கம் என்னையும் சாகடிக்கலாம். ஆனால் உங்களுக்கு என் இதயத்தின் வேண்டுகோள் ஒன்று. நீங்கள் தலைவர் பிரபாகரனை நம்புங்கள். எமது இயக்கத்தை நம்புங்கள். அவர்கள் மட்டும்தான் உங்களுக்காக தங்கள் உயிரையும் தரத் தயாராக இருக்கின்றார்கள்.

ஒரு முன்னாள் போராளியின் நினைவுப் பதிவில் இருந்து...

– விதானையார் –

Able Accident Benefits

Tel: 416 293 2111 Fax: 416 293 4996

Insurance & Injury Claim Specialist
Traffic Ticket Specialist

காப்புறுதி மற்றும் காயப்பட்டோரின் நஷ்டஈட்டுக் கோரிக்கை நிபுணர்
சாரதிகளின் குற்றப்பத்திரிகை விடயத்தில் நிபுணர்

Wijay Senathirajah (Gobu)
Member of Law Society of Upper Canada
Accident & Injury Claim Specialist
Cell: 416 885 2365

4810 Sheppard Ave. E Suite 207
Scarborough, Ontario M1S 4N6
Tel: 416 293 2111 Fax: 416 293 4996

S.Kumar
Accident & injury Claim Manager
Cell: 416 732 9020

4810 ஷெப்பர்ட் அவெனியு கிழக்கு
201, ஸ்காபரோ,
ஒன்ராறியோ M1S 4N6
தொலைபேசி: 416 293 2111
தொலைநகல்: 416 293 4996



Sunnyvale Supermarket

மிக மலிவான விலையில் அனைத்துப்பொருட்களையும் கொள்வனவு செய்ய!



உடன் மரக்கறி, பழம், மீன், இறைச்சி வகைகள்
மற்றும் பலசரக்குகளுக்கு
நாடவேண்டிய இடம்

FRESH VEGETABLES, FRUITS, FISH, MEAT
& GROCERIES
SRILANKAN - INDIAN - CANADIAN - CARIBBEAN

905-789-8774

DVD MOVIES
RENTAL & SALES

50 SUNNYVALE GATE, UNIT 5 BRAMPTON AIRPORT &BOVAIRD



'வெள்ளம் வரும் முன்னே அணைகட்ட வேண்டும்' என்பது ஒரு முதுமொழி. அதேபோன்றுதான் நோய் வந்ததன் பின்னர் அதற்குத் தீர்வு தேடுவதை விட, நோய் வருவதற்கு முன்பே அதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதே சரியான மருத்துவமாக இருக்கமுடியும். அந்த வகையில் பல்வேறு ஆய்வுகளிலும், அனுபவங்களிலும் கண்டறியப்பட்ட சில மருத்துவ ரீதியான உண்மைகளை இந்தப் பகுதியூடாகத் தொடர்ந்து பார்ப்போம். இவற்றைப் பின்பற்றவேண்டுமா இல்லையா என்பதை உங்கள் உங்கள் மருத்துவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். இவை சில கண்டறியப்பட்ட ஆலோசனைகள் மட்டுமே.

வெப்பக் கடத்தி கண்ணாடி மூலம் இரத்தத்தில் சீனி அளவை அறியலாம்!

இரத்தத்தில் உள்ள சீனியின் அளவை வெப்பக்கடத்தி கண்ணாடி (conduct lens) மூலமாக அறிந்து கொள்ளலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் எளிதாக கண்டுபிடிப்பது குறித்து அமெரிக்காவின் வாஷிங்டன் பல்கலைக்கழகம் மற்றும் மைக்ரோ சொஃப்ற் நிறுவன ஆய்வு பிரிவு இணைந்து ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டது. இந்த ஆராய்ச்சியில் தெரியவந்த முடிவுகள் குறித்து விஞ்ஞானிகள் தெரிவித்ததாவது, கண்ணீரில் உள்ள குளுக்கோஸ் என்சைம்களை அளவிடுவதன் மூலமாக சீனியின் அளவை தெரிந்து கொள்ளலாம். இதற்காகத் தனியாக இலத்திரனியல் பொருத்தப்பட்ட வெப்பக்கடத்தி கண்ணாடியை உருவாக்கும் பணியில் ஈடுட்டனர். அந்த முயற்சிக்கு வெற்றியும் கிடைத்துள்ளது. இதன் மூலமாகவே சீனியின் அளவை அறிந்து கொள்ளலாம். இம்முறை விரைவில் உலகிற்கு அறிமுகப்படுத்தப்படும் என்றும் கூறினர்.



சின்னச் சீரகம் பெரிய செய்திகள்

- திராட்சைப் பழச்சாறுடன், சிறிது சீரகத்தைப் பொடித்திட்டு, பருகினால், ஆரம்பநிலை இரத்த அழுத்த நோய் குணமாகும். மத்தியதர இரத்த அழுத்த நோய் இருப்பவர்களுக்கு, மேலும் இரத்த அழுத்தம் அதிகரிக்காது தடுக்கும்.
- சிறிது சீரகம், நல்லமிளகு எண்ணெயிலிட்டுக் காய்ச்சி, அந்த எண்ணெய்த் தலையில் தேய்த்துக் குளித்தால், கண் எரிச்சல், கண்ணிலிருந்து நீர் வடிதல் நீங்கும்.
- அகத்திக்கீரையுடன், சீரகம், சின்னவெங்காயம் சேர்த்து கஷாயம் செய்து அத்துடன் கருப்பட்டியைக் கலந்து சாப்பிட்டால், மன அழுத்தம் மாறும். ஆரம்ப நிலை மனநோய் குணமாகும்.
- சீரகம், சுக்கு, மிளகு, தனியா, சித்தரத்தை இவ்வைந்தையும் சேர்த்துத் தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் இரண்டு கரண்டி வீதம், தினம் இரண்டுவேளையாக சாப்பிட்டால், உடல் அசதி நீங்கி, புத்துணர்ச்சி ஏற்படும்.



- சீரகத்தை லேசாக வறுத்து, அத்துடன் கருப்பட்டி சேர்த்துச் சாப்பிட்டு வர, நரம்புகள் வலுப்பெறும். நரம்புத் தளர்ச்சி குணமாகும். சிறிது சீரகத்துடன், இரண்டு வெற்றிலை, நான்கு நல்ல மிளகு சேர்த்து மென்று தின்று, ஒரு டம்ளர் குளிர்ந்த நீர் பருகினால், வயிற்றுப் பொருமல் வற்றி, நலம் பயக்கும்.
- சீரகத்துடன், மூன்று பற்கள் பூண்டு வைத்து அரைத்து, எலுமிச்சை சாறில் கலந்து குடித்தால், குடல் கோளாறுகள் குணமாகும்.
- ஓமத்துடன் சிறிது சீரகம் இட்டு கஷாயம் செய்து, சாப்பிட்டால், அதிக பேதி போக்கு நிற்கும்.
- பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப் படுதல் நோய்க்கு, சிறிது சீரகத்துடன் சின்ன வெங்காயம் வைத்து அரைத்து, பசும்பாலில் கலந்து குடித்து வர, நல்ல பலன் கிடக்கும்.
- சிறிது சீரகத்துடன், கீழாநெல்லி வைத்து அரைத்து, எலுமிச்சை சாறில் சேர்த்துப் பருகி வர, கல்லீரல் கோளாறு குணமாகும்.

ரஷ்ய அணு ஆயுத நீர்மூழ்கி இந்தியாவிடம் ஒப்படைப்பு

ரஷ்யாவின் நவீன அணு ஆயுத நீர்மூழ்கி கப்பல், கடந்த 23ம் திகதி உத்தியோகபூர்வமாக இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அணு ஆயுதங்கள் மூலம் தாக்கும் வசதி கொண்ட ரஷ்யாவின் அதி நவீன நெர்பா நீர்மூழ்கி கப்பல், 10 ஆண்டு கால குத்தகை அடிப்படையில் இந்தியாவுக்கு வழங்கப்படுகிறது. இந்தியாவின் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் அணு ஆயுதங்களை தாங்கிச் செல்லும் நீர்மூழ்கிக் கப்பலுக்கான ஒப்பந்தம் பிரதமர் மன்மோகன்சிங் சமீபத்தில் ரஷ்யாவில் சுற்றுப்பயணம் செய்த போது கையெழுத்தானது. அதன்படி, இந்த கப்பலை முறைப்படி இந்திய கடற்படையிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி, ரஷ்யாவின் கிழக்குப் பகுதி துறைமுகமான பிரிமோரியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

ரஷ்யாவுக்கான இந்திய தூதர் அஜய் மல்கோத்ரா, ரஷ்யாவின் ஐக்கிய கப்பல் கட்டும் கழக தலைவர் ரோமன் டிரோத்செங்கோ மற்றும் கப்பல் படை அதிகாரிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

8 ஆயிரத்து 140 தொன் முதல் 12 ஆயிரத்து 770 தொன் நிறையுள்ள ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட இந்த கப்பல், அதிக பட்சம் மணிக்கு 30 கடல் மைல் தூரம் செல்லக்கூடியதாகும். இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டபின் இந்த கப்பலின் பெயர், 'ஐ.என்.எஸ்.சக்ரா' என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.

10 ஆண்டுகளுக்கான இந்த கப்பலின் குத்தகை கட்டணம் 4500 கோடி இந்திய ரூபாவாகும் (90 கோடி அமெரிக்க டொலர்). இந்த அணு ஆயுத கப்பல் இந்திய கப்பல் படைக்கு வந்தபின், இதுபோன்ற ரக நீர்மூழ்கி கப்பலை வைத்திருக்கும் நாடுகளின் பட்டியலில், அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரித்தானியா, பிரான்சுக்கு அடுத்து 6வது நாடாக இந்தியா இணைந்துள்ளது. ஏற்கனவே 1980களின் இறுதியில், ரஷ்யாவிடம் இருந்து சார்லி ரக அணுசக்தி நீர்மூழ்கி கப்பலை இந்தியா குத்தகைக்கு எடுத்து இயக்கி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

2008ம் ஆண்டு இந்த நீர்மூழ்கியில் தீப்பிடித்ததில் 20 ரஷ்யக் கடற்படையினர் உயிரிழந்தனர். கடற்படை ஒத்திகையின்போது இந்த விபத்து ஏற்பட்டது. தீ விபத்து ஏற்பட்டவுடன் விசவாயு வெளியேறியதில் கடற்படையினர் இறந்தனர். இதனால், இப்போது வாயு தடுப்பு கருவிகள் நேர்பா அணுவிசை நீர்மூழ்கியில் பொருத்தப்பட்டு இந்தியாவுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, இந்தியாவின் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் உலகின் மிகப்பெரிய சோலார் தொலை நோக்கி அமையவுள்ளது. பூமியில் நிலவும் பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் ஆகியவற்றை ஆராய, மிகப் பெரிய சோலார் தொலை நோக்கியை ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் அமைக்க மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்ப மையம் முடிவு செய்திருந்தது. இதனை அமைக்க, அம்மாநிலத்தின் லடாக் மாவட்டத்தின் அடர்ந்த பனிப்பிரதேசமான பாங்காங்ஷோ ஏரிப்பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு, லடாக்கில் சோலார் தொலை நோக்கியை அமைப்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இந்த சோலார் தொலைநோக்கியினால் 134 கி.மீ. தொலைவிலுள்ள இலக்கினை 5 கி.மீ அருகில் பார்த்தது போன்ற உணர்வு ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

அப்துல் கலாமின் கொடும்பாவி எரிப்பு

அண்மையில் இலங்கை சென்று திரும்பிய முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் உருவ பொம்மையை எரித்த கோவை சட்டக் கல்லூரி மாணவர்கள் 12 பேரை காவல் துறையினர் கைது செய்துள்ளனர். கூடங்குளம் அணுமின் நிலையம் குறித்து மக்கள் மனதில் உள்ள அச்சங்களைப் போக்க முன்னாள் குடியரசுத் தலைவர் டொக்டர் அப்துல் கலாம் முயற்சி செய்து வருகிறார். அணுமின் நிலையத்தை பார்வையிட்ட அவர் அது மிகவும் பாதுகாப்பானது, அதனால் யாரும் கவலைப் பட வேண்டாம் என்று தெரிவித்திருந்தார். மக்கள் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் பாதுகாப்பு குறித்து பயப்பட வேண்டாம் என்றும், இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தின் நிதி நிலைமை மேம்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

அவரது இந்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கோவை சட்டக் கல்லூரி மாணவர்கள் 12 பேர் அப்துல் கலாமின் உருவ பொம்மையை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். மாவட்ட ஆளுநர் அலுவலகத்திற்கு அவர்கள் வந்தபோது ஒரு மாணவன் கலாமின் உருவ பொம்மைக்கு தீ வைத்தார். அதை உடனே காவல் துறையினர் அணைத்துவிட்டு அந்த 12 மாணவர்களையும் கைது செய்தனர். முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் இதுவரை எந்த சர்ச்சையிலும் சிக்காமல் இருந்து வந்தார். அவருக்குச் போகும் இடமெல்லாம் சிறப்பாகவே இருந்தது. ஆனால், தற்போது அவரின் முகம்மாறத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் அவரது கொடும்பாவி தமிழகத்தில் முதல்முறையாக, ஏன் இந்தியாவிலேயே முதல் முறையாக எரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

கோவா தேர்தலில் 'கொலவெறி'ப் பாடல்

நடிகர் தனுஷ் பாடிய 'கொலவெறி டி' பாடல் இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கோவா சட்டசபை தேர்தல் பிரசாரத்திலும் 'கொலவெறி' பாடல் புகுந்து கலக்கிக்கொண்டு இருக்கிறது. அதாவது, சமீபத்தில் பா.ஜ.கவில் சேர்ந்த பிரபல கவிஞர் விஷ்ணு வாக், 'கொலவெறி' பாடலின் ராகத்தில் 'கம்லாவாரி டி' என்ற பாடலை எழுதி இருக்கிறார். பா.ஜ.க.வின் சின்னமான தாமரையை குறிக்கும் வகையில் அவர் எழுதியுள்ள இந்த பாடல் அக்கட்சியின் தேர்தல் பிரசார கூட்டங்களில் ஒலிபரப்பப்படுகிறது. கிராமியப் பாடலின் சாயலில் எழுதப்பட்டுள்ள 'கம்லாவாரி டி' பாடலுக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு இருப்பதாக கவிஞர் விஷ்ணு வாக் தெரிவித்தார்.



இனியவைகூறல் குறள்-93

முகத்தான் அமர்ந்தின்து நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.

முகம் மலர நோக்கி, அகம் மலர இனிய சொற்களைக் கூறுவதே அறவழியில் அமைந்த பண்பாகும்.

ஆசைக்கு அளவில்லை

கபிலன், படிப்பறிவு இல்லாதவன். எப்போதும் ஊர் சுற்றுவதிலேயே காலத்தைக் கழித்தான். ஒரு நாள் அவனது தந்தை திடீரென இறந்து விட்டார். அந்த துக்கத்தில் அவனது தாயும் சில நாட்களில் இறந்து விட்டார். பெற்றோரை இழந்த கபிலன், மனம் போனபடி ஊர் ஊராய்ச் சுற்றி ஒரு பெரிய நகரத்தை அடைந்தான். அங்கு வழிப்போக்கர்களுக்கு உணவு வழங்குவதற்காக சத்திரமொன்று இருந்தது. கபிலன் அந்த சத்திரத்தில் தங்கினான்.

ஒரு பெண், சத்திரத்தில் வந்து தங்குபவர்களுக்கு உணவு சமைத்துப் போடுவாள். கபிலனின் அழகு அவளைக் கவர்ந்தது. கபிலனும் அவளை விரும்பினான். இருவரும் ஒரு கோவிலில் திருமணம் செய்து கொண்டனர். அந்தப் பெண்ணின் வருமானத்தில் தான் குடும்பம் நடத்தினர். கபிலன் வேலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான். கணவனை வேலைக்குச் செல்லும்படி நச்சரித்தாள் மனைவி. 'செவிடன் காதில் சங்கு ஊதியது போல' சட்டை செய்யாமல் இருந்தான் கபிலன்.

இந்நிலையில் அந்த ஊர் கோவிலின் உற்சவ விழா வந்தது. திருவிழாவின்போது புதிய ஆடை அணிய விரும்பினாள் கபிலனின் மனைவி. அந்த நாட்டு மன்னர், தினமும் காலையில் யார் தன்னை முதலில் காண்கிறார்களோ, அவர்களுக்கு ஐந்து பொற்காசுகள் தந்து கொண்டிருந்தார். இதை அறிந்த அவள், அதிகாலையில் அரசரைக் கண்டு, அந்தப் பொற்காசுகளையாவது வாங்கி வரும்படிக் கூறினாள்.

மனைவியின் தொல்லை தாங்க முடியாத கபிலன், நடு இரவிலேயே அரண்மனைக்குச் சென்று விட்டான். அங்கிருந்த காவலர்கள் அவனைத் திருடன் என எண்ணி நன்றாக அடித்து, ஒரு மரத்தில் கட்டி வைத்தனர். விடிந்ததும் அவனை இழுத்துக் கொண்டு போய் மன்னர் முன் நிறுத்தினர். கபிலனின் அப்பாவித்தனமான முகத்தைப் பார்த்த மன்னன், இவன் திருடனாய் இருக்க முடியாது என்று நினைத்தான். கபிலனிடம் விபரம் கேட்க, அவன் நடந்தவற்றைக் கூறினான். அவன் மீது இரக்கம் கொண்ட மன்னன், "கபிலா, உனக்கு என்ன வேண்டுமோ கேள்... தருகிறேன்" என்றான்.

'என்ன கேட்கலாம்?' என்று மனதில் யோசனை செய்தபடியே தன்னைக் கட்டியிருந்த மரத்தின் அடியில் அமர்ந்தான், கபிலன். ஐந்து பொற்காசுகள் வேண்டாம், பத்து காசுகள் கேட்கலாம். இல்லை... இல்லை... இருபது காசுகள் கேட்கலாம். வேண்டாம், நூறு கேட்கலாம். வேண்டாம்... ஆயிரம், லட்சம், ம்ம்ம்... கோடி பொற்காசுகள் கேட்கலாம். அப்போதும் அவன் ஆசை அடங்கவில்லை. கோடி பொற்காசுகள் வேண்டாம். மன்னர் தான் என்ன வேண்டுமானாலும் கேட்கச் சொன்னாரே... இந்த நாட்டைக் கேட்கலாம். அதுதான் சரி, நாட்டைத்தான் கேட்க வேண்டும்' என்று உறுதி செய்து கொண்டான்.

அப்போது அவன் அமர்ந்திருந்த மரத்திலிருந்து ஒரு பழம், அவன் தலைமீது விழுந்தது. அது ஒரு அத்திப்பழம். அதை எடுத்து பிய்த்துப் பார்த்தான். உள்ளே சொத்தையாய் இருந்தது. அழகான சிவந்த நிறமுடைய பழம் இப்படி இருக்கிறதே... என்று நினைத்த அவன் மனதில், நாட்டைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் போய் விட்டது. 'இந்த உலகையே கொடுத்தாலும், அதற்கு மேலும் கேட்கத் தான் செய்யும்' என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது.

'ஆசைக்கு அளவு கிடையாது' என்ற உண்மையை அறிந்த கபிலன், மன்னனிடம் சென்றான்.

'அரசே, மனிதர்களின் ஆசைக்கு எல்லையே இல்லை என்பதை அறிந்து கொண்டேன். தாங்கள் எனக்கு மாட மாளிகைகள், பொற்காசுகள், ஏன் இந்த நாட்டையே தந்தாலும் எனது ஆசை தீர்ந்து விடாது. எனவே, இந்த ஆசை எனும் தீயை அணைக்க முடிவு செய்து விட்டேன். இனி நான் உழைத்து, அதன் மூலம் கிடைக்கும் பொருளைக் கொண்டு வாழவே ஆசைப்படுகிறேன்`` என்று கூறி விட்டு, தன் வீட்டை நோக்கிச் சென்றான்.

– பத்மாவதி

தெனாலி ராமன் கதைகள்

பெரிய முட்டாள்

ஒரு முறை விஜயநகர பேரரசர் தன் அமைச்சரவையில் கூடி இருக்கும் போது, அரேபிய வியாபாரி வந்தார், தன்னிடம் விலை உயர்ந்த குதிரை இருப்பதாகவும், அதை அரசருக்கு பரிசாக கொடுக்க இருப்பதாகவும் சொன்னார். அரசரும் அதை ஏற்றுக் கொண்டு, குதிரையை பார்வையிட்டு, அதன் மீது ஏறி சவாரி செய்தார், மிகவும் பிடித்து விட்டது, அத்தனை கம்பீரமான வெள்ளைக்குதிரை.

அரசரும் வியாபாரிக்கு தன் பரிசுகளை கொடுத்து, வியாபாரம் செய்ய அனுமதி கொடுத்தார். அமைச்சர் ஒருவர் அரசரிடம் 'அரசே! குதிரை நன்றாக இருக்கிறது, இதன் விலை 1000 தங்க நாணயங்கள் தான், இது மாதிரி 100 குதிரைகள் வாங்க, நாம் இப்போவே பணத்தை கொடுத்தால், அடுத்த முறை கொண்டு வந்துவிடுவா' என்று கூற, அரசரும் உங்கள் விருப்பம் போல் செய்யுங்க என்று சொல்லி விட்டா.

சில நாட்களுக்குப் பின்பு அரசர் தெனாலி ராமனை அழைத்து, நம் நாட்டிலேயே பெரிய முட்டாள் யார் என்று கண்டுபிடித்து, நாளைக்குள் சொல் என்றார்.

அடுத்த நாள் தெனாலி ராமன் அரசனிடம் போய் தன்னுடைய கண்டுபிடிப்பை சொல்ல, அரசனுக்கு சரியான கோபம். எப்படி நீ அமைச்சரை பெரிய முட்டாள் என்று சொல்கிறாய் என்று கேட்டார்.

தெனாலிராமன்: அரசே! அரேபிய வியாபாரிக்கு குதிரைகள் வாங்கும் முன்பே 1 இலட்சம் பொன் கொடுத்தாரே அமைச்சர், அந்த வியாபாரி குதிரையோடு வருவானா, கண்டிப்பாக வர மாட்டான்' என்றார்.

அரசர் : ஒருவேளை அந்த வியாபாரி குதிரைகளை கொண்டு வந்து கொடுத்தால்..

தெனாலி: அரசே! ஒரு சின்ன மாற்றம் தான் செய்ய வேண்டும், மிகப் பெரிய முட்டாள் அந்த வியாபாரி என்று மாற்ற வேண்டியது தான் என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

இளையோர்களே இது உங்களுக்கான உலகம். இங்கு உங்கள் ஆக்கங்களை, ஆரோக்கியமான விடயங்களை மற்றவர்களுடன் எழுதிப் பகிர்ந்துகொள்ளுங்கள். *இது உங்களுக்கான களம்...*

புதிர்க் கேள்வி

அனிதாவும், கார்த்தியும் வகுப்புத் தோழர்கள். அவர்களிடம் குறிப்பிட்டளவு பென்சில்கள் இருக்கின்றன. அனிதா உன்னிடமுள்ள பென்சிலில் ஒன்றை மட்டும் என்னிடம் தந்தால் இருவரிடமும் ஒரே எண்ணிக்கையிலான பென்சில்கள் இருக்கும் என்றான் கார்த்தி. உடனே அனிதா, உன் பென்சில்களில் ஒன்றை மட்டும் என்னிடம் தந்துவிட்டால், நீ வைத்திருப்பதைப் போல் இரண்டு மடங்கு பென்சில்கள் என்னிடம் இருக்கும் என்றாள்.

அப்படியானால் அவர்கள் இருவரிடமும் எத்தனை எத்தனை பென்சில்கள் இருக்கின்றன?

சென்ற புதிர் கேள்விக்கான விடை

128 மாங்காய்கள்.

தக்காளியின் கதை

இன்று தக்காளி ஒரு பிரசித்தமான காய்கறி. தக்காளி இல்லாமல் பெரும்பாலான நாடுகளில் உணவுகள் இல்லை. ஆனால் மக்கள் முதன்முதலாகத் தக்காளியைப் பார்த்தபோது அவர்கள் மனதில் இரண்டு கேள்விகள் தோன்றின: இது நஞ்சானதா? சாப்பிடக்கூடியதா? இது பழமா அல்லது காய்கறியா? ஸ்பானிய சாகசப் பயணியான ஹெர்னாண்டோ கோர்ட்டஸ், தென் அமெரிக்காவில் இருந்து ஐரோப்பாவுக்குத் தக்காளி விதைகளைக் கொண்டு வந்தார். ஆனால் இது ஆரம்ப காலத்தில் ஒர் அலங்காரத் தாவரமாகத்தான் வளர்க்கப்பட்டது. தக்காளி ஒரு நச்சுவகைத் தாவரக் குடும்பத்தைச் சேர்ந்தது என்பதால் பலரும் இதை விலக்கினர். தக்காளியானது 'குடல் வால்' பிரச்சினையையும், புற்றுநோயையும் கூட ஏற்படுத்தக்கூடும் என்று 18ம் நூற்றாண்டு வரை மருத்துவர்கள் மக்களை எச்சரித்து வந்தனர்.



அதன்பின், தக்காளியின் இலைகளும், தண்டுகளும்தான் நச்சுத்தன்மை வாய்ந்தவை, ஆனால் தக்காளிப் பழம் ருசியானது என்ற முடிவுக்கு வந்தனர். அதையடுத்து தக்காளி விறுவிறுவென்று புகழ்பெறத் தொடங்கியது. பிரெஞ்சுக்காரர்கள் இது நேசத்தைத் தூண்டுவதாகக் கருதி 'பொம் டமூர்' என்று பெயர் சூட்டினர். அதாவது 'அன்பு அப்பிள்' என்று அர்த்தம்.

தக்காளியை முதன்முதலில் பெருமளவில் விளைவித்தவர்கள் இத்தாலியர்களும், ஸ்பானியர்களும் ஆவர். அவர்கள் இதை 'பொம்மி டோரோ' (தங்க அப்பிள்) என்று அழைத்தனர். காரணம் அவர்கள் விளைவித்த தக்காளி வகை மஞ்சள் நிறமாக இருந்தது. தற்போது, உலக அளவில் அதிகமாக விளைவிக்கப்படும் காய்கறிகளில் ஆறாவது இடத்தில் தக்காளி உள்ளது. இன்று உலகளவில் பனிரெண்டரைக் கோடி தொன் தக்காளி உற்பத்தி செய்யப்படுகிறது. தக்காளி விளைவிப்பதில் சீனா உலகத்திலேயே முதலிடத்தில் உள்ளது.

இதற்கு விளக்கம் வேண்டாமே...!

கடன் தொல்லையினால் வருந்துகிறீர்களா ?
GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY
வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை
GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy

We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினூடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

ARE YOU CONCERNED ABOUT YOUR DEBTS ? ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

இத்துறையில் பல வருட அனுபவமிக்க ARU KRISH ஐ இன்றே அழையுங்கள்

இலவச ஆலோசனைகளுக்கு

PEACE OF MIND
CREDIT REVOLVING CENTRE

(416) 556-9287

Credit Revolving Center
(GTA Square)
5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

tamil one
உங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும்
கலைஞர்
வணக்கம் FM
பரீட்சார்த்த ஒலிபரப்பு இன்னும் சில தினங்களில்...
தமிழர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாய்
105.9 FM
விரைவில்
2370 Midland Avenue, Suite B17
Scarborough, Ontario M1S 5C6
Tel : 416 299 0118 Fax : 416 915 5481
www.tamilone.tv

Why Me?
Friendly | Confidential | Professional Service
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.
BROKERAGE,** INDEPENDENTLY OWNED AND OPERATED
$178,000
Finch/Birchmoun
$ 349,900
Williams Pkwy/James
$369,900
Sandalwood/Bramalea
$369,900
Ebenezer/Hway 7
$389,900
Hwy 50 & Cottrelle
$419,900
Mclaughlin & Earlsbridge
$439,000
Bur Oak/Ninth Line
$469,900
Bellamy/Lawrence
$649,000
Markham/14th Ave
$569,000
Bellamy/Eglinton
$599,000
Markham Rd & 16th
$624,500
Williamson Rd / Desjardin Dr
Thana Suseendra
Sales Representative
Bus: 416.321.6969 | Cell: 416.893.4376
1711, McCowan Rd, Suite 206, Scarborough
Top 5% sales representative within homelife | Canada 2007, 2008, 2009, 2010, 2011

தாயகத்தில் இருந்து இளங்கீரன்

இலங்கையில் வடக்கு, கிழக்கு வாழ் பாரம்பரியமான தமிழ் இனத்தின் அரசியல் அபிலாசைகள் இன்று பிராந்திய நாடுகளின் வல்லாதிக்கப் போட்டிகளிற்குள் சிக்குண்டு சின்னாபின்னமாகிப் போயிருக்கின்றது. இந்த நிலையில் தமிழர்கள் தொடர்ந்தும் இந்தப் பிராந்தியத்திலுள்ள சில வல்லரசுகளின் வாய்களையே பார்த்துக் கொண்டிருக்கும் நிலையில் இருந்து கொண்டிருக்கின்றோம்.

எனவே எமது அரசியல் அபிலாசைகளும், நாங்கள் செய்து கொண்ட தியாகங்களுக்கான விலையும் எவ்வாறு கிடைக்கப்போகின்றது என்ற மிகப்பெரும் கேள்வி இன்று எழுந்திருக்கின்றது. இலங்கையில் அந்நியர் ஆதிக்கம் முடிந்துபோன பின்னர், சிங்களவர்கள் நயவஞ்சகமாக தமிழர்களின் சுயத்தைத் திருடிக் கொண்ட பின்னர், தமிழர்கள் போராட முனைப்புக் கொண்டபோதெல்லாம் தமிழர்களின் பின்னாலிருந்து அந்த முனைப்புக்கு உந்துதலாக இருந்தவர்களில் இந்தியாவிற்கே முதலிடம். இதனை தமிழர்கள் யாரும் மறுப்பதற்கும், மறப்பதற்கும் இல்லை. இதே இந்தியாவே தமிழர்கள் சிங்களவர்களுடன் சமபலம் கொண்டெழுந்தபோது எமது பலத்தை அழிப்பதற்கான

அங்கீகாரத்தை சிறீலங்கா அரசாங்கத்திற்கு வழங்கியது. இந்தத் துரோகத்தையும் நாம் மறக்கமுடியாது.

எனவே எம்மிடமிருந்து எங்களுடைய சுயத்தை திருடிக் கொண்ட சிறீலங்கா அரசாங்கத்திற்கும், பெற்ற பிள்ளையை கொன்ற இந்தியாவிற்கும் எந்த வித்தியாசமும் கிடையாது. ஆனால் இந்தியா ஒரு விடயத்தை மட்டும் இன்னமும் புரிந்து கொண்டதாகவில்லை, சிறீலங்கா அரசாங்கம் பேச்சளவில் நல்லபிள்ளையே. ஆனால் உள்ளார்ந்தமாக சிறீலங்கா அரசாங்கம் ஒரு பசுத்தோல் போர்?த்திய புலி.

இதைக் கடந்தகாலம் இந்தியாவிற்கு உணர்த்தியிருக்கின்றது. எதிர்காலமும் நிச்சயமாக உணர்த்தும்.

இந்த உண்மையை அறிய இந்தியா விரும்பினால் முதலில் இலங்கையை ஒரு ஜனநாயக நாடு என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதைக் கைவிடவேண்டும். உண்மையில் இலங்கை ஒரு ஜனநாயக நாடு கிடையாது. அதுவொரு பௌத்த நாடு. இதுதான் உண்மை. இதனை இந்தியா புரிந்து கொண்டாகவேண்டும். இதே இலங்கைதான் முன்னர் இந்தியாவிற்கும் – சீனாவிற்கும் இடையில் நடைபெற்ற போர்களின்போது எவ்வாறு நடந்து கொண்டது என்பதை இந்தியா வரலாற்றுப் பக்கங்களை புரட்டிப்பார்த்து அறிந்து கொள்ளவேண்டும்.

அன்று இலங்கையிடமிருந்த பௌத்த அடிப்படைவாதச் சிந்தனையில் இன்றளவும் எந்தவிதமான மாற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதை இந்தியா உணர்ந்து கொண்டால் சரி. இலங்கையின் வடபுலத்தில் யுத்தம் முடிந்துபோயிருக்கின்றது. இந்த நிலையில் சிறீலங்கா அரசாங்கம் எவ்வளவு நிலத்தை சீன அரசாங்கத்திற்கு கொடுத்திருக்கின்றது என்பதை இந்தியா தனது கழுகுக் கண்களால் பார்க்காமலில்லை. அமெரிக்காவும் இந்த நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டேதானிருக்கின்றது.

இதன் பின்னாலும் இந்திய அரசாங்கம் அமைதியாக பார்த்துக் கொண்டிருப்பதன் நோக்கம், அமைதியாகவும் நிதானமாகவும் பேசி இந்தியாவின் பாதுகாப்பிற்கு சிறீலங்கா அரசாங்கம் உறுதுணையாக இருக்கும் நிலையை உருவாக்கவேண்டும் என்பதே. இதனை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அண்மையில் வெளிப்படையாகவே தெரிவித்திருக்கின்றார். ஆனால் இதுவொரு கனவு மட்டும்தான். எந்தக்காலத்திலும் இது நனவாகப்போவதில்லை, இந்த உண்மை இந்தியாவிற்கு ஒருநாள் புரியும். ஆனால் அப்போது பல விடயங்கள் இந்தியாவின் கையை மீறிப்போயிருக்கும்.

உதாரணத்திற்கு ஒரு சிறிய விடயத்தை எடுத்துக் காட்டலாம். யுத்தம் இறுதித் தருணத்தை எட்டிக் கொண்டிருந்த 2009ம் ஆண்டின் நடுப்பகுதியில், இலங்கையின் தலைப் பகுதியில் அதாவது யாழ்ப்பாணத்தின் கரையோரங்களில் காங்கேசன்துறை தொடக்கம். மாதகல் பகுதி உள்ளடங்கலாக கரையோரப் பகுதியை முழுமையாக உள்ளடக்கி மாபெரும் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை உருவாக்க சிறீலங்கா அரசாங்கம், மலேசியன் நிறுவனம் ஒன்றுடன் உடன்பாடொன்றை செய்துள்ளது. இதன் மூலம் குடநாட்டிலுள்ள மின் தேவையை பூர்த்தி செய்ய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இதன் நிர்வாகப் பொறுப்புகளை மின்சார சபை பார்த்துக் கொள்ளும் எனவும், அமைப்புப் பணிகள் மற்றும் பணம் ஆகியன இலவசமான குறித்த நிறுவனமே செய்து கொடுக்கவுள்ளதாம்.

குறித்த நிறுவனத்திற்கு இலங்கையில் பல இலட்சம் அமெரிக்க டொலர் செலவில் இலங்கையில் யாழ்ப்பாணத்திற்கு மின்சாரம் பெற்றுக் கொடுக்கவேண்டிய தேவை மிகவும் குறைவு. இதற்கிடையில் மின்சார சபை அண்மையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் 2012ம் ஆண்டு யாழ்.குடநாட்டிற்கு லக்ஷபானா மின்சாரம் வந்துவிடும். இது குடாநாட்டின் மின் தேவைக்கு மிதமிஞ்சியதாக இருக்கும் எனவும் தெரிவித்திருக்கின்றது.

அப்படியாயின் குடநாட்டின் கரையோரத்தைப் பிடித்து உருவாக்கப்படும் காற்றாலை மூலம் பெறப்போகும் மின்சாரம் எதற்காக என்ற கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை. பல அதிகாரிகளுக்கு இந்த விடயமே தெரியாது. ஆக காற்றாலை அமைத்துக் கொடுக்கும் மின் ஆலையின் பின்னால் இருப்பது சீனாவே. அங்கு அமைத்துக் கொடுக்கப்படவுள்ள மின்சாரம் ஒரு பகுதி காங்கேயசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்கும், பெரும் பகுதி மாதகலில் 150 ஏக்கர் பொதுமக்களின் நிலத்தை அபகரித்து உருவாக்கப்பட்டு வரும் பாரிய கடற்படை முகாமிற்கும் கொண்டு செல்லப்படவிருக்கின்றது.

இதேபோல் மண்டைதீவில் சுமார் 250 ஏக்கர் வரையான பொதுமக்களின் விவசாய நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு பாரிய கடற்படை முகாம் அமைக்கப்பட்டு வருகின்றது. மேலும் இந்தப் பகுதியில் அதியுச்ச வேகத்தில் புதிய கட்டடங்களும், சிறிய விமானங்களை தரையிறக்குவதற்கான விமான ஓடுபாதையொன்றும் அமைக்கப்படவுள்ளது. மேலும் இந்த முகாமிற்கு செல்லும் மண்டைதீவின் பிரதான பாதை 'காப்பற்'போடப்பட்டு, இருவழிப்பாதையாக அமைக்கப்படவுள்ளது.

அப்படியாயின், குடாநாட்டின் கரையோரத்தைப் பிடித்து உருவாக்கப்படும் காற்றாலை மூலம் பெறப்போகும் மின்சாரம் எதற்காக என்ற கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லை. பல அதிகாரிகளுக்கு இந்த விடயமே தெரியாது. ஆக காற்றாலை அமைத்துக் கொடுக்கும் மின் ஆலையின் பின்னால் இருப்பது சீனாவே...!

ஒழுங்காக தீவுப்பகுதிக்கான பாதையே புனரமைக்கப்படாத நிலையில் மண்டைதீவு பாதையின் புனரமைப்பிற்கு என்ற அவசியம்? எனவே இப்படிப் பல இன்று இரகசியமான முறையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இவை எல்லாமே சீன அரசாங்கத்தின் நலனுக்காகவே என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. இந்த நிலையில் தன்னுடைய பிராந்திய நலனுக்கு சிறீலங்கா அரசாங்கம் முளுதான ஆதரவாக இருக்கும் என இந்தியா நினைத்துக் கொண்டிருப்பது விந்தையானதொன்றாகவே இருக்கின்றது.

இதற்குமேல் இந்த நாட்டில் யுத்தம் முடிந்து 3 வருடங்களாகின்றது. ஆனால் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இந்தியாவின் எந்தக் கருத்தையும் சிறீலங்கா அரசாங்கம் சட்டை செய்து கொள்ளவில்லை. ஆனால் தன்னிடமுள்ள இனவாதம் கக்கும் ட்ரகன்களை கொண்டு தமது நாட்டிலுள்ள பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள முடியாத இந்தியா, இலங்கையில் தமிழர் விடயத்தில் அக்கறை காட்டுவதுபோல் நடிக்கின்றது. இலங்கையில் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் வகிபாகத்தை ஏளனப்படுத்திக் கொண்டதும் சீனாவின் வலுவான பக்கபலம் அதற்கு இருப்பதே.

இதற்குமேல் யுத்தம் முடிந்துபோன பின்னர் வடக்கு, கிழக்கில் அரச மரங்கள் நின்ற இடமெல்லாவற்றிலும் புத்தர் முளைத்து விட்டார். புத்த விகாரைகளும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மறுபுறத்தில் ஏனைய மதங்களின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே இலங்கையினை எப்போதும் பௌத்த அடிப்படைவாதச்சிந்தனையின் கீழ் வைத்திருக்கவே அரசாங்கம் நினைத்துக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் எப்போதும் இலங்கை ஒரு பௌத்த நாடுதான். இது ஜனநாயக நாடு கிடையாது. இதனை இந்தியா புரிந்து கொண்டாக வேண்டும்.

Satellite: Hotbird
Frequency: 12597
Polarisation: Vertical
Symbol Rate: 27500
தமிழமுதம் வானொலி
இது ஓர் உலக தமிழோசை
THAMIZHAMUTHAM RADIO - On iPhone
Available on

அணு உலை

சில கேள்விகள் சில பதில்கள்

சொ்னோபில் விபத்திற்குப் பின்னர் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அணுமின் உலை அமையாதபடி அந்தந்த மாநிலத்திலுள்ள அனைத்துக் கட்சியினருமாகச் சேர்ந்து எதிர்த்து தடுத்துவிட்டார்கள். ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் அணுமின் திட்டத்திற்கு ஆதரவுக் குரல் எழும் மர்மம் என்ன?

ஜப்பான் நாட்டில், புகுசிமாவில் நிகழ்ந்த அணு உலை விபத்திற்குப் பின்னா், அத்தகைய விபத்து கூடங்குளத்தில் ஏற்படாதபடி பாதுகாப்பு செய்யாதிருப்போமா என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் யோசிக்க வேண்டாமா – என்கிறார் மாபெரும் இந்தியாவின் தலைமையமைச்சா் மன்மோகன்சிங்.

அதாவது, புகுசிமா விபத்து நிகழும்வரை அத்தகைய விபத்திற்கு வாய்ப்பான நிலையில்தான் கூடங்குளமும் இருந்தது. அதன் பின்னா் அந்த விபத்து ஏற்படாத வகையில் பாதுகாப்பு செய்யப்பட்டுவிட்டது என்கிறார். எப்படி?

உக்ரைன் நாட்டு, செர்னோபிலில் ஏற்பட்ட அணு உலை விபத்து பூகம்பத்தால் நிகழ்ந்ததல்ல, சுனாமியால் ஏற்பட்டதல்ல. மனிதத் தவறுகளால் ஏற்பட்டதுதான். ஆனால், அந்த மனிதத் தவறுகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகப் பலமாகச் செய்யப்பட்டுவிட்டன என்கிறார்கள் கூடங்குளம் அணு சக்தி விஞ்ஞானிகள். எப்படி?

அனைத்து யூகங்களுக்கும் அப்பாற்பட்டு நிகழ்வதுதான் விபத்து. ஆனால், கூடங்குளம் அணுமின் உலை அமைப்பு, அதன் இயக்கம், அங்கு ஏற்படும் அணுக்கழிவுக்கான பாதுகாப்பு என அனைத்து நிலைகளிலும் நாங்கள் யூகிக்கும் விபத்துகள் மட்டுமே ஏற்படக்கூடும். எங்களின் யூகங்களுக்கு அப்பாலாக வேறு வகையான விபத்து என்பது ஏற்படாது எனக் கூறுகிறார்கள் நம் விஞ்ஞானிகள் – எப்படி?

சிந்தனைக் குறைவு, கவனக்குறைவு இரண்டும் மனிதனின் இயற்கைக் குணங்கள். அணுமின் உலையில் தொடர்புடைய விஞ்ஞானிகளும், அங்கு பணியாற்றும் மற்றவர்களும் மனித இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வீகப் பிறவிகளா? எப்படி?

சூரிய, சந்திர கிரகணங்கள் எந்தெந்தத் திகதிகளில் நிகழும் என்பதை இன்றைய அறிவியலுக்கு முன்பே நம் முன்னோர்கள் கணித்துரைத்திருக்கிறார்கள். ஆனால் பூமியின் உட்பகுதியில் எந்தெந்த திகதிகளில் நடுக்கமுண்டாகும் என்பது பற்றி நம் முன்னோர்களும் கூறவில்லை. இன்றைய அறிவியலாளரில் எவரேனும் எந்தெந்தத் திகதிகளில் உலகின் எந்தெந்தப் பகுதிகளில் நில நடுக்கம் ஏற்படும் என்பதைக் கால அட்டவணையிட்டுக் கூறத்தயாரா? முடியாது. காரணம் பூமியின் உட்பகுதி மாற்றங்கள், கோள்களின் இயக்கம்போல் ஓர் ஒழுங்கு முறைக்கு உட்பட்டவையல்ல. புகுசிமாவிலும், துருக்கியிலும் இன்ன திகதியில் நில நடுக்கம் உண்டாகும் என்பதை முன்கூட்டியே எச்சரிக்கமாட்டாதவர்கள் கூடங்குளத்தில் ஏற்படாது என்பதை மட்டும் சத்தியம் செய்து நம்பச் சொல்கிறார்கள். எப்படி?

இரண்டாம் தலைமுறை அலைக்கற்றை நம்மை அலைக்கழிக்கின்ற நிலையில், கூடங்குளத்தில் மூன்றாம் தலைமுறை தொழில்நுட்பம் பின்பற்றுகிறோம். எனவே, அஞ்சற்க என அபயமளிக்கிறார்கள். முதலாம் தலைமுறைத் தொழில்நுட்பக் குறைபாட்டால்தான் இரண்டாம் தலைமுறைத் தொழில் நுட்பமுண்டாயிற்று. அதுவும் குறைப்பட்டதால்தான் மூன்றாம் தலைமுறைத் தொழில்நுட்பம் உருவாயிற்று. மூன்றாம் தலைமுறைத் தொழில்நுட்பம் மட்டும் முந்நூறு தலைமுறைக்கும் போதுமானது என்பது எப்படி?

அணுகுண்டு வீச்சு, அணு உலை விபத்து இரண்டும் ஒன்றுதான். இரண்டின் வழியாகவும் வெளிப்படும் அணுக் கதிர்வீச்சால் மனிதர் மட்டுமல்ல. அனைத்து உயிரினங்களும், பஞ்சபூதங்களும் நஞ்சாதல் மெய்ப்பாடான உண்மையாகிறது. மின்சாரத் தேவைக்காகச் சாகவும் தயார் என மக்கள் கூறுகிறார்களா? அப்படியொரு வாக்கெடுப்பு நடத்த அரசு தயரா? ஒரு சாரார் சாகவும் தயார் எனக் கூறினாலும், அவர்களுக்காக மற்றவர்களும், ஏனைய உயிரினங்களும் சாகத் தயாராக வேண்டுமா? எப்படி?

கூடங்குளத்தில் பராமரிப்புப் பணிகளைச் செய்யவிடுங்கள். அவற்றில் தடங்கல் ஏற்பட்டால் அணுமின் உலை ஆபத்திற்கு உள்ளாகும் என எச்சரிக்கிறார்கள். அதாவது பராமரிப்புப் பணி சரிவர நடைபெறாவிட்டால் அணுமின் உலை ஆபத்தாகிவிடும் என்பதை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால், எதிர்காலத்தில் பராமரிப்புப் பணிகளில் எக்காரணங்கொண்டும் எந்தக் குறைபாடும் ஏற்படாதெனப் பரமண்டலத்தின் பெயரால் சத்தியம் செய்கிறார்கள். எப்படி?

ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் கல்லணையும், தஞ்சைப் பெரிய கோவிலும், நெல்லையப்பா் கோவிலும் இடிந்துவிழவில்லை என்கிறார்கள். முதலாவது தஞ்சைப் பெரிய கோவில் இடிந்து விழவில்லை என்பதால், கூடங்குளம் அணு உலைக் கூடமும் இடியாது என்பது எப்படி?

இரண்டாவது, கல்லணையும் தஞ்சைப் பெரிய கோவிலும் நிலநடுக்கத்திலும் இடியாது என எந்தக் கட்டடக்கலை வல்லுநரும் சான்றளிக்கவில்லை. அது, ஏற்படும் நிலநடுக்கத்தின் கடுமையைப் பொறுத்தது.

மூன்றாவது, கோவில் இடிந்து விழுந்தால் அதன் இடிபாடுகளில் சிக்குபவா் மட்டுமே சாவா். செய்தி கேட்டு ஓடிவந்து வேடிக்கை பார்ப்பவர்களும் சாகமாட்டார்கள். அணை உடைந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் வெள்ளத்தில் சிக்குவோா் தவிர, வெள்ளத்தை வேடிக்கை பார்ப்பவர்களும் சாகமாட்டார்கள். புகுஷிமாவில் அணுமின் உலையில் விபத்து ஏற்பட்டபோது, எந்த விஞ்ஞானியும் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு உடல் நலத்துடன் திரும்பியதாகச் செய்தி இல்லை.

நான்காவது, பெரிய கோவில் இடிந்து விழுந்தால் தஞ்சை நகர மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்படமாட்டார்கள். ஆனால் புகுஷிமாவில் அணு உலை தகா்ந்ததும் அப்பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டார்களே? அது தவறா?

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் தானியங்கிக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அணு உலைக் கூடம் பாதிக்கப்பட்டால் தானியங்கிக் கருவிகள் அணுமின் இயக்கத்தை நிறுத்திவிடும் என்கிறார்கள். தானியங்கிக் கருவீகள் பழுதடையவே மாட்டாவா? எப்படி?

உலகில் பல ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கும் அணு உலைகள் பலவற்றில் இதுவரை விபத்து நிகழவில்லை என்பதால், அணு உலை ஆபத்தில்லாதது எனும் வாதம் அறிவார்ந்த வாதமாகுமா? நல்ல மாட்டுக்கு ஒரு சூடு. சொ்னோபில், புகுசிமா என இயற்கை நமக்கு இரண்டு சூடு வைத்து விட்டது போதாதா?

அணுமின் நிலையம் பாதிக்கப்படாது. பாதிக்கப்பட்டாலும் அணுக்கதிா் வீச்சு பரவாதபடி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலவும் செய்யப்பட்டுள்ளன என்னும் வாதம் எதனை உறுதிப்படுத்துகின்றது? அணு உலை பாதிக்கப்பட்டால் அணுக்கதிா் வீச்சு பரவ வாய்ப்பிருக்கிறது. அணுக்கதிா் வீச்சு பரவுமானால் அனைத்துயிர்களுக்கும் ஆபத்து என்பதைத்தான் இவா்களின் அத்தனை விளக்கங்களும் உறுதிப்படுத்துகின்றன.

ஒன்று, அணுக்கதிா் வீச்சால் மனிதா்களுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என மெய்ப்பிக்க வேண்டும். அல்லது, இயற்கை நிகழ்வுகள் நம் விஞ்ஞானிகளுக்குக் கட்டுப்பட்டவை என்பதற்கான ஆதாரம் மெய்ப்பிக்கப்பட வேண்டும். இரண்டும் இயலாதென்றால் கூடங்குளம் அணுமின் நிலையத்தை நிரந்தரமாக மூடவேண்டும்.

பயந்தால் வரலாறு படைக்க முடியாது என்கிறார்கள். ஒரு தனி மனிதன் தனது உயிரைப் பணையம் வைத்து ஒரு முயற்சியில் ஈடுபடலாம். அவன் சாவு அவனுடன் அல்லது அவனது குடும்பத்துடன் முடிந்துவிடும். ஒரு சிலா் தமது அறிவுத்திறனில் தாம் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு சமூகத்தின், அது சார்ந்த அனைத்து உயிரினத்தின் அழிவைப் பணையம் வைக்கும் முயற்சி நியாயமாகுமா? எப்படி? அஞ்சுவது அஞ்சாமை பேதைமை என்கிறார் வள்ளுவா். பயந்தால் வரலாறு படைக்க முடியாது என்போா், பயந்து, பயந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வானேன்?

உயிர்களின் வாழ்வுக்கு வழி வகுத்தல் சாதனை வரலாறு. பஞ்சபூதங்களின் அழிவுக்கு வழிவகுத்தல் வேதனை வரலாறு. எது வேண்டும்?

நமது பெருமதிப்பிற்குரிய அறிவியல் வித்தகா்களும், அறிவியலைத் தூக்கிப் பிடிக்கத்துடிக்கும் அறிவு ஜீவிகளும், நம்மை ஆளுகின்ற – ஆளத்துடிக்கின்ற தலைவா்களும் மேற்கண்ட ஒவ்வொரு கேள்விக்கும் திட்டவட்டமான – தெள்ளத் தெளிவான – காரணகாரியப் பொருத்தமான பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறின்றி, இன்னின்னவாறாக அனைத்துப் பாதுகாப்பும் செய்யப்பட்டிருக்கிறது என்பதையே திரும்பத் திரும்பக் கூறுதலும், நான் யார் தெரியுமா? என்னைவிட உனக்கு ரொம்பத் தெரியுமோ? – என மேட்டிமை நீட்டுதலும் அறிவியல் ஆகாது என்பதை மட்டும் மெத்தப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அணுசக்தி, மரபணு மாற்றம் இரண்டும் ஆக்கம் விரும்பி முதலிழக்கத் துணிகிற, நுனிக் கொம்பின் மேலும் ஊக்குகிற, கண்ணை விற்று ஓவியம் வாங்க நினைக்கிற பேராசைப் பேதைமையன்றி வேறல்ல.

அணு உலைக் கழிவுக்குச் செய்வது போல, கூடங்குளம் அணுமின் கூடத்தை முழுமையான பாதுகாப்புச் சுவா் எழுப்பி நிரந்தரமாக மூடுவதொன்றுதான் அறிவியலாரும், அரசியலாரும் தமிழ்நாட்டுக்குச் செய்ய வேண்டிய நல்வினையாகும்.

அணுக்கதிா் வீச்சு அபாயமானதுதான். ஆனால் உத்தரவாதமான முழுப்பாதுகாப்புடன் அணுமின்நிலையம் அமைக்க முடியுமென்றால், கொச்சி, மங்களூா், மும்பை, போர்பந்தா், கல்கத்தா, விசாகப்பட்டினம் முதலாகக் கடற்கரையூா்கள் எவ்வளவு இருக்கின்றன. அவ்வளவையும் விட்டுத் தமிழ்நாட்டிலேயே ஒன்றுக்கிரண்டாக அமைப்பானேன்?

சொ்னோபில் விபத்திற்குப் பின்னா் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அணுமின் உலை அமையாதபடி அந்தந்த மாநிலத்திலுள்ள அனைத்துக் கட்சியினருமாகச் சோ்ந்து எதிர்த்து தடுத்துவிட்டார்கள். ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் அணுமின் திட்டத்திற்கு ஆதரவுக் குரல் எழும் மா்மம் என்ன? பன்னாட்டு முதலாளிகளின் தயவுக்காகத் தமிழ் மக்களைக் காவு கொடுக்கத் துணியும் துரோகக் கும்பல்களைத் தமிழ் மக்கள் இனங்கண்டுகொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டின் ஒரு பகுதி அழியவிருக்கிறது. அதன் பாதிப்பு நமக்குந்தான் என்பதுணா்ந்து தமிழகத்தின் அனைத்துப் பகுதி மக்களும் திரண்டெழுந்து, துரோகக் கும்பல்களின் சதிச்செயலை முறியடிக்க வேண்டும்.

– சா. பன்னீர்செல்வம் –

– தென்செய்தி

Famous LIGHTINGS Home Decor5
அழகிய காட்சி அறையுடன் தமிழர் நிர்வாகத்தில்
WE SPECIALIZE IN SWAROVSKI & ASFOUR CRYSTAL CHANDELIERS!
WE PROVIDE A WIDE VARIETY OF BRAND NAME FIXTURES!
SALE! UP TO 50% OFF
TEL: (905) 471-7070
9291 HIGHWAY 48 (HWY 48 & 16TH), MARKHAM
WWW.FAMOUSLIGHTINGS.COM HOMEDECOR@FAMOUSLIGHTINGS.COM
HWY 48
16th Ave
N
HWY 7
Markham Rd
9th Line
STRASS
ASFOUR

கடன் தொல்லையா?
கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்கையா?
நாளாந்த வாழ்க்கை கை நழுவிப் போகிறதா?
வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
Collection Agency யின் தொலைபேசி மிரட்டலா?
உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?
நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம் இனி
நிம்மதியான தூக்கம்
மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
உங்களைப்பற்றி பெருமையாகவும், ஆனந்தமாயும் உணருங்கள்
இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றிக் கவலையில்லை
நண்பர்கள், உறவினர்களிடமிருந்து கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை
அனைத்து கடன் பிரச்சினைகளுக்கும் இலவச ஆலோசனைகளுக்கு SRI
Credit Solution Centre Trustee in Bankruptcy
80 Corporate Drive, Suite 309 Scarborough, ON M1H 3G5 Tel : 416 439 0224
Fax : 416 439 0226 creditsolutioncentre@gmail.com

S.P. IMPORTERS
TEL: 416 261 3881
FRESH VEGETABLE | FRUIT | GROCERY
இவ்வார மலிவு விற்பனை இவ்வார மலிவு விற்பனை
COCONUT MILK
LAIT DE COCO
300g
$2.99
$3.49
$4.99
1 Limit with $20 Purchase
$5.99
$8.99
Tilda
$10.99
$3.79
Vegetable Oil
$3.99
10lbs
WHITE POTATOES
$2.99
8lbs
Ravai
ரவை
$3.99
குத்தரிசி
$5.99
CHICK PEAS
GARBANZOS
$.99
$3.79
$1.99
SWEETENED CONDENSED MILK
LECHE CONDENSADA
$1.99
துவரம் பருப்பு
8lbs
உழுந்து
8lbs
$7.99
Mysoor Dhall
8lbs
$4.99
VANNI RICE
வன்னி அரிசி
8LBS
$3.99
Nestum
Original
$5.99
1lbs
$0.79
$0.69
$2.99
OIGNONS - ONIONS
$1.99
Spinach
$0.99
1lbs
$0.69
1 kg
$2.99
KRAFT
Each
$3.99
$5.99
$.69
$.69
1lbs
$0.79
1lbs
$0.49
1lbs
$0.49
WE HAVE ALL KINDS OF TROPICAL FRUITS & VEGETABLE
மற்றும் பூசைக்குரிய தேவையான மாவிலை, வாழை இலை, முடித்தேங்காய், அறுகம்புல், விபூதி,
சந்தனம், குங்குமம், நிறைகுட செம்பு, குத்துவிளக்கு, மணி, காமாட்சி விளக்கு, செம்பு, பாய்வகைகள்.
ஊதுபத்தி, சாம்பிராணித்தட்டம், பித்தளைத்தட்டம், பித்தளை விளக்கு, அர்ச்சனைத்தட்டம்.
மண்சட்டிகள், பலவகைப்பட்ட சுவாமிபடங்கள், தெய்வீக தன்மை வாய்ந்த நறுமணமிக்க பூஜை
எண்ணெய் வகைகள், குங்கும சந்தன குப்பிகள், புகை இல்லாத கற்பூரம் மற்றும் இன்னும் பல
வகைப்பட்ட மளிகைப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.
2863 Lawrence Avenue East @ Brimley (Beside Tim Horton)
மீன், இறைச்சி, கருவாடு அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Tel: 416 261 4737
2853 Lawrence Avenue East @ Brimley (Beside Tim Horton)
PRICES ARE SUBJECT TO CHANGE WITHOUT PRIOR NOTICE & SOME CONDITIONS APPLY

வாகன விபத்தில்
காயமடைந்து விட்டீர்களா
ரிக்கட் பெற்றுள்ளீர்களா?

PRUDENTIAL
LEGAL SERVICES

SATHEESAN KUMARASAMY
B.Sc, BA(Honours), MA
Paralegal - Advocate Licensed by the
Law Society of Upper Canada

- ஒன்ராறியோ மாநில குற்றவியல் சட்டங்களில் அகப்பட்டுவிட்டீர்களென்ற மனச்சலனமா?
- சிறிய குற்றவியல் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளீர்களா?
- வீடு வாங்குகின்றீர்களா?
- Slip and Falls?
- Small Claims?
- Landlord & Tenant?
- Criminal Pardons?
- Criminal Proceeding

TORONTO OFFICE
GRAND OPENING SPECIAL
NO FEES WILL BE
CHARGED FOR
ACCIDENT BENIFITS
EXCEPT I.R.B

TORONTO OFFICE
GRAND OPENING SPECIAL
TRAFFIC TICKET
$299*

416-723-7387
info@prudentiallegalservice.com www.prudentiallegalservice.com

Business	Markham	Markham	Markham	Scarborough
$1,600,000	$429,900	$519,888	$499,900	$369,900

Scarborough	Brampton	Pickering	Markham	More houses...
$339,900	$489,900	$369,900	$599,000	Scan QR code...



Any thing else is second best!!!

Shan Thayaparan
Sales Representative
Dir: 416-567-7675 Email: shan1232rogers.com
Re/Max Vision Realty Inc. Brokerage
Web: www.shan123.com T: 416-321-2228 F: 416-321-0002
Not intend to solicit properties currently listed or Buyers under contract

கேணல் கிட்டு: அழகான ஆளுமை

- ச.ச.முத்து -

"ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்துச் சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன.
அதனால் அவன் ஒரு அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான். போராடினான்.
போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும் எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின்வீச்சு நிறைந்திருந்தது.
கிட்டு ஒரு தனிமனித சரித்திரம்.
நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு அவன்.
நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக நான் அவனை நேசித்தேன்.
எனது சுமைகளை தாங்கும் இலட்சிய தோழனாக நான் அவனை நேசித்தேன்.
இது சாதாரண மனித பாசத்துக்கு அப்பாற்பட்டது. அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஒரு உணர்வுப் பூகம்பத்தை மனிதமொழியில் விபரிக்கமுடியாது.
அவனது மறைவு எனது ஆன்மாவை பிழிந்த ஒரு சோகநிகழ்வு.
அதனை சொற்களால் வார்த்துவிட முடியாது."

1993ம் ஆண்டு ஜனவரி 16ம் நாள் வங்கக்கடலில் கிட்டு வீரகாவியமானபோது தேசியத் தலைவரால் விடுக்கப்பட்ட செய்தியில் இருந்த மிகமுக்கியமான வாக்கியங்கள்தான் மேலே உள்ளவை. தேசியதலைவர் சொல்லி இருப்பது போல கிட்டுவின் வரலாறு என்பது சொற்களால் வார்த்து முழுமையாக வெளிக்காட்டிவிடக் கூடியது அல்ல. தமிழீழத்தினது மட்டும் அல்லாமல் முழுஉலக தமிழினத்தின் ஆன்மாவாக தேசியத் தலைவரே விளங்குகிறார். அவரது ஆன்மாவையே பிழிந்ததாக கிட்டுவின் இழப்பு இருந்திருக்கிறது என்றால் அவருக்குள் எவ்வளவு தூரம் ஆழமாக அவன் பதியம் போட்டு இருந்திருக்கிறான். மனிதமொழியில் கூறப்பட்டிருந்த உறவு முறைக்கெல்லாம் அப்பாற்பட்டதான அந்த உறவு எப்படி பிணைந்தது...?

இன்றும்கூட தாண்டிசெல்லவும், இட்டு நிரப்பவும் முடியாத பெரும் இடைவெளியாகவே அவனின் இடம் இருக்கின்றது. ஒரு இனத்தின் விடுதலைக்கான களப்பயணத்தில் அவன் வகித்த காலத்தின் பதிவு பாத்திரம் எத்தகையது என்று பார்க்கும்போதுதான் கிட்டுவின் வரலாறு வியப்புடன் விரிகிறது. அவனது வரலாறு முழுதும் ஆளுமையின்வீச்சும்,அற்புதமான அறிவுத்தேடலும்,மண்டியிடாத வீரமும்,கட்டுக்குலையாத உறுதியும் நிறைந்தே இருக்கின்றது.

போராட்டத்துக்காக அவன் வந்தபோது இத்தனை ஆளுமை நிறைந்தவனாகவோ இத்தனை அற்புதங்கள் நிகழ்த்தக்கூடியவனாக இருந்தான் என்று எந்த தேவதையும் அசரீரி ஒலிக்கவில்லை. அவன் போராட்டத்தின் ஊடாகவே கற்றான். போராட்டத்தை அவன் செதுக்கியபோது தானும் சேர்ந்தே சுயமாக செதுக்கப்பட்டான். அதுவே அவனை வரலாற்றின் உச்சமாக கொண்டும் சென்றது. அவன் அதுவரை வாழ்ந்திருந்த வாழ்வுக்கும் அவன் விடுதலைப் போராட்டத்துக்கு என்று புறப்பட்டு அண்ணையிடம் வந்த பின்னர் வாழ்ந்த வாழ்வுக்கும் உள்ள வித்தியாசம் மிகமிகப் பெரியது. நடுத்தரக் குடும்பங்களைவிட வசதியானவாழ்வு, எந்நேரமும் இவனில் செல்லம் கொஞ்சும் பாசமுள்ள அம்மா, அன்பான மூத்த சகோதரன் என்றிருந்த குடும்பம் அவனது. சாப்பாடு கொஞ்சம் நேரம்பிந்தியதற்கே தாயுடன் கோபித்து கொள்ளும் இவனே பயிற்சிகளத்தில் 10, 20 பேருக்கு சமைத்து உணவு பரிமாறுபவனாக தானாக ஏற்று வேலைசெய்யும்போதுதான் இவனின் விடுதலைக்காக எதையும் எந்த வேலையையும் செய்யத் தயங்காத குணம் தெரிந்தது.

விடுதலைப் புலிகளின் முதலாவது ஒழுங்குபடுத்தப்பட்ட பயிற்சி முகாம் 1979ல் மாங்குளம் பண்ணையில் தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் ஆரம்பமானபோது, யார் சமையல் என்ற தலைவரின் கேள்விக்கு பதிலாக தானே முன்வந்து அந்தவேலையை செய்ய ஆரம்பித்தில் இருந்து இறுதி நேரத்தில் வங்கக் கடலில் நின்றதுவரை அவன் எந்தவேலையையும் விடுதலைக்காக செய்வதில் பின்னின்றது இல்லை.

79ல் மட்டும் அல்லாமல் 1983லும் இவனே பயிற்சி முகாம் சமையல். 83ல் கிட்டு அமைப்பின் ஒரு முக்கிய உறுப்பினன். தலைவருக்கு அடுத்த வரிசையில் ஐந்து பேரில் ஒருவனாக இருந்தவன். அப்படி இருந்தும் 1983ல் புதியவர்களான பொட்டு, விக்ரர், லிங்கம் போன்றவர்களுக்கான பயிற்சி முகாமில் யார் சமைப்பது என்ற கேள்விக்கும் தானே முன்வந்து சமையல் பகுதியின் பொறுப்பை ஏற்கிறான். பயிற்சிக்கு வந்த புதிய உறுப்பினர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது அங்கு கிட்டு சமையல்வேலையில் நின்றதைப் பார்க்க. அவர்கள் அந்தப் பயிற்சியில் கற்ற எல்லாவற்றையும்விட கிட்டுவைப் பார்த்து கற்றுக்கொண்டது 'விடுதலைக்காக என்ன வேலை என்றாலும் அதை முழுமனதுடன் செய்யவேண்டும்' என்பதாகும்.

விடுதலைக்கான களத்தில், சுதந்திர போராட்ட அமைப்பில் என்ன வேலை என்றாலும் அது விடுதலைக்கானதுதான் என்பதில் அவன் உறுதியாக இருந்தான். விடுதலைக்கான களவேலையில் இன்ன வேலைதான் செய்வேன் என்று முடிவெடுத்து வருபவன் போராளி அல்ல என்பது இவனின் கருத்தாக இருந்தது. அதற்காக எல்லா வேலைகளையும் செய்தான். முழுமனதுடன். விடுதலைக்காக என்னவெல்லாம் செய்யமுடியுமோ அவ்வளவற்றையும் தனது வாழ்நாள் முழுதும் தேடித்தேடிக் கொண்டே இருந்தவன் கிட்டு.

81, 82களில் தலைவருடன் போய்த் தமிழகத்தில் நிற்க வேண்டிய ஒரு தேவை ஒன்று ஏற்பட்டபோது அதற்கும் போனான். அங்கும்போய் சும்மா நிற்காமல் அந்த நாட்களையும் விடுதலைக்கான ஏதாவது ஒன்றுக்கு பயன்செய்ய விரும்பினான். என்றாவது ஒருநாள் விடுதலைப் போராட்டம் வளர்ச்சி அடையும்போது அதற்கு தேவையான புகைப்பட நுணுக்கங்களையும், புதிய வர்ண அச்சு முறையாக அப்போது இருந்த லித்தோ அச்சுமுறையையும் தலைவரின் அனுமதியுடன் மதுரையில் படித்தான். அடுத்த வேளை சாப்பாட்டிற்கே சிரமமான அந்த மதுரை நாட்களில் இதனை படிக்கவேண்டும் என்றும் அதனை விடுதலைப் போராட்டத்துக்கு என்றாவது ஒருநாள் பாவிக்க முடியும் என்றும் இவன் சிந்தித்தது இன்றும் அதிசயமாகவே இருக்கிறது.

இந்தத் தேடலும், தமிழீழ விடுதலையைப் பெற்றுவிடுவதற்கு தேவையான அனைத்தையும் தேடித் தேடி எமது இனத்துக்கு பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற துடிப்பும் தான் கிட்டுவின் மிகப்பெரிய வேலையாக காலகாலமாக இருந்திருக்கிறது.

இந்த உணர்வுதான் அவனை எப்போதும் முன்னோக்கி சிந்திக்கவைத்தது. ஒரு விடுதலைப் போராட்டத்தின் மிகமுக்கியமான கட்டமாக நிலமீட்பு அமைகிறது. அந்த வகையில் நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப் பின்னர் தமிழர்களின் நிலப்பகுதி ஒன்று எந்தவித இடையீடும் இன்றி தமிழர்களால் ஆளப்படும்நிலையை ஏற்படுத்தியவன் அவன். 1985 ஏப்ரல் மாதம் யாழ் காவல் நிலையம் மீதான தாக்குதலை கிட்டு தலைமையேற்று நடாத்தி முடித்த கையோடு அதன்பின் வந்த நாட்களில் யாழ் மண்ணில் சிங்களப் படைகளின் குறுக்கும் நெடுக்குமான ரோந்துகள் இல்லாமல் போகிறது. இராணுவம் முகாம்களுக்குள் முடங்கிபோனது. மீட்கப்பட்ட முதல்த் தமிழ் மண்ணை கிட்டு தமிழர் வரலாற்றில் காட்டுகிறான். இந்த நிகழ்வானது மிகவும் பாரிய அளவில் விடுதலைப் போராளிகளுக்கு மன உறுதியையும் தமிழ் மக்களுக்கு விடுதலைப் போராட்டத்தின் மீது உரம்மிக்க நம்பிக்கையையும் கொடுக்கிறது. மிகமிக குறைந்த அளவிலான போராளிகளையும் குறைந்த சூட்டுதிறன்கொண்ட ஆயுதங்களையும் வைத்துக்கொண்டு இதனைச் சாதித்ததில் கிட்டு என்ற தளபதியின் பங்கு பாரியது.

யாழ், மாவட்டத்தில் அமைந்திருந்த சிங்கள முகாம்களில் இருந்து தினமும் வெளியேற முயற்சித்த படையினரை மறித்து திருப்பி அனுப்பும் களத்தில் எங்கெங்கும் கிட்டு நின்றதானது போராளிகளுக்கு பலமடங்கு வீரியத்தைத் தந்தது. யாழ். மண் விடுதலைப் போராளிகள் வசம் வந்து விட்டதுடன் கிட்டு திருப்தி கொள்ளவில்லை. எந்த இராணுவ வெற்றியையும் அரசியல் ஆக்குவதன் மூலமே எமது மக்களுக்கான விழிப்புணர்வை கொண்டுவரலாம் என்பதால் இராணுவ ரோந்துகள் இல்லாத யாழ். மண்ணில் மக்கள் நீதி மன்றங்களையும், இணக்கசபைகளையும், சுயதொழில் ஊக்குவிப்புகளையும் இன்னும் பல கட்டமைப்புகளை நிறுவினான்.

அரசியல் வகுப்புகளையும், தெரு நாடகங்களையும் நடாத்தி எமது மக்களுக்குள் விடுதலை கனலை ஏற்றுவதில் உழைத்தவன் அவன். யாழ் மாவட்டத்தில் முகாம்களுக்குள் இராணுவம் அடைபட்டதை வைத்தே ஒரு பெரிய இராசதந்திர நகர்வையும் விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பெருமிதமான பார்வையையும் கொடுப்பதற்காக அருணாவையும் காமினியையும் மீட்டு சிங்களதேசத்துடன் ஒரு கைதிகள் பரிமாற்றத்தை அழகாகச் செய்துகாட்டிய இராசதந்திரமேதை அவன். எல்லா ஆளுமைகளும் அவனுக்குள் ஒரு இரவில் வந்து குடியேறியவை அல்ல. அவன் அதற்காக நடாத்திய தேடல்கள் மிக அதிகம். அதனால்தான் ஒரு ஆற்றல்மிக்க போர்வீரனாக இருந்த அவனால் ஒரு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்திய தளபதியாகவும் மாற முடிந்தது.

அதனால்தான் அவனால் ஒரு சிறந்த ஓவியனாகவும், மிகச்சிறந்த புகைப்படம் பிடிப்பவனாகவும், ஊடகங்களை நடாத்தும் தனித்திறமை மிக்கவனாகவும், மிகமிக இலகுவாகப் பயிற்சிகளில் விளக்கம் தரக்கூடிய பயிற்சியாளனாக என்று அத்தனை ஆளுமைகளையும் பெற்றுக்கொள்ள முடிந்தது. அவன் விடுதலைக்காகவே இவை அனைத்தையும் செய்தான். ஒரு இரவில் அவன் வீட்டை விட்டு வெளியேறிய 1978ல் இருந்து அவன் வீரச்சாவடைந்த 1993 வரை தாயகத்தின் பரப்பு எங்கும், அதன் பின்னர் தமிழகத்திலும், இந்தியாவிலும், அதற்குப் பின்னர் இங்கிலாந்திலும் அங்கிருந்து புறப்பட்டு ஐரோப்பிய நாடெங்கும் திரிந்தபோதிலும் ஒரு பொழுதில் விடுதலைக்காக உலகின் இன்னொரு முனையில் மெக்சிகோவில் போய்நின்ற போதிலும் அவன் விடுதலைக்காகவே வாழ்ந்தான் – போரிட்டான் – அலைந்தான் – கற்றான் – பயிற்றுவித்தான் எல்லாமே.

இறுதியில் விடுதலையின் மீது கொண்ட அதிஉச்சமான விருப்பை வெளிக்காட்டவும் விடுதலைப் புலிகள் என்ற அமைப்பின் விடுதலை மீதான இலட்சிய உறுதியை சொல்லவும் தன்னை தீக்குள் ஜோதி ஆக்கினான். அவனதும் அவனுடன் வங்கக் கடலில் ஆகுதி ஆகிய ஒன்பது மாவீரர்களின் நினைவு என்றென்றும் அந்த அலையின் மீது மிதந்தபடியே இருக்கும்.

எங்கள் கரையையும் அவை வந்துவந்து தொட்டுப் போகும். எங்கள் நினைவுகளைப் போலவே.

ACSHA - AUTO Inc.



Auto repiairs

உங்கள் வாகனம் எந்த ரகமாக இருந்தாலும் என்ஜின், ட்றான்ஸ்மிசன் திருத்தல் வேலைகள்...
1, 2, 3 வருட உத்தரவாதம்...
பிறேக் வேலைகள்...

மற்றும் எந்தவகை திருத்தல் வேலைகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...
மற்றும் ரோயிங் வசதியும் உண்டு.

விபத்துடைந்த வாகனங்களுக்கு 10% பணம் மீளப் பெற்றுத்தரப்படும்

514-273-8999

நீங்கள் வேறு இடத்தில் வாகங்களை வேண்டினாலும் பரீட்சித்து அதன் K.Mஉட்பட அனைத்து பரிசோதனைக்கும் 70$ மட்டுமே.

மேலதிக தொடர்புகளுக்கு : பாலையா (பீற்றர்) 514-273-8999

6820 Marconi, Montrealm Qc,H2S 3K1

ACSHA - AUTO Inc.



Body works

அனைத்து விதமான வாகனங்களுக்கான வர்ண வேலைகள் மற்றும் திருத்த வேலைகள் செய்துகொள்ள



விபத்துடைந்த வாகனங்களுக்கு 10% பணம் மீளப் பெற்றுத்தரப்படும்

514-273-8999

நீங்கள் வேறு இடத்தில் வாகங்களை வேண்டினாலும் பரீட்சித்து அதன் K.Mஉட்பட அனைத்து பரிசோதனைக்கும் 70$ மட்டுமே.

மேலதிக தொடர்புகளுக்கு : பாலையா (பீற்றர்) 514-273-8999

6820 Marconi, Montrealm Qc,H2S 3K1

ACSHA - AUTO Inc.



Buy & Sale

பாலையா அவர்களின் நிர்வாகத்தின்கீழ் 1982ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை சிறந்த தரமுள்ள வாகனங்களை கண்டறிந்து வாங்கவும், விற்கவும் மிகுந்த அனுபவம் பெற்றவர்கள்.
Honda, Toyota,ரக வாகன விற்பனையில் முன்னோடிகள்...
உங்கள் வசதிக்கேற்ப 7 இருக்கையுள்ள வாகனங்கள்...
உங்கள் விருப்பத்திற்கேற்ப தரமான வாகனங்களை கொள்வனவு செய்து தருகிறோம்...
நீங்கள் வாங்கும் வானங்களுக்கு K.M உத்தரவாதம் வழங்கப்படும்
Saaq, Car Fax, Auto Froot, Honda Company and Toyota Company

நீங்கள் வேறு இடத்தில் வாகங்களை வேண்டினாலும் பரீட்சித்து அதன் K.Mஉட்பட அனைத்து பரிசோதனைக்கும் 70$ மட்டுமே.

மேலதிக தொடர்புகளுக்கு : பாலையா (பீற்றர்) 514-273-8999

6820 Marconi, Montrealm Qc,H2S 3K1

ACSHA - AUTO Inc.

உங்கள் வாகனம் பழுதடைந்துவிட்டதா?
கவலையை விடுங்கள்... துரித கதியில்
உரிய இடத்தில் சேர்த்து விடுகின்றோம்!

TOWING SERVICES
Montreal & Out Of Montreal
& Long Distance

Scrap Cars Free Service

சிறந்த Scrap Car, Van என்பன தகுந்த விலைக்கு கொள்வனவு செய்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு : பாலையா (பீற்றர்)

514-273-8999

அவுஸ்திரேலியா

பழங்குடியினர் முற்றுகையில் உயிர் தப்பினார் பிரதமர்!

அவுஸ்திரேலிய தலைநகர் கேன்பராவின் விடுதியில் பழங்குடியினரின் முற்றுகையில் சிக்கிய பெண் பிரதமர் ஜூலியா கிலார்ட் உயிர் தப்பினார். அவர் தாக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த 26ம் திகதி அவுஸ்திரேலிய தேசிய தினம் கொண்டாடப்பட்ட போது, பிரதமர் ஜூலியா கிலார்ட் தலைநகர் கேன்பராவில் ஒரு விருதுகள் வழங்கும் விழாவில் பங்கேற்றார். அதில் பிரதமர் கிலார்ட், எதிர்க் கட்சி தலைவர் டோனி அபாட் இருவரும் பங்கேற்றனர். அவர்கள் இருந்த அறையை திடீரென 200க்கு மேற்பட்ட பழங்குடியின போராட்டக்காரர்கள் சுற்றி வளைத்தனர்.

அவர்கள் போராட்டம் பற்றி முன்னறிவிப்பு இல்லாததால் விடுதியில் குறைந்த அளவு காவல்துறையினரே பாதுகாப்பில் இருந்தனர். கிலார்ட், அபாட் ஆகியோரை எதிர்த்து பழங்குடியினர் 'வெட்கம்', 'இனவெறியர்கள்' என கோசம் எழுப்பிய பிறகே விடயம் தெரிந்தது. நடப்பதை அறிய வெளியே வந்த பிரதமர் கிலார்ட், அபாட்டை நோக்கி போராட்டக்காரர்கள் சிலர் பாய்ந்தனர். அதில் தள்ளுமுள்ளு ஏற்பட்டு பிரதமர் தாக்கப்பட்டதாக சில தகவல்கள் தெரிவித்தன. ஆனால், வெளியே சத்தம் கேட்டதும் மீட்பு படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டு படையினர் குவிக்கப்பட்டதாகவும், கிலார்ட், அபாட் இருவரும் பாதுகாவலர்களால் பத்திரமாக வெளியே கொண்டு வரப்பட்டு காரில் ஏற்றி அனுப்பப்பட்டனர். கூட்டத்தில் இருந்து மீட்கப்படும்போது ஒரு காலணியை பிரதமர் கிலார்ட் தவற விட்டார். காரில் ஏறும் வரை பலர் அவரைத் துரத்தி சென்று கோசமிட்டனர். இதன்போது காவல்துறையினருக்கும் பழங்குடியினருக்கும் இடையே மோதல்களும் ஏற்பட்டன.



அவுஸ்திரேலியாவில் பழங்குடியின மக்களின் நில உரிமைக்கு 1972ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. எனினும் பல்வேறு கோரிக்கைகளுக்காக அவர்கள் போராடி வருகின்றனர். இதனால், அரசு - பழங்குடியினர் இடையே பிரச்னை நீடிக்கிறது. இந்நிலையில், மற்ற அவுஸ்திரேலியர்களுக்கு உள்ள அனைத்து உரிமைகளும் பழங்குடி மக்களுக்கு கிடைத்தாகி விட்டது. எனவே, அவர்களது பழைய சின்னங்கள், கட்டடங்களை அகற்றி விடலாம் என சில தினங்கள் முன் எதிர்க் கட்சி தலைவர் அபாட் பேசினார். அதுவே பழங்குடி மக்களின் திடீர் முற்றுகைக்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

அயர்லாந்து

ஜல்லிக்கட்டை உடனே நிறுத்துமாறு எச்சரிக்கை

தமிழகத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டு வீர விளையாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் ஜல்லிக்கட்டுக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபடப்போவதாக அயர்லாந்து நாட்டு விலங்குகள் உரிமை அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. தமிழகத்தில் நடைபெற்று வரும் ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து விலங்குகள் நல அமைப்பான 'பீட்டா' வழக்கு தொடுத்தது. சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளை அளித்த இடைக்காலத் தீர்ப்பின் பேரில் சமீபத்தில் ஜல்லிக்கட்டு நடத்தப்பட்டது. இதில் கடுமையான விதிமுறைகள் பின்பற்றப்பட்டன.

இந்த நிலையில் அயர்லாந்தைச் சேர்ந்த விலங்குகள் உரிமைகள் அமைப்பு (ஏ.ஆர்.ஏ.என்) ஜல்லிக்கட்டுக்கு கடும் கண்டனம் தெரிவித்து மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் சுபோத் கான்ட் சகாய்க்கு கடிதம் அனுப்பி உள்ளது.

அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது, விலங்குகளை மதிப்புடன் நடத்துவதில் இந்தியா முன்னணியில் உள்ளது. எனினும் ஜல்லிக்கட்டு விளையாட்டில் அடித்தல், குத்துதல், வாலைத் திருகுதல், இழுத்தல், கொம்புகளை உடைத்தல் உள்ளிட்ட செயல்களும், நிகழ்ச்சிகளுக்கு முன்பாக காளைகளுக்கு வலுக்கட்டாயமாக சாராயம்

குடிக்க வைப்பதும் நடக்கின்றது. காளைகளை கொடுமைப்படுத்தும் நிகழ்ச்சியான ஜல்லிக்கட்டுக்கு சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

அழகான இந்தியாவில் ஒரு மாநிலத்தில் நடத்தப்படும் ஜல்லிக்கட்டு போன்ற விளையாட்டால் நாட்டின் அழகு கெட்டுப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது. ஜல்லிக்கட்டு என்பது காளைகளுக்கு மட்டுமல்ல மனிதர்களுக்கும், பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. ஜல்லிக்கட்டு போன்ற கொடுமையான செயல்களுக்கு இந்திய அரசு உடனடியாக தடை விதிக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்தியாவிற்கு சுற்றுலா வரும் வெளிநாட்டு பயணிகளிடம் ஜல்லிக்கட்டை எதிர்த்து பிரச்சாரம் செய்து, இந்தியாவை புறக்கணிக்குமாறு வலியுறுத்துவோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாபுவா நியூ கினியா

நிலச்சரிவில் சிக்கி 40 பேர் பலி

அவுஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள பாபுவா நியூகினியா தீவில் உள்ள 2 கிராமங்களில் கடந்த 25ம் திகதி புதன்கிழமை அதிகாலை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி குறைந்தது 40 பேர் பலியாகியிருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மெண்டி நகருக்கு அருகில் இருக்கும் 2 மலைக் கிராமங்களில் அதிகாலை இந்த நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன. சாலைகளும், தகவல் தொடர்பும் துண்டிக்கப்பட்டன.

அதிகாலை நேரத்தில் மக்கள் தூங்கிக் கொண்டிருந்ததால் பலர் மண்ணில் புதையுண்டிருக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது. இந்த நிலச்சரிவுக்கு குறைந்தது 40 பேர் பலியாகி இருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது. குறைந்தது 20 பேரைக் காணவில்லை. பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது. மீட்புப் படையினரும், அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

பாபுவா நியூகினியாவில் ஏற்பட்ட மோசமான நிலச்சரிவு இது தான் என்று அந்நாட்டு

ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பிரதமர் பீட்டர் ஓ நீல் சம்பவ இடத்திற்கு சென்று மீட்புப் பணிகளை பார்வையிட்டுள்ளார். அந்நாட்டு அரசுக்கு அவுஸ்திரேலியா உதவி செய்ய முன் வந்துள்ளது.

துருக்கி

மக்களின் சிந்தனைக்கு பிரான்ஸ் விலங்கிடுவதாக குற்றச்சாட்டு

ஆர்மீனியா குடிமக்கள் மீது துருக்கி இராணுவம் நடத்தியது இனப்படுகொலை எனவும் இதனை மறுப்பவர்களுக்கு சிறைத்தண்டனை உறுதிச்செய்யும் மசோதா பிரான்ஸ் செனட் சபையில் 127 ஆதரவு வாக்குகளுடன் நிறைவேற்றப்பட்டது. எதிராக 86 வாக்குகள் அளிக்கப்பட்டன.

அதிபர் நிக்கொலா சர்கோசியின் யு.எம்.பி கட்சி இம்மசோதாவை கொண்டுவந்தது. அதிபர் கையெழுத்திட்டவுடன் இம்மசோதா அமுலுக்கு வரும். இதனை மறுப்பவர்களுக்கு ஓர் ஆண்டு சிறையும், 57 ஆயிரம் டொலர் அபராதமும் விதிக்கப்படும் என புதிய சட்டம் கூறுகிறது.

ஏற்கனவே நாடாளுமன்ற கீழ் சபை இம்மசோதாவை நிறைவேற்றியது. பின்னர் துருக்கி பிரான்சுடன் இராணுவ - பொருளாதார உறவை துண்டித்தது. இந்நிலையில் இம்மசோதா செனட் சபையில் நிறைவேறியுள்ளது. அரசியல் சாசனம் வழங்கும் பேச்சு சுதந்திரத்திற்கு எதிரானது என சுட்டிக்காட்டி செனட் சபையின் சட்ட ஆணைக் குழு இம்மசோதாவை நிராகரித்தது.

இதேவேளை, இனத் துவேசமான, பாரபட்சமான மசோதாவை பிரான்ஸ் செனட் நிறைவேற்றியுள்ளது என துருக்கி பிரதமர் ரஜப் தய்யிப் எர்துகான் குற்றம் சாட்டியுள்ளார். மக்களின் சிந்தனைக்கு விலங்கிடும் பிரான்சின் அரசின் தீர்மானம் கருத்து சுதந்திரத்தின் மீதான அத்துமீறல் என எர்துகான் துருக்கி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இப்புதிய சூழலில் பிரான்சுடன் தூதரக உறவைத் துருக்கி குறைத்துக்

(34ம் பக்கம் பார்க்க)

தூக்கம் இன்மையால் 86 வகை நோய்கள்!

மனிதன் முறையாக தூங்கி எழுந்தால் மகிழ்ச்சியாகவும், நல்ல உடல் நலத்துடன் வாழலாம் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். சரியாக தூங்காமல் இருந்தால் 86 வகையான நோய்களால் பாதிக்கும் அபாயம் இருப்பதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர். குறிப்

பாக தூக்கம் இன்மையால் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, சோர்வு போன்ற நோய்களால் அவதிப்பட வேண்டியிருக்கும். ஆகவே மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டுமானால் தினமும் சரியான நேரத்திற்கு தூங்கி ஓய்வு எடுங்கள் என விஞ்ஞானிகள் ஆலோசனை கூறுகிறார்கள். இலண்டனில் இருந்து வெளிவரும் மருத்துவ இதழ் இந்த தகவல்களை தெரிவித்துள்ளது.

ஐ.நா. தலைமையகத்தில் 16 கிலோ போதைப் பொருள் மீட்பு

அமெரிக்கா நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தின் கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் பிரிவிலிருந்து கொக்கைன் எனப்படும்

போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ இலட்சினை பொறிக்கப்பட்ட பை ஒன்றிலிருந்து 16 கிலோ கிராம் கொக்கைன் கைப்பற்றப்பட்டதாக நியூயோர்க் காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். இந்தப் பையில் பெயர் விபரங்கள் பொறிக்கப்படாத போதிலும் மெக்சிக்கோவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். எனினும் இந்த பொதி மாறுப்பட்டு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மெக்சிகோசிட்டியில் இருந்து இந்த பொதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும் முகவரி எதுவும் பொறிக்கப்பட்டிருக்கவில்லை என பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஐ.நா. அலுவலகப் பொதி போன்று போதைப் பொருளைக் கடத்துவதற்காக இதனைத் திட்டமிட்டிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

சதாம் முன்னாள் ஆசிரியர் திருட்டு வழக்கில் சிறை

மறைந்த ஈராக் சர்வாதிகாரி சதாம் உசேனிடம் இசை ஆசிரியராக

இருந்தவர் இசாம் மோஷி. 36 வயதான இவர், சதாம் உசேனின் ஆட்சி கவிழ்ந்து அவர் கொல்லப்பட்டதும் தனது குடும்பத்தினருடன் நாட்டைவிட்டு வெளியேறி அவுஸ்திரேலியாவுக்கு சென்றார். அடைக்கலம் புகுந்த இடத்தில் அவர் சும்மா இருக்கவில்லை. வீடுகளில் புகுந்து திருட்டுக்களில் ஈடுபட்டார். 87 மற்றும் 60 வயதான இரண்டு வயோதிபப் பெண்களை மிரட்டி கொள்ளையடித்தபோது அவர் காவல்துறையினரிடம் சிக்கிக் கொண்டார். விக்டோரியா நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து அவருக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது.

உலகிலேயே மிகச்சிறிய தவளை கண்டுபிடிப்பு

இந்தோனேசியாவின் தென் மேற்கே பசிபிக் பெருங்கடல் பகுதியில் இருக்கும் தீவுகளில் ஏராள

மான அரியவகை உயிர் இனங்கள் வாழ்கின்றன. இதனால் அந்த பகுதியில் பல்வேறு நாட்டு ஆராய்ச்சியாளர்கள் சென்று ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த வகையில் அமெரிக்கா லூசியானா பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் கிரிஷ் ஆஸ்டின் என்பவர் இந்தோனேசியா பகுதியில் இருக்கும் பாப்பு நியூகுனியா தீவில் சமீபத்தில் 3 மாதங்களாக தங்கி ஆய்வு செய்தார். அப்போது அவர் அடர்ந்த காட்டில் ஒரு செடியின் இலை மீது அமர்ந்திருந்த அரியவகை தவளை ஒன்றை கண்டுபிடித்தார். இந்த தவளை 7 மில்லி மீற்றர் நீளம் கொண்டது. இதுவே உலகில் மிகச் சிறிய தவளை என கருதப்படுகிறது. இதுபற்றி பேராசிரியர் ஆஸ்டின் கூறுகையில், 'இந்த தவளையின் வளர்ச்சி சிறிய அளவில் கூடலாம். இவை வசிக்கும் நீரை பொறுத்துதான் இவற்றின் வளர்ச்சி அமைக்கிறது' என்று கூறுகிறார். இதற்கு முன்பு இந்தோனேசியா பகுதியில் 7.9 மில்லி மீற்றர் நீளம் கொண்ட மீன் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

71 வயதில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஓரினத் திருமணம்

அமெரிக்காவின் மாசாசூசெட்ஸ் பகுதியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் பார்னி பிராங்க் (71) பதவியை விட்டு விலகப்போவதாக கடந்த ஆண்டு அறிவித்தார். இந்நிலையில், தனது சகா் ஜிம் ரெடியை திருமணம் செய்து கொள்வதாக அறிவித்துள்ளார். ஆளும் ஜனநாயக கட்சியை சேர்ந்த பிராங்க், தான் ஒரு ஓரினச் சேர்க்கையாளர் என்று பகிரங்கமாகவே அறிவித்தவர். மாசாசூ செட்சில் நடக்கும் விழாவில், ஜிம்மை திருமணம் செய்ய போகிறார் பிராங்க் என்று அவரது செய்தித் தொடர்பாளர் ஹரி குரால் தெரிவித்தார். ஆனால், எந்த திகதியில் எந்த இடத்தில் திருமணம் நடக்கும் என்ற தகவல் வெளியிடப்படவில்லை. மாசாசூ

→

கொள்ளும் என பிரான்சில் துருக்கி தூதர் தாஷின் பர்குஓக்லு செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இரண்டு நேட்டோ நாடுகள் இடையேயான உறவை சீர்குலைக்கவே இச்சட்டம் உதவும் என அவர் மேலும் தெரிவித்தார். இம்மசோதா அநீதமானது. துருக்கியின் மரியாதையை குறைக்கும் நடவடிக்கை என துருக்கியின் சட்ட அமைச்சர் ஸாதுல்லாஹ் அர்ஜின் குற்றம் சாட்டியுள்ளார். அர்மீனிய மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் பிரான்ஸ் செனட் சபையின் தீர்மானம் இரு நாடுகளின் மக்களிடையே நல்லிணக்கத்தை அதிகரிக்கும் என ஆர்மினிய

வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பிரான்சில் அதிபர் தேர்தல் நடைபெற இருக்கும் வேளையில் ஆர்மீனிய வம்சாவழியைச் சார்ந்தவர்களின் வாக்குகளை குறிவைத்து அதிபர் நிக்கொலா சர்கோசி இம்மசோதாவிற்கு ஆதரவு அளித்துள்ளதாக குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளது. பிரான்ஸ், பெல்ஜியம், நெதர்லாந்து, லக்ஷம்பேர்க் ஆகிய நாடுகளில் துருக்கி நாட்டு மக்கள் இம்மசோதாவை எதிர்த்து போராட்டம் நடத்தியுள்ளனர்.

முதலாம் உலகப்போர் நடைபெற்ற 1915, 1916ம் ஆண்டு காலக்கட்டத்தில் 15 இலட்சம் ஆர்மீனிய மக்கள் கொலை செய்யப்பட்டதாக கூறப்படும் சம்பவம் இனப்படுகொலை என பிரான்ஸ் முன்னர் அறிவித்தது தெரிந்ததே.

ஈராக்

24 பொது மக்களைக் கொன்ற அமெரிக்க தளபதிக்கு 3 மாதமே சிறை!

ஈராக் நகரமான ஹதீஸாவில் 2005ம் ஆண்டு 24 அப்பாவி மக்களை கூட்டுப் படுகொலைச் செய்த வழக்கில் அமெரிக்க இராணுவ சிப்பாய் ப்ராங் உட்டரிக் குற்றவாளி என உறுதிச் செய்

யப்பட்டது. நவம்பர் 19ம் திகதி துப்பாக்கிச்சூடு நடத்திய இராணுவ அணியின் கொமாண்டராக பணியாற்றியவர் உட்டரிக். இவ்வழக்கில் இவருடைய 'சக இராணுவத்தினரான ஏழுபேரை நீதிமன்றம் பல கட்டங்களில் விடுவித்தது.

வேண்டுமென்ற செய்யாத படுகொலை, உணர்ச்சியைத் தூண்டும் தாக்குதல் ஆகிய வழக்குகளை சுமத்தமாட்டோம் என இராணுவ வழக்குரைஞர்கள் தயாரித்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் உட்டரிக் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார். தண்டனை தீர்ப்பு குறித்த விசாரணை உடனடியாக துவங்கும் என விசாரணை நடைபெறும் தெற்கு லாஸ் ஏஞ்சல்ஸில் கேம்ப் பெல்டன் செய்தித் தொடர்பாளர் ஜோ கோபல் தெரிவித்தார்.

மூன்று மாதம் சிறை, மூன்று மாதம் சம்பளத்தின் இரண்டு பகுதிகளை முடக்கிவைத்தல், தற்போதைய பட்டத்தைக் குறைத்தல் ஆகிய தண்டனைகள்தான் உட்டரிக்கிற்கு கிடைக்கும் என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குழந்தைகள், பெண்கள் உள்பட 24 அப்பாவிகளை கொடூரமாக சுட்டுக்கொன்ற அமெரிக்க

இராணுவத்தினருக்கு இதுதானா தண்டனை என ஈராக்கில் கடும் அதிர்ச்சி எழுந்துள்ளது. சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே இந்தத் தண்டனை என்றும் குற்றம்சாட்டப்படுகின்றது.

ஈராக்

ஒரே நாளில் 34 பேருக்கு மரண தண்டனை ஐ.நா. கடும் கண்டனம்!

ஈராக்கில் ஒரே நாளில் 34 பேர் தூக்கிலிடப்பட்டமைக்கு ஐ.நா. தனது கடும் கண்டனத்தினைத் தெரிவித்துள்ளது. பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 34 பேருக்கே கடந்த 26ம் திகதி வியாழக்கிழமை இத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒரே நாளில் இத்தனை பேர் கொல்லப்பட்டமைக்கு ஐ.நா. கவலை வெளியிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இச் செய்தியைக் கேட்டவுடன் தான் அதிர்ச்சியடைந்ததாகத் தெரிவித்துள்ளார். அத்துடன், சர்வாதிகார போக்கில் நடந்துகொள்ள கூடாது என்று ஐ.நா. மனித உரிமை ஆணையம் எச்சரிக்கை விடுத்த இரண்டு நாட்களில், 34 பேர் தூக்கில் இடப்பட்டிருக்கின் றனர். இது கண்டிக்கத்தக்கது. இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய தலைவர் நவநீதம்பிள்ளை கூறியுள்ளார்

ஈராக்கில் 2004ம் ஆண்டு முதல் கடந்த 8 ஆண்டுகளில் சுமார் 1200 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகப் புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. எனினும் இது தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல் எதனையும் ஈராக் அரசு இதுவரை வெளியிடவில்லை. கடந்த வருடம் நவம்பர் மாத நடுப்பகுதியில் இருந்து இதுவரை சுமார் 63 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஈராக்கில் சுமார் 48 வகையான குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றில் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தலும் அடங்குகின்றது. அங்கு நடைபெறும் நீதிமன்ற விசாரணைகளின் நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்பிலும் தமக்கு சந்தேகம் நிலவுவதாக ஐ.நா. தெரிவிக்கின்றது. சதாம் உசைனின் ஆட்சிக்காலப் பகுதியிலும் மரணதண்டனை அதிகமாக வழங்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. தற்போதைய ஆட்சியிலும் கூடக் கைதிகள் துன்புறுத்தப்படுதல், ஊடகவியலாளர்கள் தாக்கப்படுதல் போன்ற சம்பவங்கள் ஈராக்கில் அதிகமாக இடம்பெற்று வருவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன. மேலும் சர்வாதிகார ஆட்சி முறைமையை நோக்கி மீண்டும் ஈராக் நகர்வதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதுஇவ்வாறிருக்க, ஈராக் தலைநகர் பக்தாத்தில் அடுத்தடுத்து வெடிகுண்டு வெடித்ததில் 14 பேர் பலியாகியுள்ளனர். 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பாக்தாத்தின் சாத் பகுதியில் வியாழக்கிழமை காலையில் தினக்கூலி தொழிலாளர்கள் கூடியிருந்த இடத்தில் முதலில் குண்டு வெடித்தது. இதில் 8 பேர் பலியாயினர். 21 பேர் காயமடைந்தனர். அடுத்த சில நிமிடங்களில் வர்த்தக நிலையம் அருகே கார் வெடித்துச் சிதறியது. இதில் 3 பேர் பலியாயினர். 26 பேர் காயமடைந்தனர். மேலும் ஒரு பாடசாலை மற்றும் கடைத்தெரு என 2 இடங்களில் கார்கள் வெடித்ததில் 2 மாணவர்கள் உட்பட 3 பேர் பலியாயினர், 29 பேர் காயமடைந்தனர்.

இதேவேளை பாக்தாத் அருகில் உள்ள யார்முக் என்ற இடத்தில் முகமத் அல் மாலிக் என்று தொழிலதிபர் ஒருவர் குடும்பத்துடன் கொலை செய்யப்பட்டார். இவர்களது உடலை பெற்று இறுதிச்சடங்கு ஊர்வலம் செல்வதற்காக உறவினர்கள் மருத்துவமனையின் முன்பு திரண்டிருந்தனர். அப்போது தற்கொலையாளி ஒருவர் காரில் குண்டுகளை ஏற்றி வந்து அதை வெடிக்கச் செய்ததில் 28 பேர் பலியானார்கள். மேலும் 50 பேர் படுகாயம் அடைந்தனர்.

சதாம் உசேனை ஆட்சியிலிருந்து அகற்றிய பிறகு ஈராக்கில் அமைதி ஏற்படுத்துவதற்காக அமெரிக்க படை முகாமிட்டிருந்தது. கடந்த மாதத்துடன் அந்த படைகள் திரும்பப் பெறப்பட்டன. அதன் பிறகு, தீவிரவாத தாக்குதல்கள் தொடர்கதையாக இருக்கிறது. கடந்த 24 நாட்களில் இதுவரை 200ற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர்.

ஐ.நா. பாதுகாப்பு சபையை விரிவுபடுத்த வேண்டும் ஜி–4 நாடுகள் கூட்டாக போர்க்கொடி

ஐ.நா பாதுகாப்பு சபையை விரிவுபடுத்த வேண்டும் என்று இந்தியா, ஜப்பான், பிரேசில் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளை உள்ளடக்கிய ஜி-4 அமைப்பு கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக ஜி.4 நாடுகளின் கூட்டமைப்பு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், பாதுகாப்பு சபையில் நிரந்தர மற்றும் நிரந்தரமில்லாத என்ற இரண்டு பிரிவுகளிலுமே உறுப்பு நாடுகளின் எண்ணிக்கையை விரிவுபடுத்த வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஆபிரிக்க நாடுகளையும் ஐ.நா. பாதுகாப்பு சபையில் உறுப்பு நாடாக இணைத்து

பிலிப்பைன்ஸ்

சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த அமெரிக்காவுடன் இராணுவ ஒத்திகை

சீனாவின் ஆதிக்கத்தை கட்டுப்படுத்த அமெரிக்காவுடன் இணைந்து இராணுவ ஒத்திகைகள் நடத்த பிலிப்பைன்ஸ் திட்டமிட்டுள்ளது. இதற்காக இரு நாடுகள் இடையே பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. சீனாவின் தெற்கு கடலோரப் பகுதியில் உள்ள தீவுகளின் உரிமை தொடர்பாக பிரச்சினைகள் ஏற்பட்டு வருகிறது. இதில் சீனா, பிலிப்பைன்ஸ் இடையே உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. எனவே அமெரிக்கா தனது வலிமையை தென்கிழக்காசிய பிராந்தியத்தில் அதிகரிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் அவுஸ்திரேலியாவின் வடக்குப் பகுதியில் நீர்மூழ்கிக் கப்பல் தளமும், சிங்கப்பூரில் போர்க்கப்பல் நிலையமும் அமைக்கப்படும் என்று சமீபத்தில் அறிவித்தது.

தற்போது பிலிப்பைன்ஸ் நாட்டை தனது பக்கம் இழுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதனை அடுத்து அமெரிக்காவுடன் பிலிப்பைன்ஸ் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. விரைவில் இந்த இரு நாடுகள் இடையே உடன்பாடு ஏற்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

ஓரிரு நாட்கள் இந்த பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற இருப்பதாகவும், அதனை அடுத்து மார்ச் மாதம் உயர்மட்ட குழு கூட்டம் வாஷிங்டனில் நடைபெறும் என்றும் தெரிகிறது. இது பற்றி பிலிப்பைன்ஸ் நாட்டு அதிகாரிகள் கூறுகையில், இந்த பிராந்தியத்தில் அமைதி நிலவ வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் பேச்சு நடத்துகிறோம். அமெரிக்கா மட்டுமல்ல அவுஸ்திரேலியா, ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடனும் தொடர்பு கொண்டு வருகிறோம். குறிப்பாக தெற்கு சீன கடல் பகுதியில் எங்களுடைய இராணுவ வலிமை அதிகரிப்புக்கு முன்னுரிமை அளிப்போம்' என்று தெரிவித்தனர்.

மேலும் இராணுவத்துறைச் செய்தி தொடர்பாளர் ஒருவர் கூறுகையில், அமெரிக்க இராணுவம் அல்லது போர்க்கப்பல் தளம் அமைக்கப்படுமா? என்பது பற்றி எதுவும் தெரியாது. ஆனால் ஆண்டுதோறும் இரு நாட்டு இராணுவமும் ஒத்திகை பயிற்சி மேற்கொள்வது குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது என்பதை உறுதிப்படுத்த முடியும்' என்று கூறினார். இதேபோல பிலிப்பைன்ஸ் கடற்படை தளபதி தெரிவிக்கையில், அமெரிக்க படைகள் வருவதால் இந்த பகுதியில் கடலோரப் பகுதி பாதுகாப்புக்கு உதவியாக இருக்கும்' என்றார். இதன்மூலம் சீன தென்கடல் பகுதிக்கு அமெரிக்க போர்க் கப்பல்கள் மற்றும் உளவு விமானங்கள் வருவதை பிலிப்பைன்ஸ் விரும்புவதையே காட்டுகிறது.

இதுஇவ்வாறிருக்க, அமெரிக்க இராணுவத்தின் எண்ணிக்கையை குறைக்க, அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. செலவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த 10 ஆண்டுகளுக்குள் அமெரிக்க இராணுவ செலவில் 48,700 கோடி டொலர்களை குறைக்க அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. இதையடுத்து செலவைக் குறைக்க அரசு தயாரித்துள்ள திட்டங்கள் குறித்து அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் லியோன் பனெட்டா செய்தியாளர்களிடம் கூறியதாவது, இப்போது 5 இலட்சத்து 62 படையினர் உள்ளனர். இந்த எண்ணிக்கையை 4 இலட்சத்து 90 ஆயிரமாக குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு 2017ம் ஆண்டுக்குள் இலக்கை எட்ட முடிவு செய்துள்ளோம். குறிப்பாக கடற்படையில் மட்டும் 20,000 பேரைக் குறைக்க திட்டமிட்டுள்ளோம்.

ஆள் குறைப்பு செய்த போதிலும், நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் வலிமையான இராணுவத்தைத் தொடர்ந்து பராமரிக்க முடியும். மேலும், பல ஆண்டுகளாக சேவையில் உள்ள சில போர் விமானங்கள், படையில் இருந்து விலக்கிக் கொள்ளப்படும். விமானப்படையில் மொத்தமுள்ள 60 படையணிகளில் ஆறினை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். ஏவுகணைகளைச் செலுத்துவதற்கான வசதியில்லாத போர்க் கப்பல்களை விலக்கிக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இராணுவம் சார்ந்த சில பணிகளை ஒப்பந்தமுறையில் விடுவது, பணியாளர்களை முறைப்படுத்துவது போன்றவை மேற்கொள்ளப்படும். இது போன்ற நடவடிக்கைகள் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் 6,000 கோடி அமெரிக்க டொலர்களைச் சேமிக்க முடியும்.

எனினும், உலகம் முழுவதும் எந்தப் பகுதிக்கும் விரைவாகச் சென்று சேரும் வகையில் இராணுவப் படையணிகள் தயார் நிலையில் வைக்கப்படும்.

குறிப்பாக ஆசிய - பசிபிக் பகுதிகளிலும், மத்திய கிழக்கு பகுதிகளிலும் எதிரிகளின் தற்காப்பு அரண்களை தகர்க்க ஏதுவாக அடுத்த தலைமுறை போர் விமானங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். வானில் பறந்தபடியே போர் விமானங்களில் எரிபொருளை நிரப்பும் தொழில்நுட்பத்தைக் கொண்டு வரவுள்ளோம். அவுஸ்திரேலியா மற்றும் பிலிப்பைன்ஸ் அரசுகளின் ஒத்துழைப்புடன் அப்பகுதிகளில் கடற்படையை நிறுத்தி வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று பஹ்ரைனில் ரோந்துக் கப்பலையும், சிங்கப்பூரில் சிறிய அளவிலான போர்க் கப்பலையும் நிறுத்தி வைக்கத் திட்டமிட்டுள்ளோம் என்றார் லியோன் பனெட்டா.

விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற ஜி.4 நாடுகளின் நிலைப்பாட்டில் தற்போதும் உறுதியாக இருப்பதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஜி-4 நாடுகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு உலக நாடுகள் பல ஆதரவு தெரிவித்துள்ளன. இந்தியாவுக்கு ஆதரவாக 85 நாடுகள் கையெழுத்திட்டுள்ளதாகவும், 53 நாடுகள் ஆதரவு தர ஐ.நா.வுக்கான தூதர் ஹர்தீப் சிங் புரி தெரிவித்தார்.

இருப்பினும் ஜி.4 நாடுகளின் ஒருங்கிணைந்த நிலைப்பாட்டுக்கு சீனா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. சீனா தொடர்ந்து ஐ.நா. சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்தியாவுக்கு பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்குவதை சீனா கடுமையாக எதிர்த்து வருவதே இதற்குக் காரணம் என்று குற்றம்சாட்டப்படுகின்றது.

எனினும், வளர்ந்து வரும் நாடுகள் குறிப்பாக ஆபிரிக்க நாடுகளிலிருந்து புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று சீனா கருத்து தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு சான்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டில் தெரிவித்த கருத்திலேயே சீனா உறுதியாக உள்ளது. அந்த மாநாட்டில் இந்தியா, பிரேசில், தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகள் சர்வதேச விவகாரங்களில் ஆக்கபூர்வமான பங்களிப்பைத் தர விரும்புவதை புரிந்து கொண்டுள்ளதாகவும், அதனடிப்படையில் ஐ.நா. சபையில் முக்கியப் பங்கு வகிக்க தான் ஆதரவு தருவதாகவும் சீனா தெரிவித்திருந்தது.

வடகொரியா

துக்க காலத்தில் செல்பேசி பாவிப்பது போர்க் குற்றம்

வடகொரியாவில் அதிபர் 2வது கிம் ஜோங் கடந்த டிசம்பர் மாதம் 17ம் திகதி மரணமடைந்தார். இவரது மறைவின்போது இரங்கல் ஊர்வலத்தில் கலந்து கொள்ளாதவர்களுக்கும், இறுதி சடங்கில் கலந்து கொண்டபோது வாய்விட்டு அழாதவர்களுக்கும் தண்டனை கொடுக்க அந்த நாட்டு நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், செல்பேசி பாவிப்பவர்களுக்கும் தண்டனை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதிபரின் மறைவையொட்டி அந்நாட்டில் 100 நாள் துக்கம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த காலத்தில் யாராவது சீனா நாட்டிற்குள் சென்றாலோ, அல்லது செல்பேசிகளை பயன்படுத்தினாலோ போர் குற்றவாளியாக கருதப்பட்டு தண்டனை வழங்கப்படும் என அரசாங்கம் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது வடகொரியாவில் உணவுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் ஏராளமான மக்கள் சீனாவிற்குள் செல்லும் முயற்சியில் ஈடுபடுவதால் அதை தடுக்கும் நோக்கத்தில் இந்த தடை பிறப்பிக்கப்பட்டு இருப்பதாக கூறப்படுகின்றது.

வங்காளதேசம்

இராணுவப் புரட்சி முறியடிப்பு விசாரிக்க 5 சிறப்பு நீதிமன்றங்கள்

வங்காளதேசத்தில் இராணுவ புரட்சியை ஏற்படுத்தும் சதியில் இராணுவ மேஜர் ஷியாவுல் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டு அது முறியடிக்கப்பட்டது. அந்நாட்டு பிரதமர் ஹசீனா மற்றும் இராணுவத் தலைமைத் தளபதியை கொல்வதற்கும் இவர்கள் திட்டம் தீட்டியிருந்ததும் விசாரணையில் தெரியவந்தது. இது தொடர்பாக கடந்த ஒரு

வாரத்தில் நடந்த தேடுதல் வேட்டையில் ஹிஸ்புத் தஹ்ரீர் தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த சிலரும் பிடிபட்டார்கள்.

இந்த சதித்திட்டத்தில், இராணுவத்தில் உள்ள மேலும் பல அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. எனவே சுமார் 24 அதிகாரிகள் மீது சந்தேகம் இருப்பதாகவும், அது தொடர்பான விசாரணை தீவிரமாக நடைபெற்று வருவதாக தலைநகர் டாக்காவில் இருந்து வெளிவரும் பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த சதி குறித்து விசாரணை நடத்த இராணுவ பிரிகேடியர் ஜெனரல் தலைமையில் டாக்காவில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. பிடிபட்டவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதால் மேலும் 5 சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க இராணுவம் முடிவு செய்துள்ளது.

செட்ஸ் மாகாணத்தில் ஓரினச் சேர்க்கை திருமணம் 2004ம் ஆண்டு சட்டப்பூர்வமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அடுத்த 10 ஆண்டுகளில் 60 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு

உலக அளவில் அடுத்த 10 ஆண்டுகளில் 60 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ஐஎல்ஓ) தெரிவித்துள்ளது. உலக வேலை வாய்ப்பு நிலவரங்கள் 2012 என்ற தகவலை ஐஎல்ஓ வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, 2008ம் ஆண்டில் ஏற்பட்ட சர்வதேச நிதி நெருக்கடியில் இருந்து முழுமையாக மீளாத நிலையில், 2011ல் அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகள் மீண்டும் நெருக்கடியில் சிக்கின. அதனால், தொழில் துறை, தொழில்நுட்பத்துறை உட்பட பல்வேறு துறைகள் பாதித்ததால் வேலை வாய்ப்பும் குறைந்தது. இதை போக்க அரசுகள் மேற்கொண்ட பல நடவடிக்கைகள் பலனளிக்காததால் வேலை வாய்ப்பு விகிதம் தொடர்ந்து குறைந்தது. உலக அளவில் 3ல் ஒருவர் அதாவது 110 கோடி பேர் வேலையின்மை அல்லது வறுமையில் வாடுகின்றனர். தற்போது வேலை வாய்ப்பின்மை 7 சதவீதம் அதிகரித்து 22 கோடியாகியுள்ளது. அதில் பெரும்பான்மையினர் இளைஞர்கள். மேலும், 2011ல் வேலையில்லா இளைஞர்கள் எண்ணிக்கை 7.8 கோடியானது. இருப்பினும், வரும் காலங்களில் உலக பொருளாதாரம் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதால் பல துறைகளில் வேலை வாய்ப்பு பெருகும். அதனால், உலக அளவில் அடுத்த 10 ஆண்டுகளில் 60 கோடி பேருக்கு புதிய வேலை கிடைக்கும் என்று ஐஎல்ஓ தெரிவித்தது.

ஹிட்லரின் மெயின் காம்பிற்குத் தடை!

ஜேர்மனியின் தன்னிகரற்ற தலைவராக உருவாகி, சர்வாதிகாரி என்று பெயரெடுத்து உலகையே ஆட்டிப் படைத்த அடால்ஃப் ஹிட்லரின் மெயின் காம்ப் என்ற நூலிலிருந்து சில பகுதிகளை வெளியிடும் திட்டத்துக்கு சட்ட ரீதியாக தடை எழுந்திருக்கிறது. ஹிட்லருடைய நினைவலைகளைத் தொகுப்பாகக் கொண்ட மெயின் காம்ப் புத்தகத்திலிருந்து சில பகுதிகளைத் தன்னுடைய வாரப் பத்திரிகையில் சிறிது சிறிதாக வெளியிட பீட்டர் மெக் கீ என்பவர் திட்டமிட்டார். ஆனால் ஹிட்லர் பிறந்த பவேரியா மாநில அரசு இந்த நூலின் பதிப்புரிமையை வைத்திருக்கிறது. தன்னுடைய அனுமதி இல்லாமல் யாரும் இதை பதிப்பிக்கக் கூடாது என்று அது கூறிவிட்டது. இந்நூல் தமிழில் விற்பனை யாவது குறிப்பிடத்தக்கது.

பொங்கல் கரும்பு - ஒரு சுவையான வரலாறு

'கரும்பு தின்ன கூலியும் வேண்டுமா?' என்று சொல்வார்கள். கரும்பு என்றாலே தைப்பொங்கல் தான் நம் நினைவுக்கு வரும். கரும்பென்றால் இனிப்பு, இன்பம் என்று சொல்வார்கள். அதனால் தான், தைப்பொங்கல் அன்று கரும்பை முக்கிய உணவாக வைத்து கொண்டாடுகின்றனர். தமிழர்களின் பண்பாட்டில் ஒரு அங்கம் பெற்றுவிட்ட கரும்பு, அதியமானின் முன்னோரால் கொண்டு வரப்பட்டது என்றார், ஔவையார்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் கரும்பை விரும்பிச் சாப்பிடுவர். இதை விரும்பாதவர்கள் யாரும் இருக்கவே முடியாது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கரும்பு பற்றிய சுவையான தகவல்கள் பல உள்ளன. பொங்கல் நாளில் அவற்றில் சிலதை இங்கு பார்ப்போம்.

இது ஒரு புல் வகைத் தாவரம். இது நீண்ட தண்டுகளாகவும், தண்டுகளின் கரணைகளில் இருந்து இலைகள் மேலெழுந்து சோலையாகவும் வளர்கிறது. நெல் பயிரைப் போன்றே கரும்பும் நன்செய் வகை பயிரைச் சேர்ந்தது. இது 12 மாதங்களில் விளையும். வண்டல் மண், கரிசல் மண் பூமியிலும் வளரும். வெப்பம் அதிகம் இருந்தால், கரும்பின் தரம் உயரும்.

சுமார் 8 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தென் பசிபிக் தீவுகளில் கரும்பு முதல் முறையாகப் பயிரிடப்பட்டது. கி.மு. 500ம் ஆண்டில் இந்தியாவில் கரும்பில் இருந்து சீனி தயாரிக்க ஆரம்பித்தனர். இது கி.மு.100ம் ஆண்டில் சீனாவுக்கும் பரவியது. பிரேசில், இந்தியா, சீனா ஆகிய மூன்று நாடுகளிலேயே உலகில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட கரும்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. எனினும், கரும்பு தற்போது 90ற்கும் மேற்பட்ட நாடுகளில் பயிர் செய்யப்படுகிறது. உலகில் 70 சதவீதத்திற்கும் அதிகமான சீனி கரும்பிலிருந்துதான் தயாரிக்கப்படுகிறது. கரும்பில் இருந்து வெல்லம், பழுப்புச் சர்க்கரை, சீனி, கற்கண்டு போன்றவை தயாரிக்கப்படுகின்றன. கரும்பிலிருந்து சாறு பிழிந்தபின் உண்டாகும் சக்கையும் வீணாவதில்லை. இது காகிதம் தயாரிக்க பயன்படுகிறது.

மருத்துவக் குணங்கள்

கரும்பு உடலுக்கு சக்தியையும், பருமனையும் தருகிறது. சிறுநீரகக் கோளாறுகளைச் சரிசெய்கிறது. இதய பலத்தை உண்டாக்குகிறது. வயிற்றிலுள்ள அசுத்தத்தை வெளியேற்றுகிறது. சிறுநீரைப் பிரியச் செய்கிறது. உடலுக்குச் சக்தியும், பருமனும் அளிக்கிறது. வாய்த் துர்நாற்றத்தைப் போக்குகிறது.

செங்கரும்பின் சாறு, வெல்லம், பழுப்புச் சர்க்கரை போன்றவை வாந்தி, பித்தம் போன்றவற்றை குணப்படுத்துகிறது. பழுப்புச்சர்க்கரை கெட்டியான சளியைக் கரைக்கிறது. கரும்புச் சாறு மிகவும் இனிப்பாக இருக்கும். விக்கலைப் போக்கும். உடல் எரிச்சலைத் தணிக்கும். கரும்புச் சாற்றை புளிக்க வைத்து 'காடி' தயாரிக்கப்படுகிறது. இது பசியை உண்டாக்கி ஜீரணத்தை அதிகப் படுத்தும். தாகத்தைக் குறைக்கும். தலைவலி, மயக்கம், தொண்டைப் புண், மூக்கில் நீர் ஒழுகல், ஆகியவற்றிற்கு காடியின் ஆவியை நுகரச் செய்யலாம்.

நிலவரம்
www.nilavaram.com

பொங்கல் என்றால்...

தைத் திங்களின் முதல் நாள். தமிழ் புத்தாண்டு மாதத்தை வரவேற்கும் விதமாக பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. வீடு முழுக்க சுத்தம் செய்து, புதுப் பானையில், அறுவடை செய்த புது நெல்லைப் போட்டு பொங்கல் வைப்பர் இந்த நாளில்.

புதுப்பானையில் இட்ட புத்தரிசி பொங்கி வருவதைப் பார்த்து பொங்கலோ பொங்கல், பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக என்று பாடி, குலவையிட்டு மகிழ்ச்சி அடைவர் தமிழ் மக்கள். இப்படிப் பொங்க விடுவதால்தான் பொங்கல் என்ற பெயர் ஏற்பட்டதாம். நன்கு பொங்கி வழிந்தால் அந்த ஆண்டு முழுவதும் வீட்டிலும் மகிழ்ச்சி பொங்கி வழியும் என்ற நம்பிக்கை தமிழர்களிடம் உள்ளது.

பொங்கல் பண்டிகையின்போது வீட்டின் முன்பு வாசலில், அரிசி மாவால் கோலமிட்டு அலங்கரிப்பர். அரிசி மாவுக் கோலம் இடுவதற்கு முக்கியக் காரணம், எறும்பு போன்ற சிற்றுயிரினங்கள் அதை சாப்பிட்டு நம்மை வாழ்த்திச் செல்லும் என்பதால்தான் அரிசி மாவால் கோலமிடுகிறார்கள். படைக்கப்பட்ட பொங்கலை நம்மைக் காக்கும் தெய்வங்களுக்குப் படையலிட்டு பின்னர் குடும்பத்தோடு உண்டு மகிழ்வது வழக்கம். பொங்கல் பண்டிகையின் நாயகனே சூரிய பகவான்தான். எனவே பொங்கலை வீட்டுக்குள் வைக்காமல், வெட்ட வெளியில், படைப்பதே சிறந்தது.



ச.வி.கிருபாகரன்

1945ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி பிரபல ஆங்கில எழுத்தாளர் ஜோர்ஜ் ஓவெலினால் மிருகங்களின் பண்ணை என்ற கதைப் புத்தகம், நாவல் உலகமகா யுத்தத்தின் முன்னர் சோவியத் ஒன்றியத்தில் ஸ்ராலின் ஆட்சி பற்றி எழுதி வெளியிடப்பட்டது.

ஜோர்ஜ் ஓவேலின் இந்தியாவில் உள்ள பெங்களூரில் 1903ம் ஆண்டு யூன் மாதம் 25ம் திகதி பிறந்தா ஒரு ஆங்கிலேயர். இவரது பிறப்பு பெயர் எரிக் ஆதர் பிளேர். இவர் அரசியல் மாற்றத்திற்கான ஒரு செயற்பாட்டாளர், கட்டுரையாளர், எழுத்தாளர். அத்துடன் தனது ஆக்கபூர்வமான விமர்சனங்களால் பிரபலியமானவர்.

பிரபலமான எழுத்தாளர்கள் நாவலாசிரியர்களைப் பற்றிச் சிந்திக்கும் வேளையில் எனது மனதில் இந்திய உப கண்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜோர்ஜ் ஓவேல், சல்மான் ருஸ்டி அத்துடன் பங்களாதேசை சேர்ந்த பெண் எழுத்தாளர் தஸ்லீமா நஸ்ருதீன் ஆகியோரை நினைவுபடுத்திக் கொள்வேன்.

இதில் தற்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லீம்களான சல்மான் ருஸ்டியும், தஸ்லீமா நஸ்ருதீனும் இஸ்லாம் சமயத்தைப் பற்றிய தமது கருத்துக்களை எழுதியதால் உயிர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டு அதிலிருந்து தப்பி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

ரானல் பிரெஞ்சு தொலைக்காட்சியில் சந்தர்ப்பம் வாங்கித் தரலாம் என்றார்.

ஒரு நாள் காரியாலயத்தில் விரும்பாத சம்பவம் ஒன்று நடந்துவிட்டது. இவ் விடயம் ஐயாவிற்குப் பிடிக்கவில்லை. அன்று மதிய உணவுக்கு சென்ற ஐயா சிவநாயகம் சில மணிநேரம் தாழ்த்தியே வந்தார். காரியாலயத்திற்கு வந்ததும் அவரது வழமையான சிரிப்புடன் 'கிருபா உங்களுக்கு ஒரு அன்பளிப்பு வாங்கி வந்திருக்கிறேன் என்றார்'. அன்று மாலை அந்த அன்பளிப்புப் பொருளை என்னிடம் கொடுத்தார்.

ஆங்கிலத்தில் 'மிருகங்களின் பண்ணை' (Animal Farm) என்ற நாவல் கதை. இதை என்னிடம் கொடுத்துவிட்டு, நீங்கள் இதை படித்து முடித்ததும் இதை தமிழில் மொழி பெயர்த்து எழுதுங்கள் என்றார். இன்றுவரை தமிழில் எழுதுவதற்கு நேரம் கிடைக்கவில்லை. ஆனால் இக்கதை (மிருகங்களின் பண்ணை) யைப் தமிழில் சொல்ல வேண்டிய சிலருக்கு சொல்லியுள்ளேன்.

நாவல்

மிருகங்களின் பண்ணை என்ற நாவல், சோவியத் ஒன்றியத்தில் ஸ்ராலின் காலத்து எதேச்சையான போக்கையும், மோசடிகளையும் மிருகங்களின் கதாபாத்திரங்களைக் கொண்டு விபரிக்கிறது. இதனால் ஜோர்ஜ் ஓவேலினால் பிரித்தானியாவில் இதை பிரசுரிப்பதில் சில தடைகள் இருந்தன. காரணம் இரண்டாம் உலகமாக யுத்தத்தின் பொழுது சோவியத் ஒன்றியம் பிரித்தானியாவுடன் ஒரு நட்பு நாடாக இருந்தது. இறுதியில் இந் நாவல் 1945ம் ஆண்டு பிரித்தானியாவிலும் 1946ம் ஆண்டு அமெரிக்காவிலும் பிரசுரமானது.



மிருகங்களின் பண்ணை

'எல்லா மிருகங்களும் சமமானது, ஆனால் சில மிருகங்கள் மற்றவையைவிட வித்தியாசமானவை'

ஜோர்ஜ் ஓவேலின் மிருகங்களின் பண்ணை, 2005ம் ஆண்டுவரை முதல் நூறு விற்பனை நூல்களில் முன்னணியில் விற்பனையாகும் நாவலாக விளங்கியது.

இங்கு சல்மான் ருஸ்டி எழுதிய 'சாத்தானின் கவிதை அல்லது தஸ்லீமா நஸ்ருதீன் எழுதிய 'வெட்கம்' ஆகிய நாவல் பற்றி எழுத முடியவில்லை.

எனது இளமைக்காலத்தில் மாக்ஸிசம், லெனினிசம், மாவோயிசம் பற்றிய புத்தகங்களை வாசிக்கும் எனது அக்கறையை கவனித்த எனது தகப்பனார், இவற்றில் அக்கறை கொள்ள வேண்டாமென எனக்கு கூறுவதற்குப் பதிலாக, ஜோர்ஜ் ஓவேலின் மிருகங்களின் பண்ணை பற்றிக் கூறுவார். எனது தகப்பனாரின் கதைகளைக் கேட்டுவிட்டு எனது மனதில் மிருகங்களின் பண்ணை என்பது ஒரு கற்பனைக் கதையென மனதில் எண்ணிக் கொள்வேன். இதை நான் மட்டுமல்ல இளமைத் துடிப்பான வயதில் சகலரும் காதல் விவகாரம் உட்பட யாவற்றையும் பெற்றோரின் அறிவுறுத்தல்களை அலட்சியம் செய்வது வழமையானது.

பாரிஸ் வாழ்வு

எனது பிரான்ஸ் வாழ்க்கையை பாரிசில் ஆரம்பித்த சில காலங்களில் பிரபல ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் சுப்பிரமணியம் சிவநாயகம் அவர்களும், தனது புகலிட வாழ்வை பாரிசில் ஆரம்பித்தார். மாலை நேரங்களில் நாம் உரையாடும் வேளைகளில் தனது பத்திரிகைத் துறையின் அனுபவங்களை, விசேடமாக கொழும்பில் ஏரிக்கரை, ரைம்ஸ் ஒப் சிலோன் ஆகிய நிறுவனங்களில் தன்னுடன் பணியாற்றிய பத்திரிகைச் சகாக்கள், ஆசிரியர்களான தாசி வித்தாச்சி, ரேஜி மைக்கல், மேர்வின் டீ சில்வா ஆகியோர் பற்றியும் கதைப்பது வழக்கம்.

திரு சிவநாயகம் அவர்களை பாரிசில் அவருடன் அறிமுகமானவர்கள் ஐயா என மிக அன்பாக அழைப்பார்கள். இவர் தனது இறுதிக் காலத்திலும் துணுக்குகள், பகிடிகள், சுவாரசியம் உள்ள கதைகளை தொடர்ந்து கொண்டிருந்தார். கடந்த நவம்பர் 29ம் திகதி ஐயாவின் முதலாவது நினைவு தினம்.

பாரிசில் வாழ்ந்த ஐயாவிற்கு பிரெஞ்சு மொழி பெரும் தடைக்கல்லாக இருந்தது. இதனால் இவருடைய பிரெஞ்சு நிர்வாக வேலைகளுக்கு ஆங்கிலம், தமிழ், பிரெஞ்சு மொழி பெயர்ப்பாளராகக் கடமையாற்றினேன்.

ஒருநாள் சிவநாயகம் ஐயாவுடன் ஒரு வைத்தியருடனான சந்திப்பிற்குக் காத்திருந்தோம். அவ்வேளையில் நாங்கள் இருவரும் எமது கடந்த காலங்கள் பற்றி உரையாடிக் கொண்டிருந்தோம். அவ்வேளையில் ஐயா என்னிடம் கூறினார் 'எனக்கு இப்பொழுது சாத்திரத்தின்படி துன்பகாலம். உடம்பில் பல்லைத் தவிர சகல பகுதிகளும் பிரச்சினை என்றார். நல்லவேளை கட்டின பல்லு ஆகையால் அதில் பிரச்சினையில்லை என்று கூறிவிட்டு, இப்ப உள்ள துன்ப காலத்திற்கு கட்டின பல்லும் கொதிக்குமோ தெரியாது' என்றார்.

இதைக் கேட்ட நான் சத்தமாக சிரித்தே விட்டேன். இதைக் கவனித்த பிரெஞ்சுகாரர் நீங்கள் நல்ல பகிடிக்கா

ஏழு கட்டளைகள்

இந்த நாவலில் மிருகங்களினிடையே நல்ல ஒழுக்கம், ஒற்றுமை அத்துடன் மிருகங்களின் அடையாளங்களை பேணுவதற்காக ஏழுகட்டளைகளை மிருகங்களின் பண்ணையில் உள்ள மிருகங்கள் யாவும் இணைந்து உருவாக்கினார்கள். அத்துடன் இந்தக் கட்டளைகள் மூலம் மிருகங்கள் மனிதர்கள் இடையே உள்ள பலவீனமான பழக்க வழக்கங்கள் பின் பற்றாதிருக்க முடியுமென எண்ணினார்கள். இதற்குள் ஒரு முக்கிய பிரச்சினை என்னவெனில், எல்லா மிருகங்களிலும் இந்த ஏழு கட்டளைகளையும் நினைவுகொள்ள முடியாத காரணத்தினால் இவற்றை ஒரு சுலோகமாக்கினார்கள். அதாவது ?நாலுகால்கள் உள்ளவை நல்லவை, இரண்டு கால்கள் உள்ளவை கூடாதவை?. இறகுகளும் கால்களாக கணிக்கப்பட்டன.

ஏழு கட்டளைகளாவன :

1) இரண்டு கால்களில் செல்பவை யாவும் எமது எதிரிகள்.
2) நாலுகால்கள் உள்ளவையும், இறகுகள் உள்ளவையும் நண்பர்கள்.
3) மிருகங்கள் உடைகள் அணியப்படாது.
4) ஒரு மிருகமும் கட்டிலில் நித்திரை செய்யக் கூடாது.
5) மிருகங்கள் மது அருந்தக் கூடாது.
6) மிருகங்கள் மிருகங்களைக் கொல்லக் கூடாது.
7) எல்லா மிருகங்களும் சமமானவை.

இதில் வேடிக்கை என்னவெனில் மிருகங்களின் ஒற்றுமை, அடையாளத்தைப்பேண உருவாக்கப்பட்ட ஏழு கட்டளைகளையும், மிருகங்களின் தலைவராக காட்சியளித்த நெப்போலியன் என்ற பன்றி, தனது பன்றி சமூகத்தின் இலாபத்தைக் மனதில் கொண்டு ஏதேச்சையாக மற்றைய மிருகங்களின் ஒத்தாசையில்லாது, சில கட்டளைகளை மாற்றிவிட்டது.

திருத்தியமைக்கப்பட்ட கட்டளைகளாவன :

1) கட்டிலில் போர்வைகளுடன் எந்த மிருகமும் தூங்கக் கூடாது.
2) மிருகங்கள் அளவுக்கு மிஞ்சி மது அருந்தக் கூடாது.
3) மிருகங்களை மிருகங்கள் காரணமின்றி கொல்லக் கூடாது.

அத்துடன் அவர்களது சுலோகமும் மாற்றப்பட்டது. 'எல்லா மிருகங்களும் சமமானவை. ஆனால் சில மிருகங்கள் மற்றவையைவிட வித்தியாசமானவை. இதே வேளை நாலு கால்கள் உள்ளவை நல்லவை, இரண்டு கால்கள் உள்ளவை பறவாயில்லை.'

காரணம் பன்றிகள் மனித வாழ்க்கையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தனர். இம் மிருகங்களின் பண்ணையில் தலைவராக இருந்த நெப்போலியன் என்ற பன்றி பன்றிக் குடும்பத்தின் நன்மைகளைக் காப்பாற்றுவதையே தலையாய கடமையாகக் கொண்டிருந்தது. இதனால் மற்றைய மிருகங்கள் நெப்போலியனால் தினமும் சுரண்டப்பட்டு வந்தார்கள். இவர்களுடன் இணைந்து வேலை செய்த நாய்கள் கூட நெப்போலியனைக் காப்பாற்றுவதற்காக மற்றவர்கள் மீது வசை பாடவும், தேவை ஏற்படும் வேளைகளில் கொலைகள் செய்யவும் பாவிக்கப்பட்டார்கள். நெப்போலியனை நம்பி வாழ்க்கை நடத்திய வண்டியிழுக்கும் குதிரை இறுதியில் நெப்போலியனால் கொலை செய்யப்பட்டார்.

கதா பாத்திரங்கள்.

ஜோசேப் ஸ்ராலினால் நெப்போலியன் என்ற பெயரில் பன்றி. இவரே மிருகங்களின் பண்ணையின் தலைவர். பின்கி என்ற பன்றி, நெப்போலியனின் உணவில் நஞ்சூட்டப்படாமல் ருசி பார்ப்பவர். சிகுலார் என்ற பன்றி பன்றிகளின் சார்பாக மிருகங்களிடையே பிரச்சாரம் செய்வதும், மிருகங்களின் பண்ணை பற்றி பொய்யான புள்ளிவிபரங்களை பரப்புபவர். சினோபோல் என்ற பன்றி நெப்போலியன் என்ற பன்றியை சரிக்கு சரியாக எதிர்ப்பதிலும், மிகவும் பொது அறிவைக் கொண்ட பன்றியாக காணப்பட்டது.

போக்சர் என்ற வண்டி இழுக்கும் குதிரை என்றும் மிருகங்களின் பண்ணைக்காக இரவு பகலாக உழைப்புடன் தானாக சுதந்திரமாக சிந்திக்கும் ஆற்றல் அற்றதுடன், தனது சுலோகமாக நெப்போலியன் என்றும் நியாயமானவர் என்ற சிந்தனை கொண்டது. கிலோவர் என்ற வண்டி இழுக்கும் பெண் குதிரை போக்சரின் உற்ற நண்பரும், கிலோவர் என்றும் நெப்போலியனும் அதனுடைய குழுவும் ஏழு கட்டளைகளை மீறுவதாக அபிப்பிராயம் கொண்டிருந்தது. மொறில் என்ற வெள்ளை ஆடு என்றும் ஏழு கட்டளைகளை கிலோவருக்கு வாசிக்கும் பழக்கம் கொண்டிருந்தது. பென்ஜமின் என்ற கழுதை, யார் மிருகங்களின் பண்ணையின் தலைவராக இருந்தாலும் பிரச்சனைகள் இருக்கும் என்ற அப்பிராயம் கொண்டதுடன் பன்றிகளை எதிர்ப்பதில் தயக்கம் கொண்டிருந்தது.

விம்பர் என்ற மனிதச் சட்டத்தரணியை நெப்போலியன் மிருகங்களின் பண்ணையை சமுதாயத்தில் நிலைப்படுத்த அமர்த்தப்பட்டதிலிருந்து மிருகங்களுக்கும் மனிதர்களுக்கு மிடையிலான தொடர்பு ஆரம்பமாகியது.

இதனால் மிருகங்களுக்கிடையில் தடுமாற்றங்கள் உருவாகின. மிருகங்களின் பண்ணையில் இன்னும் பல கதாபாத்திரங்கள் சிறு சிறு பாத்திரங்கள் வகிக்கின்றன.

இவ் நாவலின் முடிவில் மிருகங்கள் எப்படியாக சுரண்டல் வாழ்க்கை வாழ்கின்றன என்பது தெளிவாகின்றன. மிருகங்களின் பண்ணையில் நிர்மாணிக்கப்பட்ட பாடசாலை மற்றைய மிருகங்களுக்கு அல்லது பன்றிகளின் நன்மைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டன. அத்துடன் நாவல் முக்கியமாகக் கூறுவதென்ன வெனில், தமது மற்றைய பிரஜைகள், அங்கத்தவர்களைச் சமனாக நடத்தத்தவறும் பட்சத்தில் நிச்சயமாக சமுதாயத்தில் சர்ச்சைகள் காணப்படும் என்பதே.

முற்றும்

புதிய தலைமுறைகள்

முயல் இருக்கும் பகுதிக்கு ஆமை இரை தேடி வந்தது. இரை கிடைக்காமல் போகவே சோகத்தோடு மரத்தடியில் வந்து அமர்ந்தது. அப்போது தான் இரை தேடிவிட்டுத் திரும்பிய முயலுக்கு ஆமையைக் கண்டதும் கோபம் வந்தது.

"இங்கே ஏன் வந்தாய்? உங்கள் இனத்தைப் பார்க்கவே எனக்கு அருவருப்பாக இருக்கிறது. என் எதிரில் நிற்காதே. ஓடிப்போ" என்று எரிந்து விழுந்தது.

ஆமை உணவு கிடைக்காத சோகத்தில் இருந்தது. முயலின் எதிர்ப்பு அதை மேலும் வேதனைப்படுத்தியது.

"முயல் நண்பரே, நான் உங்களுக்கு என்ன கொடுமை செய்தேன்? முதன் முதலாக இப்போது தானே உங்களைப் பார்க்கிறேன்? இந்தக்காடு எல்லோருக்கும் தானே உரியது? மனிதர்களைப் போல உன் இடம், என் இடம் என்று உரிமை கொண்டாடுவது நியாயமா?" என்று அழுதது.

"உங்க இனத்துக்கும், எங்க இனத்துக்கும் உள்ள பகை பல தலைமுறையானது. வேகமாக ஓடும் என் மூதாதையர் ஒருவர் ஏமாந்த நேரம் பார்த்து, உன் மூதாதையர் ஒருவர் ஓடி வந்து பந்தயத்தில் வெற்றி அடைஞ்சதால அந்தக் களங்கம் இன்னிக்கு வரை இருந்துகிட்டுதானே இருக்கு?" என்று பழைய கதையைச் சொன்னது.

"முயலே, விளையாட்டில் வெற்றி–தோல்வி இயற்கைதானே? முயல் தானே 'ஆமையால் என்னை வெல்ல முடியாது'ன்னு ஏளனம் பேசி மர நிழலில் தூங்கியது? கர்வம்தானே முயலின் தோல்விக்கு காரணம்?" என்று நியாயம் பேசியது.

புதிய தலைமுறையான ஆமை கூறியதைக்கேட்ட முயலுக்கு, ஆமையின் பேச்சில் உள்ள நியாயம் உறைத்தது. மேலும், பழைய தலைமுறை பகை தேவையற்றது என்பதும் புரிந்தது.

"ஆமையே, மனிதர்கள்தான் பகையை தங்களோடு முடித்துக் கொள்வது இல்லை. அதைத் தலைமுறை தலைமுறையாக நீர் ஊற்றி முள் காடாக வளர்க்கிறாங்க. புதிய தலைமுறைகள் இதை எல்லாம் ஒதுக்கிவிட்டு சகோதரர்களாக வாழ்வதுதான் நாகரீகம், பண்பாடும் கூட! இனி நீ வேறெங்கும் போகாதே. இங்கேயே என்னோடு தங்கிவிடு. உன்னைப் பார்த்தால் பசியில் இருப்பது புரிகிறது" என்று கிழங்கு

மற்றும் பழ வகைகளை ஆமைக்குச் சாப்பிடக் கொடுத்தது முயல். இரண்டும் நீண்ட காலம் நண்பர்களாக வாழ்ந்ததோடு, தங்கள் இனத்தாரையும் ஒற்றுமையாக வாழ அறிவுறுத்தின.

- தா.ஆறுமுகம்

இனியவைகூறல்

குறள்-91

இன்சொலால் ஈ.ரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும்.



இளையோர்களே இது உங்களுக்கான உலகம். இங்கு உங்கள் ஆக்கங்களை, ஆரோக்கியமான விடயங்களை மற்றவர்களுடன் எழுதிப் பகிர்ந்துகொள்ளுங்கள். *இது உங்களுக்கான களம்...*

புதிர்க் கேள்வி

அந்தப் பண்ணையாருக்கு ஒன்பது பிள்ளைகள். புது வருடப் பிறப்பன்று 9 பேருக்கும் ஒரே விதமான 9 வெள்ளித் தட்டுகளைப் பரிசாக வழங்கினார் பண்ணையார். அவை அபூர்வமான வேலைப்பாடு உடையவை. பார்க்கும்போதே அதன் அழகு கண்ணைப் பறிக்கும். ஆனால், அவற்றைத் தயாரித்தவர் ஒரு தட்டை மட்டும் நிறை குறைவாகச் செய்து விடுகிறார். சிறிய வித்தியாசம் தான். பார்த்தால் ஒன்றுக்கொன்று வித்தியாசமே தெரியாது. ஆனால், இது எப்படியோ அந்த பண்ணையாருக்குத் தெரிந்து விட்டது. 9 தட்டுகளில் ஒன்று மட்டும் நிறை குறைவாக இருப்பதை அவர் விரும்பவில்லை. நிறை குறைவான தட்டைக் கண்டுபிடிக்கலாம் என்றால், தராசு மட்டுமே இருக்கிறது. எடைக்கல் இல்லை. இருந்தாலும் இரண்டு முறை மட்டுமே தராசைப் பயன்படுத்தி நிறை குறைவான எடையைக் கண்டுபிடித்து விடுகிறார். எப்படி?

சென்ற புதிர் கேள்விக்கான விடை

5 மலர்கள், 6 வண்டுகள்.

கிழமைகளின் பெயர்கள் வந்ததெப்படி?

ஒரு வாரத்துக்கு ஏழு நாட்கள் இருப்பது உங்களுக்குத் தெரிந்தது. வாரத்துக்கு ஏழு நாட்கள் என்று கணக்கிட்டவர்கள் எகிப்தியர்கள். அதுமட்டுமல்ல, அவற்றிற்கு பெயர் வச்சதும் அவர்கள்தான். அதைத்தான் ரோமானியர்களும் பின்பற்றினார்கள். பின்னர் உலகம் முழுவதும் இந்தப் பெயர்களே பிரபலமாகின. இதில் 5 கோள்களின் பெயர்களை நாட்களுக்கு வைத்தார்கள்.

சூரியனோட பெயர், ஞாயிறு. இதுதான் வாரத்தோட முதல் நாள். மறுநாள் திங்கட்கிழமை. இது, சந்திரனோட பெயர். 'மார்ஸ்' (செவ்வாய்க்கோள்) என்பது



ரோமானியர்களோட போர்த் தெய்வம் அதுதான் செவ்வாய்க்கிழமை. 'மெர்குரி' (புதன் கோள்) என்பது தான் புதன்கிழமை. 'தர்' என்பது ரோமானியர்களோட இடித்தெய்வம். அதுவே 'தேர்ஸ்டே' (வியாழக்கிழமை) ஆனது. 'பரீக்' என்பது ரோமானியர்களின் மற்றொரு தெய்வத்தின் மனைவி பெயர். அதுவே 'ப்ரைடே' (வெள்ளிக்கிழமை) ஆயிற்று. சனிக் கோளின் பெயர் தான் 'சனிக்கிழமை'. ரோமானியர்கள், ஒரு நள்ளிரவுல இருந்து அடுத்த நள்ளிரவு வரைக்கும் இடைப்பட்ட காலத்தை ஒரு நாளாகக் கணக்கிட்டனர். அந்த முறையைத்தான் இன்று எல்லா நாடுகளும் பின்பற்றி வருகின்றன.

சிரிப்புத் தோன்றியது எப்படி?

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சிரிக்கிறோம். இந்தச் சிரிப்பு எப்படித் தோன்றியது? இதைப் பற்றி விஞ்ஞானிகளுக்கிடையில் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. குரங்கு இனம் பரிணாம வளர்ச்சி பெற்றுத்தான் மனிதர்கள் உருவானார்கள் என்று உங்களுக்கு நன்றாகவே தெரியும். நம் சிரிப்பு, நம் முன்னோர்களான குரங்குகளிலிருந்துதான் வந்தது என்று ஒரு கருத்து இருக்கிறது. அஞ்சும்போதும், மற்றவர்களின் இரக்கத்தைப் பெறுவதற்காகவும் பற்களை இளித்துக் காட்டுவது சாதாரணக் குரங்குகளின் இயல்பு. சிம்பன்சி எனப்படும் மனிதக் குரங்கின் இயல்பும்கூட இதுதான். இந்த இளிப்பிலிருந்துதான் சிரிப்பு உருவானது. ஆனால்

இது சரியான கருத்து இல்லை என்று மற்ற சில விஞ்ஞானிகள் மறுக்கிறார்கள். நமக்குச் சிரிப்பை உருவாக்குகிற தசை நாண்களும், குரங்குகளுக்குச் சிரிப்பை ஏற்படுத்துகிற தசை நாண்களும் ஒரே மாதிரி இல்லை என்பதுதான் இந்த மறுப்பிற்குக் காரணம். மனிதர்களின் சிரிப்பும், குரங்குகளின் சிரிப்பும் வித்தியாசமானவை. மற்ற சில

விஞ்ஞானிகள், விலங்குகளின் விளையாட்டிலிருந்துதான் சிரிப்பு தோன்றியிருக்கும் என்று சொல்கிறார்கள். மிருகங்கள் விளையாடும்போது, வாயை ஒரு குறிப்பிட்ட விதத்தில் திறந்து வைத்துக்கொண்டுதான் விளையாடும். அப்போது அவற்றின் முகத்தில் சிரிப்பைப்போன்ற ஒரு பாவத்தை தோன்றச் செய்கிற அதே தசை நாண்களைத் தான் மனிதர்கள், தாங்கள் சிரிக்கும்போதும் பயன்படுத்துகிறார்கள். நமது மூதாதைகளான குரங்குகளிலிருந்து தான் நமக்கு சிரிப்பு கிடைத்தது என்று இந்த விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். எப்படியானாலும், நாம் சிரித்துச் சந்தோசமாக இருக்கவேண்டும் என்பதுதான் முக்கியம்.

கடவுளுக்குப் பிடித்த வாசனை

நாளைக்கு இந்த ஊருக்கு கடவுள் வரப் போகிறார். அவருக்குப் பிடித்த வாசனை யார் மேல் வீசுகிறதோ, அவரை இந்த நாட்டின் அரசனாக்கப் போகிறார்` என்று ஊரெங்கும் தகவல் பரவியது. மறுநாள் அந்த கிராமத்தில் இருந்த அனை வரும் அதிகாலையிலேயே எழுந்து குளித்தனர். சிலர் சந்தனம் தடவிக் கொண்டனர். அத்தர், பன்னீர் என்று எத்தனை வாசனைப் பொருட்கள் உண்டோ, அத்தனையையும் உடலில் பூசிக் கொண்டு கடவுள் வருகைக்காக காத்து நின்றனர்.

கடவுள் வந்தார். ஒவ்வொருவரின் வாசனை யையும் நுகர்ந்து கொண்டே சென்றார். ஆனால், யாருடைய வாசனையும் அவருக்குப் பிடிக்கவில்லை. இப்படியே ஒவ்வொருவராக நுகர்ந்து, கடைசியில் ஊரின் எல்லைப்பகுதிக்கே வந்துவிட்டார். அங்கு வெயிலைக்கூட பொருட்படுத்தாது ஒரு விவசாயி நிலத்தை கொத்திக் கொண்டிருந்தான். அவன் உடம்பிலிருந்து வியர்வை வெள்ளமாய் வழிந்து கொண்டிருந் தது. கடவுள் நின்றார், கவனித்தார், சுவாசத்தை உள்ளுக்கிழுத்தார். அந்த உழைப்பின் வியர்வை மணம், அவரை கூடுதலாக உவகை கொள்ளச் செய்தது. அந்த விவசாயின் கழுத்தில் மாலையிட்டு, அவனை அந்த நாட்டின் அரசனாக்கினார்.

- வி. நடராஜன்



பசிலனின் இன்னொரு போர்முகம் பால்ராஜ்



26

இந்திய இராணுவத்திற்கு எதிராக அகிம்சை வழியிலும், ஆயுத வழியிலும் போராடிய ஓரேயொரு போராளி

விடுதலைப் புலிகளின் அரசியல் பேச்சாளர் யோகரட்ணம் யோகி அவர்கள் இந்திய இராணுவத்தின் அம்புலன்சில் வந்து இறங்கியது அங்கிருந்த மக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இராணுவத்தினர் வந்து சொன்னால் மக்கள் உண்ணாவிரதத்தை இடை நிறுத்த மாட்டார்கள் என்பதை அறிந்து, இந்தியப் படையினர் யோகி அவர்களை அங்கு கொண்டு வந்து வலுக்கட்டாயமாக போராட்டத்தை நிறுத்த முயற்சிக்கின்றனர் என்றே மக்கள் எண்ணினர்.

இதனால் அங்கு ஒரு குழப்பநிலை



கப்டன் திருச்செல்வம்
(அந்தோனி குரூஸ் அல்போன்ஸ்)
செல்வபுரம் - முல்லைத்தீவு
வீரச்சாவு - 15.12.1987

எழுந்தது. அந்நிலையில் வன்னி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மேஜர் மாறன், யோகரட்ணம் யோகி அவர்களை மேடையில் உரையாற்ற வருமாறு அழைக்கின்றார். இதனால், உண்மை நிலையை மக்களுக்கு விளக்குவதற்காக மேடையில் ஏறி யோகி அவர்கள் உரையாற்ற வேண்டியிருந்தது.

இவரது உரைக்கு முன்னதாக கடந்த சில நாட்களாக பலாலியில் நடந்த சில சம்பவங்கள் மிக முக்கியமானவை. தியாகி திலீபனின் உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்காக இந்திய இராணுவ உயர்மட்டத் தலைவர்கள், தமிழீழத் தேசியத் தலைவருடன் பேச்சுக்களை நடத்திக்கொண்டிருந்தனர். தினமும் இந்த பேச்சுக்கள் பலாலியில் நடக்கும். ஆனால், இந்தப் பேச்சுக்கள் பிரயோசனமற்றதாகவே இருந்தன. திலீபனின் உண்ணாவிரதத்தின் போது முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கைகளை விடுத்து, இந்திய இராணுவ உயர் மட்டத்தினர் வேறு விடயங்களை நிறைவேற்றுவதாக வாக்குறுதிகளை அளித்துக் கொண்டிருந்தனர். இதனால், ஒவ்வொரு நாளும் பேச்சுக்கள் இழுபட்டுக்கொண்டே சென்றன. இந்த நிலையில்தான் 26.09.1987 அன்று பேச்சுக்கள் நடந்துகொண்டிருந்த போது, திலீபனின் சாவுச் செய்தி தலைவரை வந்தடைகின்றது. செய்தியை அறிந்த தலைவர் பேச்சுக்களை இடை நிறுத்தி விட்டு, இடையிலேயே எழுந்து வந்துவிட்டார். *(இந்தப் பேச்சுக்களின் போது நடந்த சம்பவங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. அதனை பெட்டிச் செய்தியில் பார்க்கவும்)*

திலீபனின் சாவினால் அதிர்ச்சியடைந்த இந்தியத் தரப்பு, விடுதலைப் புலிகளின் ஐந்து அம்சக் கோரிக்கைகளை ஏற்பதற்கு முடிவு செய்தது. கோரிக்கைகளை ஏற்பதாகவும் ஏனைய உண்ணாவிரதப் போராட்டங்களை இடைநிறுத்துமாறும் விடுதலைப் புலிகளிடம் இந்திய தரப்பு கோரிக்கை விடுத்தது. இந்த நிலையில்தான் அன்று மாலை திருச்செல்வத்தின் உண்ணாவிரதப் போராட்டத்தை இடைநிறுத்துமாறு தலைவர், யோகி அவர்களை முல்லைத்தீவிற்கு அனுப்பி வைத்திருந்தார். திருச்செல்வத்தின் நிலைமை மிகவும் மோசமாக இருந்ததால் அவரை யாழ். மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளிப்பதே சிறந்தது என்பதால் உலங்குவானூர்தி ஒன்றும் முல்லைத்தீவிற்கு வந்திருந்து.

இந்நிலையில், உண்ணாவிரத மேடையில் ஏறி மக்கள் முன் உரையாற்றிய யோகி அவர்கள், உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்துவதற்கு தலைவர் அவர்களே முடிவு செய்துள்ளார் என்பதையும் அதனால், திருச்செல்வத்தை அங்கிருந்து உடனடியாக சிகிச்சைக்கு கொண்டு செல்லவுள்ளதையும் மக்களுக்கு எடுத்து விளக்கினார். கடந்த சில நாட்களாக இந்திய இராணுவத்தினரின் உயர்மட்ட அதிகாரிகளுடன் பலாலியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளையும், அதன் போது எந்த முடிவும் எட்டப்படாத நிலையில், திலீபனின் சாவுடன் இந்தியா, தமிழ் மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு இணங்கியுள்ளதையும் எடுத்து விளக்கியவர், இன்னொரு சந்தர்ப்பத்தை இந்தியாவிற்கு வழங்குவதற்காக இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை இடைநிறுத்தி அவர்களுக்கு இன்னோரு சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு தலைவர் முடிவு செய்துள்ளதையும் மக்களுக்கு எடுத்துக் கூறினார். அவரது உரையின் பின்னரே மக்கள் அமைதியானர்கள்.

அதன் பின்னர் உடனடியாக 'அம்புலன்சில்' இருந்து ஒரு ஸ்ரெட்சர் கொண்டுவரப்பட்டு அதில் திருச்செல்வத்தை தூக்கிக் கொண்டு அம்புலன்சில் ஏற்றி முகாமிற்கு கொண்டு சென்றவர்கள், உடனடியாகவே அங்கிருந்து உலங்குவானூர்தியில் யாழ். பொது மருத்துவமனைக்கு கொண்டுசென்று சிகிச்சைக்கு உட்படுத்தினர். தீவிர சிகிச்சையின் பின்னர் திருச்செல்வம் மருத்துவமனையில் இருந்து வெளியேறி ஒரு சில நாட்களில் இந்திய இராணுவத்துடனான போர் ஆரம்பித்துவிட்டிருந்தது.

இந்தியாவுடன் அகிம்சை வழியில் போரிட்டு வெல்ல முடியாத திருச்செல்வம், இந்திய இராணுவத்திற்கு எதிராக ஆயுதத்தை கையிலெடுத்தார். இந்திய இராணுவத்துடன் அகிம்சை வழியிலும் அயுத வழியிலும் போராட்டம் நடத்திய ஓரேயொரு போராளி என்ற பெருமை திருச்செல்வத்தையே சாரும். இந்தியா இராணுவத்துடனான போரில் ஆரம்பத்தில் கோப்பாயில் இந்தியா இராணுவத்துடனான சண்டையில் திருச்செல்வம் ஈடுபட்டவர். பசிலன் முல்லைத்தீவு திரும்பிய நிலையில், கோப்பாயில் பால்ராஜ் அண்ணையின் அணியில் இவர் சண்டையில் ஈடுபட்டார். பின்னர் பால்ராஜ் அண்ணையுடன் அங்கிருந்து முல்லைத்தீவிற்கு சென்று பசிலனுடன் இணைந்து முல்லைத்தீவில் இந்திய இராணுவத்திற்கு எதிரான தாக்கதலிக்களில் ஈடுபட்டார். அப்போதுதான் முல்லைத்தீவின் 08.11.87 அன்று இந்திய இராணுவத்தினர் மீது வெற்றிகரமாக தாக்குதலை நடத்திவிட்டு திரும்பிக்கொண்டிருந்த வேளை, படையினர் ஏவிய எறிகணையில் மேஜர் பசிலன் அவர்கள் காயமடைந்தார். காயமடைந்த பசிலனை வாகனத்தில் ஏற்றிய போது திருச்செல்வத்தின் மடியிலேயே அவர் படுக்க வைக்கப்பட்டிருந்தார். ஆனால், சிகிச்சை அளிப்பதற்கு முன்பாக அதே திருச்செல்வத்தின் மடியிலேயே பசிலன் அவர்கள் உயிரைவிட்டிருந்தார். அப்போது பசிலனின் இரத்தத்தால் திருச்செல்வத்தின் உடல் தோய்ந்திருந்தது. பசிலன் வீரச்சாவைத் தழுவிய ஒரு மாத காலத்தில் திருச்செல்வமும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். மக்களுக்காக தங்கள் உயிர்களை கொடுக்கக் கூடியவர்கள் விடுதலைப் புலிகள் மட்டும்தான் என இயலாத நிலையிலும் உண்ணாவிரத மேடையில் உரையாற்றிய திருச்செல்வம், அதே மக்களுக்காக சாவை அணைத்துக்கொண்டார்.

திருச்செல்வத்தின் வீரச்சாவின் பின்னர் அவரது சகோதர் (தம்பி) ஒருவர் போராட்டத்தில் இணைந்து கொள்கின்றார். விடுதலைப் போராட்டத்தில் அவருக்கும் திருச்செல்வம் என்றே பெயர் சூட்டப்பட்டது. சிறீலங்கா இராணுவத்தின் 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கைக்கு எதிராக நடைபெற்ற மோதலில் 14.05.1997 அன்று மேஜர் திருச்செல்வம் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். விடுதலைப் போராட்டத்திற்கு கப்டன் திருச்செல்வம், மேஜர் திருச்செல்வம் என இரு போராளிகளை விலையாகக் கொடுத்திருந்தது அவர்களின் குடும்பம்.

(வரலாறு விரியும்)

பேச்சுவார்த்தையின் போது தலைவரைக் கொல்வதற்கு குறிவைத்த இந்தியா

திலீபனின் உண்ணாவிரதத்தின் போது பலாலியில் இந்திய இராணுவத்துடன் தலைவர் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தார். ஐந்து அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்றாமல், வேறு திட்டங்களை முன்வைத்து அதற்கு இணங்குமாறு வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில் பேச்சுக்கள் ஒவ்வொரு நாளும் இழுபறியுடன் தொடர்ந்து கொண்டிருந்தது. இந்தப் பேச்சுக்களில் இந்தியாவின் சார்பில் தூதுவர் ஜே.என்.டிக்சிற், இந்தியப் படையின் தென்பிராந்தியாத்தின் தளபதி லெப்.ஜெனரல் திபேந்தர் சிங், அமைதிப்படையின் தளபதி ஹர்ஹர சிங், இந்தியத் தூதரகப் பாதுகாப்பு அதிகாரி குப்தா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகள் சார்பில் தலைவருடன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும் மேலும் இருவரும் கலந்துகொண்டிருந்தனர். பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் கலந்துகொண்டிருந்த இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாட்களை இழுத்தடித்து, தலைவரைக் கொலை செய்வதற்கு இந்தியப் படையினர் திட்டமிட்டிருந்தனர். பேச்சுக்களில் கலந்துகொண்டு விட்டு, திரும்பி செல்லும்போது வழியில் வைத்து தலைவர் மீது துப்பாக்கி சூட்டை நடத்துவதற்கு தமிழ் விரோதக் குழுவொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். ஒவ்வொரு நாளும் அதற்கான சந்தர்ப்பத்தை இந்தக் துரோகக் குழுவினர் எதிர்பார்த்துக் காத்திருந்துள்ளனர். ஆனால், பேச்சுவார்த்தைக்கு செல்லும்போது ஒரு வாகனத்தில் செல்லும் தலைவர், பேச்சுவார்த்தை முடிந்து திரும்பும் போது வேறு வாகனத்தில், பாதைகளை மாற்றி சென்று விடுவதால் தாக்குதலை நடத்த தயார் செய்யப்பட்டவர்களால், தலைவரின் வாகனத்தை இனங்கண்டு தாக்க முடியவில்லை. இந்நிலையில், 26ம் திகதி மாலை தலைவர் பேச்சுக்களை முடித்துக்கொண்டு திரும்பும்போது தாக்குதவதற்கான திட்டமிடல்களை ஒழுங்குபடுத்தி, அன்று வெற்றிகரமாக தாக்குதல் நடத்த முடியும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். ஆனால், அன்றைய தினம் திலீபனின் சாவினை அறிந்து தலைவர், பேச்சுக்களை இடையிலேயே முறித்துக்கொண்டு காலையிலேயே அங்கிருந்து புறப்பட்டுவிட்டதால் அன்றும் அவர்களால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. அதன் பின்னர் தலைவர் இந்திய இராணுவத்துடன் எந்தப் பேச்சுக்களிலும் பங்கேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பேச்சுவார்த்தையின் போதே தலைவரைக் கொல்வதற்கு இந்தியப் படையினர் குறிவைத்திருந்ததையும், அதில் தானும் ஈடுபட்டிருந்ததையும் பின்னாளில் விடுதலைப் புலிகளிடம் பிடிபட்டிருந்த ஒரு தேசத் துரோகி ஒத்துக்கொண்டிருந்தார்.

ஒரு முன்னாள் போராளியின் நினைவுப் பதிவில் இருந்து...

- விதானையார் -



பசிலனின் இன்னொரு போர்முகம் பால்ராஜ்



27

வைகோவிற்கு பாதுகாப்பு வழங்கிய பால்ராஜ்

இந்திய இராணுவத்தின் முற்றுகை மிகவும் இறுக்கமாக இருந்த 1989ம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதி. தலைவரைச் சந்திப்பதற்கு சென்றிருந்த பால்ராஜ் அண்ணையிடம் இருந்து ஒரு தகவல் வந்திருந்தது. தண்ணீரை அதிகமாகக் கொதிக்க வைத்து ஆற வையுங்கள் என்று.

மலேரியா நோயைத் தடுப்பதற்காக தண்ணீரை எப்போதும் சூடாக்கி ஆறிய பின்னரே அருந்துவது வழக்கம். அந்த வகையில் தண்ணீரை அதிகளவில் சூடாக்கி ஆற வைக்குமாறு பால்ராஜ் அண்ணை பணித்திருந்தார். அதன்படி போராளிகள் தண்ணீரை கொதிக்க வைத்து ஆற வைத்திருந்தனர். இந்நிலையில், ஒரு பகல் பொழுதில் பால்ராஜ் அண்ணை களிக்காடு கோடாலிக்கல்லிலுள்ள விக்ரம் முகாமிற்கு வந்திருந்தார். வந்திருந்த பால்ராஜ் அண்ணையின் அணியில் ஒருவர் புதியவராக இருந்தார். மிகவும் உயர்ந்த தோற்றத்துடன், வெள்ளை நிறமாக இருந்த அவரைப் பார்த்த

போது போராளிகள் எல்லோருக்கு ஆச்சரியம். யாரோ மூத்த போராளி என்றுதான் எல்லோரும் நினைத்திருந்தார்கள்.

காரணம் அவரது தோற்றமும், இராணுவ சீருடையை ஒத்த உடையையும் அவர் அணிந்திருந்ததுடன், கழுத்தில் சயனைட் குப்பியையும் அணிந்திருந்தார். விடுதலைப் புலிகளில் இருந்த மூத்த போராளிகளை அங்கிருந்த போராளிகளுக்கு தெரிந்திருந்த போதும், இவர் யார் என்பதில் போராளிகளுக்கு குழப்பமாகவே இருந்தது. இவர் யார் என போராளிகள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டிருந்தபோது, 'இவர்தான் வை.கோபாலசாமி ஐயா' என அறிமுகம் செய்து வைத்தார் பால்ராஜ் அண்ணை. (தற்போது இவர் ம.தி.மு.கவின் பொதுச் செயலர் வைகோ)

இந்திய இராணுவத்தின் நெருக்கடிமிக்க காலத்தில், மிகவும் இறுக்கமாக முற்றுகையிடப்பட்டிருந்த காலத்தில் தலைவரைச் சந்திப்பதற்காக வன்னிக்கு வந்திருந்தவர் வைகோபாலசாமி என்பது தெரியும். ஆனால், அப்போது அவர் எவ்வாறு இருப்பார் என்பது போராளிகள் பலருக்கு தெரிந்திருக்கவில்லை. இராணுவ சீருடையில் அவரைக் கண்டதும் போராளிகளுக்கு ஆச்சரியமாகத் தான் இருந்தது. தலைவரைச் சந்தித்து விட்டு தாயகம் திரும்புவதற்கு அவர் தயாராகியிருந்தார். தாயகத்திற்கு அவரைப் பாதுகாப்பாக அனுப்பி வைக்கும் பொறுப்பை தலைவர் பால்ராஜ் அண்ணையிடமே ஒப்படைத்திருந்தார். அதனால் தலைவரிடம் இருந்து வை.கோபாலசாமியை பொறுப்பேற்று அழைத்துக்கொண்டு முகாமிற்கு வந்த பால்ராஜ் அண்ணை, அங்கிருந்து அவரை அலம்பிலுக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து நல்லதண்ணித் தொடுவாய் ஊடாக இந்தியாவிற்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

கோடாலிக்கல்லு முகாமில் இருந்து அவரை நல்லதண்ணித் தொடுவாய்க்கு அழைத்து செல்லும் பணியில் போராளிகள் ஈடுபட்டிருந்தனர். மணலாறு நித்திகைக்குளத்தில் இருந்து தண்ணிமுறிப்பு வழியாக பழம் பாசிக்கு சென்று அங்கிருந்து கோடாலிக்கல் விக்ரம் முகாமிற்கு பால்ராஜ் அண்ணை அழைத்து வந்திருந்தார். அங்கிருந்து அவரை பாதுகாப்பாக அலம்பிலுக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. காரணம் ஏற்கனவே வை.கோபாலசாமி அவர்கள் மணலாற்றில் இருப்பதை அறிந்திருந்த இந்தியப் படையினர், அவரை அங்கு வைத்து உயிருடனோ, பிணமாகவோ பிடிப்பதற்கு பகீரதப்பிரயத்தனங்களை எடுத்துக்கொண்டிருந்தனர். இதனால் இந்திய இராணுவத்தினரின் முற்றுகை மிக இறுக்கமாகவே இருந்தது.

இந்நிலையில் அவரது பயணம் பாதுகாப்பாக இருக்க வேண்டியது மட்டுமல்ல, இரகசியமாகவும் இருக்க வேண்டும் என்பதால் பால்ராஜ் அண்ணை அவரைப் பாதுகாப்பதில் அதிக கவனம் எடுத்திருந்தார். விக்ரம் முகாமில் இருந்து அவரை அழைத்துக்கொண்டு அலம்பில் நாலாம் கட்டையில் காத்திருக்கும் படகு அணியிடம் அவரை ஒப்படைக்க வேண்டியிருந்தது. அதற்காக அவரை அங்கிருந்து களிக்காடு காட்டு வழியாக முட்கள் நிறைந்த பாதை ஊடாக மதவாளசிங்கம் குளத்திற்கு அழைத்துச் சென்று, பின்னர் அங்கிருந்து பூதம்வயல் சென்று உடுப்புக்குளம் ஊடாக அங்கிருந்து அல்லம்பில் 4ம் கட்டையடிக் கடற்கரைக்கு செல்லவேண்டியிருந்தது.

இதேநேரம், காடு முழுவதும் நடந்து திரிந்தமையால் வை.கோபாலசாமியின் பாதம் புண்ணாகியிருந்ததுடன், அதிக தூரம் நடந்தமையால் கால்கள் இறுகி நடப்பதற்கும் அவர் பெரும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தார். இந்நிலையில் சில இடங்களில் போராளிகள் அவரை தூக்கியே செல்லவேண்டியிருந்தது.

அல்லம்பிலில் படகேற்றும் வரை அவரது பயணம் பாதுகாப்பாகவே இருந்தது. எனினும் அங்கிருந்து படகில் அவர் நல்ல தண்ணித் தொடுவாயைச் சென்றடைந்திருந்தபோது, அங்கு இராணுவத்தினருடன் மோதல் ஒன்று ஏற்பட்டுவிட்டது. இந்த மோதலில் வைகோவை காப்பாற்றும் பணியில் லெப்.சரத் என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

மாவீரர் தினத்தன்று வீரச்சாவைத் தழுவிய கப்டன் அலன்

அது 27.11.1987. தேசியத் தலைவரால் மாவீரர்நாள் அறிமுகப்படுத்தவதற்கு சரியாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர். இந்திய இராணுவத்துடனான போர் ஆரம்பமாகி கடுமையாக இடம்பெற்றுக் கொண்டிருந்த காலம் அது. மேஜர் பசிலனின் வீரச்சாவின் பின்னர் இந்திய இராணுவத்தினர் மீதான தாக்குதல்களை போராளிகளும் அதிகரித்திருந்தனர். குறிப்பாக முல்லைத்தீவில் இந்தியா இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த முகாம்கள் மீது போராளிகள் அடிக்கடி தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தனர். அந்தவகையில் தான் 27.11.1987 அன்று முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் முகாம் அமைத்து தங்கியிருந்த படையினர் மீது தாக்குதல் ஒன்று நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டிருந்தது. மேஜர் தாடிபாலா தலைமையில் பாடசாலையினுள் முகாம் அமைத்திருந்த படையினர் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. பாடசாலையின் உள்ளே நுழைந்து தாக்குதலை நடத்துவதற்கு முனைந்த கப்டன் அலன் படையினரின் வேட்டுக்களில் வீரச்சாவைத் தழுவிக்கொள்கின்றார். எனினும், எனைய போராளிகள் இந்தியப் படையினர் மீது தாக்குதலை தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில்தான், வேறு ஒரு முனையில் தாக்குதல் ஒன்றுக்காக சென்றுகொண்டிருந்த பால்ராஜ் அண்ணை மேஜர் தாடிபாலாவுடன் தொடர்புகொண்டு கள நிலைமையை அறிகின்றார். களத்தில் கப்டன் அலன் வீரச்சாவடைந்த செய்தியைக் கூறிய தாடிபாலா, அப்போராளியின் உடல் பாடசாலையினுள் இராணுவத்தினரின் பகுதிக்குள் இருப்பதையும் கூறுகின்றார். உடனடியாக தான் அந்த இடத்திற்கு வருவதாகவும், தாக்குதலை தொடர்ந்து நடத்துமாறும் கூறிய பால்ராஜ் அண்ணை, கூறியதுபோன்று விரைவாகவே வித்தியானந்தாக் கல்லூரியடிக்கு வந்து சேர்கின்றார். படையினர் மீதான தொடர்ச்சியான தாக்குதலின் பின்னர், பால்ராஜ் அண்ணையும், கப்டன் ஜெகனும் (இவர் பற்றி ஏற்கனவே பார்த்திருக்கின்றோம்) பாடசாலையினுள் நுழைந்து கப்டன் அலனின் வித்துடலை மீட்டெடுத்து வருகின்றனர். இதன் போது பால்ராஜ் அண்ணை அங்கு படையினரால் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலிகளை கடக்கும்போது முட்கம்பிகளில் சிக்குப்பட்டு காயங்களுக்கும் உள்ளாகியிருந்தார்.

கப்டன் அலன், பால்ராஜ் ஆகியோர் இந்தியாவில் நடைபெற்ற 9வது பயிற்சிப் பாசறையில் பயிற்சிகளை ஒன்றாகப் பெற்றுக் கொண்டவர்கள். தாயகம் திரும்பிய பின் முல்லைத்தீவுக்கான நிதிப் பொறுப்பாளராக செயற்பட்டவர் கப்டன் அலன். போராட்டத்தின் ஆரம்ப காலத்தில் பெரும் வர்த்தகர்கள், கடல் உணவு ஏற்றுமதியாளர்கள் போன்றவர்களின் நிதிப் பேருதவிதான் போராட்டத்தை கட்டி வளர்த்தெடுப்பதற்கு காரணமாக இருந்தது. அவர்களிடம் இருந்து பெறப்படும் நிதியைக் கொண்டுதான் வன்னிப் பிராந்தியத்தின் அனைத்து தேவைகளையும் அன்று போராளிகள் நிறைவேற்றினார்கள். இந்த நிதியைச் சேகரித்து போராட்டத்தின் வளர்ச்சியில் பக்கபலமாக நின்றவர் கப்டன் அலன். இந்திய இராணுவத்துடனான போரில் மாவீரர் தினத்தன்று வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இந்திய இராணுவத்தின் முற்றுகைக்குள்ளும் வித்துடலை பெற்றோர்களின் அஞ்சலிக்காக எடுத்துச் சென்ற போராளிகள். பின்னர் வித்துடலை செம்மலை இந்து மயானத்தில் அவரது வித்துடலை விதைத்னர். அந்த மயானத்தில் அவருக்கான கல்லறை இப்போது அமைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.



கப்டன் அலன்
(முருகேசு உருத்திரமூர்த்தி - செம்மலை அலம்பில்)

(வரலாறு விரியும்)

ஒரு முன்னாள் போராளியின் நினைவுப் பதிவில் இருந்து...

– விதானையார் –

உணவு முறையும் நோயற்ற வாழ்வும்

'வெள்ளம் வரும் முன்னே அணைகட்ட வேண்டும்' என்பது ஒரு முதுமொழி. அதேபோன்றுதான் நோய் வந்ததன் பின்னர் அதற்குத் தீர்வு தேடுவதை விட, நோய் வருவதற்கு முன்பே அதில் இருந்து பாதுகாத்துக் கொள்வ்தே சரியான மருத்துவமாக் இருக்கமுடியும். அந்த வகையில் பல்வேறு ஆய்வுகளிலும், அனுபவங்களிலும் கண்டறியப்பட்ட சில மருத்துவ ரீதியான உண்மைகளை இந்தப் பகுதியூடாகத் தொடர்ந்து பார்ப்போம். இவற்றைப் பின்பற்றவேண்டுமா இல்லையா என்பதை உங்கள் உங்கள் மருத்துவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். இவை சில கண்டறியப்பட்ட ஆலோசனைகள் மட்டுமே.

ஆஸ்துமா நோயாளிகளுக்கு புதிய கருவி பணம்தான் கொஞ்சம் அதிகம்!

காற்றில் பரவும் தூசு மற்றும் வளர்ப்பு பிராணிகளின் முடிகளால் ஏற்படும் ஒவ்வாமையில் ஆஸ்துமா நோயாளிகள் கடுமையாக அவதிப் படுகின்றனர். 'இன்கேலர், நெப்லைசர்' போன்றவற்றை பயன்படுத்துகின் றனர். மூச்சுத்திணறல் அதிகரிக்கும் சமயங்களில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட வேண்டியுள்ளது. இவர்களுக் காக புதிய கருவியை இலண்டன் மருத்தவர்கள் கண்டுபிடித்துள்ளனர். 6 ஐரோப்பிய நாடுகளில் இருந்து 7 வயது முதல் 70 வயது வரையிலான 282 ஆஸ்துமா நோயாளிகளிடம் இந்த கருவியை கொண்டு பரிசோதிக் கப்பட்டது. இந்த கருவியை ஆஸ்துமா நோயாளிகள் வைத்துக்கொண் டால், அவர்களை சுற்றியுள்ள காற்றை தூய்மையாக்கி அளிக்கிறது. தூங்கும்போதும், பணிபுரியும்போதும் ஆஸ்துமா நோயாளிகளின் சுவாசத் தினுள் தூசி போன்ற ஒவ்வாமை பொருட்கள் நுழையாமல் இந்த கருவி தடுக்கிறது. ஓர் ஆண்டு இந்த கருவியை பயன்படுத்த 4 ஆயிரம் பவுண்ஸ் செலவாகிறது.

காலையில் அரசனாக இரு, மதியம் சாதாரண மனிதனாக இரு, இரவில் பிச்சைக்காரனாக இரு

பலரும் இங்கு காலை உணவைத் தவிர்த்து வருகின்றார்கள். இப்படிச் செய்வது உடலுக்கு நல்லதல்ல என்று ஆய்வு செய்து நிருபித்திருக் கின்றார்கள். ஆரோக்கியமான வாழ்விற்கு காலை உணவு மிகவும் முக்கியமானது என்பது அந்த ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. பிரித்தானியாவைச் சேர்ந்த சிக்ரிட் கிப்சன் தலைமையிலான குழுவினர் இதுதொடர்பான ஆய்வை மேற் கொண்டார்கள். இந்த ஆய்வில், மற்ற உணவு மற்றும் அதிலிருந்து கிடைக்கும் சத்துகள் ஆகியவற்றை காலை உணவு தான் நிர்ணயிக் கிறது என்பதும், பருப்பு வகைகள் மற்றும் பால் ஆகியவற்றைக் காலை யில் உட்கொண்டு வருவது உடலுக்கு நோய் இல்லாத பாதுகாப்பைத் தருவதும் கண்டுபிடிக்கப்பட்டது. 19 முதல் 64 வயது வரையிலானவர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த ஆய்வில், பெரும்பாலானவர்கள் திட உணவுக்கு முன்பாக கோப்பி அல்லது தேநீர் போன்றவற்றை அருந்த விரும்புவதும் தெரியவந்தது. ஆய்வு முடிவு குறித்து சிக்ரிட் கிப்சன் கூறும்போது, பால் மற்றும் பருப்பு வகைகளை நாம் உணவாக எடுத்துக்கொள்ளும்போது உடலுக்குத் தேவையான கல்சியம், நார்ச்சத்து, புரதம் மற்றும் கார்போஹைட்ரேட் கிடைக்கின்றன. அதனால், அவற்றை காலை உணவாக எடுத்துக் கொள்வது நல்லது` என்றார். தமிழர்களிடம் இது தொடர்பாக ஒரு கருத்தே உண்டு என்பது இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும். காலையில் அரசனாக இரு, மதியம் சாதாரண மனிதனாக இரு, இரவில் பிச்சைக்காரனாக இரு என்ற தமிழர்களின் உணவு மந்திரம் மூன்று வேளையும் எவ்வளவு உணவு அருந்தவேண்டும் என்பதை புரியவைக்கின்றது.

மாதுளையின் மகிமையே மகிமை!

இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் குறைவாக இருப்பவர்களுக்கு மருத்துவர்கள் சொல்லும் அறிவுரையே, மாதுளம் பழத்தை அல்லது சாறை அதிகம் உட்கொள்ளுங்கள் என்பதுதான். அந்த மாதுளம் பழம் பல்வேறு நோய்களைத் தீர்க்கும் அரிய மருத்துவக் குணத்தைத் தன் னுள்ளே கொண்டிருக்கிறது என்று ஆராய்ச்சியில் கண்டுபிடித்திருக்கிறார் கள். வில்லோ மரத்திலிருந்து அஸ்பிரின் என்ற மருந்து கண்டுபிடிக் கப்பட்டதற்குச் சமமானது இந்தக் கண்டுபிடிப்பு என்கிறது இலண்டனி லிருந்து வெளியாகும் 'சண்டே எக்ஸ்பிரஸ்` நாளிதழ். மாதுளம் பழத் தைச் சாப்பிடுகிறவர்கள்கூட அதன் கதுப்புகளை உட்கொண்டு கொட் டையைத் துப்பிவிடுகின்றனர். அதன் ரசத்தை மட்டுமே குடிக்கின்றனர். ஆனால் அதன் தோல், விதை, மஞ்சள் நிறத்தில் உள்ளே காணப்படும் மெல்லிய சவ்வுப்படலம், அதன் பட்டை, செடியின் தண்டுக்குள்ளே இருக்கும் சோறு என்று அனைத்துமே அரிய மருத்துவ குணங்களைக் கொண்டிருக்கிறது. அவற்றிலிருந்து எடுக்கப்படும் சாறு இதயத் துடிப்பைச் சீராக்கும், இதய இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பை நீக்கும், இரத்தக் கொதிப் பைக் குறைக்கும், உள் உறுப்புகளின் வீக்கத்தைக் கட்டுப்படுத்தி போக்கும், புற்றுநோய் வரும் ஆபத்தைக் குறைக்கும், தாம்பத்திய உறவுக்குத் தடையாக இருக்கும் பாலின உறுப்புகளின் செயல்படா தன்மையைப் போக்கும்.

- சிறுகதை

இலண்டனில மாப்பிள்ளையாம்...



காலைச் சூரியனின் கதிர்கள் பொன்போல் பரவியது பூமியின் மேலே. உன்னுடன் வாழும் ஓர் இரவு போதும் என்று புல்லின் மேல் விழுந்த பனித்துளிகள் கரைந்தது. அன்று தமிழர் திருநாள் தைப்பொங்கல். 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்ற நம்பிக்கையில் பாக்கியம் முற்றத்தில் பொங்கல் பானையை வைத்தாள். இந்த வருடமாவது மூத்த மகளின் திருமணம் நடக்க வேண்டும் என்ற வேண்டுதலின் மனதுடன் வேலாயுதம் ஒத்தாசை பண்ணி மதியத்திற்கு முன்னரே பொங்கி முடித்து படைத்தும் விட்டாச்சு. அக்கம் பக்கம் பொங்காதவர்களின் வீட்டுக்கு இளய மகள் மூலம் பொங்கல் கொடுத்து அனுப்பி வைத்தாள்.

மாலைநேரம் அவசரமாக உள்ளிட்டார் சிவப்பிரகாசம். வரவேற்று கதிரையில் உட்காரவைத்த வேலாயுதம் "மகன் இலண்டனால் வ்ந்திருப்பதாகக் கேள்விப்பட்டன். அது தானே ஓடித்திரிகிறன். மகன் வந்து நிற்கிற கையோட அவனுக்கு ஒரு கலியாணம் கட்டி வைச்சிட்டனெண்டா எனக்கு பெரியபாரம் இறங்கின மாதிரித்தான். அவனுக்கு தடிப்பில்லாத நல்ல கொடிபோல இருக்கிற வெள்ள நிறப் பொம்பிள வேண்டுமாம். கொஞ்சம் படிச்ச இங்கிலீசு பேசக்கூடிய, மற்றவையளோட சோசலாக பழகக்கூடிய பொட்டையாக இருக்கவேண்டுமாம். இதுகள் தான் அவன் கண்டிசன் இனி- அவன்ர விருப்பத்துக்கு ஒரு குறை இல்லாதபடி பெண் தேடவேண்டியது என் கடமை. அது தான் ஒரு பெரிய மனிசன் நீங்க, உங்களோட இதுப்பத்தி கதைச்சு ஒரு முடிவெடுக்கலாம் எண்டு வந்திருக்கிறன்" என்று மெல்ல இழுத்தார் சிவப்பிரகாசம்.

வேலாயுதத்திற்கு மனதுக்குள் குட்டி போடும் மயிலிறகாட்டம் ஆயிரம் இன்பக் கற்பனை. இவர் மௌ்ளமா என்ர மூத்த மகளை பெண் கேட்டுத்தான் இந்த பீடிகை போடுகிறார் போல! என்ன இருந்தாலும் வெளிநாட்டு மாப்பிளை எண்டாச் சும்மாவே! புளியங்கொம்பு இடம்தான் இத விட்டுவிடக் கூடாது.

சிவப்பிரகாசம் தொண்டையைச் செருமிக்கொண்டு பேச்சைத் தொடர்ந்த போது தான் வேலாயுதம் தன் கற்பனையை கத்தரித்துக் கொண்டார். "முந்தி உங்கட பேரம்பலம் புகையிலைத் தோட்டத்தில் வேலை செய்தவர் தெரியும்தானே? அவற்ற மகள் நல்லா பன்னிரண்டுவரை படித்து இருக்கிறாளாம். வடிவான பெட்டையாம். மகன் கேட்கிற 'கண்டிசன்' எல்லாம் அவளிட்ட இருக்காம் என்று புறோக்கர் வைத்தி சொன்னார். காசு ரொக்கமா பதினைந்து இலட்சம். நகை எல்லாம் போடுவினமாம். சீதனம் எங்களுக்கு நல்ல திருப்தி."

இதைக் கேட்ட வேலாயுதத்தின் உடல் முழுவதும் ஆட்டம் கண்டு நின்றது. நான் ஒன்று நினைக்க வேறொன்று நடக்க போவது மட்டுமல்ல, தன்னிடம் கூலிவேலை செய்தவன் மகள் என்ர மகளுக்கு போட்டியா? அவரின் மனம் உலைப்பானையில் கொதித்து குமுறிக் கொண்டிருக்கையில், "இங்கே ஒருக்கா வாறியளே அப்பா" என்று உள்ளிருந்து மனிசி பாக்கியத்தின் குரல் அவரை நோக்கி வந்தது. அவளது அழைப்பின் அவசரம் வேலாயுதம் நன்கு புரிந்து கொண்டவராய் இந்த நிலையில் அவளோடு பேசி ஒரு முடிவெடுப்பது நல்லம் என்று சட்டென எழுந்தவர் 'இருங்கோ வாறன்' எண்டு பாக்கியத்திடம் வந்தார். வீட்டு கதவுக்கு உட்புறமா கூட்டிச்சென்று பேசத் தொடங்கினாள் பாக்கியம்.

"இப்ப எல்லாரும் கனடா, சுவீஸ், ஜேர்மன், பிரான்ஸ் எண்டு வெளிநாட்டு மாப்பிள்ளையை தேடிப்பிடித்து பெருவாரியான சீதனம் கொடுத்து கட்டிவைக்கேக்கை நாங்களும் எங்கட மகளுக்கு ஒரு வெளிநாட்டு மாப்பிளையாக பார்த்து கட்டிவைத்தால்தானே நாளைக்கு சேமன் வேலாயுதம் என்ற பெயருக்கு ஒரு மதிப்பிருக்கும். இதில் என்ன பிழை இருக்கு."

"நீ என்னத்த சொல்லுறது நான் அப்படியான மாப்பிளையைத்தானே தேடிக் கொண்டிருக்கன். இப்ப பேரம்பலம்தானே புதுசா எனக்கு வில்லனாக வந்திருக்கான். உதென்ன பெரிய வேலையே? பேரம்பலம் ஆக பதினைந்து இலட்சம்தானே நாங்கள் இருபத்தைந்து எண்டு சொல்லுவம். காசு காட்டினா ஆரைத்தான் வளைக்க முடியாது. பணத்தால எத்தனையோ மூடிமறைக்கிறாங்க சிங்கள அரசாங்கமே இலங்கையில பிரச்சினையே இல்லை என்று மூடி மறைக்கேல? அது போல இங்கிலீசு தெரியாது என்றது பெரிய குறையில்ல."

பாக்கியத்தின் யோசனை வேலாயுதத்தின் மனதில் புதுத் தெம்பை ஏற்படுத்தவே உட்சாகமாக வெளிவந்த வேலாயுதத்தின் பின்னால் பாக்கியமும் வந்து கணவனுக்கு அருகே நாற்காலியை இழுத்துப்போட்டுக் கொண்டு அதிலே அமர்ந்து பாக்கியம்... சிவப்பிரகாசத்தைப் பார்த்து "அண்ணே நீங்கள் இப்ப நான் கேட்கப் போறதுக்கு ஓமோ இல்லையோ என்று மறுமொழி சொல்லவேண்டும். நான் உங்களுக்கு பேரம்பலம் தாற சீதனத்தைவிட கூட பத்து லட்சம் தாரன். முழுநகையும் போட்டுவிடுவன் மணவறை வீடியோ உட்பட கல்யாண செலவும் என்ர கையாலதான்! நீங்கள் என்ர மகளை மருமகளாக்குவியளோ? என்ன சொல்லுறியள்?"

அதைக் கேட்டு ஒரு கணம் தடுமாறிப் போனவர் பின்பு அசடுவழிய நெளிந்தவராய் எனக்கென்டா பூரண சம்மதம் மனிசிக்காறியும் மறுக்கமாட்டா. ஆனா... அவன் தான் இங்கிலீசு... படிப்பு..." அது இது எண்டு அவர் சொல்லி முடிக்குமுன் வேலாயுதம் குறுக்கிட்டார்.

"இந்தா பாருங்கோ எல்லாக் குறைபாடுகளையும் `ஷேவ்' பண்ணத்தானே உங்களுக்கு ரொக்கமாக காசு தாறம் பிறகென்ன யோசனை?"

அதைக்கேட்டு மீண்டும் ஒருமுறை அசடு வழிய சிரித்தார் சிவப்பிரகாசம். நான் சொன்னா மறுபேச்சில்லை நீங்கள் பயப்படாதீங்கோ. உங்கட மகள் என்ர மகனுக்குத்தான்! என்றவர் தேனீரை அடிமண்டல் வரை ஒரே முறையில் குடித்துவிட்டு விடை பெற எழுந்தார்.

அப்ப மற்ற விசயங்களை வாற புதன் கிழமை மனிசியுடன் வந்து கதைக்கிறன் என்று சொல்லிக் கொண்டே வெளியேறினார் சிவப்பிரகாசம். அடுத்துவந்த ஒரு கிழமையிலேயே ஆகும் தைப்பூசத்தன்று வேலாயுதம் மகளுக்கும் சிவப்பிரகாசத்தின் மகனுக்கும் இனி இல்லையென்று விமர்சையாக வெகு தடல் புடலாக இனிதே திருமணம் நடந்தது. வேலாயுதமும் பாக்கியமும் தமது இலண்டன் மாப்பிளையை பற்றி கடவாய் வலிக்கும்வரை ஒவ்வொருவரிடமும் பீத்திக் கொண்டிருந்தனர். ஆனால் திருமணம் நடந்த ஒருவாரத்துக்குள்ளே மாப்பிள்ளை மகளைக் கூட்டிக்கொண்டு இலண்டன் செல்ல இருப்பதை அறிந்த போதுதான் பாக்கியத்துக்கு பெரிய கவலையாக இருந்தது.

"என்னப்பா இது! கலியாணம் கட்டி ஒருமாதம்கூட இங்கு இருக்கேல்ல அதுக்குள்ளே மாப்பிள்ளை இப்படிச் சொல்லுறார்" என்று கண்கலங்கினாள் பாக்கியம். வேலாயுதமும் ஒன்றும் புரியாதவராய் சிவப்பிரகாசத்தை நோக்கினார்.

"நீங்கள் என்ன! இரண்டு பேரும் உலகம் தெரியாத ஆட்களாக இருக்கிறியள்! இந்த காலத்தில நடக்கிற சங்கதியளை பேப்பரில படிக்கிறதில்லையா? வெளிநாட்டில இருந்து இங்கு வந்து நல்ல சீதனத்தோட கல்யாணத்தை கட்டி ஒரு கிழமையோ, ஒரு மாதமோ எண்டு புதுப் பெண்டாட்டியோட குடும்ப்ம் நடத்திப் போட்டு போறவங்கள், போனதும் வேறு ஒருத்தியை கல்யாணம் முடிக்காமல் குடும்பம் நடத்த துவங்கிடுவாங்கள். பிறகென்ன இங்கு கட்டியவளை கூப்பிடுறது. இன்னும் சிலபேர் பிரெண்ட் எண்டு சொல்லி ஒரு பொட்டையோட ஒரே ரூமில ஒண்டாய் இருந்துவிட்டு, தங்கட காரியம் முடிஞ்சதும் பெட்டைக்கு டாட்டா காட்டிவிட்டு புது மாப்பிள்ளையாக இங்குவந்து கல்யாணம் கட்டிக் கொள்ளுறாங்கள். இப்படி எத்தனையோ அசிங்கங்கள் உலகத்தில நடக்குது!" என்றவர் வாயில் இருந்த வெற்றிலைச் சாற்றை வெளியேபோய் துப்பிவிட்டு காவிப் பற்களை காட்டிச் சிரித்தார் சிவப்பிரகாசம்.

"இப்படி எல்லாம் பொடியன்கள் இருக்கேக்கே என்ர மகன் எவ்வளவோ திறம் எண்டு பாத்தியளே!" பொடியங்கள் இப்படி என்றால் பெட்டையள் இன்னொருரகம்."

பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் பாஸ்போட் விசா போன்றன திருமணத்துக்கு முன்பே அவன் இவனைப்பிடித்து பணத்தைக் கொடுத்து எல்லாம் ஓகே என்று சொல்லும் அளவில் முடிந்திருந்தது. மாப்பிள்ளை பார்வைக்கு இலண்டன் காறரைப் போலவே வெகு கலாதியாக புறப்பட்டிருந்தார். கழுத்திலே மொத்தச் சங்கிலி கையிலே கைச் செயின் கமகம என்று சென்டின் வாசனை மூக்கைத் துளைக்க... ம்... பாக்கியம் தன் கண்களாலே மாப்பிள்ளைக்கு கண்ணூறு கழித்துக் கொண்டிருந்தாள். தலையை பலமுறை சீவி இருந்தாலும் தன்கையால் ஒருமுறை ஸ்டைலாக கோதி விட்டபடி மாமியாரை பார்த்து புன்முறுவல் பூக்கிறார். மாப்பிள்ளை மகள் புதிதாக வேண்டிய காஞ்சிபுரச் சேலை முக்கிய நகைகள் இப்படி விமானநிலையம்வரை அழைத்துச் சென்று வழி அனுப்பிவைத்தனர். அடுத்த நாளே போன மினிவான் மூலம் ஊருக்கு திரும்பிவிட்டனர். மகள் இல்லை எண்ட மனவருத்தத்தைவிட பேரம்பலம் பிடிக்க இருந்த புளியங்கொம்பை தான் பிடித்து விட்டேன் என்ற பெருமை சேமன் வேலாயுதத்திற்கு இறுமாப்பாகத்தான் இருந்தது.

காலங்கள் யாருடை ய அனுமதியும் எதிர் பார்க்காமல் தன் கடமையைச் செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருந்தன.

(43ம் பக்கம் பார்க்க)

- பாரிஸ் யோகேஸ் -

Merlyn's

Restaurant • Banquet Halls

LLBO licensed

All Day Breakfast • Lunch • Dinner
WESTERN, EASTERN & FUSION CUISINE
INCLUDING MALAYSIAN, HAKKA CHINESE & THAI

A taste for everyone

Catering & Take-out
Indian, Sri Lankan, Chinese & Western

Merlyn's cater to any location in Mississauga, Brampton, Vaughan and Markham. Please contact us for more information.

We can arrange a venue that will be conveinent for you, and cater from 10 to 1000 people.

Merlyn's banquet hall has seating for up to 200 people. It is a unique setting for corporate events, weddings, birthday parties, anniversaries, Christmas parties and other social gatherings.

5284 Highway 7 East Markham
416 918 6453 / 905 479 4337
sales@merlynstasteofworld.com
www.merlynstasteofworld.com

உங்கள் இல்லத்து வாசல் முதல் சென்று அடையும் வாசல் வரை DVD யுடன் இனிதான இளைப்பாறிய பயணம்

Ontario Highway Transport Board
கனடிய அரசின் அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்

We provide all kinds of charter services
ANY TIME ANY WHERE
We also offer special deliveries and other personlized services

TORONTO MONTREAL Bus Services

தொடர்புகளுக்கு
Services Now Available

Toronto
416 887 3350

Montreal
514 802 3350

Rithi Travels

'உச்சிதனை முகர்ந்தால்' தமிழீழ மக்களின் பெருமூச்சை இத்திரைப்படம் புயலாக்கும்!

– காசி ஆனந்தன்

'உச்சிதனை முகர்ந்தால்' திரைப்படம் நச்சு இனவெறிச் சிங்கள ஆட்சியாளரை வெளிச்சத்தில் நிறுத்தி தோல் உரிக்கிறது.

அடக்குமுறைச் சிங்கள இனவெறியர்களின் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளை மட்டுமல்ல– அக்கொடுமைகளின் மிகக்கொடிய விளைவுகளையும் இத்திரைப்படம் அலசுகிறது.

தென் தமிழீழமான மட்டக்களப்பில் பிறந்த புனிதவதி – சிங்கள படைவெறியர்களால் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டாள் என்பது உண்மைச் செய்தி. அனால் அவள் வாழ்க்கை பின்பு என்ன ஆகி இருக்கும் என்னும் கேள்வியை இயக்குனர் புகழேந்தி தங்கராசா திரைப்படம் ஆக்கித் தந்திருக்கிறாரே – இது சிங்கள இனவெறியர் கொடுமை அல்ல – அக்கொடுமையின் பொல்லா விளைவு. தேம்பித் தேம்பி நம்மை அழவைக்கும் திரை ஓவியம்.



Is Paris Burning (பரீஸ் நகரம் எரிகிறது) என்னும் திரைப்படம் எப்படி இனவெறியன் ஹிட்லரின் கொடிய முகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியதோ– Omar Muktar (உமர் முக்தார்) என்னும் திரைப்படம் எப்படிக் கொடுங்கோலன் முசோலினியின் முகமூடியைக் கிழித்து எறிந்ததோ – அப்படி– 'உச்சிதனை முகர்ந்தால்' என்னும் திரைப்படம் சிங்கள இனவெறியன் மகிந்த ராஜபக்சவின் கொடிய கொலைவெறி முகத்தை உடைத்தெரிகிறது.

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றிய முதல் திரைப்படத்தை (காற்றுக்கு என்ன வேலி) உருவாக்கியவர் புகழேந்தி தங்கராசா. இப்போது அவர் உருவாக்கித் தந்துள்ள 'உச்சிதனை முகர்ந்தால்' தொடர்ந்து தமிழீழ விடுதலைப் போரில் அவர் கொண்டுள்ள ஈடுபாட்டையே காட்டுகிறது. அவர் படைப்புகளான இந்த இரு திரைப்படங்களுக்கும் நிகராக தமிழ்நாட்டில் இதுவரை ஈழம் குறித்த திரைப்படங்கள் எதுவும் வெளிவரவில்லை என்பது பச்சை உண்மை.

படை மட்டுமல்ல – ஒரு படமும் தமிழீழத்திற்காக போராட முடியும் என்பதை இயக்குனர் புகழேந்தி தங்கராசா தன் திரைப் படைப்பினால் நிறுவியிருக்கிறார்.

'உச்சிதனை முகர்ந்தால்' திரைப்படத்தின் ஒவ்வொரு கட்டமும் தமிழீழ விடுதலைக்கான உரத்த போர் முழக்கமே அன்றி வேறில்லை.

கடல்நீர் தமிழ்நாட்டையும் தமிழீழத்தையும் பிரிக்கலாம்– ஆனால், தமிழனின் கண்ணீர் இவ்விரு நாடுகளையும் எப்போதும் இணைக்கும் என்பதையும் 'உச்சிதனை முகர்ந்தால்' திரைப்படம் நமது கவனத்தில் பதிக்கிறது.

கொடுமைக்கு இரையாகும் ஒரு பெண்ணாக அல்ல. கொடுமைக்கு இரையாகும் ஒரு 'தேசிய இனமாக' புனிதவதி இத்திரைப்படத்தில் வடிவம் கொள்கிறாள். உலகெங்கும் வாழும் தமிழீழ மக்கள் தங்கள் உரிமைப் போராட்ட உணர்வினை மேலும் கூர் தீட்டிக்கொள்ள 'உச்சிதனை முகர்ந்தால்' நிச்சயமாக உதவும்.

தமிழீழ மக்களின் கண்ணீரை இத்திரைப்படம் நெருப்பாக்கும். தமிழீழ மக்களின் பெருமூச்சை இத்திரைப்படம் புயலாக்கும்.

தமிழருவி மணியன் இயல்பான– சூடான 'திரை உரை'யிலும், இசையமைப்பாளர் இமானின் நெஞ்சைப் பிழியும் தமிழிசையிலும் 'உச்சிதனை முகர்ந்தால்' தனி மிடுக்குடன் தமிழுலகில் உலா வருகிறது.

ஈழவிடுதலையில் எப்போதும் தனி ஆர்வம் கொண்டுள்ள நடிப்பின் செல்வர் சத்யராஜ் இத்திரைப்படத்தில் ஈடிணையற்ற பங்களிப்பினை நல்கி உள்ளார். சீமான், சங்கீதா, நாசர், லட்சுமி போன்றோரின் மெய்சிலிர்க்க வைக்கும் நடிப்பை சீராட்டாமல் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. நீக்கமற திரைப்படம் பார்த்த தலைவர் நெஞ்சிலும் நிறைந்திருக்கிறாள் புனிதவதியாக நீநிகா. உலக விருது பெறும் இத்திரைப்படம் என்று உறதியாக கூறலாம். புகழ் அனைத்தும் புகழேந்திக்கே.

டில்லியில் மறைந்திருந்த....

இவ்வாறு கானல்நீரில் காகிதக் கப்பலோட்டும் கதையாக இன்று மேற்குலகில் உருத்திரகுமாரனின் நாடுகடந்த அரசாங்கம் மாறியிருந்தாலும்கூட, இது விடயத்தில் டில்லியின் அணுகுமுறை என்பது முற்றிலும் நேர்மாறாகவே உள்ளது. உருத்திரகுமாரனின் அமைச்சர்கள், அரசவை உறுப்பினர்கள் என்று கூறப்படும் கணிசமானோர் கடந்த இரண்டரை ஆண்டு காலப்பகுதியில் எவ்வித தங்கு தடையுமின்றி அடிக்கடி இந்தியாவிற்குப் பயணம் செய்வதும், அங்கு மூடுமந்திரமாக சந்திப்புக்களை நிகழ்த்திவிட்டுத் தாம் வசிக்கும் நாடுகளுக்குத் திரும்புவதும் தாராளமாகவே நிகழ்ந்தேறி வருகின்றன.

இவ்விரு விடயங்களையும் நாம் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு எமது மனத்திரையை வன்னிப் போரின் இறுதி மாதங்களுக்கு நகர்த்தி, 1997ஆம் ஆண்டிலிருந்து ஈ.என்.டி.எல்.எவ் பரந்தன் ராஜன், சந்திரகாசன் போன்றோருடன் உருத்திரகுமாரனுக்கு இருந்த நெருங்கிய தொடர்புகளை ஆராய்ந்தால், அவரை இயக்கும் எசமான்கள் டில்லியில் நிலைகொண்டிருப்பதை இன்னும் தெளிவாக இனம்கண்டு கொள்ள முடியும்.

அதற்காக தான் வசிக்கும் நாட்டில் உள்ள புலனாய்வாளர்களுடன் உருத்திரகுமாரன் தொடர்புகளைப் பேணவில்லை என்று நாம் கூறவில்லை: அதனை அவர் மறுத்துரைக்கவும் முடியாது!

1997ஆம் ஆண்டு கே.பியின் ஆளுகையின் கீழ் இயங்கிய அனைத்துலக செயலகத்தின் சட்ட ஆலோசகராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து பல தடவைகள் அமெரிக்கப் புலனாய்வாளர்களை உருத்திரகுமாரன் சந்தித்ததுண்டு.

இவ்வாறான தொடர்பாடல்களைச் சட்ட அழுத்தங்களின் நிமித்தம் உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமெரிக்கப் பொறுப்பாளர் கருணாகரன் உட்பட ஒருசில செயற்பாட்டாளர்கள் பேணி வந்திருந்தாலும்கூட, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவி புரிந்த 'குற்றத்திற்காக' 2006ஆம் ஆண்டின் இறுதியில் இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆனால் இவ்வாறான அழுத்தங்கள் எவற்றிலும் சிக்கிக் கொள்ளாது அதே காலப்பகுதியில் அமெரிக்காவில் உருத்திரகுமாரன் வசித்து வந்தமையும், இன்ரர்போல் அமைப்பால் தேடப்பட்ட ஒருவரான கே.பி அவர்களுடன் 2008ஆம் ஆண்டின் இறுதியில் தொடர்பைப் புதுப்பித்துக் கொண்டபொழுது எவ்விதமான அழுத்தங்களுக்கு ஆளாகாது தங்குதடையின்றி செயற்பட முடிந்தமையும், புலனாய்வாளர்களிடம் அவருக்கிருந்த அரவணைப்பை வெள்ளிடை மலையாக்குகின்றது.

இவ்வாறு தான் வசிக்கும் நாட்டின் புலனாய்வாளர்களின் அரவணைப்பை உருத்திரகுமாரன் பெற்றிருந்தாலும்கூட, அவரை இயக்கும் அரூபகரம் டில்லியிலேயே மறைந்திருந்தது. ஈழப் பிரச்சினையில் தமிழ் மக்களின் விடயத்தில் மென்போக்கை அமெரிக்காவும், கடும்போக்கை இந்தியாவும் கைக்கொள்வதாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருக்கும், சமாதான செயலகப் பணிப்பாளருக்கும் எழுதிய கடிதங்களில் உருத்திரகுமாரன் குறிப்பிட்டிருந்தாலும்கூட, புலம்பெயர் தமிழர்களின் 'தனியொத்த தலைவனாக' தன்னை உருவாக்குவதற்கு திரைமறைவில் டில்லியில் எடுக்கப்பட்டு வந்த முயற்சிகள் உருத்திரகுமாரனை ஆழமாக ஈர்த்திருந்தன என்றே கூற வேண்டும்.

இவ்வாறு டில்லியின் நிகழ்ச்சித்திட்டத்தால் உருத்திரகுமாரன் ஈர்க்கப்பட்டமை, இந்தியாவை மேவி இயங்கும் வல்லரசுப் புலனாய்வாளர்களை எந்தவிதத்திலும் மகிழ்ச்சிப்படுத்தவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்குதல் என்ற ஒருமித்த மூலோபாயத்துடன் அக்காலப் பகுதியில் இந்தியாவும், மேற்குலகும் இயங்கினாலும்கூட, இதுவிடயத்தில் இருதரப்பினரின் அணுகுமுறையில் மிதமான முரண்பாடுகள் நிலவத் தவறில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளை முழுமையாக அழித்தொழித்து மாற்றுத் தமிழ்த் தலைமைகளை உருவாக்குவது அப்பொழுது இந்தியாவின் அணுகுமுறையாக விளங்கியது என்றால், தமிழீழ விடுதலைப் புலிகளை ஆயுத எதிர்ப்பியக்கம் என்ற நிலையில் இருந்து தரமிறக்கி, ஜே.வி.பி போன்று சிறீலங்கா அரசின் இறையாண்மையை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் தமிழ் அரசியல் கட்சியாக மாற்றியமைப்பதே அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளின் அணுகுமுறையாக இருந்தது எனக்கூறலாம். இதன் காரணமாகவே மகிந்தரின் யுத்த முன்னெடுப்புக்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை இந்தியாவும், 'மனித உரிமைகளை' நிபந்தனையாகக் கொண்ட ஒத்துழைப்பை மேற்குலகும் வழங்கி வந்தன.

மிதமான முரண்பாடுகளைக் கொண்ட இவ்விரு அணுகுமுறைகளை இந்திய – மேற்குலக கொள்கை வகுப்பாளர்கள் மட்டும் பிரதிபலிக்கவில்லை: இரு தரப்புப் புலனாய்வாளர்களும்கூட பிரதிபலித்தனர்.

உருத்திரகுமாரனின் டில்லிப் பயணத்தை தடுத்து நிறுத்தும் நோக்குடன் 12.12.2008 அன்று அவரது உதவியாளரான வழுதி வன்னிக்கு கடிதம் எழுதிய தன் சூட்சும் இதிலேயே அடங்கியிருந்தது.

(தொடரும்)

வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

சர்வதேச அளவில் தகவல் தொழில்நுட்ப செலவினம் குறையும்

சர்வதேச அளவில், 2012ம் ஆண்டில் தகவல் தொழில்நுட்ப வசதிகளுக்காக நிறுவனங்களும், தனிநபர்களும் மேற்கொள்ளும் செலவினம் முந்தைய மதிப்பீட்டைக் காட்டிலும் குறைய வாய்ப்புள்ளது என கோர்ட்னர் நிறுவனம் தெரிவித்துள்ளது. 2011ம் ஆண்டில் உலக அளவில் தகவல் தொழில்நுட்ப வசதிகளுக்காக 3.70 இலட்சம் கோடி டொலர் செலவிடப்பட்டுள்ளது. இது, 2010ம் ஆண்டை விட 6.9 சதவீதம் அதிகமாகும். 2012ம் ஆண்டில் இச்செலவினம் 4.6 சதவீதம் அதிகரிக்கும் என முன்பு கோர்ட்னர் நிறுவனம் மதிப்பீடு செய்திருந்தது. ஆனால் தற்போது இது 3.7 சதவீதம் மட்டுமே உயரும் என தெரிவித்துள்ளது. அமெரிக்க பொருளாதார வளர்ச்சியில் பின்னடைவு, ஐரோப்பிய நாடுகளின் நிதி நெருக்கடி போன்றவற்றால் உலக பொருளாதார நிலவரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் அண்மையில் தாய்லாந்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்கள் காரணமாக அந்நாட்டில் கணினி வன்பொருட்கள் (ஹார்ட் டிஸ்க்) உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இது போன்ற காரணங்களால் நடப்பாண்டில் தகவல் தொழில்நுட்ப வசதிகளுக்காக உலகில் மேற்கொள்ளப்படும் செலவினம் முந்தைய மதிப்பீட்டைக் காட்டிலும் குறையும் என கோர்ட்னர் தனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

2012 ஆசிய நாடுகளுக்கு சவாலான ஆண்டு

சர்வதேச நெருக்கடியை தொடர்ந்து, பல்வேறு பிரச்சனைகளை சந்திக்க வேண்டியதால் ஆசிய நாடுகளுக்கு 2012ம் ஆண்டு கடுமையானதுடன், சவாலான ஆண்டாக அமையும் என்று சர்வதேச நிதி அமைப்பு (ஐஎம்எப்) தெரிவித்துள்ளது. உலக அளவில் ஆசியா முக்கிய வர்த்தக மையமாக விளங்குகிறது. சர்வதேச அளவில் நிதி நெருக்கடி ஏற்பட்ட போது அதை இந்தியா, சீனா போன்ற ஆசிய நாடுகள் இதுவரை திறம்பட கையாண்டன. மேலும், வலிமையான உள்நாட்டு தேவை, வேலைவாய்ப்பு பெருக்கம், நிறுவனங்களின் செயல்பாடும் சிறப்பாக இருந்தது.



இருப்பினும், ஆசியாவில் குறிப்பாக இந்தியா, சீனாவில் சர்வதேச நெருக்கடியின் தாக்கம் கடந்த ஆண்டில் எதிரொலிக்க தொடங்கியது. ஐரோப்பாவின் தொடர் நிதி நெருக்கடியால் கடன் அளிப்பு குறைந்து ஆசிய தொழில் வளர்ச்சி குறையும். இதுபோன்ற காரணங்களால் ஆசிய நாடுகள் இந்த ஆண்டில் பெரும் சவால்களை சந்திக்க நேரிடும் என்கிறது சர்வதேச நிதி அமைப்பு.

சீனாவின் வர்த்தக உபரி 16,000 கோடி டொலர்

2011 ஆம் ஆண்டில், சீனாவின் வர்த்தக உபரி 16,000 கோடி டொலராக குறைந்துள்ளது இது, 2010 இல் 18,300 கோடி டொலராக இருந்தது. (வர்த்தக உபரி என்பது இறக்குமதியை விட ஏற்றமதி அதிகரிக்கும் போது கிடைக்கும் வருவாய்) 2011–ல் அந்நாட்டின் வெளிநாட்டு வர்த்தகம் 20 சதவீதம் உயர்ந்து 3.60 இலட்சம் கோடி டொலராக அதிகரித்தது. எனினும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிலவிய பொருளாதார சீர்குலைவினால் அந்நாடுகளுக்கான சீனாவின் ஏற்றுமதி வளர்ச்சி வெகுவாக குறைந்தது. இந்நிலையில், இந்த ஆண்டிலும் இது தொடரும் என்பதால் ஏற்றுமதியில் ஏற்பட்ட இடர்பாடுகளை ஈடுகட்ட உள்நாட்டு பயன்பாடுகளை அதிகரிக்க சீனா உத்தேசித்துள்ளதாக தெரிகிறது.



திருப்பதி வருவாய் 1,700 கோடி ரூபா

இந்தியாவின் பிரபல கோவிலான திருப்பதி வெங்கடாசலபதி ஆலயத்தின் 2011ம் ஆண்டு வருவாய் 1,700 கோடி ரூபா என தெரியவந்துள்ளது. 2011ம் ஆண்டில், இக்கோவில் தரிசனத்திற்காக வந்து சென்ற பக்தர்களின் எண்ணிக்கை 2 கோடியே 20 இலட்சம் ஆகும். இந்த வருவாயில், 1,100 கோடி ரூபா உண்டியல் மூலமாகவும், வங்கி வைப்பில் இருந்து கிடைத்த வட்டி வருவாய், அனுமதி சீட்டு விற்பனை ஆகியவற்றின் வாயிலாக 200 கோடி ரூபாவும் பெறப்பட்டுள்ளது. இது தவிர வைர, தங்க மற்றும் வெள்ளி நகைகளையும் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியுள்ளனர். உலகின் மிக அதிக வருவாய் உள்ள ஆலயங்களில் திருப்பதி முன்னிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

77 ஆண்டுக்கு பின் மகளை கண்டுபிடித்த தாய்!

பிறந்ததும் தத்து கொடுத்த தனது மகளை 77 ஆண்டுகளுக்கு பிறகு சந்தித்துள்ளார் 100 வயது தாயார் ஒருவர். நெதர்லாந்து நாட்டை சேர்ந்த மின்கா டிஸ்ப்ரோ மிக சிறிய வயதிலேயே டாக்காவின் தென் பகுதியில் அகதியாக குடிபெயர்ந்தார். குடும்பத்தை விட்டு அனாதையான அவர், 8ம் வகுப்பு வரை படித்திருந்தார். டாக்காவில் உள்ள ஒரு பண்ணையில் வேலை செய்து வாழ்க்கை நடத்தி வந்தார். 1928ம் ஆண்டு தனது 17வது வயதில் கோடை காலத்தில் தனது நண்பியுடன் வீதியில் சென்றுகொண்டிருந்தபோது, அடையாளம் தெரியாத நபர்கள் சிலரால் மின்காவும் அவரது நண்பியும் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானார்கள். இதனால் மின்கா கர்ப்பமுற்றார். 1929ம் ஆண்டு அவர் அழகிய பெண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்தார். ஆனால் அந்த குழந்தையை வளர்க்க அனுபவம் மற்றும் வயது இன்மையால் அதனைத் தத்து கொடுத்துவிட்டார். கடந்த சில ஆண்டுகளாக தன் மகளை பார்க்கும் ஆர்வத்தில் தொடர்ந்து தேடி வந்தார். இணையத் தளங்கள் ஊடாகவும் தனது தேடல்களை மேற்கொண்டார். அவரது தேடல்களுக்கு பலனாக 77 ஆண்டுகள் கடந்த நிலையில் தன் 82 வயது மகளை அண்மையில் கண்டுபிடித்துள்ளார். தனது பெற்றோரை அவரது மகளும் கடந்த பல வருடங்களாக தேடி வந்தது இதன்போதுதான் தெரியவந்தது.

இலண்டனில...

தனது மகளும் மருமகனும் இலண்டன் சென்ற இரண்டு மாதத்திற்குள் ஒரே ஒரு கடிதம் மட்டும் வந்தது அதுவும் இலண்டனுக்கு சுகமே வந்து சேர்ந்தோம் என்று சுருக்கமாக எழுதப்பட்ட கடிதம். அதன் பின் பல கடிதம் எழுதியும் வேலாயுதத்திற்கு பதில் இல்லை. சிவப்பிரகாசமும் குடும்பத்தோடு இந்தியாவில். மகளின் தொலைபேசிகூட தொடர்பு இல்லை. கடந்த பத்து மாதமாக எந்த தொடர்பும் இல்லை. மகளுக்கு, மருமகனுக்கு என்ன நடந்தது என்று அறியமுடியாத நிலை ஒவ்வொரு நாளும் தபால்காரனை வழிமேல் விழிவைத்து எதிர்பார்ப்பதும் பின் அவன் அவர்களின் வீட்டை தாண்டிப்போனதும் ஏமாந்து மனஞ்சோர்வதும் வழக்கமாகிவிட்டது. எனக்கென்னமோ இவன் தபால்காரனிலதான் சந்தேகம். தன் ஆதங்கத்தை இப்படித்தான் தன் கணவனுடன் பேசிக் கொள்வாள் பாக்கியம். அதில் எந்தவித உண்மையும் இல்லை என்று தெரிந்தாலும் மறுத்து பேசும் மனநிலையில் இப்போ வேலாயுதம் இல்லை. இரவு நேரம் நீண்டது. அன்று ஆண்டவர் பிறப்பு, என்று இரவு தேவாலயத்திலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தவர்களில் பேச்சுச்சத்தம் அப்புறம் புதுவருடம் 2012 அங்காலை பொங்கல் நினைக்கையில் கண்கள் கலங்கியது வேலாயுதத்திற்கு எப்படி இருந்தவர் இப்படி இடிந்து போய் விட்டார்.

இன்னும் பொங்கலுக்கு ஒருவாரம் இருந்தது. அதற்கான அறிகுறியே தெரியவில்லை. வீட்டில கடைசி மகள் தானும் தன் படிப்புமெனப் போராட்டம். வீட்டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிந்தனை. இப்படியாக ஒரு நாளில்தான் அவர்கள் இத்தனை நாளும் எதிர்பார்த்து ஏங்கி இருந்த தபால்காரனின் சைக்கிள் வந்து நின்றது. வெளிநாட்டு தபால் உறை தலைகாட்டியது. பறியாத குறையாக பாக்கியம் வேண்டிக் கொண்டு வீட்டுக்குள் ஓடிவந்தாள்.

மகள் தானப்பா எழுதி இருக்கிறாள். குரல் தழுதழுக்க சந்தோசத்தில் கணவனிடம் கடிதத்தை நீட்டுகிறாள், வேலாயுதம் இப்போதுதான் மனம் குளிர்தவராக அவசரமாக கவரை உடைத்து கடிதத்தை மனைவியும் கேட்கும் குரலில் சத்தமாக வாசிக்கின்றார்.

அன்புள்ள அப்பா, அம்மா தங்கச்சி அறிவது உங்கள் அன்பு மகள் சுகனா எழுதிக் கொள்வது –

இங்கு நான் நலமாக இருக்கிறேன் என்று எழுதுவது பொய், எப்படி உங்களுக்கு என்னால் எழுத முடியும்? அப்படி எழுதினால் நலம் என்ற வார்த்தையே அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

சிவப்பிரகாசம் மாமா சொன்னது போல் இவர் இங்கு பெரிய கம்பனியில் மனேச்சரோ, டிரெக்டரோ இல்லை சதாரண கூலிவேலையைவிட குறைவான ஒரு வேலைதான். அதைக்கூட ஒழுங்காக போகாததால் அவர்களாகவே நிற்பாட்டிவிட்டார்கள். என் சீதனச் சொத்து பணம் நகை கரைக்க தொடங்கிவிட்டார். தினமும் கூட்டாளிகளுடன் குடித்து, குறூப் எண்டுபோய் சண்டைபோட்டு ஆஸ்பத்திரியும், பொலிசுமாகத் திரிகிறன். இப்ப இருக்ககூட வாடகை வீடு இல்லை. பணமும் இல்லை. நீங்கள் வெளிநாட்டு மாப்பிள்ளை என்று எவ்வளவோ கடன்பட்டு தோட்டக்காணி வித்து என் கலியாணத்தை பெரிதாக செலவு செய்து இப்போ எல்லாம் விழலுக்கு இறைத்த நீராக போய்விட்டது. இரண்டு வேளை சாப்பாட்டுக்கே திண்டாடும் நிலை, உங்களோடு சேர்ந்து நானும் வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு ஆசைப்பட்டு இப்போ அனுபவிக்கின்றேன். எமது ஊரிலே ஒரு சாதாரண கடைச் சம்பளம் வாங்கும் ஒருவரைக் கலியாணம் செய்திருந்தால் எனக்கு நிம்மதியான வாழ்க்கை அமைந்திருக்கும். நாலு மாதமா இவர் எங்க போனார் என்ன நடந்தது என்று தெரியாததினால் பொலிசில் முறைப்பாடு கொடுக்கப்போய் இருந்தேன். அங்கு பேரம்பலம் மாமாவின் மகன் கண்டு உதவி செய்தார். யாரைத்தான் குற்றம் சொல்வது எல்லாம் என் தலை எழுத்து. வேறு எப்படி என் கறுமத்தை சொல்வது? இங்குள்ள மனிதர்கள் இயந்திரங்களோடு இயந்திரமாக எப்போதும் சுழன்றுகொண்டிருப்பார்கள். மற்றவரது துன்பத்தை கேட்பதற்கோ, ஆறுதல் சொல்வதற்கோ நேரம் இல்லை. உப்புச் சப்பற்ற வாழ்க்கையை பார்க்க வெறுப்பாக இருக்கு. இனி என்ன செய்வது காலம் கடந்த ஞானம்.

அப்பா... அம்மா... நீங்கள் தேடித்தந்த வாழ்க்கை கைவிட்டுப் போனபோது, கை கொடுத்து என்னைக் காப்பாற்றிய பேரம்பலம்மாமாவின் மகன் சிவா... நானும்... திருமணம் செய்து கொள்ள உங்களின் அனுமதியை கேட்கும்படி... சிவா.. கடிதத்தில் எழுதச் சொன்னார் அப்பா.. சிவப்பிரகாசம் மாமாவின் மகன் அதுதான் என் புருசன் இலண்டனில் எங்கேயோ யார்கூடவோ வாழ்வதாக இப்போதான் கேள்விப்பட்டேன். பொங்கலுக்கு சிவன் கோயிலுக்கு போய் மோதிரம் போட்டுக்கொள்ளப் போகின்றோம். நான் இப்போ ஒருகடையில் கசியர் வேலை செய்கின்றேன். அது கூட சிவாதான் எடுத்துத் தந்தவர். இப்போ ஆறு மாதமாக அவர் வீட்டில்தான் இருக்கிறன். தன் தங்கச்சிக்கு வரவேண்டிய இந்த வாழ்க்கை உன் தலையில் விழுந்துவிட்டது. எல்லாம் அவசரம்தான் காரணம். ஆர அமர விசாரித்து செய்திருக்கலாமே என்று சொல்கிறார் சிவா... அப்படியே தன்னைப் பற்றியும் உங்களை வீட்டுக்குப்போய் விசாரிக்கட்டாம் என்று சொல்லுகிறார். அடுத்த பொங்கலுக்கு நாங்கள் அங்கு வருவோம்.

இப்படிக்கு
அன்பு மகள்

கடிதத்தை வாசித்து முடித்ததும் வேலாயுதமும் பாக்கியமும் ஒருவரை ஒருவர் பரிதாபமாக, அந்தப் பரிதாபப் பார்வைக்குள்ளும் இந்த ஒருவருட காலத்தில் இத்தனை நாளும் அவர்களுக்குப் புரியாத வெளிநாட்டு வாழ்க்கையின் பல உண்மைகள் எல்லாம் ஒரு கணத்தில் புரியவைத்துக் கொண்டிருந்தன.



'வெள்ளம் வரும் முன்னே அணைகட்ட வேண்டும்' என்பது ஒரு முதுமொழி. அதேபோன்றுதான் நோய் வந்ததன் பின்னர் அதற்குத் தீர்வு தேடுவதை விட, நோய் வருவதற்கு முன்பே அதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதே சரியான மருத்துவமாக இருக்கமுடியும். அந்த வகையில் பல்வேறு ஆய்வுகளிலும், அனுபவங்களிலும் கண்டறியப்பட்ட சில மருத்துவ ரீதியான உண்மைகளை இந்தப் பகுதியூடாகத் தொடர்ந்து பார்ப்போம். இவற்றைப் பின்பற்றவேண்டுமா இல்லையா என்பதை உங்கள் உங்கள் மருத்துவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். இவை சில கண்டறியப்பட்ட ஆலோசனைகள் மட்டுமே.

ஆஸ்துமா நோயாளிகளுக்கு புதிய கருவி பணம்தான் கொஞ்சம் அதிகம்!

காற்றில் பரவும் தூசு மற்றும் வளர்ப்பு பிராணிகளின் முடிகளால் ஏற்படும் ஒவ்வாமையில் ஆஸ்துமா நோயாளிகள் கடுமையாக அவதிப் படுகின்றனர். 'இன்கேலர், நெப்லைசர்' போன்றவற்றை பயன்படுத்துகின் றனர். மூச்சுத்திணறல் அதிகரிக்கும் சமயங்களில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட வேண்டியுள்ளது. இவர்களுக் காக புதிய கருவியை இலண்டன் மருத்தவர்கள் கண்டுபிடித்துள்ளனர். 6 ஐரோப்பிய நாடுகளில் இருந்து 7 வயது முதல் 70 வயது வரையிலான 282 ஆஸ்துமா நோயாளிகளிடம் இந்த கருவியை கொண்டு பரிசோதிக் கப்பட்டது. இந்த கருவியை ஆஸ்துமா நோயாளிகள் வைத்துக்கொண் டால், அவர்களை சுற்றியுள்ள காற்றை தூய்மையாக்கி அளிக்கிறது. தூங்கும்போதும், பணிபுரியும்போதும் ஆஸ்துமா நோயாளிகளின் சுவாசத் தினுள் தூசி போன்ற ஒவ்வாமை பொருட்கள் நுழையாமல் இந்த கருவி தடுக்கிறது. ஓர் ஆண்டு இந்த கருவியை பயன்படுத்த 4 ஆயிரம் பவுண்ஸ் செலவாகிறது.

காலையில் அரசனாக இரு, மதியம் சாதாரண மனிதனாக இரு, இரவில் பிச்சைக்காரனாக இரு

பலரும் இங்கு காலை உணவைத் தவிர்த்து வருகின்றார்கள். இப்படிச் செய்வது உடலுக்கு நல்லதல்ல என்று ஆய்வு செய்து நிரூபித்திருக் கின்றார்கள். ஆரோக்கியமான வாழ்விற்கு காலை உணவு மிகவும் முக்கியமானது என்பது அந்த ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. பிரித்தானியாவைச் சேர்ந்த சிக்ரிட் கிப்சன் தலைமையிலான குழுவினர் இதுதொடர்பான ஆய்வை மேற் கொண்டார்கள். இந்த ஆய்வில், மற்ற உணவு மற்றும் அதிலிருந்து கிடைக்கும் சத்துகள் ஆகியவற்றை காலை உணவு தான் நிர்ணயிக் கிறது என்பதும், பருப்பு வகைகள் மற்றும் பால் ஆகியவற்றைக் காலை யில் உட்கொண்டு வருவது உடலுக்கு நோய் இல்லாத பாதுகாப்பைத் தருவதும் கண்டுபிடிக்கப்பட்டது. 19 முதல் 64 வயது வரையிலானவர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்த ஆய்வில், பெரும்பாலானவர்கள் திட உணவுக்கு முன்பாக கோப்பி அல்லது தேநீர் போன்றவற்றை அருந்த விரும்புவதும் தெரியவந்தது. ஆய்வு முடிவு குறித்து சிக்ரிட் கிப்சன் கூறும்போது, பால் மற்றும் பருப்பு வகைகளை நாம் உணவாக எடுத்துக்கொள்ளும்போது உடலுக்குத் தேவையான கல்சியம், நார்ச்சத்து, புரதம் மற்றும் கார்போஹைட்ரேட் கிடைக்கின்றன. அதனால், அவற்றை காலை உணவாக எடுத்துக் கொள்வது நல்லது` என்றார். தமிழர்களிடம் இது தொடர்பாக ஒரு கருத்தே உண்டு என்பது இங்கு கவனத்தில் கொள்ளவேண்டும். காலையில் அரசனாக இரு, மதியம் சாதாரண மனிதனாக இரு, இரவில் பிச்சைக்காரனாக இரு என்ற தமிழர்களின் உணவு மந்திரம் மூன்று வேளையும் எவ்வளவு உணவு அருந்தவேண்டும் என்பதை புரியவைக்கின்றது.

மாதுளையின் மகிமையே மகிமை!

இரத்தத்தில் சிவப்பு அணுக்கள் குறைவாக இருப்பவர்களுக்கு மருத்துவர்கள் சொல்லும் அறிவுரையே, மாதுளம் பழத்தை அல்லது சாறை அதிகம் உட்கொள்ளுங்கள் என்பதுதான். அந்த மாதுளம் பழம் பல்வேறு நோய்களைத் தீர்க்கும் அரிய மருத்துவக் குணத்தைத் தன் னுள்ளே கொண்டிருக்கிறது என்று ஆராய்ச்சியில் கண்டுபிடித்திருக்கிறார் கள். வில்லோ மரத்திலிருந்து அஸ்பிரின் என்ற மருந்து கண்டுபிடிக் கப்பட்டதற்குச் சமமானது இந்தக் கண்டுபிடிப்பு என்கிறது இலண்டனி லிருந்து வெளியாகும் 'சண்டே எக்ஸ்பிரஸ்` நாளிதழ். மாதுளம் பழத் தைச் சாப்பிடுகிறவர்கள்கூட அதன் கதுப்புகளை உட்கொண்டு கொட் டையைத் துப்பிவிடுகின்றனர். அதன் ரசத்தை மட்டுமே குடிக்கின்றனர். ஆனால் அதன் தோல், விதை, மஞ்சள் நிறத்தில் உள்ளே காணப்படும் மெல்லிய சவ்வுப்படலம், அதன் பட்டை, செடியின் தண்டுக்குள்ளே இருக்கும் சோறு என்று அனைத்துமே அரிய மருத்துவ குணங்களைக் கொண்டிருக்கிறது. அவற்றிலிருந்து எடுக்கப்படும் சாறு இதயத் துடிப்பைச் சீராக்கும், இதய இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பை நீக்கும், இரத்தக் கொதிப் பைக் குறைக்கும், உள் உறுப்புகளின் வீக்கத்தைக் கட்டுப்படுத்தி போக்கும், புற்றுநோய் வரும் ஆபத்தைக் குறைக்கும், தாம்பத்திய உறவுக்குத் தடையாக இருக்கும் பாலின உறுப்புகளின் செயல்படா தன்மையைப் போக்கும்.

கிளிறிசிடியா மரத்தில் இருந்து மின்சாரம்

தமிழீழப் பொருண்மியத்தின் கண்டுபிடிப்பை சீனா உறுதிப்படுத்தியது

அடுத்து இலங்கையில் மூழ்கிய கப்பல்களை ஆய்வு செய்யவும் முயற்சி

கிளிறிசிடியா (Gliricidia - சீமைக் கிளுவை என்று தமிழில் இதனைக் கூறுவார்கள்) மரத்தில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஆய்வு இலங்கையில் வெற்றி பெற்றுள்ளதாக சீன நிறுவனம் ஒன்று அறிவித் துள்ளது. இந்த ஆய்வை மேற்கொண்ட சீனாவின் ஹெனா சக்தி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சினிகியாங் சூ தலைமையிலான அதிகாரிகள் குழு சிறீலங்காப் பிரதமர் டி.எம்.ஜெயரட்ணவிடம் தனது ஆய்வு அறிக்கையைச் சமர்ப்பித் துள்ளது.



இந்த மரத்தில் இருந்து மின் சாரம் தயாரிக்கமுடியும் என்று 1992ம் ஆண்டு காலப்பகுதியில் கண்டுபிடித்திருந்த தமிழீழ பொருண் மிய மேம்பாட்டு நிறுவனம். இது தொடர்பான ஆய்வு மையம் ஒன் றையும் முல்லைத்தீவில் அமைத்து மேலதிக ஆய்வுகளிலும் ஈடுபட்டு வந்தது. எனினும், அதனைத் தயா ரிப்பதற்கான பொருளாதார வளம் இல்லாமையாலும் போர்க் கார ணங்களாலும் அதனை அப்போது கைவிட்டிருந்தது.

சீனா சமர்ப்பித்திருந்த இந்த அறிக்கையில கிளிறிசிடியாவில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வது குறித்த முழுமையான தகவல்கள் இடம்பெற்றுள்ளன. கிளிறிசிடியாவில் இருந்து மின் சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்றும், சீனாவின் உதவியுடன் வவுனியா, மொனராகல, அம்பாறை, எம்பிலிட்டிய, கண்டி, நுவரெலிய போன்ற இடங்களில் இந்த மின்உற்பத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, வேலிகளுக்கும், கால்நடைத் தீவன மாகவும் இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்த கிளிறி சிடியா மரம் மின்சார உற்பத்திக்கு பயன்படுத்தப்பட வுள்ளதால் கிராம மக்களுக்கு அதிக வருவாயை ஈட்டிக் கொடுக்கும் பயிராக அது மாற்றமடைந்துள்ளது என்று சிறீலங்காப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தற்போது சீனா இலங்கையில் இந்த மின்சாரத்தைக் கண்டுபிடித்ததாக அறிவித்துள்ளது. கிளிறிசிடியா மரத்தில் இருந்து பெறப்படும் மின்சாரத் தால் இயற்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என வும், அத்துடன் மிகக்குறைந்தளவிலான முதலீட்டில் அதிக பயனைப் பெற முடியும் என்றும் தெரிவிக்கப்படு கின்றது.

இதேவேளை, இலங்கைக் கடற்பரப்புக்குள் மூழ் கியதாகக் கருதப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட கப்பல் கள் தொடர்பில் ஆய்வு நடத்துவதற்கு கொழும்பிடம் சீனா கோரிக்கை விடுத்திருக்கிறது என்று அறியப்படு கிறது. முன்னதாக, இலங்கைக் கடல் எல்லைக்குள் எண்ணெய் வள ஆய்வுகளை முன்னெடுக்க சீனாவின் நிறுவனம் ஒன்று விடுத்த கோரிக்கைக்கு சிறீலங்கா சம்மதம் தெரிவித்திருக்கும் நிலையில், சீனாவின் இந் தப் புதிய கோரிக்கை இந்தியாவைப் பெரும் அதிர்ச்சி யில் ஆழ்த்தியுள்ளது எனக் கூறப்படுகிறது.

இலங்கை சீனாவின் பக்கம் சாய்கின்றது என பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்தப் புதிய தகவலும் வெளியாகி உள் ளது. பராக்கிரமபாகு மன்னன் இலங்கையை ஆட்சி செய்த காலகட்டத்தில் இலங்கைக் கடற்பரப்புக்குள் மூழ்கியதாகக் கருதப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட கப்பல்கள் தொடர்பில் ஆய்வு நடத்துவதற்கே சீன அரசு இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கின்றது. ஆனால், விடுதலைப் புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட படகு களையும் கடற்புலிகளின் படகுகளையும் ஆய்வு செய் வதே சீனாவின் நோக்கம் என்று கூறப்படுகின்றது.

ஆய்வு நடத்துவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, இலங்கை தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்துடன் சீன உயர் மட்ட அதிகாரிகள் ஏற்கனவே இராஜ தந்திரமட்டத் திலான பேச்சுகளை நடத்தியுள்ளனர் என நம்பகர மாகத் தெரியவருகிறது. இந்த ஆய்வின் போது பெறு மதியான தொல்பொருள் தளபாடங்கள் கண்டெடுக்கப் படும் பட்சத்தில் அவற்றை சரிசமமாகப் பகிர்ந்துகொள் வதற்கு இருநாட்டு அதிகாரிகளும் தீர்மானித்துள்ளனர் எனவும் கூறப்டுகின்றது. ஆய்வு நடவடிக்கைகளை

விடுதலைப் புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட படகுகளையும் கடற்புலிகளின் படகுகளையும் ஆய்வு செய்வதே சீனாவின் நோக்கம் என்று கூறப்படுகின்றது.

முன்னெடுப்பதற்காக இலங்கை வரும் சீன அதிகாரிக ளுக்கு உரிய வசதிகளைச் செய்துகொடுப்பதற்கும் சிறீலங்கா தீர்மானித்திருக்கிறது என்று மேலும் அறியமுடிகிறது.

இதுஇவ்வாறிருக்க, ஆசியாவின் மிக உயரமான தெலைத்தொடர்புக் கோபுரம் சீனாவினால் கொழும்பில் அமைக்கப்படவுள்ளது. அதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் ஆரம்பமாகியுள்ளது. தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்றையும் அதனுடன் இணைந்ததாக ஓய்வு நேர பூங்கா ஒன்றையும் அமைக்க சிறீலங்கா அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கான கடன் நிதியுதவியினை சீனாவின் எக்ஸிம் வங்கி வழங்கி யுள்ளது. நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்த மான டீ.ஆர். விஜயவர்தன மாவத்தையில் ஏழரை ஏக்கர் நிலப்பரப்பு இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. 350 மீற்றர் உயரத்தை கொண்ட இக் கோபுரம் தாமரைக் கோபுரம் என அழைக்கப்படும். ஆசியாவின் மிகப் பெரிய தொலைத்தொடர்புக் கோபுரமாக இது விளங்கவுள்ளது. இதன்மூலம் தொலைக்காட்சி மற்றும் தொலைதொடர்பு துறைகளில் பாரியளவு முன்னேற்றம் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் கோபுரமானது 50 தொலைக் காட்சி சேவைகளுக்கும், 50 ஒளிபரப்பு சேவைகளுக் கும் 10 தொலைதொடர்பு சேவை வழங்குனர்களுக்கும் பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது. 100 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 30 மாத காலத்தினுள் இக் கோபுரத்தின் நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. இதன்மூலம் சிறீலங்காவில் இருந்துகொண்டு இந்தியாவின் தொடர்பாடல்களை சீனா கண்காணிக்க முடியும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

Neilson / Pogonia
$479,000; Br: 3 + 1

Staines / Finch
$509,900; Br: 4

McCowan / Ellesmere
$439,800 ; Br: 3 + 2

Whitby – 110% of the Asking Price

Scarborough – 97% of the Asking Price

Scarborough – 106% of the Asking Price

Potential Clients looking for Properties in Your Area
Call Viki @ 416.457.7162 for more details

Hwy 7 / 9th Line
$429,900; Br: 3

Finch / York University
$699,900; Br: 6

Midland / Lawrence
$419,900; Br: 3 + 2

Viki Velauthan
Sales Representative

Morningside / 401
$499,000; Br: 4 + 3

McCowan / Ellesmere
$459,900; Br: 3 + 3

RE/MAX
Vision Realty Inc., Brokerage
INDEPENDENTLY OWNED & OPERATED
OFF: 416.321.2228
FAX. 416.321.0002

GOOD CREDIT, BAD CREDIT
OR NO CREDIT JUST CALL
To buy brand new houses and condos, power of sales and business, call...
Haran Suyambulingam
Sales Representative
Bus: 905.201.9977
Cell: 416.624.4023
HOMELIFE
HIGHER STANDARDS
Homelife/Future Realty Inc.
Fax: 905.201.9229
E-mail: haranhomelife@gmail.com
7 Eastvale Drive, Suite 205, Markham, Ont. L3S 4N8
$249,000
REXDALE/HIGHWAY 427
$275,000
REXDALE/HIGHWAY 427
$399,900
MORNINGSIDE/FINCH
$639,900
9TH LINE/RIZAL
$659,400
9TH LINE/RIZAL
$679,990
STEELES/STAINES ROAD
$519,000
FINCH/YORK UNIVERSITY
$549,900
MARKHAM/STEELES
$599,000
MARKHAM/16TH AVENUE
$599,900
16TH AVE/9TH LINE
$799,000
9TH LINE/14TH AVE
$699,900
CASTLEMORE/DARREN HILL

www.futurerealtor.ca
Sugan Sivarajah
Sales Representative
Dir : 416-890-9999
Uthayan Sivarajah
Sales Representative
Dir : 416-995-3960
Raj Sivarajah
Sales Representative
Dir : 416-823-9797
HomeLife/Future Realty Inc., Brokerage
416-282-3333 / 905-201-9977
HOMELIFE HIGHER STANDARDS
$325,000 Sheppard/Markham Road Bedrooms: 4+1 Washrooms: 2
$359,700 Markham/Lawr Bedrooms: 3+1 Washrooms: 2
$359,900 Port Union/ Lawso Bedrooms: 3+2 Washrooms: 2
$369,800 Brimorton/Orton Park Bedrooms: 3 Washrooms: 2
$375,000 Westney / Hwy 2 Bedrooms: 4 Washrooms: 3
$379,000 Lawrence/Mccowan Bedrooms: 3+3 Washrooms: 2
$350,000 Westney And Rosslan Bedrooms: 3 Washrooms: 3
$399,900 Mccowan/Ellesmere Bedrooms: 3 Washrooms: 2
$399,900 Morningside/Passmo Bedrooms: 3 Washrooms: 3
$409,900 Salem / Rossland Bedrooms: 4+1 Washrooms: 3
$420,000 Finch & Dixie Bedrooms: 4 Washrooms: 3
$429,000 Mccowan / Sheppard Bedrooms: 6 Washrooms: 3
$439,900 Taunton/W. Audley Bedrooms: 4 Washrooms: 3
$445,786 Brock Rd S Of Taunton Bedrooms: 4 Washrooms: 3
$449,000 Mccowan/ Mcnicol Bedrooms: 3 Washrooms: 3
$525,000 Keele/ Kirby Bedrooms: 3 Washrooms: 3
$544,000 Hemlock/Aspen Bedrooms: 4 Washrooms: 3
$585,000 Keele/Major Macken Bedrooms: 4+1 Washrooms: 3
$588,000 Martingrove/Hwy#7 Bedrooms: 4+2 Washrooms: 4
$589,000 Maj Mackien/Woodbi Bedrooms: 4 Washrooms: 3

YOUR DEBT
Sample Scenario
நீங்கள் வீட்டு உரிமையாளரா?
உங்கள் மாதாந்த Bills அனைத்தையும் ஒவ்வொன்றாக செலுத்துவதை விட, அவை அனைத்தையும் ஒருமயமாக்கி Refinance மூலம் செலுத்தி எந்த அளவுக்கு உங்கள் பணத்தை சேமிக்கலாம் என்பதை அருகில் உள்ள அட்டவணை மூலம் அறிந்து கொள்ளுங்கள்!
MORTGAGE $320,000 @ 5.4% minimum payment $1,934.67
CAR LOAN $21,000 @ 7.5% minimum payment $761.25
LINE OF CREDIT 2 - $16,000 @ 6.5% minimum payment $566.67
LINE OF CREDIT 1 - $12,500 @ 7.0% minimum payment $447.92
CREDIT CARD 2 - $8,800 @ 12% minimum payment $352.00
CREDIT CARD 1 - $5,200 @ 19% minimum payment $238.34
STORE CARD - $3,000 @ 24% minimum payment $150.00
Total debt of $386,500.00
Minimum: $4,450.85 /month
OUR SOLUTION
« Make this your New Year's resolution!
Remortgage of $386,500.00 @2.8%
Minimum: $1,584.80 /month
Payment will be reduced by $2,866.05 per month
By paying only the minimum payment, credit cards can take upto 26 years to pay off!
BonaFide Mortgage Solutions Inc.
the true freedom...
Suren Nathan, AMP | Mortgage Broker
416.436.1111
License: M08004479
RESIDENTIAL MORTGAGES . REFINANCE & SWITCH MORTGAGES . HOME EQUITY LOAN . FIRST & SECOND MORTGAGES
SPECIAL PROGRAM FOR SELF EMPLOYED AND NEW IMMIGRANTS
Canada Trust
Street Capital
Scotiabank
First National Financial LP
Laurentian Bank
National Bank of Canada
MCAP
MERIX
FirstLine Mortgages
ResMor Trust Company
Equitable Trust
Home Trust
AGF
203-7 Eastvale Dr. • Toronto ON L3S 4N8 • OFFICE: 416.548.7475 • FAX: 416.548.7496 • suren@BonafideMortgage.ca